தமிழ்மொழி இலக்கண இயல்புகள்

கலாநிதி அ. சண்முகதாஸ்
தலைவர், மொழி பண்பாட்டாய்வுத் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

வெளியீடு :
முத்தமிழ் வெளியீட்டுக் கழகம்
யாழ்ப்பாணம்

RangaRakes
tamilnavarasam.com

9·4. சொற்பொருள் மாற்றம் 228
4·1. குறித்த பொருளை விடுத்து வேறு பொருள் குறித்தல் 229
4·2. பல பொருளுள் ஒன்று 230
4·3. பலசொல் ஒன்றுதல் 231
9·5. புதுப் பொருளுணர்த்தக் கடன் வாங்குகிறோம் 233
5·1. மொழிவாரியான பாகுபாடு 234
5·2. தேவைகளினடிப்படையிலான பாகுபாடு 237

நூற் பட்டியல் 241—247

1

தமிழ் ஒரு திராவிடமொழி

1. ஒப்பியலாய்வும் மொழிக்குடும்பமும்

விஞ்ஞானத் துறைகள் பலவற்றிலே ஏற்பட்ட துரித மான வளர்ச்சி மொழி ஆய்வுத் துறையினையும் பாதிக்க லாயிற்று. மொழியாய்வு பண்டைக் காலந்தொடக்கமே நடைபெற்று வந்துள்ளது. ஆனால் மொழியாய்வுத்துறை பத் தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே விஞ்ஞானத் துறையாக உருப்பெறத் தொடங்கியது ஏனைய விஞ்ஞானத் துறைகளில் இடம்பெற்ற கோட்பாடுகள் மொழியியல் துறையிலும் ஏற்படலாயின. தாவரவியல், விலங்கியல் போன்ற துறைகளிலே தாவரம் அல்லது விலங்கினைப் பகுப்பாய்வு செய்து அவற்றினிடையே காணப்பட்ட ஒழுங்குகளை, பண்புகளை எடுத்து விளக்கியது போல் மொழியினையும் பகுப்பாய்வு செய்து விளக்கினர். மொழி யிலே ஏற்படும் மாற்றங்களுக்கு அடிப்படையாக அமைவது ஒலிமாற்றமே என்பதை அவதானித்து அம்மாற்ற ஒழுங்கினை ஒலிநியதிக் கோட்பாடாகக் காட்டினர். ஈர்ப்புக்கோட்பாடு, பிரதிபலிப்புக் கோட்பாடு போன்ற விஞ்ஞானக் கோட் பாடுகள்போல, ஒலிநியதிக் கோட்பாடும் உருவாயிற்று. உயிரியல் துறையிலே கையாளப்பட்ட Morphology structure, syntax போன்ற கலைச்சொற்கள் மொழியியல் துறையிலும் கையாளப்பட்டன. உயிரினங்களின் தோற்றம், வளர்ச்சி பற்றிய டார்வினின் பரிணமக் கொள்கை இயற்கை

RangaRakes
tamilnavarasam.com

மொழிகளின் தோற்றம் வளர்ச்சி பற்றி ஆராயவும் வழி காட்டிற்று. உயிரினங்களுக்குள்ளே அடிப்படைத் தொடர்பு கொண்டனவற்றைக் குடும்பங்களாகப் பாகுபாடு செய்யும் போக்கினை அடியொற்றி, தொடர்புற்ற மொழிகளைக் குடும்பங்களாக இனங்காணும் முயற்சி மொழியியல் துறையிலும் உண்டாயிற்று. வரலாற்று மொழியியல், ஒப்பீட்டு மொழியியல் ஆகிய மொழியியலின் உட்பிரிவுகள் இம் முயற்சிகளை மேற்கொண்டன.

பல தொடர்புள்ள மொழிகளை ஒப்புநோக்கி, அம் மொழிகளின் மூலமொழி எதுவாயிருக்கலாம் என இனங் கண்டு, அ மூலமொழியிலிருந்து மேறகுறிப்பிட்ட மொழிகள் எவ்வாறு கிளைத்து வளர்ந்தன என்று ஆராய்வது ஒப்பியல் மொழியியலாகும். 19ஆம் நூற்றாண்டிலே இத்துறை பெரிதும் வளர்ச்சியடைந்தது.[1] இலக்கண அமைதியிற் காணப்படும் ஒற்றுமைகளையும் ஒலி இயல்பு போன்ற ஒற்றுமை இயல்புகளையும் துணைக்கொண்டு மொழிகளுக் கிடையேயுள்ள தொடர்புகளை மொழியியலாளர் காண முற்பட்டனர். இவ்வாறு மொழிகளை வகைப்படுத்தும் முயற்சி 19ஆம் நூற்றாண்டிலே துரிதமடைந்தது. ஒகஸ்ற் சிலேஷசர் (August Schleicher 1821-68) என்பவர் மொழிகளை இரு வகையிலே பாகுபாடு செய்யும் வழியினை விளக்கினார். முதலாவது உயிரியல் அறிஞர் குடிவழி அடிப்படையில் உயிரியற் குடும்பங்களை இனங்காணுவது போல, மொழியியற் குடும்பங்களையும் இனங்காணுதல். இரண்டாவது, வடிவாலும் பொருளாலும் ஆய மொழிகளை அவற்றின் அடிப்படையிலேயே பாகுபாடு செய்தல். அதனால், உலகில் உள்ள மொழிகளை அவர் மூன்று வகைகளாகப் பிரித்தார்.

1. தனிமொழி (Isolating language):

இலக்கண உருபுகளின்றி, ஒவ்வொரு சொல்லும் சொற்றொடரிலே சந்தர்ப்பத்துக்கேற்றபடி பொருள் பெறுதல், அவ்வாறு அச்சொற்கள் வெவ்வேறு பொருள் பெறுமிடத்து அவற்றின் வடிவங்கள் வேறுபடா. சீன மொழியினை இதற்கு உதாரணமாகக் காட்டுவர்.

2. ஒட்டுமொழி (Agglutinative language):

வேர்ச்சொல், இலக்கண உறுப்புக்கள் என்ற முறையிலே ஒட்டியன போற் சொற்கள் இம்மொழிகளிலே அமையும். அதனால், வேர்ச் சொல்லையும் அதனுடனும் ஒட்டப்பட்ட இலக்கண உறுப்புக்களையும் இலகுவிலே தெளிவாகப் பிரித்துக்காணலாம். தேர்களின் என்னுஞ் சொல்லிலே தேர் + கள் + இன் என உறுப்புக்களைப் பிரித்துக் காணலாம். துருக்கி மொழி, தமிழ், மலையாளம், கன்னடம் போன்ற மொழிகளை இதற்கு உதாரணங்களாகக் காட்டலாம்.

3. விகுதிமொழி (Inflexional language) :

தனி மொழியிலும், ஒட்டு மொழியிலும் காணப்படும் பண்புகள் விகுதி மொழிகளிலே காணப்படா. வடிவிலும் பொருளிலும் சொற்கள் மாறுபாடு அடைதலும், வேர்ச்சொல்லோடு இணையும் இலக்கணக் கூறுகளைப் பிரித்தறிய முடியா நிலையும் இம்மொழிகளிலே உண்டு. சமஸ்கிருதம், கிரேக்கம், லத்தீன் போன்ற மொழிகள் இதற்கு உதாரணங்களாகும்.

சிலேஷசர் காட்டிய மொழி வகைப்பாட்டு வழிகளில் முதலாவது வகையினையே நாம் இங்கு விரிவாக நோக்க வேண்டியுள்ளது. குடிவழி அடிப்படையிலேயே மொழிகளுக்குரிய இயைபுகளை நோக்கி, மொழிக் குடும்பங்களை இனங்காணும் முயற்சியின் விளைவே இந்தோ-ஐரோப்பிய, செமிற்றிக், திராவிடம் போன்ற மொழிக் குடும்பங்கள் ஆகும்.

2. திராவிட மொழிக் குடும்பம்

திராவிட மொழிக் குடும்பம் பற்றிய சிந்தனை 19 ஆம் நூற்றாண்டிலேயே ஏற்பட்டது. "பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கிழக்கிந்தியக் கம்பனியைச் சேர்ந்த எல்லிஸ் என்பவர், தமது கட்டுரைகளில் மிக நெருங்கிய உறவுடைய ஒரு குழுவாக அமையும் முறையில் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய நான்கு மொழிகளுக்கும் இடையேயுள்ள ஒற்றுமைகளைச் சுட்டிக் காட்டினார்."[2] ஆனால் திராவிடமொழிக் குடும்பம் பற்றிய

RangaRakes tamilnavarasam.com

தெளிவான விளக்கமான ஆய்வு 1856 இல் கால்டுவெல் அவர்களின் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலுடனேயே தொடங்கியதெனலாம். திராவிட மொழிக் குடும்பம் பற்றிய எண்ணம் கி. பி. எட்டாம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த குமரில பட்டரின் 'ஆந்திர-திராவிட பாஷா' என்ற தொடருடனேயே தொடங்கி விட்டதெனக் கால்டுவெல் கருதுகின்றார்.[3] இக்கருத்தினை தெ. பொ. மீனாட்சிசுந்தரன்,

> ''குமரிலபட்டரின் 'தந்திர வார்த்திகா' வில் பிழை யான பாடத்தின் அடிப்படையில் கால்டுவெல், 'ஆந்திர-திராவிட' என்ற சொல்லைத் தெலுங்கு, தமிழ் மொழிகளைக் குறிக்கும் நோக்கத்தில் குமரிலபட்டர் பயன்படுத்தியதாகச் சொல்கிறார். அச்சொல் உண்மையில் 'திராவிட-ஆந்திரா' அன்று, மாறாகத் 'திராவிட ஆதி' (Drāvidā Ādi = திராவிட முதலியன) என்பதேயாகும்.''[4]

என்று மறுத்துரைக்கின்றார். தான் வாழ்ந்த நாட்டிலே வழங்கிய மொழிகளிடையே ஒற்றுமைகள் காணப்படுவதை குமரிலபட்டர் கண்டு ஒருவேளை 'ஆந்திர-த்ராவிட' என்று கூறியிருக்கலாம். அப்படி அவர் கூறியிருந்தாலும், அம் மொழிகள் ஒரு குடும்ப மொழிகள் என்று நிரூபிக்கத்தக்க ஆய்வு கால்டுவெல் அவர்களுடனேயே தொடங்கிய தென்பதை எவரும் மறுக்க மாட்டார்.

கால்டுவெல் தன்னுடைய நூலிலேயே பின்வரும் 12 மொழிகளைத் திராவிட மொழிக் குடும்பஞ் சார்ந்தனவாகக் குறிப்பிடுகிறார்:

1. தமிழ்	7. துத
2. மலையாளம்	8. தோத
3. தெலுங்கு	9. கோந்த்
4. கன்னடம்	10. கூய்
5. துளு	11. ஒரான்
6. கொடகு	12. ராஜ்மஹால்

ஆனால் இன்றோ இருபத்தைந்துக்கு மேற்பட்ட திராவிட மொழிகள் இனங்காணப்பட்டுள்ளன. அவை வருமாறு:

1. தமிழ்	2. தெலுங்கு
3. மலையாளம்	4. கன்னடம்
5. கொண்டி	6. குருக் அல்லது ஓரான்
7. துளு	8. கூய்
9. குவி அல்லது கோந்	10. கோயா
11. பிராகூய்	12. மால்டோ
13. கொடகு	14. படகா
15. கொலாமி	16. இருளா
17. குறுவா	18. பார்ஜி
19. கொண்டா அல்லது கூபி	20. கதபா
21. நாய்க்கி	21. பெங்கோ
23. கொட்டா	24. ஒல்லாரி
25. தோடா	

மூலத் திராவிட மொழியினின்று இம்மொழிகள் யாவும் கிளைத்தெழுந்த வரலாறு பற்றிப் பல திராவிட மொழியியல் அறிஞர்கள் ஆய்வுகள் செய்து வெளியிட்டுள்ளனர். இவை கிளைத்தெழுந்த வரன்முறையிலே அவை வடதிராவிடம், மத்தியதிராவிடம், தென்திராவிடம் என மூன்று உப பிரிவுகளுக்குள் அடங்குவதாகக் கொள்ளலாம். தமிழ், மலையாளம் முதலாய மொழிகளை உள்ளடக்கிய தென் திராவிடம் ஏனைய வட, மத்திய திராவிடமொழிகளின்றும் பண்புகளிலே வேறுபட்டமைகின்றது.[5]

1. மூலத் திராவிட மொழியிலே யகர மெய்யினை முதனிலையாகக் கொண்ட சொற்களில், தமிழ் தவிர்ந்த ஏனைய திராவிட மொழிகளிலே அவ் யகரம் மறைந்து விட்டது. (உ-ம்: யாடு, யாமை, யானை). அவ்வாறு யகர மெய் மறைந்ததன் பலனாக, அதனைத் தொடர்ந்து இடம் பெற்ற உயிர், வட திராவிடம் மத்திய திராவிடம் ஆகியன வற்றில் ஏகாரமாகவும், தென் திராவிடத்தில் ஆகாரமாகவும் ஆயிற்று.

RangaRakes tamilnavarasam.com

வடதிராவிடம், மத்தியதிராவிடம்		தென்திராவிடம்	
துளு:ஏடு	(ēḍu)	தமிழ்:ஆடு	(āṭu)
தெலுங்கு:ஏடிக்	(ēḍika)	மலையாளம்:ஆடு	(āṭu)
ஏட	(ēṭa)	கோத்:ஆற்	(āṛ)
கொண்ட்:ஏடி	(ēṭi)	தோத:ஓட்	(ōṭ)
கூர்க்:ஏரு	(ēṛā)	கன்னடம்.ஆடு	(āṭu)
மால்தோ:ஏறெ	(ēre)	கொடகு:ஆடி	(āḍi)
பிராகுவி:ஹேட்	(hēṭ)		

2. தென்திராவிடத்தில் உயர்திணையில் ஆண், பெண், பலர் என்னும் பாற் பாகுபாடும், அஃறிணையில் ஒருமை, பன்மை என்னும் பாகுபாடும் உண்டு. ஆனால் வட, மத்திய திராவிடங்களிலே பெண்பால் அஃறிணையாகவே கருதப்படுகின்றது. உதாரண மாகத் தமிழ், மலையாளம் ஆகிய தென் திராவிட மொழிகளில் இவன், இவள், இது என மூன்று கூட்டுச் சொற்கள் அமைய, வட, மத்திய திராவிட மொழிகளான கொலாமி, கூவி ஆகியவற்றிலே பெண்பாலையும் அஃறிணை ஒருமையையும் குறிக்க ஒரு சொல்லும், ஆண்பாலைக் குறிக்க இன்னொரு சொல்லும் அமையும்:

கொலாமி: இம் (im): 'இவன்'
இத் (id): 'இவள்'
'இது'
குவி: ஈவஸி (iwasi): 'இவன்'
ஈதி (idi) : 'இவள்'
'இது'

3. தமிழ் ஒரு திராவிடமொழி

தமிழ் ஒரு திராவிட மொழி என்பதை வாய்பாடு போல நாம் கூறி வருவது வழக்கம். அம்மொழி திராவிட மொழி எனக் கருதப்படுதற்கு எத்தகைய பண்புகளைத் தன்னகத்தே கொண்டமைந்துள்ளது என்பது கூர்ந்து நோக்கற்பால

தாகும். திராவிட மொழிகளிற் காணப்படும் பொது இயல்பு களைக் கால்டுவெல் தன்னுடைய திராவிடமொழிகளின் ஒப்பிலக்கண நூலிலே விரிவாக எடுத்துக் காட்டியுள்ளார். அப்பொது இயல்புகள் யாவற்றையுமே விளக்குவதற்கு அவர் தமிழ் மொழியினையே பிரதான உதாரண மொழி யாகக் கொண்டுள்ளார். இது தொடர்பாக தெ. பொ. மீனாட்சிசுந்தரன் கூறிய கருத்தினை இங்கு குறிப்பிடுதல் அவசியம்:

> 'உலகு படைக்கப்பட்ட நாளில் ஒரே மொழிதான் இருந்தது' என்ற விவிலிய நூலின் கருத்தை நிறுவுவதற்காக இந்நூலின் பெரும் பகுதி திராவிட மொழிகளைப் பிற குடும்ப மொழிகளுடன் ஒப் பிட்டுக் காட்டுவதற்கே பயன்படுத்தப்பட்டிருக் கிறது. தமிழ்ச் சொற்களின் தொன்மையும் தூய்மையும் கால்டுவெல்லைப் பெரிதும் கவர்ந் திருக்கலாம். எனவே பழைமையானவை என இன்று கருதப்படும் பிற திராவிட மொழிச் சொற்களுக்குப் பதில் தமிழ்ச் சொற்களே பழைமை யானவை எனக்காட்ட அவர் விழைந்தார் எனக் கருதலாம்.[6]

தெ. பொ. மீனாட்சிசுந்தரனின் விமர்சன நோக்கினை நாம் வரவேற்கும் அதே வேளையில், கால்டுவெல் கூறியவை, தமிழ்மொழி எவ்வாறு திராவிட மொழியெனக் கொள்ளப் படலாம் என்பதற்குப் போதுமான சான்றுதாரங்களாக அமைகின்றன. அவற்றுட் சிலவற்றை இங்கு தருகிறோம்.

3.1 இடைவெளி நிரப்ப உடம்படுமெய்

திராவிட மொழிகள் எல்லாவற்றிலுமே இரண்டு உயிர் ஒலிகள் அருகருகே இடம்பெறுவதைத் தடுப்பதற்குச் சில மெய்யொலிகளை அவ்விரு உயிரொலிகளுக்கிடையே புகுத்தும் வழக்கம் காணப்படுவதாகக் கால்டுவெல் (பக் 197 – 205), கூறுவர். அவ்வாறு புகுத்தப்படும் மெய்களென ய், வ், ம், ர், ன் ஆகியனவற்றை அவர் குறிப்பிடுவர். தமிழ்

RangaRakes tamilnavarasam.com

மொழியைப் பொறுத்தவரையில், தமிழ் இலக்கணகாரர்ய், வ் ஆகிய இரு உடம்படுமெய்களையே கொண்டனர். இச் சந்தர்ப்பத்தில் தமிழ்மொழியில் உடம்படுமெய்யின் வரலாற்றினை நோக்குதல் பொருத்தமாகும்.

நமது ஆதியிலக்கண நூலாசிரியராகிய தொல்காப்பியர்,

எல்லா மொழிக்கு முயிர்வரு வழியே
யுடம்படு மெய்யி னுருவுகொளல் வரையார்
(எழு. 140)

என்று கூறுகின்றார். அவருடைய சூத்திரத்தின் படி இரண்டு உயிர்கள் அருகருகே வருமிடத்து உடம்படுமெய் புணர்த்துதல் அவசியம் என வற்புறுத்தப்படவில்லை. ''உருவு கொளல் வரையார்'' என்று கூறுவதனால் அது கட்டாய நியதியாகத் தொல்காப்பியருடைய காலத்திலே நிலவவில்லை யெனக் கொள்ளலாம். இந்நிலைமை தொல்காப்பியருடைய காலத்தில் மட்டுமன்றிப் பிற்காலத்திலும் சாசன வழக்கிலே நிலவியதற்கு ஆ. வேலுப்பிள்ளை பல ஆதாரங்கள் காட்டியுள்ளார்.[7] கோயிலுக்கு, திசையர், தேவரடியார், இறையில், நெற்றியில் ஆகியன அவர் காட்டும் உதாரணங்களுட் சிலவாகும். இக்கால எழுத்து வழக்கிலே அச்சுவாகனம், ஆங்கில மொழி ஆகியவற்றின் செல்வாக்கின் காரணத்தினாலே சொற்களைத் தனித்தனியாகப் பிரித்தெழுதும் பண்பு காணப்படுகின்றது. இதனால் ஒரு சொல்லின் இறுதியிலே உயிர் எழுத்து வந்து, அடுத்த சொல்லின் முதலிலேயும் உயிரெழுத்து வரின் அவற்றுக்கிடையே உடம்படுமெய் புணர்த்துதல் தவிர்க்கப்பட்டுள்ளது. உதாரணமாக சு. வித்தியானந்தனின் தமிழர் சால்பு என்னும் நூலில் ஒரு பந்தியினை நோக்கலாம்:

> ''திராவிட மக்கள் தமக்கே உரிய பல உயரிய பண்பினையும் சிறப்பினையும் உடையராய் இருந்தனர். ஆரிய மக்களின் பண்பாட்டு வளர்ச்சிக்கும் பெருமைக்கும் பலப்பல வழிகளில் துணைபுரிந்தனர். இவ்விரு கூட்டத்தாருக்கும் உரிய பண்புகள் யாவும் ஒருங்கியைந்தே இந்து நாகரிகம் என்னும் உயரிய பண்பாடு உருவாயிற்று''.[8]

இப்பந்தியிலே தமக்கே உரிய, பல உயரிய, இயைந்தே இந்து என்னுஞ் சொற்றொடர்கள் காணப்படுகின்றன. உடம்படுமெய்கள் புணர்த்தி எழுதப்படின் அவை தமக்கேயுரிய, பலவுயரிய, இயைந்தேவிந்து என அமையும். ஆனால் தமிழர் சால்பு ஆசிரியர் அவற்றைப் புணர்த்தாமல் தனிச் சொற்களாக எழுதி உள்ளார். சொற்களுக்கிடையே உடம்படுமெய் புணர்த்தாத நிலையே இன்றைய தமிழ் வழக்கின் இயல்பாகும்.

தொல்காப்பியர் ''உடம்படுமெய்யின் உருவு கொளல் வரையார்'' என்று கூறிய காலம் தமிழ்மொழியிலே பாகத மொழியின் செல்வாக்கு ஏற்பட்ட காலமெனக் கூறலாம். இதற்கு ஆ. வேலுப்பிள்ளை, டாக்டர் க. கணபதிப்பிள்ளையின் விளக்கத்தினைத் துணையாகக் கொண்டு கொடுக்கும் விளக்கம் பொருத்தமாக அமைகின்றது:

> ''இரண்டு உயிரெழுத்துக்கள் இவ்வாறு தொடர்ந்து வருவதற்கு, அண்ணுமலைப் பல்கலைக்கழக வெள்ளி விழா மலரில் டாக்டர் க. கணபதிப்பிள்ளை கொடுக்கிற விளக்கம் பொருத்தமானது போலக் காணப்படுகிறது. இந்தியாவில் திராவிட மொழிக்கு அயலிலேயே வழங்கி வரும் வடமொழியில், மிகப் பழைய காலத்தில், சொல்லினிடையில், இரண்டு உயிர் எழுத்துக்கள் தொடர்ந்து வருவதில்லை. ஆனால், பாகத மொழிக்காலத்தில், ஒரு சொல்லினுள்ளேயே, இடையில் ஒலிக்கும் சில மெய் யெழுத்துக்கள் மறைய இரண்டு உயிர் எழுத்துக்கள் தொடர்ந்து வந்தன.
>
> உதாரணங்கள்:- சங்கதமொழி ராஜ: பாகதம்: ராஅ
> ,, ரூப: ,, : ரூஅ
>
> இதேமாதிரியான மாற்றம் தமிழிலும் நிகழ்ந்திருக்கலாம் ''[9]

மேற்காட்டிய கூற்றுக்களை அடிப்படையாக வைத்து நோக்குமிடத்துத் தமிழிலும், ஏனைய திராவிட மொழிகள் போல உடம்படுமெய் புணர்த்துதல் ஆரம்பத்திலே அவசியமாக

RangaRakes tamilnavarasam.com

இருந்திருக்க வேண்டும். தொல்காப்பியருடைய உடம்படு மெய்ச் சூத்திரத்திற்கு (சூ. 140) உரை எழுதிய நச்சினார்க் கினியர்,

> ''அவை யகரமும் வகரமுமென்பது முதனூல் பற்றிக் கோடும்;
>
> உடம்படு மெய்யே யகார வகார
> முயிர்முதன் மொழிவரூஉங் காலை யான
>
> எனவும்,
>
> இறுதியு முதலு முயிர்நிலை வரினே
> யுறுமென மொழிப வுடம்படு மெய்யே
>
> எனவுங் கூறினாராகலின். உயிர்க்குள் இகர ஈகார ஐகார ஈறு யகர உடம்படுமெய் கொள்ளும். ஏகாரம் யகாரமும் வகாரமுங் கொள்ளும். அல்லன வெல்லாம் வகர உடம்படுமெய்யே கொள்ளுமென்று உணர்க.''[10]

என்று கூறுவதை நோக்குக. இதனால், தொல்காப்பியருக்கு முன்னர் உடம்படுமெய் புணர்த்துதல் அவசிய நியதியாக அமைந்திருக்க, பாகத மொழிச் செல்வாக்கினாலேற்பட்ட தமிழ் மொழியின் இலக்கணத்தைக் கூறிய தொல்காப்பியர் காலத்திலே அது அவசிய விதியாக அமைந்திருக்கவில்லை எனக் கொள்ள இடமுண்டு. அத்துடன் கி. மு. 3 ஆம் 2ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்தனவெனக் கருதப்படும் குகைக் கல்வெட்டுக்களின் மொழியும் உடம்படுமெய் தொடர்பாகத் தொல்காப்பியர் கால மொழியை ஒத்த தாகவே காணப்படுகின்றது. குகைக் கல்வெட்டு மொழியிலே உடம்படுமெய் புணர்த்துதல் அவசியமாகக் கொள்ளப்பட வில்லை. உதாரணமாக, ''நிகமத்தோர் கொட்டிஓர்'' என்னுந் தொடரிலே[11] ''கொட்டிஓர்'' என்னுஞ் சொல்லில் இ ஓ என்னும் உயிர்கள் அருகருகே வந்துள்ளன. தொல் காப்பியர் இலக்கணம் வகுத்த மொழியிலும் உயிர் ஒலிகள் அருகருகே இடம்பெறுஞ் சந்தர்ப்பங்கள் இருந்துள்ளன. எனினும், தொல்காப்பியச் சூத்திரம், அதற்குரிய உரை, தன்காலத்து வழக்கு ஆகியனவற்றை நோக்கிய நன்னூலார்:

> இஈ ஐவழி யவ்வு மேனை
> உயிர்வழி வவ்வு மேமுனிவ் விருமையும்
> உயிர்வரி னுடம்படு மெய்யென் றாகும்.
>
> (சூத். 162)

என உடம்படுமெய் புகுத்துதல் ஓர் அவசிய நியதியாகக் குறிப்பிடுவர். ய், வ் ஆகிய இரண்டினையுமே தமிழ் இலக்கண காரர் உடம்படுமெய்களெனக் கொண்டனர். ஆனால், தமிழ் மொழியின் வழக்குகள் யாவற்றையும் நன்கு உற்று நோக்கின், ய், வ் ஆகியன மட்டுமன்றி, ம், ர், ன் ஆகிய மெய்யொலிகள் கூட உடம்படுமெய்களாக இடம்பெறுவதைக் காணலாம். இவை பெரும்பாலும் பேச்சு வழக்கிலேயே இடம் பெறுகின்றன. பேச்சு வழக்கு இலக்கணம் வகுக்காத நமது இலக்கணகாரர் இவற்றைக் குறியாது விட்டனர். என்ன + ஓ என்னுந் தொடர் என்னவோ என வகர உடம் படுமெய் பெற்று வருதல் போல என்னமோ என்று மகர உடம்படுமெய் பெற்றுத் தமிழ்ப் பேச்சு வழக்கிலே கையாளப் படுகின்றது. கா + உம் என்னும் தொடர் வகரமோ யகரமோ பெறுது ரகர உடம்படு மெய் பெற்றே காரும் என அமைகின்றது. இவ்வுதாரணத்தைக் கால்டுவெல் எடுத்தாண்டுள்ளார்.[12] தமிழில், னகரம் உடம்படுமெய்யாக வருவதுபற்றிக் கால்டுவெல் பின்வருமாறு குறிப்பிடுவர் :

> ''தமிழ் இலக்கியங்களை ஆராய்ந்தால் இதற்கு மேலும் ஒரு புதுமையைக் காணலாம். 'வ' கரத்துக்குப் பதிலாக, 'ன' கரத்தை மேற்கொள்ளும் முறை தமிழில் காணப் படும். தமிழ் அஃறிணைப் பன்மைச் சுட்டு 'அவை' என்பதேயாதலின், அம்மொழி அஃறிணைப் பன்மை விகுதியாக 'அவை' அல்லது அதன் தொன்மை வடிவாகிய 'அவ்' என்பதே வருதல் வேண் டும். ஆனால், அதற்குப் பதிலாக, 'அன' என்பதே வருகிறது. 'அ' கரச் சுட்டுக்கும் அஃறிணைப் பன்மைக் கும் இடையே 'வ' கரத்திற்கு பதிலாக, 'ன' கரமே உடம்படுமெய்யாக வந்துள்ளது. 'இருக்கின்றவ' என வருவதற்குப் பதிலாக 'இருக்கின்றன' என்பதே வரும்.''[13]

RangaRakes tamilnavarasam.com

தமிழ் இலக்கணகாரர் 'இருக்கின்றன' என்னும் சொல்லில் வரும் ன கரத்தை 'அன்' எனுஞ் சாரியையின் ஒரெழுத்தாகவே கொள்வர். சாரியை பற்றிய தமிழ் இலக்கண காரரின் கொள்கை தனியே ஆராயப்பட வேண்டும். எனினும் அவர்களுடைய கொள்கை தெளிவற்றதாயுள்ளது என்பதே எமது அபிப்பிராயம். அதனால், கால்டுவெல் கூறும் கருத்துப் பொருத்தமானது எனவே கொள்ள வேண்டும்.

3. 2. மென்மை புகுத்துதல்

வல்லெலுத்துக்களின் வல்லொலி ஆற்றலைக் குறைக்க மூக்கின எழுத்துக்களோப்புகுத்தும் இயல்பு திராவிட மொழி களுக்கு உண்டெனக் காலடுவெல் கூறுவர்.[14] இப்பண்பு தமிழ்மொழியிலும் நன்கு காணப்படுகின்றது. உதாரணமாக சிலப்பதிகாரம். குரக்குப் பட்டை என்னும் தொடர்களை நோக்குக. இவற்றைப் பகுபதங்களாகப் பிரிக்குமிடத்து.

சிலப்பு + அதிகாரம்
குரக்கு + பட்டடை

என்றே அமையும். சிலப்பு, குரக்கு என்பனவே பழைய வடிவங்களாக, அதாவது, மூலத் திராவிடமொழிவடிவங் களாக அமைந்திருக்க வேண்டும். ஆனால், தமிழ்மொழியில் அச் சொற்களிலுள்ள வன்மையைக் குறைப்பதற்காக, சிலம்பு, குரங்கு என மென்மை புகுத்தி அச் சொற்களை நாம் வழங்குகின்றோம். கு, டு, து, று ஆகிய ஈறுகளையுடைய ஈரெழுத்துச் சொற்கள் புதிய ஆக்கம் பெறுமிடத்து ஈறு இரட்டிப்பது இயல்பாகும். பகு என்னும் வினையடி, பெயர்ச் சொல்லாக ஆக்கம் பெறுமிடத்து, பக்கு எனவே அமைய வேண்டும். ஆனால், மென்மை புகுத்தும் பண்பு காரணமாக அச் சொல் பங்கு என அமைகின்றது. சுட்டுப்பெயர்களாகிய அது, இது, உது என்பன அகர ஈறுபெற்று அடைகளாக மாறுவதுண்டு. அவை அகர ஈறு பெறுமிடத்து

அது + அ = அத்த
இது + அ = இத்த
உது + அ = உத்த

அத்த, இத்த, உத்த எனவே அமையும். ஆனால் மென்மை புகுத்தும் பண்பு காரணமாக அவை முறையே அந்த, இந்த, உந்த என அமைந்துள்ளன. தமிழிலே நாம் அது, இது என வழங்குவனவற்றைக் கன்னட மொழியிலே முறையே அந்து, இந்து என வழங்குகின்றனர். இன்னொரு திராவிட மொழியாகிய துளுவிலே இந்து, உந்து என்னுஞ் சொற்களுண்டு. தமிழ் மொழியிலே மென்மை புகுத்தும் பண்புக்கு இன்னுமோர் உதாரணமாக நான்கு என்னுஞ் சொல்லைக் காட்டலாம். நால் என்னும் எண் அடைப் பெயருடன் கு என்னும் விகுதியைச் சேர்ப்பதால் எண்ணுப் பெயரொன்று ஆக்கப்படுகின்றது. நால் + கு என்பது தமிழ் இலக்கணகாரர் கூறிய புணர்ச்சி விதிகளின்படி நாற்கு என அமையவேண்டும். ஆனால் வல்லின மெய்யாகிய றகரத் துக்குப் பதிலாக மெல்லின மெய்யாகிய னகரம் தோன்றி, அச்சொல் நான்கு என வழங்கப்படுகின்றது.

4. தமிழும் இந்தோ - ஐரோப்பிய மொழிகளும்

திராவிடமொழிகள் சமஸ்கிருத மொழியிலிருந்தே கிளைத்தெழுந்தன என்னுங் கருத்தினைக் கால்டுவெல் வன்மை யாகக் கண்டித்துள்ளார்.[15] திராவிடமொழிகள் இலக்கண அமைப்பு முறையிலே இந்தோ - ஐரோப்பிய மொழிகளி லிருந்து வேறுனவை என்று விளக்குதற்குக் காட்டக் கூடிய ஆதாரங்கள் யாவற்றையுமே தமிழ்மொழியில் இருந்து பெறக்கூடியதாயுள்ளது. அவ்வாறு காட்டப்படும் வேறு பாடுகள் பின்வருமாறு:

1. தமிழ்மொழியிலே எழுவாய்க்கும் பயனிலைக்கு மிடையே திணை, பால், எண், இடம் என்ற வகையிலே இயைபு காணப்படுகின்றது.

   உதாரணமாக, அவன் வந்தான்
   அவள் வந்தாள்
   அது வந்தது

   என்னும் வாக்கியங்கள் இந்தோ-ஐரோப்பிய மொழி களுள் ஒன்றுகிய ஆங்கில மொழியிலே,

RangaRakes tamilnavarasam.com

He came
She came
It came

எனவே அமையும். தமிழ் மெழியிற் பயனிலையிலே **வந்தான், வந்தாள், வந்தது** என்னும் வேறுபாடுகள் ஆங்கில வாக்கியங்களின் பயனிலையிலே காணப்பட வில்லை. இது போலவே ஏனைய இந்தோ-ஐரோப்பிய மொழிகளிலும் இவ்வியல்பு காணப்படுகின்றது.

2. தமிழ்மொழியிற் பெயர்ச்சொல்லினை விசேடித்து வரும் அடை அப் பெயர்ச் சொல் கொள்ளும் இலக்கண இயல்பினைப் பெறுவதில்லை. ஆனால் இந்தோ-ஐரோப்பிய மொழிகளில் அப்படி உண்டு. ஜெர்மன் மொழியில், Der Man Und Die Frau என அமையும் தொடரினை நோக்குக. **Man** என்பதனை விசேடிக்க **Der** என்பதும், **Frau** என் பதனை விசேடிக்க **Die** என்பதும் இடம் பெறு கின்றன. அத்தொடரினைத் தமிழ்மொழியிலே ஒரு ஆணும் ஒரு பெண்ணும் என்று பெயர்த்து விடலாம். **ஆண், பெண்** என்னுஞ் சொற்களுக்கு முன்வரும் அடை ஒரு என்னும் ஒரே சொல்தான். ஆனால் ஜெர்மன், மொழியில் ஆணுக்கும் பெண் ணுக்கும் வெவ்வேறடைகள் இடம் பெறுகின்றன.

தமிழ் மொழியிற் பெயர்ச் சொல் வேற்றுமை உருபேற்குமிடத்து அதற்கு முன்னர் வரும் அடை யும் அதே வேற்றுமை உருபினை ஏற்கும் வழக்கம் இல்லை. ஆனால் இந்தோ-ஐரோப்பிய மொழிகளிலே இவ்வழக்கம் உண்டு. சமஸ்கிருத மொழியிலிருந்து ஓர் உதாரணத்தைக் காட்டலாம்.

க்ருஷ்ண ம் காகம்

என்னும் தொடரினை நோக்குக. காக என்னும் பெயர்ச் சொல் க்ருஷ்ண என்னும் அடையினைப் பெறுகின்றது. பெயர்ச்சொல் ம் என்னும் இரண் டாம் வேற்றுமை உருபினை ஏற்கும்போது அதற்கு முன்னுள்ள அடையும் அவ்வுருபினை ஏற்கின்றது.

அதனால் க்ருஷ்ண காக என்னுந் தொடர் **க்ருஷ்ணம் காகம்** என ஆகின்றது. ஆனால் தமிழிலோ அத் தொடரை மொழிபெயர்க்குமிடத்துக் **கறுப்புக் காகத்தை** என்றுதான் கூறுவோம். இங்கு **கறுப்பு** என்னும் அடைச்சொல் இரண்டாம் வேற்றுமை உருபு ஏற்பதில்லை.

3. ஒன்றுக்கு மேற்பட்ட பெயர்ச்சொற்கள் அடுக்காக வருமிடத்து இறுதிப் பெயர்ச்சொல்லுக்கு முன்பாக இணைப்பிடைச் சொல் ஒன்றினை வழங்குதல் இந்தோ-ஐரோப்பிய மொழிகளிலே காணப்படும் இயல்பாகும். உதாரணத்துக்குப் பின்வரும் ஆங் கிலத் தொடரினை நோக்குக :

Rama, Lakshmana, Sita and Hanuman

மேற்காட்டிய தொடரிலே **and** என்னும் இணைப் பிடைச் சொல் கையாளப்பட்டுள்ளது. ஆனால், தமிழ் மொழியிலோ அத்தகைய சந்தர்ப்பங்களிலே ஒவ்வொரு பெயர்ச் சொல்லுடனும் **எண்ணும்மை** சேர்த்தல் வழக்காகும். மேற்காட்டிய ஆங்கிலத் தொடரைத் தமிழிலே மொழி பெயர்ப்பின்,

ராமனும் லட்சுமணனும் சீதையும் அனுமானும் என அமையும்.

4. தமிழ்மொழியிலே ஒன்றுக்கு மேற்பட்ட அடிப்படை வாக்கியங்களை இணைத்துத் தொடர்வாக்கியமாக்கு மிடத்து எச்சங்களே அவற்றைத் தொடர்புறுத்திச் செல்கின்றன. ஆனால் இந்தோ-ஐரோப்பிய மொழி களிலே இணைப்பிடைச் சொற்களே பெரும்பாலும் பயன்படுத்தப்படுகின்றன. உதாரணமாக,

செல்வி பாடசாலைக்குப் போனாள்
நான் செல்வியைக் கண்டேன்

என்னும் இருவாக்கியங்களும் இணையுமிடத்து,

நான் பாடசாலைக்குப் போன செல்வியைக் கண்டேன்

RangaRakes tamilnavarasam.com

என அமையும். ஆனால் ஆங்கிலத்திலே இவ் வாக்கியங்கள் இணையுமிடத்து இணைப்பிடைச்சொல் உபயோகிக்கப்படுகின்றது.

Selvi went to School
I saw Selvi

என்னும் இரு வாக்கியங்களும் இணைந்து ஒரு தொடர்வாக்கியமாக அமையும்போது,

I saw Selvi who went to school

என **who** என்னும் இணைப்பிடைச் சொல் பயன் படுத்தப்படுகின்றது.

5. தமிழிலே எதிர்மறை வினையுண்டு. தமிழ் வினைச் சொல்லைப் பாகுபாடு செய்யுமிடத்து, அப்பாகு பாட்டினுள் எதிர்மறை வினையும் ஒன்றுக அமையும்.

அவரோ வாரார்.....

என்னுஞ் சங்கப் பாடலடியில் வாரார் என்பது எதிர்மறை வினைமுற்றுக அமைகின்றது. இன்று எங்களுடைய பேச்சுவழக்கில் அது வரார் என்று அமையும். ஆனால், இந்தோ - ஐரோப்பிய மொழி களில் எதிர்மறையைக் குறிக்க அதற்கென ஒரு தனிச் சொல் பயன்படுத்தப்படுகின்றது :

Not (ஆங்கிலத்தில்)
Nicht (ஜெர்மன் முதலிய மொழிகளில்)
Na (சமஸ்கிருதத்தில்)
Nạ̈ (சிங்களத்தில்)

மேற்காட்டியவாறு திராவிடமொழிகளுக்கும் இந்தோ-ஐரோப்பிய மொழிகளுக்குமிடையே பல வேறுபாடுகளுண்டு. இவ்வேறுபாடுகளை விளக்குவதற்குத் தமிழ் மொழியிலிருந்தே எல்லாச்சான்றுதாரங்களையுங் கொடுக்கக் கூடியதாயுள்ளது.

அடிக்குறிப்புக்கள்

1. இவ்வளர்ச்சி பற்றிய விபரங்களுக்கு :
   Robins, R. H., **A Short History of Linguistics,** pp, 162-192
   முத்துச் சண்முகன், இக்கால மொழியியல், ப. 19-25
2. மீனாட்சிசுந்தரன், தெ. பொ., தமிழ்மொழி வரலாறு, ப. 17.
3. Caldwell, R., **A Comparative Grammar of the Dravidian Languages,** p. 4
4. மு. கு. நூ., ப. 17.
5. இக்கட்டுரையிற் சில பண்புகளே தரப்பட்டுள்ளன. மேலும் விபரங்கள் அறிய வேண்டின், பார்க்க:
   (a) Zvelebil, K., "From Proto-Dravidian to Old Tamil and Malayalam", 1971, pp. 54-70
   (b) Bright, William., "Dravidian Metaphony" 1966, pp. 311-322.
6. மீனாட்சிசுந்தரன், தெ. பொ., மு. கு. நூ., பக். 18.
7. வேலுப்பிள்ளை, ஆ., வரலாற்றுத் தமிழ் இலக்கணம் பக். 75.
8. வித்தியானந்தன், சு., தமிழர் சால்பு, பக். 13.
9. வேலுப்பிள்ளை, ஆ., மு. கு. நூ. பக். 75.
10. தொல்காப்பியம், எழுத்து., நச்சினார்க்கினியம் பக். 143.
11. தெ. பொ. மீனாட்சிசுந்தரன் தமிழ் மொழி வரலாற்று நூலிலே குகைக்கல்வெட்டுகளிற் காணப்படும் தொட ரமைப்புக்கு இத்தொடரினை உதாரணமாக எடுத் தாண்டுள்ளார். பக். 66.
12. Caldwell, R., **Ibid,** p. 180.
13. **Ibid,** p. 177.
14. **Ibid,** p. 168.

RangaRakes tamilnavarasam.com

2

இலக்கணம் : நமது மரபும் நவீன நோக்கும்

1. எழுத்துஞ் சொல்லும் கருவிநூலே

இலக்கணம் பற்றித் தமிழறிஞர்கள் என்ன கருதினர் என்பதுபற்றி முதற்கண் நாம் நோக்கவேண்டும். பண்டைத் தமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்திலே 'இலக்கணம்' என்னுஞ் சொல் இரண்டு சூத்திரங்களிலே எழுத்தாளப் பட்டுள்ளது.[1] ஆனால், 'இலக்கணம்' என்னுஞ் சொல் தனியே மொழிபற்றிய விவரணத்துக்காகத் தமிழ் நாட்டிலே கையாளப்படவில்லை. மொழியாலான இலக்கியம், அவ் விலக்கியத்துக்குப் பொருளாகும் கரு உரிப்பொருள், மக்கள் வாழ்வு, ஆகியவற்றின் நெறிகளைக் குறிக்கவும் இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. (ஐந்திலக்கணம் கூறுந் தமிழ் மரபுபற்றி இவ்வியலின் 4ஆம் பகுதியிற் கூறப்படும்). ஆனால், மொழியின் நெறிகளைக் கூறுந் துறைக்கு 'இலக்கணம்' என்னுஞ் சொல் பொருத்தமாகவே அமைகின்றது. மொழியின் இலட்சணங்களைக் கூறுவதுதான் இலக்கணம் என்று கொள்ளின் அது நவீன மொழியியற் கோட்பாட் டினையே பிரதிபலிக்கின்றது எனக் கூறலாம். ஆனால், தொல்காப்பிய இலக்கண நூலினைச் சுட்டுதற்கு 'புலம்', 'பனுவல்' என்ற சொற்களையே அந்நூலுக்குச் சிறப்புப் பாயிரம் வழங்கிய பனம்பாரனார் கைக்கொண்டுள்ளார்.[2]

'புலம்', 'பனுவல்', என்னும் இரு சொற்களுமே 'சாஸ்தி ரங்களை' அல்லது 'மெய்ஞ்ஞானத்தினை'க் குறிப்பனவாயுள்ளன. இந்நிலை மொழியாய்வு பற்றி எம் பண்டையோர் கொண்டிருந்த கருத்தினை ஓரளவு புலப்படுத்துகின்றது எனக் கொள்ள இடமுண்டு. முன்னர் மொழிபற்றிய ஆய்வுகளெல்லாம் இலக்கியத்தைப் படிப்பதற்கும் சாஸ்திர நூல்களின் பொருளைத் தெளிவுற அறிந்து கொள்வதற்காக வுமே நடைபெற்றுள்ளன. இறையனர் அகப்பொருள் உரை காரர்,

> 'என்னை எழுத்துஞ் சொல்லும் யாப்பும்
> ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றே
> பொருளதிகாரம் பெறேமேயெனில், இவை
> பெற்றும் பெற்றிலேம்'[3]

என்று கூறியுள்ளதை நோக்குக.

இதே நிலை மேலைத்தேய இலக்கண வரலாற்றிலுங் காணப்படுகின்றது.

> 'Though as a recognized independent subject linguistics is fairly new, linguistic speculation and the analysis of languages have occupied men's minds from the earliest days of civilization in a number of different cultures. In the history of European civilization linguistic thought, like thought in so many areas, began in ancient Greece under the cover-all title of "Philosophy (philosophia)..... The observations of Plato, Aristotle and the Stoics on language appear as part of their general exposition of the theory of Knowledge and of the principles of logic..... Under the influence of Alexandrian literary criticism, linguistic studies developed some degree of independence in later antiquity, but subsequently other factors promoted close contacts between philosophers and grammarians'

RangaRakes tamilnavarasam.com

என்று ரைபின்ஸ் என்பவர் குறிப்பிடுவர்.[4] எழுத்தையும் (அல்லது ஒலியையும்) சொல்லையும் அடிப்படையாகக் கொண்ட மொழி மேலைத்தேயத்திற் பண்டைக்காலத்திலே தத்துவ விசாரத்துக்கும், பண்டைய இலக்கியங்களின் பொருளைத் தெளிந்து கொள்வதற்கும் கருவியாகவே அமைந்தது. தமிழ் இலக்கண மரபிலும் நன்கு வேரூன்றி யிருந்த இக்கருத்தினைச் சபாபதி நாவலர் நன்கு விளக்குகின்றார்:

> 'இவ்வதிகாரத்து எழுத்துச் சொற் கருவியாக உணரப்படும் பொருளிலக்கணம் உணர்த்தப்படும் .... எழுத்துஞ் சொல்லும் ஆராய்ந்தார் அவ்வுணர்ச்சி கருவியாகக் கொண்டு பொருளிலக்கணம் ஒரு தலையான் ஆராய்ந்தும் உறுதி தலைக்கூடக்கடவர் ஆவரென்க'[5]

எழுத்துச் சொல் ஆகியன பற்றிய மொழியாய்வினைத் தனியாக மேற்கொள்ளாது அதனைக் கருவியாகக் கொண்டு ஏனைய பொருள்விடயங்களையும் சேர்த்து ஆராய்வதே 'இலக்கணம்' என்று தமிழ்பேசும் ஓர் அறிஞர் குழாம் கருதி வந்துள்ளது.

ஆனால், எழுத்துஞ் சொல்லும் ஆராய்வதே 'இலக்கணம்' என்னும் கருத்தினைக் கொண்டதாக இன்னோர் அறிஞர் குழாமும் தமிழ் நாட்டிலே இருந்து வந்துள்ளது. இவர்கள் சமயத்தாற் சமணராவர். எழுத்துஞ் சொல்லும் மட்டுமே ஆராய்கின்ற நூலாகிய நேமிநாதம் 'இலக்கணப்' என்னுஞ் சொல்லினைத் தன் நூலாய்வுக்குக் கொள்கின்றது. நேமிநாதர் ஒரு சமண சமயத்தினர்.[6] எழுத்துஞ் சொல்லும் என்னும் மொழியாய்வினைத் தனியாக மேற்கொண்ட குழாத்தினர் மற்றைய குழாத்தினரின் கண்டனத்துக்குட்பட்டனர். அவ் வாறெழுந்த கண்டன மரபினைச் சபாபதி நாவலர் பின் வருமாறு தொகுத்துக் கூறுகின்றார்:

> 'முகத்துக் கண்ணுடையராயினுர் அது கருவியாக உருவப்பொருள் நாடிக் காண்டலைப் பயனுகக் கொள் ளுதல் போல, எண்ணும் எழுத்தும் என்னும் அறிவுக் கண்ணுடையராயினுர் அவ்வுணர்ச்சி கருவியாகப்

> பொருளிலக்கணம் ஆராய்ந்து கண்டு உறுதி தலைக் கூடுதலைப் பயனுகக் கொள்ள வேண்டும் என்பதாயிற்று. இனி அவ்வாறு முயலாது அக்கருவிநூல் உணர்ச்சி மாத்திரையே அமையுமென்றிருப்பரேல், அக்கல்வி அவர்க்கு வீண் உழப்பாவதல்லது பயப்பாடு உடைத் தாமாறு இன்றென்பர்,
>
> சத்தமுஞ் சோதிடமும் என்றுங் கவைபிதற்றும்
> பித்தரிற் பேதையார் இல்
>
> என்றார் நீதிநூலோர் என்க.
>
> இனி எழுத்துஞ் சொல்லும் ஆராய்ந்து வல்லவராக முயல்வார் இக்காலத்துப் பலருளர். அவ்வாராய்ச்சி கருவியாகப் பொருளாராய்ந்து உறுதி தலைக்கூட முயல்வார் அரியர்'[7]

மேற்காட்டிய கண்டனங்கள், மொழியினைத் தனியாக ஆய்வு செய்யும் ஒரு குழாத்தினர் தமிழ் நாட்டிலே உருவாகினர் என்பதைப் புலப்படுத்துகின்றன. இக்குழாத்தினருட் சிறப் புற்று விளங்குபவர் இலக்கணச் சுருக்கம் செய்த ஆறுமுக நாவலராவார். அவர்,

> 'இலக்கண நூலாவது, உயர்ந்தோர் வழக்கத்தையுஞ் செய்யுள் வழக்கத்தையும் அறிந்து விதிப்படி எழுதுதற் கும் பேசுதற்குங் கருவியாகிய நூலாம்.
>
> அந்நூல், எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், தொடர் மொழியதிகாரம் என மூன்றதிகாரங்களாக வகுக்கப் படும்.'[8]

என்று கூறியுள்ளமை மனங்கொள்ளத் தக்கதாகும். மொழியினைத் தனியாக ஆராயும் இக்கால மொழியியல் துறையின் போக்கிற்கேற்ப அவருடைய கூற்றுக்கள் ஓரளவு அமைந்துள்ளன.

2. மொழியின் தோற்றம்

எழுத்துச் சொல்லாராய்ச்சி கருவி முயற்சியே என்று கூறுவார் கருத்துத் தமிழ்மொழியின் தோற்றத்தினைப் பற்றியும் அதன் தனித்துவத்தினைப் பற்றியும் மரபுரீதியான

RangaRakes tamilnavarasam.com

ஒரு கொள்கை உருவாக ஏதுவாயிற்று. மொழியின் தோற்றம் மொழியாய்விலே ஈடுபட்டவர்கள் பலருடைய கவனத்தினையும் ஈர்த்தது ஆச்சரியப்படுவதற்கில்லை. மொழியின் தோற்றம் பற்றிப் பலரும் பல்வேறு காரணங்களைக் கூறி வாதிட்டனர்.[9] எழுத்துஞ் சொல்லும் கற்பது வீடுபேறு பயக்கும் பொருணூல்களைக் கற்பதற்கென்று வாதிட்ட தமிழ் இலக்கணகாரர், தமிழ் மொழியுமே கடவுளாற் படைக்கப் பட்டதெனக் கூறினர். இலக்கண நூல்களாகிய தொல் காப்பியம், நேமிநாதம், நன்னூல் போன்றவற்றை யாத்த ஆசிரியர்கள் இக்கடவுட் கொள்கை பற்றி எங்ஙணும் கூறினரில்லை. அவற்றுக்கு உரை வகுத்த சிலரும், பிற் காலத்திலே தமிழிலக்கண மரபு எழுதப் புகுந்த சிலரும், பக்திப் பாடல்கள், புராணங்கள் பாடிய சிலருமே இக் கொள்கையைக் கொண்டுள்ளராயிருந்துள்ளனர். தொல் காப்பியத்தின் இரண்டாவது அதிகாரமாகிய சொல்லதிகாரத்துக்கு உரையெழுதிய சேனவரையர் சூத்திரங்களுக்கு முன் காப்புச் செய்யுட்கள் சிலவற்றைப் பாடியுள்ளார். அதிலொன்றிலே,

> ஆதியிற் றமிழ்நூ லகத்தியர்க் குணர்த்திய
> மாதொரு பாகனே வழுத்துதும்[10]

என்று பாடியுள்ளார். ஆனால் தொல்காப்பிய முதலதிகார மாகிய எழுத்ததிகாரத்துக்கு உரையெழுதிய நச்சினார்க் கினியரோ இவ்வாறு எதுவும் கூறியதாயில்லை என்பதை இங்கு நாம் மனங்கொள்ளுதல் வேண்டும். முதற்றமிழ் இலக்கணம் அகத்தியராலே இயற்றப்பட்டதென்றும், அதுவும் சிவனாலே அவருக்கு உபதேசிக்கப்பட்டதென்றும் கூறும் மரபு இன்றுவரை தமிழிலக்கணக்காரரால் ஏற்றுக் கொள்ளப்பட்டுவந்துள்ளது. இதற்கு மேலாக, தமிழ் மொழியும் வடமொழியும் சிவனாலே படைக்கப்பட்டு நடை பெறும் தெய்வ மொழிகளென்றும், அவற்றுள்ளே தமிழ் அகத்தியர்க்கும் ஆரியமொழி பாணினிக்கும் ஓதப்பட்ட தென்றும் கூறப்பட்டது. இதற்கு ஆதாரமாக,

> தம்மலர் அடியொன் றடியவர் பரவத்
> தமிழ்ச்சொலும் வடசொலும் தாள்நிழற் சேர
> அம்மலர்க் கொன்றை அணிந்தவெம் அடிகள்
> அச்சிறு பாக்கம தாட்சி கொண் டாரே

என்னும் சம்பந்தர் பாடலும்,

> வடமொழியைப் பாணினிக்கு
> வகுத்தருளி அதற்கிணையாத்
> தொடர்புடைய தென்மொழியை
> உலகமெலாந் தொழுதேத்தும்
> குடமுனிக்கு வலியுறுத்தார்
> கொல்லேற்றுப் பாகரெனில்
> கடல்வரைப்பி லிதன்பெருமை
> யாவரே கணித்தறிவர்

என்னுங் காஞ்சிப் புராணச் செய்யுளும் எடுத்துக் காட்டப் படும்.[11] இவ்வாறு மொழிதொடர்பாகக் கடவுட்கொள் கையை வலியுறுத்துவோரிடையேயும் ஒரு வகையான கருத்து வேறுபாடு இருப்பதையும் இங்கு சுட்டுதல் வேண்டும். மொழிநூல் எழுதிய மாகறல் கார்த்திகேய முதலியார்,

> 'அகத்தியனாரும், மார்க்கண்டேயனாரும், வான்மீக னாரும், கௌதமனாரும், தலைச்சங்கத்துச் சான்றோர் களும் பின்னை முதலாசிரியர். அகத்தியனாருக்கு முன் னுள்ள சான்றோர் முன்னை முதலாசிரியர். முன்னை முதலாசிரியர் வழக்கிற்கும் பின்னை முதலாசிரியர் வழக்கிற்கும் உள்ள முரண்பாடு சிறுபான்மையேயாம்.
>
> சிவபெருமான் விநாயகன் முதலியோர், முன்னை முதலாசிரியர்க்கும் ஆசிரியராவர்.
>
> முதல்முதல் தமிழ்மொழி, தளிர்த்துப் பூத்துப் பழுத்து மணங்கமழப் பெற்றிருந்தது.
>
> பிறகு ஆரியமொழி, தளிர்த்துப் பூத்துப் பழுத்து மணங்கமழப் பெற்றிருந்தது.'[12]

RangaRakes tamilnavarasam.com

என்று கூறிச்சென்றுள்ளார். கடவுட் கொள்கையை ஏற்றுக் கொண்ட போதிலும் தமிழ்மொழியே முதலிற் படைக்கப் பட்டது என்பது கார்த்திகேய முதலியாரின் கருத்து. இவருக்கு முன்னர் வீரசோழிய உரைகாரர் பெருந்தேவனார்,

'தமிழ்ச் சொல்லிற்கெல்லாம் வடநூலே
தாயாகி நிகழ்கின்றமையின் அங்குள்ள
வழக்கெல்லாம் தமிழுக்கும் பெறும்.'[13]

என்று கூறியுள்ளதையும் இங்கு குறிப்பிடுதல் வேண்டும். ஆனல் சிவஞான முனிவர் வழிவந்தவர் தமிழும் ஆரியமும் சிவபிரானுல் ஒருங்கு படைக்கப்பட்டன என்பர்.[14]

இவ்வாறு சைவசமயத்தைச் சார்ந்தவர்கள் தமிழ் மொழியின் தோற்றத்தினைக் கடவுளோடு தொடர்புறுத்துதல் போல ஏனைய சமயத்தினர் அவ்வாறு தொடர்புறுத்துவதா யில்லை. தொல்காப்பியம், நேமிநாதம், நன்னூல் போன்ற இலக்கணங்களை எழுதிய பிறசமயத்தினரோ இளம்பூரணர், நச்சினார்க்கினியர் போன்ற உரையாசிரியர்களோ கடவுட் கொள்கை பற்றி எதுவும் கூறினரில்லை. ஆனல் வீரசோழிய காரரோ, அகத்தியர் சிவனிடம் தமிழ் கேட்ட செய்திக்குப் பதிலாக, அவலோகிதீஸ்வரரிடம் தமிழ் கேட்டுணர்ந்ததாகக் கூறுவர். அவருடைய காப்புச் செய்யுட்களில் ஒன்று பின்வருமாறு :

ஆயுங்குணத்தவ லோகிதன்பக்க லகத்தியன்கேட்
டேயும் புவனிக் கியம்பியதண்டமி ழீங்குரைக்க

3. இலக்கியங் கண்டதற்கு இலக்கணம்

இலக்கியங் கண்டதற்கு இலக்கணம் இயம்பும் மரபு தமிழ்மொழி இலக்கணகாரரிடையே பெருவழக்காயுள்ளது.

இலக்கியம் இன்றி இலக்கணம் இன்றே
எள்ளின் முகில் எண்ணெயும் இன்றே
எள்ளினுள் எண்ணெய் எடுப்பது போல
இலக்கியத்தினின்றும் எடுபடும் இலக்கணம்

என்ற பழய பாடல் ஒன்றினை உதாரணமாகக் காட்டுவது வழக்கமாயுள்ளது. இப்பாடலை அகத்தியனுர் பாடினுர் என்று கூறும் வழக்கமும் உண்டு. நன்னூலார் இம்மரபினை

இலக்கியங் கண்டதற் கிலக்கண மியம்பலில்[15]

என்று நேரடியாகவே கூறியுள்ளார். தமிழ் இலக்கணகாரர் எல்லோருமே இக் கொள்கையுடையர் என்று கூறின் தவருகாது. இக்கொள்கை மூன்று வகையான விளைவுகளைத் தமிழிலக்கண மரபிலே ஏற்படுத்திற்று.

3·1 எழுத்துக்கு முதன்மை கொடுத்தல்

எழுத்து வடிவமும் பேச்சொலியும் மொழி கருத்துத் தொடர்புக்கேற்ற சாதனமாக அமைவதற்கு உகவும் இரு மூலங்களாகும். இவற்றுள் எழுத்து வடிவுக்கே தமிழ் இலக்கணகாரர் முக்கியத்துவங் கொடுத்தனர். இலக்கியங் கண்டதற் கிலக்கணம் இயம்பும் மரபு இத்தகைய நிலை யினைத்தான் தோற்றுவிக்கும். மேலைத்தேயத்திலும் இத் தகைய விளைவு ஏற்பட்டது பற்றி மொழியியலறிஞர் லயன்ஸ் பின்வருமாறு எடுத்துக் கூறுவர் :

'Admiration for the great literary works of the past encouraged the belief that the language in which they were written was itself inherently 'purer' more 'correct' than the current colloquial speech of Alexandria and the other Hellenistic centres. The grammars produced by Hellenistic scholars came therefore to have a double purpose : they combined the aim of establishing and explaining the language of the classical authors with the desire to preserve Greek from corruption by the ignorant and unlettered. This approach to the study of language fostered by Alexandrian classicism involved two fatal misconceptions. The first concerns the relation

RangaRakes tamilnavarasam.com

between written and spoken language; the second has to do with the manner in which language develop.'[16]

எழுத்து மொழி, பேச்சுமொழி ஆகிய இரண்டிலும் பேச்சு மொழியே முக்கியத்துவம் வாய்ந்ததெனக் கூறுவர் நவீன மொழியியலாளர். எனினும், எழுத்து மொழிக்குஞ் சில நற்பண்புகள் உண்டென்பதையும் நாம் மறந்துவிடலாகாது.[17] மொழியறிவினை 'எழுத்து' எனவும், இலக்கண நூல்களை 'எழுத்து நூல்' எனவுங் குறிப்பிடும் வழக்கம் தமிழிலே யுண்டு. 'எண்ணென்ப வேனை யெழுத்தென்ப' எனவும், 'எழுத்தறியத் தீருமிழி தகைமை' எனவும் 'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' எனவும் தமிழிலே வழங்கப்பெறும் செய்யுளடிகளால் அவ்வழக்கம் தெளிவுறுத்தப்படும். இலக்கணம் என்னுஞ் சொல் பேச்சு வழக்கிலுள்ளவற்றை அறியும் திறனுக்குரியதன்றி, எழுதப்பட்ட இலக்கிய மொழியின் திறனை அறிவதைக் குறிப்பதாகும் என்பதனைத் தொல்காப்பியரே ஏற்றுள்ளார்.

ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியு
மொன்றினைக் கூறும் பன்மைக் கிளவியும்
வழக்கி னகிய வுயர்சொற் கிளவி
இலக்கண மருங்கிற் சொல்லா றல்ல[18]

என்னுஞ் சூத்திரம் இதற்குச் சான்று பகருகின்றது. அத்துடன் தொல்காப்பியம் போன்ற நூல்களை எழுத்து நூல் எனச் சுட்டப்படுவதை,

'தொல்காப்பியம் வழக்கு வடிவும், செய்யுள் வடிவு மாகவுள்ள இயற்றமிழின் இயல்புகளை உரைத்தலால் இயற்றமிழ் எனப்படினும் பொதுவாக நிற்பதுமின்றிச் சிறப்பாக நின்று தொல்காப்பியம் போன்ற நூல்களை உணர்த்தாமையினலன்றே அந்நூல்களிலுள்ள புலனை எழுத்து எனவும் அந்நூல்களை எழுத்து நூல்களெனவும் சிறப்பாக வழங்குவதற்கும் அது அவற்றைச் சிறப்பாக உணர்த்துமென்பதற்குமன்றே 'மயங்காமரபின் எழுத்து' எனவும் 'எண்ணென்ப வேனையெழுத்தென்ப' எனவும்

'எழுத்தறியத் தீருமிழிதகைமை' எனவும் பண்டையோர் கூறுவாராயினர் .....ஆகையால், இயல், இயற்றமிழ் என்பதைவிட 'எழுத்து' என்பதே தொல்காப்பியம் முதலிய நூல்களைப் பொதுவாக வழங்குவதற்குச் சிறந்த பெயராகக் கொண்டனரென்பது சாலுமென்க.'[19]

என்னும் மேற்போந்த கூற்றுக்கள் அரண் செய்கின்றன. அத்துடன் நேமிநாதம் ஆசிரியரும்,

புல்லா எழுத்தின் கிளவிப் பொருள்படினும்
இல்லா விலக்கணத் தென்றெழிக[20]

என்று கூறியிருப்பதும் மேற்போந்த கருத்துக்கு மேலுமொரு சான்றாகின்றது.

இவ்வாறு எழுத்து மொழி ஆய்வே இலக்கணம் என்று கருதும் வழக்கம் கிரேக்க மொழியறிஞரிடையேயும் காணப் பட்டது. Grammar என்னும் ஆங்கிலச் சொல் பிறந்த கிரேக்க மூலச் சொல்லினது பொருள் 'எழுத்துக்கலை' என்பதேயாகும். அத்துடன் அவர்கள் ஒலிகளுக்கும் எழுத் துக்களுக்கும் நெறியான எவ்விதத் தொடர்புகளையும் ஏற்படுத்தினரில்லை.[21] தமிழ் இலக்கணகாரரும் 'பிறப் பியல்' என்றொரு பகுதியினைத் தமது எழுத்ததிகாரங்களிலே அமைத்த போதிலும் தமிழ் எழுத்துக்களுக்கும் அவற்றின் ஒலிகளுக்குமிடையே நெறியான தொடர்புகளை ஏற்படுத்தின ரென்று கூறுவதற்கில்லை. உதாரணமாக,

உந்தி முதலா முந்துவளித் தோன்றித்
தலையினு மிடற்றினு நெஞ்சினு நிலைஇப்
பல்லு மிதழு நாவு மூக்கு
மண்ணமு முளப்பட வெண்முறை நிலையா
னுறுப்புற் றமைய நெறிப்பட நாடி
யெல்லா வெழுத்துஞ் சொல்லுங் காலைப்
பிறப்பி னுக்கம் வேறுவே றியல
திறப்படத் தெரியும் காட்சி யான[22]

என்று தொல்காப்பியர் கூறுவதை நோக்குக. எழுதப்படும் 'எல்லா எழுத்துஞ் சொல்லுங்காலைப் பிறப்பினுக்கம்' கூறுகின்றாரேயொழிய பேச்சிலே இடம் பெறும் ஒலிகளின்

RangaRakes tamilnavarasam.com

பிறப்புக் கூறினரில்லை. பொருளுள்ள சொல்லாயிருப்பினும் எழுத்தின் பாற்படாதாயின், அது இலக்கணத்தின் பாற் படாதென நேமிநாதம் கூறியதை இங்கு திரும்பவும் நினைவு கூரவேண்டியுள்ளது.[23] இவ்வாறு எழுத்து வழக்கே இலக் கணத்தின் பாற்பட்டதென்ற காரணத்தினாலே, பேச்சு மொழியின் இலக்கணம் பற்றி எவரும் எழுதமுற்படாதது மாத்திரமன்றி, பேச்சுமொழி இழித்துரைக்கவும் பட்டது. உதாரணமாக, 'வழக்கெனப்படுவ துயர்ந்தோர் மேற்றே'[24] என்னுஞ் சூத்திரத்தை நினைவிலே கொண்டு பேராசிரியர்,

> 'வழுவில் வழக்கமென்பார் உளராயின் இக்காலத் துள்ளும் ஒரு சாரார்க்கல்லாது அவர் சான்றோரெனப் படாரென்பதூஉம், இங்ஙனம் கட்டளை செய்யவே காலந்தோறும் வேறுபட வந்த அழிவழக்கும், இழிசனர் வழக்கும் முதலாயினவற்றுக்கெல்லாம் நூல் செய்யின் இலக்கணமெல்லாம் எல்லைப்படாது இறந்தோடுமென் பதூஉம், இறந்தகாலத்து நூலெல்லாம் பிறந்த பிறந்த வழக்குப்பற்றிக் குன்றக்கூறல் என்னுங் குற்றந் தங்கு மென்பதூஉம்...'...[25]

என்று கூறுமிடத்து உயர்ந்தோர் வழக்கன்றி, ஏனையோர் வழக்கு 'அழிவழக்கு' எனவும் 'இழிசனர் வழக்கு' எனவும் படும் என்று குறிப்பிட்டுள்ளமையை இங்கு சுட்டிக்காட்ட லாம். பேச்சு மொழியினை இவ்வாறு பேராசிரியர் இழிவு படுத்திக் கூறுவதற்குரிய காரணம் எழுத்து வழக்குக்கு முதன்மை கொடுக்கப்பட்டதேயாகும். எமது இலக்கண காரர் பேச்சு மொழிக்கு இலக்கண நூல் எழுதவில்லை யென்று இங்கு நாம் குறையாகக் கூறவில்லை. அதனை எழுதப்புகின் வருமிடர்கள் யாவை எனப் பேராசிரியர் மேலே பொருத்தமாகக் குறிப்பிட்டுள்ளார். ஆனால் பிறந்து மொழிபயின்று எழுதுவதற்கு முன்னே பேசப்பழகிக் கொள் கின்றோம் என்பதையும், பேச்சுமொழி இழிசனர் வழக்கு ஆகாதென்பதையும் பேராசிரியர் உணராது போனதற்குத் தமிழில் வேரூன்றிவிட்ட எழுத்து வழக்கிலக்கண மரபே காரணமாகும். குழந்தை என்றால் 'உயர்ந்த குழந்தை'

என்றோ 'தெய்வக் குழந்தை' என்றோ கருதாது 'குழலினிது யாழினிது என்பர் தம்மக்கள் மழலைச் சொல் கேளாதவர்' என்று வள்ளுவர் கூறியுள்ளார். குழந்தையின் பேச்சும் 'இழிசனர் வழக்கு' ஆகுமோ?

தமிழ்மொழி, உலகிலுள்ள சில மொழிகளைப் போல, இரு வழக்குப்[26] பண்புடைய மொழியாகும். பேச்சு வழக்கும் எழுத்து வழக்கும் என்ற இவ்விரு பண்புகளும் நம் மொழி யிலே உண்டு. இதனை நம் மரபுவழி இலக்கணகாரர் கூட ஏற்றுள்ளனர். 'வழக்குஞ் செய்யுளு மாயிரு முதலின்'[27] என்பதனால் இவ்விரு வேறுபாடுகளையுமே கருதினர். அதனால், இவ்விரு வழக்குகளுமே பேணப்படவேண்டியனவாகும். பல பேச்சு வழக்குகளுடைய தமிழர்களை மொழியாலிணைப்பதற்கு எழுத்து வழக்கு அவசியமாகும். ஆனால் அதே வேளையில் பேச்சு வழக்கு 'இழிசனர் வழக்கு' ஆகிவிடாதென்பதையும் நாம் உணர வேண்டும்.

3.2 இலக்கணக் கூறுகளுக்கு விளக்கம்

எழுத்திலாய இலக்கியங் கண்டு, அவ்விலக்கிய மொழிக்கு இலக்கணம் கூறப்புகுந்தமை காரணமாக, குறிப் பிட்ட ஒரு இலக்கணக் கூறு செய்யுள் மொழிக்காகவே அமைக்கப்பட்டதென விளக்கங் கூறும் மரபு தோன்ற லாயிற்று. இதனைத் தமிழிலக்கணக் கூறுகளுள் ஒன்றாகிய உரிச்சொல் என்பதனை ஆதாரமாகக் கொண்டு விளக்கலாம். தொல்காப்பியர் உரிச் சொல் என்னும் பாகுபாட்டினை ஏற்படுத்தி அதனை ஓரியலிலே நூறு சூத்திரங்களால் விளக்கிச் சொல்கின்றார். அச்சூத்திரங்களிலே அவர் எங்கா யினும் உரிச் சொல் என்பது செய்யுளுக்குரிய சொல் என்று கூறினரில்லை. ஆனால் உரியியல் முதற் சூத்திரத்திற்கு உரை கூறும் சேனவரையரோ, 'பெரும்பான்மையுஞ் செய்யுட் குரியவாய் வருதலின் உரிச்சொல்லாயிற்றென்பாருமுளர்.'[28] என்று கூறிப் போந்தார். இக்கருத்தினைக் கண்ணுற்ற நன்னூலாரோ,

> பல்வகைப் பண்பும் பகர்பெய ராகி
> ஒரு குணம் பலகுணந் தழுவிப் பெயர்வினை
> ஒருவா செய்யுட் குரியன வுரிச்சொல்.[29]

RangaRakes tamilnavarasam.com

என்று நேரடியாகச் சூத்திரத்திலேயே கூறியுள்ளார். தொல் காப்பிய உரியியல் முதற்சூத்திரத்துக்கு உரையெழுதிய தெய்வச்சிலையாரோ உரிச்சொல் இலக்கணம் கூறும் நேமிநாத ஆசிரியரோ இலக்கணச் சுருக்க ஆசிரியரோ உரிச் சொற்கள் செய்யுட்குரிய சொற்கள் என்று கூறினரில்லை. உரிச்சொல் என்னும் இலக்கணப் பாகுபாட்டின் பொருத்தப் பாடு பின்னர் ஆராயப்படும். இவ்விடத்திலே, எழுத்தா லாகிய இலக்கியங்களை நோக்கி இலக்கணம் வகுத்தல் என்னும் மரபு தமிழ் இலக்கணக் கூறுகளுள் ஒன்றுகிய உரிச்சொல் லுக்கு இவ்வாறு விளக்கம் தொடுக்க வைத்துள்ளது என்பதை மாத்திரங் கூறி அமையலாம்.

3.3 பண்டைய செய்யுள் மொழியே தூய்மையும் பொருத்தமும் வாய்ந்தது

இலக்கியங் கண்டதற் கிலக்கணமுரைக்கும் மரபினுலே தமிழிலே ஏற்பட்ட மூன்றுவது விளைவு பழந் தமிழ் இலக்கியச் சொற்களே தூய்மையானவை என்றும் அவையே பொருத்த மானவையென்றும் தமிழறிஞர்கள் எண்ணியமையாகும். ஆறுமுகநாவலர் இலக்கண நூலுக்குக் கொடுக்கும் வரை விலக்கணம்[30] இத்தகைய கருத்தினை அடிப்படையாகக் கொண்டே அமைந்ததெனப் புலப்படுகின்றது. திராவிடப் பிரகாசிகையில் இலக்கிய மரபியல் கிளக்கும் சபாபதி நாவலர் தனக்கு முன்னெழுந்த சங்க இலக்கியங்கள் போன்றவற்றைக் குறிப்பிட்டாரன்றி, முக்கூடற் பள்ளு, திருக்குற்றுலக் குறவஞ்சி சித்தர் பாடல்கள் போன்றவற்றைக் குறியாது விட்டார். இவை 'தொல்காப்பியனர் ஆணை இயற்றமிழ் இலக்கிய மாய், சங்கச்செய்யுட் பிரயோகம் யாண்டும் பயின்று, சொல்லணி பொருளணி துறுமி விளங்கும் நல்ல தமிழ்ப் பிரபந்தங்கள்'[31] என்ற அவருடைய வரைவிலக்கணத்துக்குள் அமையவில்லைப்போலும். பண்டையிலக்கியச் சொற்களை விடுத்துப் பழகுதமிழ்ச் சொற்களிலே செய்யுட்கள் பாடிய பாரதியின் கவிதைகளை இலக்கியங் கண்டதற் கிலக்கண முரைக்கும் மரபிலே வந்தோர் பலகாலமாக ஏற்றுக் கொள்ளாதிருந்தமையை இங்கு நினைவு கூருதல் தகும். இத்தகைய மரபுக்குச் சிகரம் வைத்தது போலப் பேராசிரியருடைய உரைப்பகுதியொன்று அமைகின்றது:

> 'ஆசிரியரும் அவர் போல்வாரும் அவர்வழி ஆசிரியரும் செய்யுள் செய்த சான்றோரும் சொல்லாதன சொல்லப்படாதென்பதூஉம் அவருடம்படாதன சொல் உளவென்று எதிர் நூலென ஒருவன் பிற்காலத்து நூல் செய்யுமாயின் தமிழ் வழக்கமாகிய மரபினெடுந் தமிழ் நூலொடும் மாறுபட நூல் செய்தானுகுமென்பதூஉம் இனித் தமிழ் நூலுள்ளுந் தமது மதத்திற்கேற்பன முதனூல் உளவென்று இக்காலத்துச் செய்யுள் செய்து காட்டிலும் அவை முற்காலத்து இலவென்பது முற்கூறி வந்த வகையான் அறியப்படு மென்பதூஉம்' [32]

இவ்வாறு இலக்கியங் கண்டதற்கு இலக்கணங்கூற முற்பட்ட தால் ஏற்பட்ட மூன்று விளைவுகளும் எமது மரபுவழி இலக்கணகாரரின் இலக்கியம் பற்றிய கோட்பாடுகளையும் கருத்துக்களையும் ஓரளவு தெளிவுறுத்துகின்றன.

4. தமிழ்மொழியில் ஐந்திலக்கண மரபு

தமிழ் மொழியில் இலக்கணம் என்பது மொழியை மாத்திரம் ஆராய்வதாகவன்றி, அம்மொழியிலுலான இலக்கியம், அவ்விலக்கியத்தின் பொருள், வடிவம் ஆகியன வற்றையெல்லாம் ஆராயும் ஒரு நெறியாக அமைந்து வந்த தற்கான காரணங்கள் இவ்வியலின் முதற் பகுதியிலே கூறப்பட்டுள்ளன. இதனுல் தமிழில் எழுந்த முதல் இலக் கணமாகிய தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐந்தினையுங் கூறுவதாக அமைந் துள்ளது. தொல்காப்பியத்தின் பின்னர் கி பி 11ஆம் நூற்றுண்டில் தொல்காப்பியம் போன்று ஐந்திலக்கணங்கள் கூறும் வீரசோழியமும், எழுத்துக்கும் சொல்லுக்கும் இலக் கணங் கூறுவனவாக முறையே கி. பி. 12இலும் 13இலும் எழுந்த நேமிநாதம், நன்னூல் என்பனவும், கி. பி 17ஆம் நூற்றுண்டிற் சொல்லிலக்கணத்தை மட்டுங் கூறும் பிரயோக விவேகம், இலக்கணக் கொத்து, ஐந்திலக்கணத்தினைக் கூறும்

RangaRakes tamilnavarasam.com

இலக்கண விளக்கம் என்பனவும் கி. பி. 18ஆம் நூற்றாண்டில் ஐந்திலக்கணத்தினைக் கூறும் தொன்னூல் விளக்கமும் தோற்றம் பெற்றன.

முழுமையான இலக்கணமென்றால் அது எழுத்து, சொல், யாப்பு, பொருள், அணி ஆகிய ஐந்தினையும் உள்ளடக்கியதாக அமையவேண்டுமென்ற கருத்துத் தமிழ் இலக்கணப் பாரம்பரியத்திலே அழுத்தம் பெற்றிருந்தது. எழுத்துக்கும் சொல்லுக்கும் இலக்கணம் கூறிய நன்னூல் ஐந்திலக்கணமும் கூறுகின்றது என வாதிட்டமை இதனை நன்கு தெளிவுறித்தும். நன்னூல் இலக்கணம் பல உரைகள் கண்ட நூலாகும். இதற்கு யாரோ ஒருவர் சிறப்புப்பாயிரம் வழங்கியுள்ளார். 'இந்நூலுக்குச் சிறப்புப் பாயிரமாக விளங்கும் இப்பாடல் யார் இயற்றியது என்று தெரியவில்லை'. என ஆறுமுகநாவலர் தான் பதிப்பித்த நன்னூற் காண்டிகை யுரையிலே ஓர் அடிக்குறிப்புக் கொடுத்துள்ளார். இப் பாயிரத்திலே,

'அரும்பொரு ளந்தையும் யாவரு முணர'

என்றொரு அடி இடம் பெறுகின்றது. இதனால், நன்னூலார் ஐந்திலக்கணங்களையும் வகுத்தார்; அவற்றுள் யாப்பு, பொருள், அணி ஆகிய மூன்றும் பிற்காலத்திலே இறந்து பட்டன என்று கூற முற்பட்டனர். இத்தகைய கருத்துக்கு நன்னூலிலே எவ்வித ஆதாரமும் இல்லை. அத்துடன் நன்னூல் எழுதப்பட்ட பொழுதே பாயிரமும் எழுதப் பட்டதெனக் கூறுதற்குமில்லை. இது ஐந்திலக்கணம் கூறும் மரபினுள் நன்னூலையும் அடக்குதற்கு எடுத்த முயற்சி போலத் தோன்றுகிறது. பிற்காலத்தில் உரை நடையில் இலக்கணச் சுருக்கங்கள் எழுதிய சிலரும் இவ்வைந்திலக்கண மரபினைப் பின்பற்றியுள்ளார். விசாகப் பெருமாளையரின் இலக்கணச் சுருக்க வினா விடை ஐந்திலக்கணம் கூறுவதாக அமைந்துள்ளது. இத்தகைய ஐந்திலக்கண மரபிலிருந்து ஈழத்து ஆறுமுக நாவலர் முற்றுக விலகிச் செல்கின்றார். நாவலர் நன்னூல் இலக்கணத்தினை இலகுவான வசன நடையிலே தமிழ் மக்களுக்கு அளிப்பதற்கு எடுத்த முயற்சியே இலக்கணச் சுருக்கம் ஆகும். நன்னூல் ஐந்திலக்கணம் கூறியது பற்றி அவர் எங்கும் குறிப்பிட்டாரில்லை. அத்துடன்

இலக்கண நூல் ஒன்றின் அமைப்பு என்ன என்பதை 'அந் நூல், எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், தொடர் மொழி யதிகாரம் என முன்றதிகாரங்களாக வகுக்கப்படும்' என்று அவரே இலக்கணச் சுருக்கத்தில் எடுத்துக் கூறியுள்ளார்.

ஐந்திலக்கணம் கூறும் மரபு தமிழிலே ஒரு நீண்ட வரலாற்றையுடையதாக அமைந்திருக்கின்றது. அதனாலேயே, தொன்னூல் விளக்கம் என்னும் நூலிலே,

எந்நூல் நிலையினும் இயைபெலாம் உணர்த்தும்
அந்நூல் அரியதுஎன அஃகினும் ஒருநூல்
காட்டிய பலநடைக் கடைப்பிடித்து அவற்றோடு
கூட்டிய மற்றவை கொள்ப நல்லோர்என
எழுத்துச் சொல்பொருள் யாப்பணி என்றுஇவண்
வழுத்திய ஐம்பொருள் வழக்கம்.....[33]

என்று வீரமாமுனிவர் குறிப்பிடுகின்றார். பிறநாட்டிலிருந்து வந்து தமிழ் நாட்டிலே தமிழ் கற்றுத் தமிழறிஞராகிய பெஸ்கி பாதிரியார். வீரமாமுனிவர் எனத் தமிழ்ப்பெயர் பூண்ட அவருக்குத் தமிழ் கற்பித்தவர் ஐந்திலக்கண மரபினையே கற்பித்திருக்க வேண்டும். அவ்வாறு இலக்கணம் எழுதுவதுதான் முறையானதும் முழுமையானதுமாகும் என்னும் வழக்கம் அவர் காலம் வரை தமிழறிஞரிடையே நிலவியிருந்திருக்க வேண்டும். ஐந்திலக்கணம் கூறுத இலக் கணகாரர்கூட ஐந்திலக்கணமே சிறப்பானது எனக் கூறி யுள்ளனர். உதாரணமாக, சொல்லிலக்கணத்தை மட்டுங் கூறும் இலக்கணக்கொத்து ஆசிரியர் தன்னுடைய நூற்பா உரையிலே,

'அகப்பொருள் விளக்கம், யாப்பருங்கலக்காரிகை, தண்டியலங்காரமுதலிய நூல்கள் ஒன்றினையே யுணர்த் தும்; நன்னூல் சின்னூல் முதலிய நூல்கள் இரண் டினையேயுணர்த்தும்; அவைபோலாது தொல்காப்பியம் ஐந்தினையுமுணர்த்தலிற் கடலென்றும்.'[34]

என்று கூறியுள்ளதை நோக்குக. ஐந்திலக்கணம் கூறுவதே சிறப்புடையது என்பதை மேற்காட்டிய கூற்று நன்கு வலியுறுத்துகின்றது.

RangaRakes tamilnavarasam.com

இலக்கணம், இலக்கியத்தை நயப்பதற்கு அனுசரணை யாக அமைவது என்னும் கோட்பாடே ஐந்திலக்கண மரபு வேரூன்றுதற்குக் காரணமாக அமைந்தது. இத்தகைய மரபு மேலைத்தேய இலக்கணகாரரிடமும் காணப்பட்டது. கிரேக்க மொழிக்கு இலக்கணம் எழுதிய டயஞ்ஞெசியஸ் திராக்ஸ் (Dionysius Thrax) என்பவர் 'இலக்கணம்' என்றால் என்ன என்று கூறும் பகுதியினை இங்கு தருகிறோம்:

> 'Grammar is the practical knowledge of the general usages of poets and prose writers. It has six parts: first, accurate reading (aloud) with due regard to prosodies; second explanation of the literary expressions in the works; third, the provision of notes on the phraseology and subject matter; fourth, the discovery of etymologies; fifth, the working out of analogical regularities; sixth, the appreciation of literary compositions, which is the noblest part of grammar.'[35]

மேற்காட்டிய கூற்றின்படி இலக்கணம் என்பது செய்யுளாசிரியர்களும் உரைநடையாசிரியர்களும் கையாளும் பொது வழக்குகள் பற்றிய அறிவேயாகும். அவ்விலக்கணம் ஆறு பகுதிகள் கொண்டதாக அமையுமெனக் கூறப்பட்டுள்ளது. அப்பகுதிகளாவன: முதலாவது, செய்யுள் வடிவ அமைதியினை அனுசரித்துச் சரியான முறையிலே (உரத்து) வாசித்தல்; இரண்டாவது, நூல்களிலுள்ள இலக்கிய வெளிப்பாடுகளின் விளக்கம்; மூன்றாவது, நூற்பொருள், தொடரமைதிகள் பற்றிய குறிப்புக்கள்; நான்காவது, பதங்களை அறிதல்; ஐந்தாவது, ஒற்றுமை ஒழுங்குகளை அறிந்து கொள்ளுதல்; ஆறாவது, இலக்கிய ஆக்கங்களை நயத்தல். இதுவே இலக்கணத்தின் அதியுன்னத பகுதியாகும். இலக்கியத்தை நயப்பதற்கும் துருவி ஆராய்வதற்கும் இலக்கணம் எவ்வாறு மேலைத்தேய மரபிலே அவசியமாயிற்று என்பதை மேற்படி கூற்றிலேயே உணரமுடிகின்றது. எமது ஐந்திலக்கண மரபும் இந்த அடிப்படையிலேயே அமைந்தது. இலக்கணம் எழுத்தையும் சொல்லையும் மாத்திரம் ஆராய்வதல்ல; அவற்றால் அமைக்கப்படும் யாப்பு,

யாப்பினால் அமைந்த செய்யுள், அச்செய்யுளில் அமைந்துள்ள அணி, அச்செய்யுள் நுதலும் பொருள் ஆகியன பற்றியெல்லாம் ஆராய்வதுதான் இலக்கணத்தின் அடிப்படையான நோக்கம் என எம்மவர் எண்ணியதாலேயே ஐந்திலக்கணம் கூறும் மரபு உண்டாயிற்று.

5. இலக்கணம் விதிமுறையா? விவரணமா?

இலக்கணம் என்பது விதிமுறையாக அமைவதா? விவரண முறையாக அமைவதா? என்பது பற்றித் தமிழிலக்கணகாரருடைய மரபு எத்தகையது என்பது அடுத்து நோக்கப்பட வேண்டியதொன்றாகும். தமிழிலக்கண மரபைப் பொறுத்தவரையில் விதிமுறை இலக்கணமும் விவரண இலக்கணமும் கலந்து இடம்பெற்றுள்ளனவென்றே கூறக்கூடியதாயுள்ளது.

> இயற்சொற் றிரிசொற் றிசைச்சொல் வடசொல்லென்
> றனேத்தே செய்பு ளீட்டச் சொல்லே [36]

என்று தொல்காப்பியர் கூறுவது, அவர் காலத்துச் செய்யுட்களிலே இடம்பெற்ற சொற்களின் விவரணமாயமையலாம். ஆனால், அச்சூத்திரத்திற்கு உரைவகுத்த கி. பி. 13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சேனாவரையார்,

> 'இயற்சொல்லாலுஞ் செய்யுட் சொல்லாகிய திரிசொல்லாலுமேயன்றித் திசைச் சொல்லும் வடசொல்லும் இடைவிராய்ச் சான்றோர் செய்யுள் செய்யுமாறு கண்டு ஏனைய பாடைச் சொல்லுஞ் செய்யுட்குரியனவோவென்றையுற்றார்க்கு இந்நான்கு சொல்லுமே செய்யுட்குரியன பிறபாடைச் சொல் உரியவல்லவென்று வரையறுத்தவாறு.' [37]

என்று கூறுவது விதிமுறை வாய்ப்பட்டதாயுள்ளது. இலக்கியங் கண்டதற் கிலக்கணம் கூறும் மரபின் மூன்றாவது விளைவாகிய பண்டையிலக்கிய மொழித்தூய்மை விதிமுறையிலக்கண மரபினைத் தமிழிலே தோற்றுவிப்பதற்கு முக்கிய காரணமாயமைந்ததெனலாம். தமிழிலே விதிமுறை இலக்

RangaRakes tamilnavarasam.com

கண மரபுக்கு வழிகோலியனவாகத் தொல்காப்பியரின் பொருளதிகார மரபியலிலே இடம் பெறுஞ் சில சூத்திரங்கள் அமைகின்றன.

மரபுநிலை திரிதல் செய்யுட் கில்லை
மரபுவழிப் பட்ட சொல்லி னுனை [38]

மரபுநிலை திரியிற் பிறிதுபிறி தாகும். [39]

வழக்கெனப் படுவ துயர்ந்தோர் மேற்றே
நிகழ்ச்சி யவர்கட் டாக லான. [40]

மரபு நிலை திரியா மாட்சிய வாகி
யுரைபடு நூரு மிருவகை யியல
முதலும் வழியுமென நுதலிய நெறியின் [41]

என்ற சூத்திரங்களும் பேராசிரியர் போன்றோர் அவற்றுக்கு வழங்கிய உரைகளுமே தமிழில் விதிமுறையிலக்கண மரபுக்கு வழிகாட்டின. பழைய இலக்கிய மொழி பேணப்பட வேண்டுமென்பது இத்தகைய இலக்கணகாரரின் நோக்க மாகும். மொழிமரபு மாற்றமடையின் அது தூய்மையினை இழந்து இழிநிலை அடைந்துவிடுமென்பது இவர்களின் எண்ணமாகும். பேராசிரியரின் உரைப்பகுதி இவ் வெண் ணத்தினை நன்கு வலியுறுத்துகின்றது.

''அல்லதூஉம், இன்ன செய்யுட்கு இன்ன பொரு ளுரித்தெனவும், இனப்பகுதியாற் பெயர் பெறு மெனவும், மரபுபற்றியே சொல்லப்படுமென்றற்கும், இனி. நிறைமொழிமாந்தர் மறைமொழி போல்வன சில மிறைக் கவி பாடினருளரென்பதே பற்றி அல்லா தாரும் அவ்வாறு செய்தன் மரபன்றென்றற்கும், இது கூறினனென்பது, அவை : சக்கரஞ், சுழிகுளம், கோமூத்திரிகை, ஏகபாதம், எழு கூற்றிருக்கை, மாலை மாற்று என்றாற் போல்வன. இவை மந்திரவகையா னன்றி வாளாது மக்களைச் செய்யுள் செய்வார்க்கு அகனைந்திணைக்கும் மரபன்றென்பது கருத்து. அல்லாதார் இவற்றை எல்லார்க்குஞ் செய்தற்குரியவென இழியக் கருதி அன்னவகையான் வேறு சில பெய்துகொண்டு

அவற்றிற்கும் இலக்கணஞ் சொல்லுப. அவை இத்தனையென்று வரையறுக்கலாகா என்னை? ஒற்றை, இரட்டை, புத்தி, வித்தாரம் என்றாற்போல்வன செய்யுள் செய்யினுங் கடியலாகாமையின் அவற்றிற்கு வரையறைவகையான் இலக்கணங் கூறலாகாதென்பது.

ஐயைதன் கையு ளிரண்டொழித்தெ னேம்பான்மேற்
பெய்தார் பிரிவுரைத்த லில்லையால்

எனவும்

கோடாப் புகழ்மாறன் கூட லனையானை
யாடா வடகினுளுங் காணேன்

(திணைமாலை நூற். 4)

எனவும் சொல்லுவார் சொல்லுவனவற்றுக்கெல்லாம் வரையறையின்மையின் அவற்றிற்கு இலக்கணங் கூறார் பண்ணத்திப் பாற் படுப்பினல்லதென்பது.' [42]

'மரபன்று', 'அல்லாதார்', 'இழியக்கருதி', 'சொல்லுவார் சொல்லுவன,' 'வரையறையின்மை' போன்ற சொற் பிரயோகங்கள் பேராசிரியரின் எண்ணக் கிடக்கையை நன்கு வெளிப்படுத்துகின்றன. இப்போக்கின் இன்றைய வளர்ச்சி நிலையின் தோற்றுவாயாக ஆறுமுகநாவலரின் வரைவிலக் கணம் அமைகின்றது.

'இலக்கண நூலாவது, உயர்ந்தோர் வழக்கத்தையும் செய்யுள் வழக்கத்தையும் அறிந்து விதிப்படி எழுது தற்கும் பேசுதற்குங் கருவியாகிய நூலாகும்.' [43]

என்னும் வரைவிலக்கணத்திலே 'விதிப்படி எழுதுதற்கும் பேசுதற்கும்' இலக்கணம் கருவியாக அமைகின்றது என்று ஆறுமுகநாவலர் நேரடியாகவே விதிமுறையிலக்கணம் வகுக் கின்றார்.

RangaRakes tamilnavarasam.com

அடிக்குறிப்புக்கள்

1. தொல்காப்பியம் சொல்லதிகாரச் சூத்திரம் 27இல்

ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியு
மொன்றனைக் கூறும் பன்மைக் கிளவியும்
வழக்கி னுகிய வுயர்சொற் கிளவி
யிலக்கண மருங்கிற் சொல்லா றல்ல

எனவும், பொருளதிகாரம் செய்யுளியலிற் சூத்திரம் 243இல்

செய்யுள் மருங்கின் மெய்பெற நாடி
இழைத்த இலக்கணம் பிழைத்தன போல
வருவன உளவெனும் வந்தவற் றியலால்
திரிபின்றி முடித்தல் தெள்ளியோர் கடனே:

எனவும் இரண்டு இடங்களில் மாத்திரம் இலக்கணம் என்னுஞ் சொல் கையாளப்பட்டுள்ளது.

2. தொல்காப்பியம், எழுத்ததிகாரம், பாயிரம் :

வடவேங்கடந் தென்குமரி
யாயிடைத்
தமிழ்கூறு நல்லுலகத்து
வழக்குஞ் செய்யுளு மாயிரு முதலி
னெழுத்துஞ் சொல்லும் பொருளு நாடிச்
செந்தமி ழியற்கை சிவணிய நிலத்தொடு
முந்துநூல் கண்டு முறைப்பட வெண்ணிப்
புலந்தொகுத் தோனே போக்கறு பனுவல்

3. இறையனார் அகப்பொருள், பக். 7

4. Robins, R. H., 'The Structure of Language', In **Linguistics at Large**, p. 16,

5. சபாபதி நாவலர், திராவிடப் பிரகாசிகை, ப. 75

6. சோம. இளவரசு, இலக்கண வரலாறு, பக். 120-21

7. சபாபதி நாவலர், மு. கு. நூ., பக். 75-6

8. ஆறுமுகநாவலர், இலக்கணச் சுருக்கம், ப. 1

9. மொழியின் தோற்றம் பற்றிய பல்வேறு கொள்கைகளின் விளக்கங்களை மு. வரதராசனின் மொழி வரலாறு (பக். 218 - 42) என்னும் நூலிற் காண்க.

10. தொல்காப்பியம், சொல்லதிகாரம், சேனாவரையம் காப்புச் செய்யுள், ப. 1

11. சபாபதி நாவலர். மு. கு. நூ., பக். 5 - 31

12. கார்த்திகேய முதலியார், மாகறல்., மொழி நூல், பக். 34 - 35

13. வீரசோழியம், பெருந்தேவனார் உரை, ப. 31

14. சபாபதி நாவலர், மு. கு. நூ., ப. 11

15. நன்னூல், சூ. 141

16. Lyons, J., **Introduction to Theoretical Linguistics** p. 9

17. பேச்சு மொழியின் முக்கியத்துவத்தினைப் பற்றிய விளக்கத்துக்குப் பார்க்க : சண்முகதாஸ், அ., 'ஆக்க இலக்கியமும் மொழியியலும்', ஆக்க இலக்கியமும் அறிவியலும், ப. 54.

எழுத்து மொழியின் நற்பண்புகள் இந் நூலிற் கூறப்பட்டுள்ளன. பார்க்க: இயல் நான்கு

18. தொல்காப்பியம் சொல்லதிகாரம் சூ. 27

19. நாராயணசாமி, பண்டித சித., 'மயக்கம்', தமிழ்ப் பொழில், துணர் 40, மலர் 10, 1965 ஜன.

20. நேமிநாதம், சூ. 95

21. Lyons, J., **Ibid**, p. 9

22. தொல்காப்பியம், எழுத்ததிகாரம், சூ. 83

23. பார்க்க : அடிக்குறிப்பு 20

24. தொல்காப்பியம், பொருளதிகாரம், சூ. 647

25. மேற்படி, பேராசிரியர் உரை, ப. 687

26. 'இருவழக்குப் பண்பு' பற்றிய விவரங்களுக்குப் பார்க்க: சண்முகதாஸ், அ., நமது மொழியின் இயல்புகள், ப. 8-9

RangaRakes tamilnavarasam.com

27. தொல்காப்பியம், பாயிரம், ப. 1
28. மேற்படி, பேராசிரியர் உரை, ப. 331
29. நன்னூல், சூ. 442
30. பார்க்க: அடிக்குறிப்பு 8
31. சபாபதி நாவலர், மு. கு. நூ., ப. 340
32. தொல்காப்பியம், பேராசிரியர் உரை, பக். 686-87
33. தொன்னூல் விளக்கம், சூ. 370
34. இலக்கணக் கொத்து, 6ஆம் சூத்திர உரை ப. 4
35. Robins, R. H., **A Short History of Linguistics**, p. 31
36. தொல்காப்பியம், சொல்லதிகாரம், சூ. 397
37. மேற்படி சூத்திரத்துக்குச் சேனவரையர் உரை, ப. 357
38. தொல்காப்பியம், பொருளதிகாரம், மரபியல், சூ. 645
39. மேற்படி, சூ. 646
40. மேற்படி, சூ. 647
41. மேற்படி, சூ. 648
42. மேற்படி, சூ. 645க்குச் சேனவரையரின் உரை, பக். 678-9
43. இலக்கணச் சுருக்கம், ப. 1

3

தமிழ் இலக்கணக் கோட்பாடுகளின் அடிப்படைகள்

1. தமிழ் இலக்கணக் கோட்பாடுகளுக்கெல்லாம் மொழி மாத்திரம் அடிப்படையல்ல

நவீன மொழியிலார் மொழியினை மூன்று நிலைகளுடன் தொடர்புறுத்தி விவரணஞ் செய்வர். அவையாவன: ஒலியியல், இலக்கணம், சொற்பொருளியல் என்பனவாகும். ஒரு மொழியின் பேச்சொலிகளை விவரணஞ் செய்வது ஒலியியலாகும். அம்மொழியின் சொல்வடிவங்கள் பற்றியும் அவை தொடர்களாக வாக்கியங்களாக அமையுந் தன்மை பற்றியும் விவரணஞ் செய்வது இலக்கணமாகும். சொற்கள், அச்சொற்களாலான ஏனைய வடிவங்கள் ஆகியனவற்றின் பொருள் சொற்பொருளியலினூலே விவரணஞ் செய்யப் படும்.[1] நவீன மொழியியலின்படி இலக்கணமென்பது மொழியினை மாத்திரமே அடிப்படையாகக் கொண்டதாகும். இதனால் ஒரு மொழியினுடைய இலக்கண அலகுகள், இலக்கண வகைமைகள் ஆகியனவெல்லாம் அம்மொழியின் இயல்புக்கேற்ற வகையிலேயே அமைக்கப்பட்டன. மொழி யியலல்லாத காரணிகள் எவையுமே இலக்கணந் தொடர் பான விடயங்களுக்குக் கொள்ளப்படுவதில்லை. ஆனால் தமிழ் மொழிக்கு எழுதப்பட்ட மரபுவழி இலக்கணங்கள் இந்த நிலையிலிருந்து வேறுபடுகின்றன.

RangaRakes tamilnavarasam.com

தமிழ் இலக்கணங்கள் மொழியை மாத்திரமன்றி வேறு விடயங்களையும் விவரணஞ் செய்கின்றன. தொல்காப்பியம் பற்றிக் கூறும் ஓர் அறிஞர் :

> 'அது இலக்கண நூலாக அமைந்தபோதும், முற் காலத் தமிழருடைய சமூக, அரசியல் பற்றிய தகவற் சுரங்கத்தைக் கொண்டதாக அது அமைகின்றது; முற்காலத் தமிழரின் வழக்கங்கள், பழக்கங்கள் தொடர் பான செய்தியினை அறிதற்கு ஆராய்ச்சியாளர் இந் நூலிலேயே தங்கியுள்ளனர்.' ('Though it is a work of grammar, it contains a mine of information about the Social Polity of the early Tamilians; and research Scholars are mainly dependent upon this work for information relating to the customs and manners of the early Tamilians')[2]

என்று கூறிச் செல்வதை இங்கு குறிப்பிடுதல் வேண்டும். இவ்வாறு மொழியல்லாது, அரசியல், சமூக, பண்பாட்டு விடயங்களுடனும் தமிழ் இலக்கணங்கள் தொடர்புறுகின்ற காரணத்தாற் சில இலக்கணக் கோட்பாடுகள் அரசியல், சமூக, பண்பாட்டுச் செல்வாக்குக்கு உட்படுகின்றன. இவற்றுட் பண்பாட்டினுள் அடங்கும் சமயச் செல்வாக்கே கூடியதாக அமைந்துள்ளது. குறிப்பாக, சமண, சைவ சமயத் தத்துவக் கோட்பாடுகள் தமிழிலக்கணக் கோட் பாடுகளை உருவாக்கியுள்ளன. குறிப்பிட்ட தமிழ் இலக் கணம் ஒன்றின் சூத்திரத்திலே சமயச் செல்வாக்குக் காணப் படாவிடினும், அச்சூத்திரத்துக்கு எவர் உரை எழுதுகின் றாரோ, அவர் தான் சார்ந்த சமய தத்துவத்துக்கேற்றபடி உரை வகுப்பதைக் காணலாம். சில வேளைகளிலே, இந்தியச் சமயங்களுக்கெல்லாம் பொதுவான கோட்பாடுகளையும் உரையாசிரியர்கள் எடுத்தாளுவதுண்டு.

சமூக அமைப்பும் அரசியற் போக்கும் தமிழிலக்கண வகைமைகளையும், கூறுகளையும், பாகுபாடுகளையும் தம் செல் வாக்குக்கு உட்படுத்தியுள்ளன. இவைபற்றிய விபரங்கள் பின்னர் தரப்படும். இலக்கணக் கூறுகள், இலக்கண வகை மைகள் ஆகியன வெறுமனே மொழியியல் தொடர்பானவை

அல்ல என்பதற்கு மேலெத்தேய இலக்கணங்களும் சான்று பகருகின்றன. ஆண், பெண் என்னும் பாகுபாடு மொழி யுடன் தொடர்புடையது அல்ல. அவை உலகிலுள்ள உயிர்களின் இயற்கைப் பாகுபாட்டைக் குறிப்பன. இது உலகிலுள்ள எல்லோருக்குமே பொருந்தக்கூடிய பொதுவான விடயமாகும். ஆனால், இப்பாகுபாட்டினை மொழியிலுள்ள சொற்களைப் பாகுபாடு செய்ய சில மொழிகளின் இலக் கணங்கள் வழிகாட்டியுள்ளன. இவ்வாறு உண்மையுலகு விடயங்களை மொழியமைதி விடயங்களுடன் இலக்கணகாரர் தொடர்புறுத்த முயல்வதுண்டு. இலக்கணகாரர் இம் முயற்சியினைச் செவ்வனே செயற்படுத்த வேண்டுமென ஓட்டோ ஜெஸ்பர்ஸன் கூறுவர்.[3] இவ்வாறு மொழியல்லாத காரணிகளும் மொழிபற்றிய விவரணத்திலே சில வேளை களிலே இடம்பெறுவதுண்டு. இனி, தமிழிலக்கணங்களிலே மொழியல்லாத காரணிகள் எவ்வாறு தம்முடைய செல் வாக்கைச் செலுத்தியுள்ளன என்பதை நோக்கலாம்.

2. சமயச் செல்வாக்கு

2·1 உயிரும் மெய்யும்

தமிழ் இலக்கணங்களையும் தமிழ் மொழியின் தோற்றத் தினையும் இறைவனுடன் தொடர்புபடுத்தும் தமிழிலக்கண மரபினை இந்நூலின் முதலாம் இயலிலே குறித்துள்ளோம். தமிழ் இலக்கணத்துக்கும் சமயத்துக்குமுள்ள நெருங்கிய தொடர்பினை இது காட்டுகின்றது. தமிழ் இலக்கணங்களை ஊன்றி ஆராய்வதன்மூலம் அவற்றுட் பொதியப் பெற்றுள்ள கருத்துக்கள் சமயச் செல்வாக்கினாலேயே உருவாகின என் பதை இப்பகுதியிலே எடுத்துக் காட்டவுள்ளோம்.

தமிழ் எழுத்துக்களைப் பாகுபாடு செய்யுமிடத்து உயிர், மெய் என்னும் பாகுபாட்டினைத் தமிழ் இலக்கணகாரர் முதன்மையாகக் கொள்வர்:

> ஔகார விறுவாய்ப்
> பன்னீரெழுத்து முயிரென மொழிப[4]

RangaRakes tamilnavarasam.com

என அகரமுதல் ஔகார ஈருகவுள்ள எழுத்துக்களை உயிர் எனப் பெயரிட்டழைக்கின்றார் தொல்காப்பியர். அதே போன்று

னகார விறுவாய்ப்
பதினெண் ணெழுத்து மெய்யென மொழிப[5]

எனக் ககர முதல் னகர ஈருகவுள்ள எழுத்துக்களை மெய் எனப் பெயரிட்டழைத்துள்ளார். உயிர், மெய் எனத் தமிழ் இலக்கணகாரர் பாகுபாடு செய்துள்ள எழுத்துக்கள் பிரதிநிதித்துவஞ் செய்யும் ஒலிகளை ஒலியியலார் முறையே Vowels என்றும் Consonants என்றும் பெயரிட்டழைப்பர். நெஞ்சிலிருந்தெழும் காற்று தடையின்றிப் பேச்சுறுப்புக்களின் துணையுடன் ஒலிகளாக வெளிவருமிடத்து அவை Vowels என்றும், தடையுடன் ஒலிகள் பிறக்குமிடத்து அவை Consonants என்றும் ஒலியியலார் அவற்றின் வேறுபாட்டினை அறிவியல் ரீதியாக விளக்கியுள்ளனர்.[6] ஆனால், தமிழ் இலக்கணகாரர் உயிர், மெய் என்பனவற்றுக்குக் கொடுக்கும் விளக்கம் சமயதத்துவ அடிப்படையைக் கொண்டதாயுள்ளது. உயிர் பற்றிய மேற்காட்டிய தொல்காப்பியச் சூத்திரத்துக்கு நச்சினார்க்கினியர் வகுத்துள்ள உரையினை இவ்விடத்திலே நோக்குதல் பொருத்தமாகும்.

'மெய் பதினெட்டினையும் இயக்கித் தான் அருவாய் வடிவின்றி நிற்றலின் உயிராயிற்று. இவை மெய்க்கு உயிராய் நின்று மெய்களை இயக்குமேல் உயிரென வேறோர் எழுத்தின்றும். பிறவெனின், மெய்யினிற்கும் உயிரும் தனியே நிற்கும் உயிரும் வேறென உணர்க. என்னை? 'அகர முதல' (குறள் - க) என்புழி அகரந் தனியுயிருமாய் கரகவொற்று முதலியவற்றிற்கு உயிருமாய் வேறு நிற்றலின். அவ்வகரந் தனியே நிற்றலானும் பல மெய்க்கண் நின்று அவ்வ ம் மெய்கட்கு இசைந்த ஓசைகளைப் பயந்தே நிற்றலானும் வேறுபட்ட தாகலின் ஒன்றேயாயும் பலவேயாயும் நிற்பதோர் தன்மையை யுடைத்தென்று கோடும்; இறைவன் ஒன்றேயாய் நிற்குந் தன்மையும் பல்லுயிர்க்குந் தானேயாய் அவற்றின் அளவாய் நிற்குந் தன்மையும்போல.'[7]

இவ்வாறு உயிருக்கு விளக்கந்தரும் நச்சினார்க்கினியர் 'பன்னீருயிருக்குந் தான் இடங்கொடுத்து அவற்றுன் இயங்குந் தன்மை பெற்ற உடம்பாய் நிற்றலின்.' என்று மெய்க்கும் விளக்கந் தருகின்றார். நன்னூற் காண்டிகையுரைகாரரும், 'அகர முதலிய பன்னிரண்டும் உயிர்போலத் தனித்தியங்கும் வன்மை யுடைமையால் உயிரெனவும், ககர முதலிய பதினெட்டும் உயிரோடு கூடியல்லது இயங்கும் வன்மையில்லாத மெய்போல அகரத்தோடு கூடியல்லது இயங்கும் வன்மையில்லாமையால் மெய்யெனவும் பெயர் பெற்றன.'[9] என்று கூறுவதை நோக்கலாம். மேற்காட்டிய உரைகளெல்லாம், தனித்தியங்கும் ஆற்றலுடைய எழுத்துக்களை உயிர் எனவும், அவ்வாறு இயங்காது உயிரின் கூட்டத்தினுல் இயங்கும் எழுத்துக்களை மெய் எனவும் பெயரிட்டமைக்கு உயிர் பற்றியும் உடல் பற்றியும் எம் முடைய சமயங்கள் கொண்டுள்ள தத்துவக் கோட்பாடு அடிப்படையாக அமைகின்றதெனக் கூறலாம். உடலிலிருந்து உயிர் போனால், அவ்வுயிர் தனித்து நிற்கின்றது என அறிவியல் ரீதியிலே கூறமுடியாதுள்ளது. ஆனால் இந்தியச் சமயங்கள் எல்லாமே உயிர் அல்லது ஆன்மாவின் அதியுன்னத நிலை உடலின்மையேயாகும் எனக் கூறுகின்றன. உடல் இல்லாமலே உயிர் இயங்கும் என்பதையும் இந்து மதங்கள் ஏற்றுக்கொள்கின்றன.

அனுதி சிவரூபமாகிய ஆன்மா
தனுதி மலத்தாற் தடைப்பட்டு நின்று
தனுதி மலமும் தடையற்றபோதே
யனுதி சிவரூப மாகிய வாறே'

என்னும் பாடல்[10] சைவசமயக் கோட்பாட்டினையும்,

'இவன் (ஆன்மா) பிறப்பதுமில்லை; எக்காலத்திலும் இறப்பதுமில்லை. இவன் ஒரு முறையிருந்து பின்னர் இல்லாது போவதுமில்லை. இவன் பிறப்பற்றவன்; அனவரதன். இவன் சாகுவதன்; பழையோன்; உடம்பு கொல்லப்படுகையில் இவன் கொல்லப்படான்.'

RangaRakes tamilnavarasam.com

என்னும் பகவத்கீதைக் கூற்று[11] வைணவ சமயக் கோட்பாட்டினையும் எடுத்துக் காட்டுகின்றன. சமணசமயத் தத்துவம் பற்றிக் கூறும் மயிலை. சீனிவேங்கடசாமி,

> 'உயிர்கள் எண்ணிறந்தன; அழிவில்லாதன; அநாதியாகவுள்ளன.'

என எடுத்துக் கூறுவர்.[12] உயிர் - உடல் பற்றிய மேற்காட்டிய கூற்றுக்களிலிருந்து உயிரின் தனித்துவத்தினை நாம் உணரமுடிகின்றது. இச்சமய தத்துவக் கோட்பாடே தமிழ் எழுத்துக்களை உயிர்-மெய் என்ற அடிப்படையிலே பாகுபாடு செய்தற்குக் காரணமாயிற்று.

2·2 திணை, பாற் பாகுபாடு

தமிழ்ச் சொற்களை இரண்டு திணை, ஐந்து பால் காட்டுவனவாகத் தமிழ் இலக்கணகாரர் வகைப்படுத்தியுள்ளனர்.

> உயர்திணை யென்மனார் மக்கட்சுட்டே
> யஃறிணை யென்மனர் ரவரல பிறவே
> யாயிரு திணையி னிசைக்குமன சொல்லே.[13]

என்று தமிழ் மொழியிலே அமைந்துள்ள திணைப் பாகுபாட்டினைத் தொல்காப்பியர் எடுத்துக் கூறியுள்ளார் மக்களையும் ஏனையவற்றையும் வேறுபடுத்துவது உயிர் எனக் கொண்டால், தொல்காப்பியர் உயிரிகளை உயர்திணை என்றும், உயிரிகளை அஃறிணையென்றும் பாகுபடுத்தியுள்ளார் எனக் கூறலாம். ஆனால் உயிருடையனவாயுள்ள மிருகங்கள், பறவைகள், ஊர்வன ஆகியன தொல்காப்பியரால் உயர்திணையாகக் கொள்ளப்படவில்லை. தமிழ்மொழியிலே இவ்விலக்கண மரபு நன்கு வேரூன்றிவிட்டது. இதனாலே காளை என்னுஞ் சொல் ஓடுதல் என்னுந் தொழிலைச் செய்யும் வினைச்சொல்லைப் பயனிலையாகக் கொள்வதென்றால்,

> காளை ஓடினன்
> காளை ஓடிற்று

என இருவகையான வாக்கியங்களை அமைக்க வேண்டியுள்ளது. காளை உயர்திணையாகக் கருதப்படின் ஓடினன்

என்ற வினைமுடிபு கொள்ளும். ஆனால் அதே சொல் அஃறிணையாயின் ஓடிற்று என்னும் வினைமுடிபினைக் கொள்ளுகின்றது. உயர்திணைக் காளைக்கும் அஃறிணைக் காளைக்கும் உயிர் உண்டு. ஓடுகின்ற தொழிலை இரண்டுமே செய்யும். ஒன்றுக்கு இரண்டு கால், மற்றையதற்கு நான்கு கால். இதுவே வேறுபாடு. எனினும் ஒரு காளையை உயர்திணை எனவும், மற்றைய காளையை அஃறிணை எனவும் பாகுபாடு செய்ததின் அடிப்படை என்ன? இவ்விடயத்திற்குன் சமண சமயத்தினரின் உயிர்க்கோட்பாடு பற்றி நோக்க வேண்டும்.

சமண சமய தத்துவத்தில் நவ பதார்த்தம் (ஒன்பது பொருள்கள்) எனக் கொள்ளப்படுவனவற்றுள் உயிரும் ஒன்றாகக் கருதப்படுகிறது. ஜீவ (உயிரி) அஜீவ (உயிரிலி) என்னும் பாகுபாடு சமணசமய தத்துவத்திலே முக்கியமாகக் கருதப்படுகின்றது. 'உயிர்கள் ஓரறிவுயிர், ஈரறிவுயிர், மூவறிவுயிர், நாலறிவுயிர், ஐயறிவுயிர் என ஐந்து வகைப்படும். ஐயறிவுயிர்கள் பகுத்தறிவு (மனம்) இல்லாதவை பகுத்தறிவு உடையவை என இருவகைப்படும்.'[14] பகுத்தறியும் மனத்தினையுடைய மாந்தரே உயிர்களுட் சிறந்தவர்களாகச் சமணமதம் கருதுகின்றது. இந்த வகையிலே நரகர், தேவர்கூட மக்களுக்கு இணையாகார். 'மாற்றது எனப்படும் 'சம்சார ஜீவன்' நல்வினை தீவினைகளிற் கட்டுண்டு அவ் வினைப் பயன்களைத் துய்ப்பதற்காக நரகத்திலும் சுவர்க்கத்திலும் பிறப்பதும் இறப்பதுமாக உழன்று திரியும் தன்மையுள்ளது. விலங்கு, நரகர், தேவர் என்னும் பிறப்புக்களில் பிறந்த உயிர்கள் அப்பிறவிகளிலே வீடுபேறடையா. மக்களாகப் பிறந்த உயிர்கள் மட்டும் வீடுபெறும் வாய்ப்பு உடையன.'[15] ஆகவே சமண சமயத்திலே மக்கட் சுட்டினர் பெறும் சிறப்பு, அவர்களுக்குரிய ஆறாவது அறிவும், வீடுபேறடையும் வாய்ப்புமாகும். தொல்காப்பியர் உயிர்களின் அறிவுபற்றித் தானே தன்னுடைய நூலிலே விரித்துக் கூறியுள்ளார்.

> ஒன்றறி வதுவே யுற்றறி வதுவே
> யிரண்டறி வதுவே யதனெடு நாவே
> மூன்றறி வதுவே யவற்றெடு மூக்கே

RangaRakes tamilnavarasam.com

நான்கறி வதுவே யவற்றெடு கண்ணே
யைந்தறி வதுவே யவற்றெடு செவியே
யாறறி வதுவே யவற்றெடு மனனே
நேரிதி னுணர்ந்தோர் நெறிப்படுத் தினரே[16]

என்று மரபியலிலே தொல்காப்பியர் கூறுகின்றார். 'ஒன்றறிவது என்பது ஒன்றனையறிவது; அஃதாவது, உற்றறிவதென்பதும். இரண்டறிவதென்பது, அம்மெய்யுணர்விற்கு நாவுணர்வுடையதெனவும், மூன்றறிவுடையது அவற்றிற்கு கண்ணுணர்வுடையதெனவும், ஐந்தறிவுடையது அவற்றிற்கு செவியுணர்வுடையதெனவும், ஆறறிவுடையது அவற்றிற்கு மனவுணர்வுடையதெனவும்.....'[17] எனத் தொல்காப்பியர் நிரைப்படுத்தியுள்ளார். இவற்றுள் ஒவ்வொரு உயிர் வகைக்கும் உதாரணம் தரும் தொல்காப்பியர், ஆறறிவுயிர் பற்றிக் கூறுமிடத்து,

மக்கள்தாமே யாறறிவுயிரே
பிறவு முளவே யக்கிளைப் பிறப்பே[18]

என்று கூறியுள்ளார். சமணசமயக் கோட்பாட்டினை எவ்வாறு தொல்காப்பியர் தன்னுடைய மரபியற் சூத்திரங்களிலே குறிப்பிட்டுள்ளார் என்பதனை மேலும் வலியுறுத்த வேண்டியது அவசியமில்லை எனக் கருதுகிறோம். அச்சமயக் கோட்பாட்டிலே நன்கு மனமூன்றிய தொல்காப்பியர் திணைப்பாகுபாடு செய்யுமிடத்து உயிரிகளாகிய ஆறறிவற்ற விலங்குகளையும் வீடுபேறடையா நரகர் தேவரையும் விலக்கி 'உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே' என்று வகுத்துள்ளார். ஆகவே ஒரு காலை உயர்திணையாகவும், மற்றைய காலை அஃறிணையாகவும் தமிழ் மொழியிலே கொள்ளுதற்கு அடிப்படையாக அமைந்தது சமயதத்துவமேயாகும்.

சமணசமய தத்துவத்தை விட வேறு பல தத்துவங்களும் தமிழ் நாட்டிலே செல்வாக்குப் பெற்றிருந்தன: இதனால், சமணசமயச் செல்வாக்கு மாத்திரம் தமிழ் இலக்கணக் கோட்பாடுகள் யாவற்றையும் கட்டுப்படுத்தின எனக் கூறமுடியாது. சமணசமயத் தத்துவ அடிப்படையிலே தொல்காப்பியரால் உயர்திணை என்பது

மக்கட்சுட்டே என வகுக்கப்பட்ட இலக்கணக் கோட்பாடு நன்னூல் இலக்கணகாரராலே மாற்றியமைக்கப்படுகின்றது.

மக்க டேவர் நரக ருயர்திணை
மற்றுயி ருள்ளவு மில்லவு மஃறிணை[19]

என்பது நன்னூற் சூத்திரம். தேவரும் நரகரும் மக்களைப் போன்று ஆறறிவுடையவரென்றும் வீடுபேற்றுக் குடையவரென்றும் பிற சமய தத்துவங்கள் கருதிய காரணத்தினால், நன்னூலார் இவ்வாறு சூத்திரம் செய்யவேண்டியேற்பட்டுள்ளது.

திணைப்பாகுபாட்டுக்கு அடிப்படையாயிருந்த சமய தத்துவக் கோட்பாடே பாற்பாகுபாட்டுக்கும் காரணமாயிற்று. உயர்திணையில் ஆண், பெண், பலர் என்னும் பாகுபாட்டினைக் கூறும் தமிழிலக்கணகாரர் எல்லோருமே அஃறிணையில் ஒன்று, பல என்னும் பாகுபாட்டினையே மேற்கொண்டுள்ளனர். அஃறிணையிலே அடக்கப்படும் உயிருள்ள விலங்குகள், பறவைகளிடையே ஆண், பெண் வேறுபாடு காணப்படுகின்றன. மரபியலிலே தொல்காப்பியர் விலங்குகள், பறவைகளுக்குரிய ஆண்-பெண் பெயர்களைக் குறிப்பிட்டுள்ளார். ஆனால், அவ்வாறான பெயர்கள் உயர்திணையில் ஆண்பால், பெண்பால் என்று கணிக்கப்பட்டு, உயர்திணை வினைமுடிபுகள் கொள்ளமாட்டா. களிறு என்னுஞ் சொல் ஆண் யானையைக் குறிக்கும்; பிடி பெண் யானையைக் குறிக்கும். ஆனால், களிறு வந்தான், பிடி வந்தாள் என்று நாம் எழுதுவதுமில்லை; பேசுவதுமில்லை. இவ்வாறு விலங்குகளிடையேயுள்ள ஆண், பெண் என்ற வேறுபாட்டினை இலக்கண அடிப்படையிலே பாற் பாகுபாட்டினுள் தமிழிலக்கணகாரர் கொள்ளாததற்குக் காரணம் ஆறாவது அறிவில்லாத விலங்குகளிடையே இவ்வேறுபாடு அவசியமற்றதெனச் சமய தத்துவங்கள் கருதினமையேயாகும்.

2 3 பெண்ணின் இழிநிலையும் தமிழ் இலக்கணமும்

மக்களிடையே ஆண்-பெண் என்னும் வேறுபாட்டினை இலக்கண அடிப்படையிலே இனங்கண்ட போதும், அவற்றுள் ஆணே முதன்மையானவன் என்னுங் கருத்தும் தமிழ்

RangaRakes tamilnavarasam.com

இலக்கணகாரரைப் பாதித்துள்ளது. இக்கருத்து சமண சமய, வைதிக சமயக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டதாகும். 'பெண்பிறவி தாழ்ந்த பிறவி என்பதும், பாவம் செய்தவர் பெண்ணுகப் பிறக்கிறார் என்பதும் சமண சமயக் கொள்கை. பெண்ணுகப் பிறந்தவர் வீடுபேறு (மோட்சம்) அடையமுடியாது என்பதும் சமணமதத் துணிபு ஆகும்.'[20] மேருமந்தபுராணம் என்னும் நூலிலே (செய்யுள் 738),

> இந்திரன் தேவிமார்க்கும் இறைமைசெய் முறைமை இல்லை
> பைந்தொடி மகளிராவர் பாவத்தால் பெரியநீரார்

என்று பெண்களுடைய தாழ்ந்த நிலை கூறப்படுகின்றது. பிற்காலத்திலே சமூகத்தோடு தொடர்பான இவ்விடயத்துக்கு அடிப்படையாக அமைந்தது சமயமேயாகும். வைதிக சமயத்தினரும் பெண், புத்திரரைப் பெறுவதின்மூலம் 'புத்' என்னும் நரகத்திலிருந்து தன்னைக் காப்பாற்றிக்கொள்கிறாள் எனக் கருதினர். இவையெல்லாம் தமிழிலக்கணக் கோட்பாடுகளிலும் தம் பாதிப்பினை ஏற்படுத்தின. உதாரணமாக, தொல்காப்பியம் முதற் சூத்திரமாகிய,

> எழுத் தெனப் படுவ
> அகர முதல னகர விறுவாய்
> முப்பஃ தென்ப

என்பதற்கு உரைகூறும் இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் வீடுபேற்றுக்குரிய ஆண்மகன் பற்றிப் பேசுகின்றனர். சமணசமயத்தைச் சார்ந்தவராகிய இளம்பூரணர்,[21] 'அகரம் தானும் இயங்கித் தனி மெய்களை இயக்குதற்குச் சிறப்பான் முன்வைக்கப்பட்டது. னகரம் வீடுபேற்றிற்குரிய ஆண்பாலை உணர்த்துதற் சிறப்பான், பின்வைக்கப்பட்டது' என்று உரையெழுதுகின்றார். வைதிக சமயத்தைச் சார்ந்த நச்சினார்க்கினியரோ,[22] 'எழுத்துக்கட்கெல்லாம் அகரம் முதலாதற்குக் காரணம் 'மெய்யினியக்க மகரமொடு சிவணும்' என்பதனாற் கூறுப. வீடுபேற்றிற்குரிய ஆண்மகனை உணர்த்துஞ் சிறப்பான் னகரம் பின்வைத்தார்' என்று உரை கூறியுள்ளார் பால் காட்டும் ஈறுகளைச் சொல்லதிகாரத்திலே தொல்காப்பியர் கூறும்பொழுது 'னஃகான் ஞெற்றே யாடூஉ வறிசொல்' என்னுஞ் சூத்திரத்தை முதலிற் கூறி ஆண்பாலை யுணர்த்தும் னகர விகுதியினை முதன்மைப் படுத்தியதற்கும் இவ்வீடுபேற்றுக் காரணமே முன்வைக்கப்பட்டது.

சமய அடிப்படையிலே பெண் தாழ்வுற்றவளாகக் கருதப்பட்ட காரணத்தால் அவளுக்குப் பல உரிமைகளும் சலுகைகளும் மறுக்கப்பட்டிருக்க வேண்டும். இந்நிலையினை எம்முடைய தமிழ் இலக்கணம் ஓரளவு எடுத்துக் காட்டுகின்றதெனலாம். தமிழ் மொழியிலே எத்தனையோ ஆண்பாலை உணர்த்துஞ் சொற்கள் உள்ளன. ஆனால் அவற்றுக்கு நிகரான பெண்பாற் சொற்கள் அம்மொழியிலே இல்லை. உதாரணமாக, ஔவையார் போன்ற பெண்பாற் புலவர்கள் தமிழ் நாட்டிலே வாழ்ந்து சிறப்புற்றபோதிலும், அவர்கள் புலவர் என்ற பொதுச்சொல்லாலேயே அழைக்கப்பட்டனர். புலவன் என்னும் ஆண்பாற் சொல் வழக்கில் இருக்கும் அதே வேளையில் அதற்கு நிகரான பெண்பாற் சொல் இல்லை. இதுபோன்று பின்வரும் ஆண்பாற் சொற்களுக்கு நிகரான பெண்பாற் சொற்கள் இல்லை:

> சான்றோன், அறிஞன், ஒற்றன், வீரன், கலைஞன், மன்னன், அந்தணன், வணிகன், அமைச்சன், புரோகிதன், காவலன், கவிஞன், விருந்தினன், அறிவாளன், பாகன், முனிவன், கணக்கன், சோதிடன்.

மேற்காட்டிய சொற்களைப்போன்று இன்னும் எத்தனையோ சொற்களை உதாரணங்களாகக் காட்டலாம். இத்தகைய சொற்களுக்குப் பெண்பாற் சொற்கள் இல்லாமைக்குப் பல காரணங்கள் கூறலாம். அவற்றுள் ஒன்று சமயக் காரணமாகும். பெண்கள் சமய அடிப்படையிலே தாழ்ந்தவர்கள் என்று கொண்ட காரணத்தால், பிற்காலத்தில் சமூக, அரசியல், பொருளாதார அடிப்படையிலும் அவர்கள் தாழ்ந்தவர்களெனக் கொள்ளப்பட்டனர். இதனால், அறிவுள்ளவர்களாகவோ, கலைஞானம் உடையவர்களாகவோ

RangaRakes tamilnavarasam.com

அவர்கள் கருதப்படவில்லைப் போலும். அப்படி இல்லாவிடில், அறிஞன், கவிஞன், கலைஞன் போன்ற சொற்களுக்குப் பெண்பாற் சொற்கள் வழக்கில் வந்து சேர்ந்திருக்கும்.

2·4 சமணசமயச் செல்வாக்கே பெரும்பான்மை

இலக்கணத் துறையிலே பெருந்தொண்டாற்றியவர்கள் சமணர்களேயாகும். அணுக்கொள்கையினை அனுசரிக்கும் அவர்கள் சொற்களைப் பகுத்தாய்வு செய்யும் முயற்சியிலே பெருமளவு ஈடுபட்டது ஆச்சரியப்படுதற்கில்லை. அவர்கள் ஆற்றிய தொண்டு பற்றி தெ. பொ. மீனாட்சிசுந்தரன் பின் வருமாறு கூறுகின்றார்:

> சிறந்த இலக்கண நூல்களில் பெரும்பான்மையான சமணர்கள் எழுதினவையேயாம். தொல்காப்பியம் சமண நூல் என உறுதி கூற முடியாமற் போனாலும், சமணம் பரவிய காலத்தெழுந்த தமிழ் வழக்கிற்கே இலக்கணம் கூறுகிறதெனலாம். இறையனாரகப் பொருள், புறப்பொருள் வெண்பா மாலை, வீர சோழியம், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், பிரயோக விவேகம் நீங்கிய மற்றைய இலக்கணப் பரப்பெல்லாம் சமணர் இட்ட பிச்சையே எனலாம்[23]

எனவே, சமணருடைய சமயச் செல்வாக்குத் தமிழிலக்கணச் கோட்பாடுகளிலே செறிவுற்றதற்கு, பெருமளவு தமிழிலக்கண நூல்களை அவர்கள் எழுதியமை காரணமாயிற்று. வைதீக சமயத்தினருடைய செல்வாக்கும் தமிழிலக்கணங்களிலே தென்பட்ட போதிலும், சமணசமயச் செல்வாக்கே பெரும்பான்மையாகச் செறிவுற்றதெனலாம்.

3. சமூகச் செல்வாக்கு

3 1 தன்மை முன்னிலை இடப்பெயர்கள்

சமூக ஏற்றத் தாழ்வு இல்லா நிலையிலே, அச்சமூகத்தினர் பேசும் மொழியில் தன்மை ஒருமைக்கு ஒரு சொல் வடிவமும் முன்னிலை ஒருமைக்கு ஒரு சொல் வடிவமுமே காணப்படுகின்றன. இன்றைய ஆங்கில மொழியிலே **I** என்பது தன்மை ஒருமைக்கும், **We** தன்மைப் பன்மைக்கும்,

you முன்னிலைக்கும் உரிய சொற்களாகப் பயன்படுத்தப் படுகின்றன. ஆனால், பல்வேறு சமூகக் காரணங்களினால் பல மொழிகளிலே இந்நிலை மாற்றமடைந்து காணப்படுகின்றது. முண்டாகோ என்னும் மொழியிலே திருமணஞ் செய்த பெண்ணை முன்னிலைப் படுத்திக் கூறும்போது இருமையிலேயே கூறவேண்டும் என்னும் வழக்கு உண்டு. திருமணஞ் செய்த பெண்ணைக் கணவனிலிருந்து பிரித்துப் பேசுவது இம்மொழியினரிடையே வழக்கமில்லை. அதனாலே இருவரையுஞ் சேர்த்துக் கூறக்கூடிய ஒருசொல் வடிவமே திருமணஞ் செய்த பெண்ணை முன்னிலைப்படுத்தும் போது உபயோகப்படுத்தப்படுகின்றது.[24] இது போன்ற வேடிக்கையான வேறுபாடுகள் உலகிலுள்ள மொழிகளின் தன்மை, முன்னிலைப் பெயர்களிலே காணப்படுகின்றன. தமிழ் மொழியில் இந்நிலை எவ்வாறு அமைந்தது என்றும், தமிழ் இலக்கணகாரருடைய கோட்பாடு எவ்வாறு அமைந்துள்ளது என்றும் நாம் நோக்கவேண்டும்.

தமிழ்மொழியில் ஆரம்பகாலத்தில் தன்மை ஒருமைக்கு **யான்** என்னும் சொல்லும் முன்னிலை ஒருமைக்கு **நீ** என்னும் சொல்லுமே பயன்படுத்தப்பட்டன. சங்க இலக்கியப் பாடலொன்றிலே இவ்விரு வடிவங்களுமே கையாளப்பட்டுள்ளன

> **யாயும் ஞாயும் யாரா கியரோ**
> **எந்தையு நுந்தையு மெம்முறைக் கேளிர்**
> **யானும் நீயும் எவ்வழி அறிதும்**
> **செம்புலப் பெயல்நீர் போல**
> **அன்புடை நெஞ்சம் தாங்கலந் தனவே**[25]

என்னும் குறுந்தொகைப் பாடலில் **யானும் நீயும்** என்ற தொடரில் தன்மை, முன்னிலை ஒருமைச் சொற்கள் இடம் பெறுகின்றன. இந்நிலை நீடித்திருக்கவில்லை. சமூகத்திலேற்பட்ட பல்வேறு மாற்றங்கள் காரணமாக **யான்**, **நீ** என அமைந்த வடிவங்கள் மாற்றமடைந்ததுடன் பொருளிலும் வேறுபாடு தோற்றத் தொடங்கின. இவ்விடத்தில் தமிழிலக்கணகாரர் குறிப்பிட்டுள்ள தன்மை, முன்னிலைப் பெயர்களை அட்டவணைப்படுத்தி நோக்குதல் பொருத்தமாகும்:

RangaRakes tamilnavarasam.com

	தன்மை		முன்னிலை	
	ஒருமை	பன்மை	ஒருமை	பன்மை
தொல்காப்பியம்	யான்	யாம், நாம்	நீ	நீயிர்
வீரசோழியம் புத்தமித்திரனர் உரையில்	நான்	நாம், நாங்கள்	நீ, நீர் (நாம்)	நீங்கள்
நன்னூல்	யான், நான்	யாம், நாம்	நீ	எல்லீர், நீயிர், நீவிர், நீர்
கொன்னூல் விளக்கம்	நான், யான்	யாம், நாம்	நீ	நீயிர், நீவிர், நீர், எல்லீர்
இலக்கணச் சுருக்கம்	நான், யான்	நாம், யாம், நாங்கள் யாங்கள்	நீ	நீர், நீயிர், நீவிர், நீங்கள்

தன்மை ஒருமையில் **யான், நான்** என்னும் வடிவங்களையே தமிழ் இலக்கணகாரரெல்லாம் குறிப்பிட்டுள்ளனர். ஆனால் இலக்கியங்களிலே பல சந்தர்ப்பங்களில் தன்மை ஒருமையிடத்துப் பன்மை பயின்று வந்துள்ளமையை அவதானிக்கக் கூடியதாயுள்ளது. இத்தகைய பண்பு உலக மொழிகள் பலவற்றிலே காணப்படுகின்றது. தன்மை ஒருமையினைப் பன்மையாகக் கூறுதல் தான் யாரென வெளிக்காட்ட விரும்பாத ஒரு வகையான அடக்கமுடைமையே யாகும் என ஒட்டோ ஜெஸ்பர்சன் குறிப்பிடுகின்றார்.[26] தமிழ் இலக்கியங்களிலே இப்பண்பு காணப்படுகின்றது. உதாரணமாக, பரிபாடலிலே செவ்வேள் பாடலைப் பாடிய ஆசிரியர்,

> நின்னிழல் அன்னேர் அல்லது இன்னேர்
> சேர்வார் ஆதலின், யாஅம் இரப்பவை
> பொருளும் பொன்னும் போகமும் அல்ல நின்பால்
> அருளும் அன்பும் அறனும் மூன்றும்
> உருளினர்க் கடம்பின் ஒலிதா ரோயே[27]

என்னும் பகுதியில் யாஅம் இரப்பவை என்று பன்மையிலே கூறுகின்றார். உயர்ந்தோர் முன் தன்னைத் தாழ்த்திக் கொள்ளுதல், ஒருவனுய் நின்று பேசும்பொழுதும் தான் சார்ந்த குழுவினை மறவாதிருத்தல் என்னும் காரணங்களாலேயே ஆசிரியர் தன்னை ஒருமையிலே குறிப்பிடாது பன்மையிலே குறிப்பிடுகின்றார். இது போன்ற இலக்கிய வழக்கினையும் பேச்சு வழக்கினையும் கண்ட தொல்காப்பியர்,

> ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியு
> மொன்றனைக் கூறும் பன்மைக் கிளவியும்
> வழக்கி னுகிய வுயர்சொற் கிளவி
> யிலக்கண மருங்கிற் சொல்லா றல்ல[28]

என்று சூத்திரஞ் செய்துள்ளார். 'யாம் வந்தேம், நீயிர் வந்தீர், இவர் வந்தார்' என்னும் உதாரணங்களைக் கொடுத்து ஒருமையிடத்துத் தன்மை, முன்னிலை, படர்க்கை இடங்களிலே பன்மை பயின்று வருவதுபற்றிச் சேனவரையர் உரையிலே விளக்குவர். தொல்காப்பியர் இத்தகைய வழக்குகளை இலக்கண அந்தஸ்து இல்லாதனவாகக் கொள்கிறார். தொல்காப்பியர் இவ்வாறு கூறியபடியால் அவர்பின் வந்த இலக்கணகாரரும் குறியாது விட்டனர். ஆனால் அவ்விலக்கணகாரர் யாவருமே இத்தகைய வழக்குகள் பற்றி அறிந்துள்ளனர். தன்மை ஒருமைப் பெயர்கள் என யான், நான் என்பவற்றைக் குறிப்பிடும் வீரசோழிய ஆசிரியரே,

> மேனு முரைத்த மரபே வரும்.....[24]

RangaRakes tamilnavarasam.com

எனத் தன்னை நாம் என்று பன்மையிலே குறிப்பிடு கின்றார். ஆகவே, தன்மை ஒருமையினைப் பன்மையிலே வழங்கும் நிலை பல நூற்றாண்டுகளுக்கு முன்னரேயே தமிழ் மொழியின் ஓர் இயல்பாக அமைந்துவிட்டதெனக் கொள் ளலாம். இதற்குச் சமயம் ஒரு காரணமாக அமையினும் சமூகக் காரணமே முக்கியமானதெனலாம். தன்னை இனங் காட்டிக்கொள்ளாது உயர்ந்தோர்முன் தன்னைத் தாழ்த்திக் கொள்ளும் பண்பே இக் காரணமாகும்.

முன்னிலையிலே ஒருவரை விளித்துப் பேசுமிடத்துப் பன்மைப் பிரயோகமும் சமூகக் காரணத்தாலேயே ஏற்பட்ட தெனலாம். நீயிர் எனத் தொல்காப்பியர் குறித்த முன் னிலைப் பன்மை வடிவம் நீர் எனக் குறுகி, வீரசோழிய காலத்திலே ஒருமையிலும் வழங்கலாயிற்று. இன்று நாம் நீ, நீர், நீங்கள் என்னும் மூன்று வடிவங்களையும் முன்னிலை ஒருமைப் பெயர்களாகப் பயன்படுத்துகிறோம். இவை மூன்றும் வழங்குகின்ற வரன்முறைப் பண்பினை 'ஒத்தவர்', 'மரியாதை' என்னும் இரு தன்மைகள் மூலமாக விளக்கலாம்:

நீ : — ஒத்தவர்
— மரியாதை

நீர் : + ஒத்தவர்
— மரியாதை

நீங்கள் : — ஒத்தவர்
+ மரியாதை

மரியாதைக்காகப் பன்மையினை ஒருமையிலே உபயோகிக்கும் பண்பு உலக மொழிகள் பலவற்றிலே காணப்படு கின்றது. எங்களுடைய சமூகத்திலே வயது, அந்தஸ்து போன்றவற்றிலே குறைவுற்றவரை 'நீ' என்றும், ஒத்த வயதுடையவரை, நண்பரை, நன்முகத் தெரிந்த நெருக்க மானவரை 'நீர்' என்றும், வயது, அந்தஸ்து போன்ற வற்றிலே கூடியவரை 'நீங்கள்' என்றும் அழைக்கின்றோம். இதே நிலை சில ஐரோப்பிய மொழிகளிலும் காணப்படுவ தாக லயன்ஸ் கூறுகிறார் ;

'The 'honorific' dimension is introduced to account for the differentiation of the personal pronouns in certain languages, not in terms of their reference to the roles of the participants in the stuation of utterance, but in terms of their relative **status** or degree of **intimacy.** Well known and obvious instances of this are to be found in a number of European languages.....'[30]

சாதி, வயது, பால், அந்தஸ்து போன்ற சமூகப் பிரிவுகள் கொண்ட தமிழ்ச் சமூகத்தினர் பேசும் மொழியிலே 'மரி யாதைப் பன்மை' என்னும் இலக்கண வகைமை இடம் பெறுவது ஆச்சரியமில்லை. பொதுவாக இந்திய மொழிகளுக் கெல்லாம் இக்கருத்துப் பொருந்தக்கூடியதாகும்.

நீ, நீர், நீங்கள் என்னும் மூன்று முன்னிலைப் பெயர்களை உபயோகிப்பதே அவமரியாதைப் படுத்துவதாகும் என்னும் சமூக மனப்பாங்கு கூடத் தமிழ்ச் சமூகத்திலே நிலவி வருகின்றது. இதனால், தன்மைப் பன்மை வடிவத்தினை முன்னிலையிலே உபயோகிக்கத் தலைப்பட்டனர். வீரசோழிய உரைகாரர் :

'நாம் போகாமே நாம் நில்லும் நாம் போமின் நாம் நிற்க என நாமென்னும் முன்னிலை யொருமைச் சிறப்புப் பதத்தானும்.....'[31]

எனக் குறிப்பிட்டுச் சென்றுள்ளார்.

நான், நாங்கள் என்னும் தன்மைப் பெயர் வடிவங்களை இக்காலத் தமிழ் மொழியில் வழங்குகின்றன. ஆனால் மட்டக்களப்புப் பிரதேசத்திலும் யாழ்ப்பாணத்திற் சில இடங்களிலும், தமிழ்நாட்டிலும் நாம் என்னும் பன்மை வடிவமும் வழக்கிலுள்ளது. இவ்வடிவம் 'உளப்பாட்டுத் தன்மைப் பன்மை'யாகவே அமைந்துள்ளது. உளப்பாட்டுத் தன்மைப் பன்மையென்பது ஒரு குழு மனப்பான்மையையே உணர்த்துகிறது எனலாம்.

RangaRakes tamilnavarasam.com

நாமள் நம்மடை பெண்டிலும் பிள்ளையும்
நடுவ னத்திலே நிரியக்கே
நயந்து கவலைக் கிழங்கு கிண்டி
நாங்கள் நிண்டு நிரியக்கே.[32]

என்னும் ஈழத்து வடமாகாண நாட்டார் பாடலிலே நாமள், நம்மடை என்னும் சொற்பிரயோகங்களை நோக்குக. பன்றிகள் தம்முடைய குடும்பத்தினை அல்லது கூட்டத் தினைச் சுட்டுவதற்கே நாம் என்னும் தன்மைப் பன்மை இப்பாடலிலே உபயோகிக்கப்பட்டுள்ளது. நான் என்னும் சொல்லுக்கு உண்மையிலே பன்மையே கிடையாது. அதன் பன்மை வடிவங்களென வழங்கும் சொற்கள் யாவும் பிறரை உளப்படுத்திக் கூறுவனவாகவே அமையும். இந்நிலை உலகிலுள்ள பல மொழிகளிலே காணப்படும் இயல்பாகும். பேசுபவர் - கேட்பவர் என்னும் தொடர்பு அடிப்படையிலே உளப்பாட்டுத் தன்மைப் பன்மை வடிவங்கள் பல மொழி களிலே அமைந்துள்ளன. பேசுபவர் தன்னைச் சார்ந்த வர்களை மாத்திரம் குறிப்பிட ஒரு வடிவமும், கேட்ப வரையும் கேட்பவரைச் சார்ந்தவரையும் குறிப்பிட இன்னொரு வடிவமும், பேசுபவர் பேசுபவரைச் சாந்தோர், கேட்பவர் கேட்பவரைச் சாந்தோர் ஆகியோர் யாவரையும் குறிப்பிட வேறொரு வடிவமும் தன்மைப் பன்மை வடிவங் களாக அமையலாம்.

தமிழ் இலக்கணகாரர் தன்மைப் பன்மைப் பெயர்களாக யாம், நாம், யாங்கள், நாங்கள் என்னுஞ் சொற்களைக் குறிப்பிட்டுள்ளனரேனும், அவற்றுள் உளப்பாட்டுத் தன்மைப் பன்மை வடிங்கள் எவையென விதந்து கூறிஞ ரில்லை. ஆனால், வினை வடிவங்களுக்கு வரும் ஈறுகள்பற்றிக் கூறுமிடத்து உளப்பாட்டுத் தன்மைப் பன்மை பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். தன்மைப் பன்மை வினை ஈறுகள்,

அவைதாம்
அம்மா மெம்மே மென்னுங் கிளவியு
மும்மொடு வருஉங் கடதற வென்னு
மந்நாற் கிளவியொ டாயெண் கிளவியும்
பன்மை யுரைக்குந் தன்மைச் சொல்லே.[33]

எனத் தொல்காப்பியர் கூறுவர். ஆனால், தொல்காப்பியர் இச்சூத்திரத்திலே உளப்படுத்துதல் பற்றி எதுவும் கூறிஞ ரில்லை. இச்சூத்திரத்துக்கு உரை வகுத்த சேனவரையர்,

'தனக்கு ஒருமையல்லதின்மையிற் றன்மைப் பன்மை யாவது தன்னொடு பிறரை உளப்படுத்ததேயாம். அவ் வுளப்படுத்தன் மூவகைப்படும்; முன்னின்ருரை உளப் படுத்தலும், படர்க்கையாரை உளப்படுத்தலும், அவ் விருவரையும் ஒருங்குளப்படுத்தலுமென.

அம் ஆம் என்பன முன்னின்ருரை உளப்படுக்கும்; தமராயவழிப் படர்க்கையாரையும் உளப்படுக்கும். எம் ஏம் என்பன படர்க்கையாரை உளப்படுக்கும். உம்மொடு வருஉங் கடதற அவ்விருவரையும் ஒருங் குளப்படுத்தலுந் தனித்தனி யுளப்படுத்தலுமுடைய.'[34]

எனத் தமிழ் மொழியிலே உளப்பாட்டுத் தன்மைப் பன்மை யின் அமைப்பினையும் வகையினையும் தெளிவுற எடுத்துக் காட்டியுள்ளார். இவ்வுரைப் பகுதியினையே நன்னூலார்,

அம்மா மென்பன முன்னிலை யாரையும்
எம்மோ மோமினை படர்க்கை யாரையும்
உம்மூர் கடதற விருபா லாரையுந்
தன்னொடு படுக்குந் தன்மைப் பன்மை[35]

எனச் சூத்திரமாக வகுத்துள்ளார். இவ்வாறு அமைந்த வினைகளுக்கு எழுவாயாக அமைந்த உளப்பாட்டுத் தன்மைப் பெயர்கள் யாவை என்பதனை வெளிப்படையாக இலக்கண காரர் குறிப்பிடவில்லை. ஆனால், யாம், நாம் என்னும் இரு தன்மைப் பன்மைப் பெயர்களுள் நாம் என்பதே உளப்பாட்டுத் தன்மைப் பன்மையாக அமைந்திருக்க வேண்டுமென்பதற்குச் சான்றுகள் பல உண்டு. 'நம்மூர்ந்து வருஉ மிகரவை காரமும்'[36] எனும் தொல்காப்பியருடைய ஒரு சூத்திர அடிக்குக் கணேசையர் கொடுக்கும் விளக் கத்தினை இவ்விடத்தில் நோக்குதல் பொருத்தமாகும்:

RangaRakes tamilnavarasam.com

'நம்மூர்ந்து வருஉ மிகர வைகார மென்றதனால் நம் என்னும் அடியையே நம்பி நங்கை என்னும் இரண்டுங் கொள்ளுமென்பதும், அவை நமக்கு இன்னுரென்றும் பொருள்பட வருஉமென்பதும் பெறப்படும். .....என் தம்பி என்பதை நம்பி என்றும் என் தங்கை என்பதை நங்கை என்றும் சொல்லுதலின் உயர்சொல் என்றார்.'[37]

நம் என்னும் பெயரடியே உறவினரைத் தன்னோடு உளப் படுக்கும் பண்புடையதாக அமைந்துள்ளது. இன்றும் நாம் என்னும் சொல்லே உளப்பாட்டுத் தன்மைப் பன்மையாகச் சிற்சில இடங்களிலே வழங்கப்பட்டு வருவதாலும், அச் சொல் வடிவமே பண்டைக்காலந் தொட்டு உளப்பாட்டுத் தன்மைப் பெயராகத் தமிழிலே பயிலப்பட்டு வந்திருக்க வேண்டும். தமர் என்ற பிணைப்பு; குடும்பம், குடி, குழு என்னும் கூட்டு மனப்பான்மை போன்ற சமூக உளவியற் காரணிகளே தமிழ் மொழியிலும் உளப்பட்டுத் தன்மைப் பன்மைப் பெயர்களையும் வினைகளையும் இனங்காணுதற்கு வழிவகுத்தன எனக் கூறலாம்.

3·2 இயைபு வேறுபடல்

தொல்காப்பியருடைய இலக்கணத்தின்படி எழுவாய்ப் பெயர் சுட்டும் திணை, பால், எண், இடம் ஆகியன வற்றையே பயனிலை வினையும் சுட்டவேண்டும். தொல் காப்பியர்

வினையிற் ருேன்றும் பாலறி கிளவியும்
பெயரிற் ருேன்றும் பாலறி கிளவியு
மயங்கல் கூடா தம்மர பினவே[38]

என்னுஞ் சூத்திரத்திலே அவ்வியைபினைக் குறிப்பிடுகின்றார். பண்டைக்காலந்தொட்டே இவ்வியைபு தமிழ் மொழியிலே அமைந்து வந்துள்ள போதிலும், சிற்சில இடங்களிலே அவ் வியைபு மீறப்பட்டும் வந்துள்ளது. உதாரணமாக, சுந்தரன் பாடினன்; பணிந்தான்; பரவினன் என்றே தமிழ் வாக்கியம் அமையும். சுந்தரன் சாதாரண ஓர் ஆளெனில், மேற் காட்டிய வாக்கியம் அவ்வாறே அமையும். ஆனால் எம்

முடைய சமூகத்திலே மரியாதை, சமயம், அந்தஸ்து போன்ற காரணிகளாற் சிலரை ஆண்பால் ஒருமையிலே குறிப்பிடாது விடுகின்றோம். 'சுந்தரனே' என்று இறைவனால் விளிக்கப்பட்ட சைவசமய அடியாராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளிலே சேக்கிழாருக்குப் பக்தியும் மரியாதையும் உள்ள காரணத்தினாலே,

தெண்ணீலா மலர்ந்த வேணியா யுன்றன்
திருநடங் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே யெனக்கு
வாலிதா மின்பமா மென்று
கண்ணி லானந்த வருவிநீர் சொரியக்
கைம லருச்சிமேற் குவித்துப்
பண்ணினு னீடி யறிவரும் பதிகம்
பாடினர் பரவினர் பணிந்தார்

என்று பெரியபுராணத்திலே பாடுகின்றார். சுந்தரன் பாடினன், பரவினன், பணிந்தான் என்று அமையவேண்டிய தொடர் சமூகத்திலே சமய அடியாருக்குக் கொடுக்கவேண்டிய மரி யாதை காரணமாக சுந்தரர் பாடினர், பரவினர், பணிந்தார் என்று அமைகின்றது. சமயப் பெரியார்களை ஒருமையிலே குறித்தலைத் தமிழ்ச் சமூகம் அவ்வளவு விரும்புவதில்லை. 'புத்தர் சொன்னான், இராமகிருஷ்ண பரமஹம்சர் சொன் னான்.....' என்று கூட்டமொன்றிலே பேசிக்கொண்டிருந்த ஒருவர், சபையோரின் முகத்தைப் பார்த்தவுடன், 'புத்தர் சொன்னார், இராமகிருஷ்ண பரமஹம்சர் சொன்னார்...' என்று திருத்திக் கொண்டதை ஒரு நல்ல உதாரணமாக இங்கு குறிப்பிடலாம். சமூகத்திலே ஏற்பட்ட இவ்வழக்கினை தள்ளிவைக்க முடியாத காரணத்தினாலேயே தொல்காப்பியர் 'ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும்...'[39] என்ற சூத்திரத் தைத் தன் நூலிலே அமைத்துக்கொண்டார். அச்சூத்திரத் துக்கு விளக்கக் குறிப்பு எழுதும் கணேசையர், ''தான் வந்தான் தொண்டன் என்பது தாம் வந்தார் தொண்டனர் என உயர்திக் கூறப்பட்டது. இங்கே 'தாம் வந்தார்' என்பதளவில் உதாரணமாம். அதனை 'ஒருவனையும் தாம் வந்தார் என்ப' என நச்சினார்க்கினியர் கூறுதலாலு முணர்ந்து கொள்க.''[40] என்று கூறுவதையும் நோக்குக.

RangaRakes tamilnavarasam.com

4. அரசியற் செல்வாக்கு

தமிழ் மொழியிலே 'செந்தமிழ்', 'கொடுந்தமிழ்' என இருவகைகளைத் தமிழ் இலக்கணகாரர் இனங்கண்டுள்ளனர். நவீன மொழியியலாளர் 'மொழி', 'கிளைமொழி' என்ற வகையினை மேற்கொண்டுள்ளனர். இது போன்றதொரு அமைப்பாக 'செந்தமிழ்', 'கொடுந்தமிழ்' என்ற பாகுபாடு அமையாவிடினும், நவீன மொழியிலாளரின் பாகுபாட்டுக் கமையும் சில அடிப்படைகளை இங்கு காணமுடிகிறது. 'செந்தமிழ்' என்பது ஒருவகையிலே 'தராதரத் தமிழ்' எனவே தமிழ் இலக்கணகாரர் கொண்டுள்ளனர். தொல் காப்பியர் 'செந்தமிழ்' 'செந்தமிழ் நாடு' என்ற பதங்களைத் தன் நூலிலே குறிப்பிட்டுள்ளார். 'செந்தமிழ்' எது என வரைவிலக்கணங்கூற முற்பட்ட தமிழ் இலக்கணசாரர் அரசியற் செல்வாக்காலே பாதிப்புற்றிருப்பதைக் காணலாம்.

பண்டைக்கால இலக்கிய வழக்கினையே எக்காலமும் போற்ற வேண்டுமென்று மரபுடையார் 'செந்தமிழ்' 'செந்தமிழ் நாடு' என்று தொல்காப்பியர் கூறினவற்றுக்குக் குறுகிய அடிப்படையிலேயே வரைவிலக்கணங் கூறலாயினர். அகத்தியருக்கு முன்னர் தமிழ் வழுவுற்றிருந்ததென்றும், அவர் அவ்வழுக்களைக் களைந்து செம்மைப் படுத்தியதால் தமிழ் செந் தமிழாயிற்று என்றும் கூறுவர் திராவிடப் பிரகாசிகை ஆசிரியர்.[21] அவரும் அவர் சார்ந்த குழாத்தினருமே 'செந்தமிழ்' என்பது செந்தமிழ் நிலத்து மொழியென்றும், அச்செந்தமிழ் நாடாவது பாண்டிவள நாடு' என்றும் 'தமிழ் முனிவராகிய அகத்தியருக்கும், தமிழை வளர்த்த பாண்டியர்களுக்கும் சங்கப் புலவர்களுக்கும் உறைவிடம் அதுவாதலென்றறிக'[42] என்றும் கூற முற்பட்டனர். தொல் காப்பியர் கூறிய 'செந்தமிழ் நிலத்து வழக்கு' என்பது சேனவரையரின்படி 'செந்தமிழ் நிலமான வைகையாற்றின் வடக்கும் மருத யாற்றின் தெற்கும் கருவூரின் கிழக்கும் மருவூரின் மேற்குமாகும்' என்ற பொருள் பெற்றது.[43] அவர் குறிப்பிட்ட குறுகிய நிலத்து வழக்குச் செந்தமிழ் வழக்காக அமைய ஏனைய தமிழ் நாட்டு வழக்குக் கொடுந் தமிழ் வழக்காயிற்று. இது சமயங்கலந்த அரசியற் போக்

கினையும் மொழி மரபு பேணும் நோக்கத்தினையும் கூட்டி நிற்கின்றது. சேனவரையர், மயிலைநாதர், நச்சினார்க்கினியர் ஆகியோருக்குச் செந்தமிழ் நாடு சோழ நாடாக அமைய, சங்கர நமச்சிவாயர், சிவஞான முனிவர், ஆறுமுக நாவலர் போன்றோருக்குப் பாண்டி நாடாக அமைவது விந்தையாக உள்ளது.[44] வையாபுரிப்பிள்ளை குறிப்பிடுவது போலத் தொல்காப்பியர் செந்தமிழ் நாடு எது என்றே அதனைச் சூழ்ந்துள்ள 12 நாடுகளும் எவையென்றே கூறினாரில்லை.[45] இந்நிலையினைத் தெய்வச் சிலையாரின் உரை ஓரளவு தெளிவாக்குகிறது எனலாம்.

> 'தமிழ் கூறும் நல்லுலகமென விசேடித்தமையாலும், கிழக்கும் மேற்கும் எல்லை கூறுது தெற்கெல்லை கூறியவதனாற் குமரியின் தெற்காகிய நாடுகளை யொழித்து வேங்கடமலையின் தெற்கும் குமரியின் வடக்கும், குண கடலின் மேற்கும், குடகடலின் கிழக்குமாகிய நிலம் செந்தமிழ் நிலமென்றுரைப்ப அந்நிலத்து வழக்கொடு சிவணித் தம்பொருள் வழாமல் இசைக்குஞ் சொல்லாவன : சோறு, கூழ், மலை, மரம், உண்டான், தின்றான், ஓடினான், பாடினான் என்னுந் தொடக்கத்தன. இவை அந்நிலப்பட்ட எல்லா நாட்டிலும் ஒக்க வியற்றின் இயற்சொல் ஆயின. இவற்றைச் செஞ்சொல் எனினும் அமையும்.'[46]

செந்தமிழ் நாடு என்பது தமிழ்நாடே என்று தெய்வச் சிலையார் கூறுவதுதான் பொருத்தமாகத் தென்படுகிறது.

RangaRakes tamilnavarasam.com

அடிக்குறிப்புக்கள்

1. Lyons, J., **Ibid,** p. 54 : 'To introduce now the terms generally used by linguists : the sounds of a given language are described by **phonology;** the form of its words and the manner of their combination in phrases, clauses and sentences by **grammar;** and the meaning, or content, of the words (and of the units composed of them) by **Semantics.**

2. Chakravarti, Prof. A., **Jaina Literature in Tamil,** p. 10.

3. Jesperson, Otto., **The Philosophy of Grammar,** p. 55: 'We are **thus** led to recognize that beside, or above, or behind, the syntactic categories which depend on the structure of each language as it is actually found, there are some extralingual categoies which are independent of the more or less accidental facts of existing languages.....Some of them relate to such facts of the world without as sex, others to mental states or to logic, but for want of a better common name for these extralingual categories, I shall use the adjective **notional** and the substantive **notion.** It will be the grammarian's task in each case to investigate the relation between the notional and the syntactic categories'

4. தொல்காப்பியம், எழுத்ததிகாரம், சூ. 8

5. மேற்படி, சூ. 9

6. Abercrombie, David., **Elements of General Phonetics,** p. 39 : 'The air so expelled needs for its escape to the outer air a relatively free and unrestricted passage through the vocal tract, and it is this moment of least restriction in the sequence of movements that make up the syllable that is the **vowel**.....The stream of air expelled by the chest-

pulse can be both released and arrested by accessory articulatory movements. These movements produce the **consonants** of the syllable'

7. தொல்காப்பியம், எழுத்ததிகாரம், நச்சினர்க்கினியர் உரை, சூ. 8, ப. 47.

8. மேற்படி, ப. 48

9. நன்னூல், காண்டிகையுரை, சூ. 63, ப. 51

10. **Sivajnana Bodham** (Tr. Canagarayar, T,) என்னும் நூலில் இப்பாடல் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. ப. 30

11. பகவத்கீதை, தமிழாக்கம் : மகாகவி சுப்பிரமணிய பாரதியார், ப. 66.

12. வேங்கடசாமி, மயிலை. சீனி., சமணமும் தமிழும், ப 9.

13. தொல்காப்பியம், சொல்லதிகாரம், சூ. 1

14. வேங்கடசாமி, மயிலை. சீனி., மு. கு. நூ., ப. 9

15. மேற்படி, ப. 10

16. தொல்காப்பியம், பொருளதிகாரம், மரபியல், சூ. 582

17. மேற்படி, சூ. 582க்குப் பேராசிரியரின் உரை.

18. மேற்படி, சூ. 588

19. நன்னூல், சூ. 261

20. வேங்கடசாமி, மயிலை. சீனி., மு. கு. நூ., ப. 185

21. இளவரசு, சோம., தமிழ் இலக்கண வரலாறு, ப. 51

22. மேற்படி, ப. 53 – 66

23. மீனுட்சிசுந்தரன், தெ. பொ., சமணத் தமிழ் இலக்கிய வரலாறு, ப. 166.

24. Jesperson, Otto, **Ibid,** p. 194

25. குறுந்தொகை, பாடல் 40

26. Jesperson, Otto., **Ibid,** p. 195

27. பரிபாடல், பாடல் 54

RangaRakes tamilnavarasam.com

28. தொல்காப்பியம், சொல்லதிகாரம், சூ. 27.
29. வீரசோழியம், ப. 38
30. Lyons, J., **Ibid,** p. 280
31. வீரசோழியம், ப. 43
32. வன்னிவள நாட்டுப் பாடல்கள், ப. 6.
33. தொல்காப்பியம், சொல்லதிகாரம், சூ. 202
34. மேற்படி, சேனவரையருரை, ப. 237 — 38
35 நன்னூல், சூ. 332
36. தொல்காப்பியம், சொல்லதிகாரம், சூ. 163
37. மேற்படி, ப. 203
38. மேற்படி, சூ. 11
39. பார்க்க அடிக்குறிப்பு 28
40. தொல்காப்பியம், சொல்லதிகாரம், ப. 52
41. நன்னூல், ஆறுமுகநாவலரின் காண்டிகையுரை, ப. 261
42. சபாபதி நாவலர், மு. கு. நூ., ப. 36 — 46
43. தொல்காப்பியம், சொல்லதிகாரம், சேனவரையருரை, ப. 358
44. பாண்டிநாடும், சோழ நாடும் ஏன் செந்தமிழ் நில மாயின என்னும் விவரத்துக்குப் பார்க்க : வேலுப் பிள்ளை, ஆ., தமிழ் வரலாற்றிலக்கணம், ப. 34-37
45. Vaiyapuripillai, S., **History of Tamil Language and Literature,** pp. 73-77
46. தொல்காப்பியம், சொல்லதிகாரம், தெய்வச்சிலையா ருரை, ப. 216-17

4

எழுத்துப் பற்றிய சிந்தனைகள்

1. எழுத்து என்பது என்ன?

எழுத்து என்பது மொழியினை நாம் விளங்கிக்கொள்வ தற்கு உதவும் ஒரு வகை மூலமாகும். ஒருவர் எம்முடன் பேசும்போது, அவருடைய பேச்சின் பொருளை அவரால் எழுப்பப்படும் ஒலிகள் மூலமாக விளங்கிக்கொள்கிறோம். ஒரு நூலை வாசிக்கும்போது, அந்நூற்பொருளை, அதில் இடம்பெறும் எழுத்துக்கள் மூலமாக விளங்கிக் கொள்கிறோம். ஆகவே மொழியினை நாம் விளங்கிக் கொள்ள 'பேச்சொலி', 'எழுத்து' ஆகிய இரண்டுமே மூலங்களாக அமைகின்றன. பெரும்பான்மையான மொழிகளிலே எழுதும் முறை பேசும் முறையோடு ஒத்திருப்பதில்லை. இவ்விரு மூலகங்களுள் எழுத்துக்கே பண்டைய மேலைத்தேய இலக்கணகாரர்களும் தமிழ் இலக்கணகாரர்களும் முக்கியத்துவம் கொடுத்தனர். மரபுவழி இலக்கணகாரர் எழுத்துவடிவத்துக்கு முக்கியத்து வங் கொடுத்ததற்குச் சுவிஸ் நாட்டைச் சேர்ந்த மொழியிய லறிஞர் பேர்டினன்ட் டி சொஸியோர் (Ferdinand de Sauss-aure) என்பவர் பின்வருங் காரணங்களைக் கூறுவர்[1] :

(அ) மொழியின் ஒருமைப்பாட்டினை எல்லாக்காலமும் நிலைநிறுத்த, ஒலிவடிவைவிட எழுத்து வடிவம் நிலைபெற்றதொன்றென்னும் மனப்பாங்கை எமக்கு ஏற்படுத்துகின்றது. மொழிக்கும் ஒலிக்குமுள்ள தொடர்பே உண்மையான தொடர்பாகும். மொழிக்கும் எழுத்துக்குமுள்ள தொடர்பு

RangaRakes tamilnavarasam.com

மேலோட்டமானதாகும். எனினும் இம் மேலோட்டமான தொடர்பினை விளங்கிக் கொள்ளுதல் இலகுவாயுள்ளது.

(ஆ) எழுத்து வடிவு கட்புலனுக்குரியது. ஒலிவடிவமோ செவிப்புலனுக்குரியது கட்புலனுக்குரியவற்றை நாம் என்றுமே பார்க்கலாம். பேச்சொலிகளோ, பேச்சு நடைபெறுஞ் சந்தர்ப்பத்தில் மாத்திரமே காதில் வாங்கிக்கொள்ளலாம். ஆனால் எழுத்து வடிவங்களை நாம் விரும்பிய நேரங்களிலெல்லாம் பார்த்துக்கொள்ளலாம். இதனாலேயே பெரும் பாலானவர் எழுத்து வடிவினை விரும்புகின்றனர்.

மேற்காட்டிய காரணங்களை விட 'இலக்கியங் கண்டதற்கு இலக்கணம் இயம்பும்' மரபே எழுத்து வடிவுக்கு முக்கியத்துவம் கொடுப்பதற்கு மிக முக்கிய காரணமாக அமைந்ததெனலாம். தமிழ் மொழியிலே இலக்கிய மொழிக்கென இலக்கணங்கள் எழுதப்பட்டன; நிகண்டுகள் அமைக்கப்பட்டன. இலக்கிய மொழிக்கு இலக்கணம் அமைத்த காரணத்தால் 'எழுத்து'க்கே இலக்கணம் கூறப்பட்டது. இதனால், தமிழ் இலக்கணங்களிலே 'ஒலியதிகாரம்' என்னும் பகுதிக்குப் பதிலாக 'எழுத்ததிகாரம்' என்னும் பகுதியே இடம்பெறலாயிற்று. தனக்கு முன்னெழுந்த இலக்கணக் கோட்பாடுகளைச் சுருக்கி உரைநடையிலே இலக்கணச் சுருக்கமாகத் தரும் ஆறுமுகநாவலர் :

> 'எழுத்தாவது : சொல்லுக்கு முதற்காரணமாகிய ஒலியாம்.'[2]

என்று கூறுகின்றார். இதன்மூலம் மொழிக்கு முதற் காரணமாக அமைவது ஒலியென்றும், அவ்வொலியினை வரிவடிவமாக்குவது எழுத்து என்றும் உணரக்கூடியதாயுள்ளது. ஆனால், தமிழ்ப் பேச்சொலிகள் யாவற்றுக்கும் எழுத்து வடிவங் கொடுக்கப்படவில்லை என்பதனை இவ்விடத்திலே நாம் மனங்கொள்ள வேண்டும். தமிழ் மொழியைப் பொறுத்த மட்டில் முற்காலத்திலே தமிழ்ப் பேச்சொலிகள் யாவற்றுக்கும் எழுத்து வடிவங் கொடுக்கப்பட்டதோ இல்லையோ என்று கூறுவதற்கு எமக்கு ஆதாரங்கள் இல்லை. ஆனால், இன்று எம்மொழியில் நாம் உபயோகிக்கும் பேச்சொலிகள் யாவற்றுக்கும் எழுத்து வடிவங் கொடுக்கப்படுவதில்லை எனத் துணிந்து கூறலாம். உதாரணமாக, கண் என்னுஞ் சொல்லிலுள்ள 'க்' ஒலியினையும் காகம் என்னுஞ் சொல்லின் இடைநிலையிலுள்ள 'க்' ஒலியினையும் ஒப்பிட்டு நோக்கலாம். இரண்டாவது 'க்' ஒலி உண்மையில் எம் பேச்சிலே 'ஹ்' என்றுதான் உச்சரிக்கப் படுகின்றது. இவ்வொலியினை நாம் என்றுமே வரிவடிவில் எழுதுவதில்லை. நன்னூலார், ஆறுமுகநாவலர் காலத்திலும் ஒலிநுட்ப பேதங்களுக்கமைய வரிவடிவங்கள் அமையவில்லை என்பதையும் எடுத்துக்காட்டலாம்.

> 'உயிரெழுத்துக்களுள்ளே, உகரமும் இகரமும், சில விடங்களிலே தம் மாத்திரையிற் குறைவாக ஒலித்து நிற்கும். அவ்வுகரத்துக்குக் குற்றியலுகரமென்றும், அவ்விகரத்துக்குக் குற்றியலகரமென்றும் பெயராம்.'[3]

என்று கூறும் ஆறுமுகநாவலர், தொடர்ந்து அவைபற்றிய இலக்கணங்களைக் கூறுவர்.[4] நன்னூலிற் சூத்திரங்களாற் கூறப்பட்ட இலக்கணங்களையும்,[5] அச்சூத்திரங்களுக்குரிய காண்டிகை உரையினையும் ஆறுமுகநாவலர் உரைநடையிலே வகுத்துள்ளார். நன்னூலாரோ ஆறுமுகநாவலரோ குற்றிய லிகரவொலியினையும் குற்றியலுகரவொலியினையும் வரிவடிவிலே காட்டும் எழுத்துக்கள் பற்றிக் குறிப்பிடவில்லை.[6] குற்றியலுகரத்துக்கு உதாரணங்களாக ஆடு, வண்டு என்னுஞ் சொற்களையும், முற்றியலுகரங்களுக்கு திரு, கதவு என்னுஞ் சொற்களையும் ஆறுமுகநாவலர் தருகின்றார். இங்கு முற்றுகரவொலிக்கும் குற்றுகரவொலிக்கும் வெவ்வேறு எழுத்து வடிவங்கள் கொடுக்கப்படவில்லை. இவைபோன்று பல பேச்சொலிகளுக்குத் தமிழிலே வரிவடிவங்கள் கொடுக்கப்படவில்லை. கற்பு, கறவை என்னும் இரு சொற்களை எடுத்துக் கொள்வோம். கற்பு என்னுஞ் சொல்லிலுள்ள 'ற்' ஒலியினையும், கறவை என்னுஞ் சொல்லிலுள்ள 'ற்' ஒலியினையும் நாம் ஒரேமாதிரி உச்சரிக்கின்றோமா? முதலாவதை இடையண்ண அடைப்பொலியாகவும் இரண்டாவதை ஆடொலியாகவும் உச்சரிக்கின்றோம்.[7] ஆனால், அவ்விரண்டையும்

RangaRakes tamilnavarasam.com

ஒரே வரி வடிவினுலேயே எழுதிக் காட்டிவிடுகிறோம். இதனுல் உலகிலுள்ள பல மொழிகளைப்போலத் தமிழ் மொழியிலும் ஒலிவடிவுக்கும் எழுத்துவடிவுக்கும் பூரணமான நேரிடை ஒற்றுமை இருப்பதாகக் கூறமுடியாது.

எழுத்து என்பது மொழியை விளங்கிக் கொள்ள உதவும் ஒருவகை மூலம் எனவும், அது வரலாற்றடிப்படையிலே, பேச்சொலி மூலத்திலிருந்து பிறந்தது எனவும் கூறுதலே பொருத்தமானதாகும். 'பேச்சொலி மூலத்தினை ஆய்ந்து, அவ்வாய்வின் பயனுகப் பேச்சொலி அலகுகளுக்குக் காட்சிக் குப் புலனுகும் அடையாளங்கள் கொடுத்ததின் பலனுகவே உலகிலே தற்போது நாம் அறியக்கூடிய எல்லாவரிவடிவ முறைகளும் தோன்றின' என்று கூறுவர் ஒலியியலறிஞரான டேவிட் அபெகுரெம்பி.[8] வரிவடிவிலமைந்த 'எழுத்து' மொழியை விளக்குவதற்குத் தன்னளவிலே தனித்துவமும் பூரணத்துவமும் பெற்ற ஒரு மூலமாக விளங்கிவந்துள்ளது. எழுத்து வடிவிலுள்ள ஒரு வாக்கியத்தைக் கற்றவர்கள் எவரும் விளங்கிக் கொள்வதற்காகப் பேச்சு வடிவுக்கு மாற்ற வேண்டிய அவசியமில்லை. ஒரு வாக்கியத்தை எழுதுவதற்கு முன்னர் அதைப் பேசிப் பார்த்துத்தான் எழுதவேண்டு மென்பதுமில்லை. எழுத்து மூலம் பேச்சு மூலத்தின் பிரதி பலிப்பு என்பது உண்மையேயாயினும், எழுத்து மொழி நிச்சயமாகப் பேச்சு மொழியைப் பிரதிபலிக்க வேண்டுமென்ப தில்லை. இங்கு 'எழுத்துமொழி' என்னுந் தொடர் 'இலக் கிய வழக்கு' அல்லது 'எழுத்து வழக்கினையே' குறிக்கின்றது. தமிழ்மொழி, உலகிலேயுள்ள, வேறு சில மொழிகளைப் போல 'இரு வழக்கு' (diglossia) பண்புடைய மொழியாகும். 'இரு வழக்கு' என்பது 'இலக்கிய வழக்கு', 'பேச்சு வழக்கு' என்னும் இரண்டினையுங் குறிக்கும். இவ்விரு வழக்குகளும் சிற்சில விசேட சந்தர்ப்பங்களிற் பொருத்தமறிந்து உபயோ கிக்கப்படுகின்றன. பல்கலைக் கழக மாணவர்களுக்கு 'இலக்கிய வழக்கில்' அல்லது 'எழுத்து வழக்கில்' விரிவுரை ஆற்றி விட்டு வீட்டுக்குவரும் நான் என் மனைவியிடமும் குழந்தை களிடமும் 'பேச்சு வழக்கிலேயே' உரையாடுவேன். இத் தகைய மொழியியல் நிலையினைப் புலப்படுத்தவே 'இரு வழக்கு' என்னும் தொடரினை மொழியியலாளர் கையாண்

டுள்ளனர்.[9] தமிழில் எழுத்து மூலத்தை அடிப்படையாகக் கொண்டே 'இலக்கிய வழக்கு'ச் சில விசேட சந்தர்ப்பங்களிற் கையாளப்படுகின்றது. அதேபோன்று பேச்சொலி மூலத்தை அடிப்படையாகக் கொண்ட 'பேச்சு வழக்கு' வேறு சில விசேட சந்தர்ப்பங்களிற் பயன்படுத்தப்படுகின்றது. அத் தகைய விசேட சந்தர்ப்பங்களைப் பின்வரும் அட்டவணை நிரைப்படுத்திக் காட்டுகின்றது.

சந்தர்ப்பங்கள்	பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு
1. உறவினர் நண்பர் ஆகியோருடன் உரையாடல்	X	
2. விரிவுரை, சமய, இலக்கியச் சொற் பொழிவுகள்		X
3. கடிதம் : படித்தவர்கள்		X
படியாதவர்கள்	X	
4. பத்திரிகை, சஞ்சிகை ஆகியவற்றில் கட்டுரை, ஆசிரியர் தலையங்கம், செய்திகள்		X
5. வானுலையில்:		
செய்திகள் / தொகுப்பாளர் அறிவிப்பு		X
சில கிராமிய நிகழ்ச்சிகள் / சமூக நாடகங்கள்	X	
6. தற்காலச் சிறுகதை, கவிதை, நாவல், நாடகம்	X	X
7. அரசாங்க வர்த்தமானி விளம்பரம் முதலியன.		X

RangaRakes tamilnavarasam.com

தமிழ் மக்கள் உலகின் பல்வேறு நாடுகளிலே வாழ்கின்றனர். இவர்களுட் சில நாடுகளிலே வாழ்பவர்கள் தமிழ்மொழியைப் பேசமாட்டார்கள். ஆனால் தமிழ் நூல்களை அவர்கள் வாசிக்கக் கூடியவர்களாயுள்ளனர். இதனால், தமிழ்ப் பேசும் மக்கள் யாவரையும் ஒன்றிணைக்கக் கூடிய மொழி மூலமாக 'எழுத்து வழக்கு' அமைகின்றது.

2. எழுத்து வகை

2 1. உயிர் எழுத்துக்கள்

பேச்சொலிகளுக்கு ஒரு குறிப்பிட்ட வகையிலே வரிவடிவங் கொடுப்பனவே எழுத்துக்களாகும். தமிழ் எழுத்துக்களை இலக்கணகாரர் உயிர், மெய் என இரண்டாகப் பாகுபாடு செய்துள்ளனர். உயிர் எழுத்துக்களை அவர்கள் குற்றெழுத்துக்கள், நெட்டெழுத்துக்கள் எனப் பின்வருமாறு பிரித்துள்ளனர் :

குறில் : அ, இ, உ, எ, ஒ

நெடில் : ஆ, ஈ, ஊ, ஏ, ஓ, ஐ, ஔ

இப்பாகுபாட்டினை நோக்குமிடத்து, 'ஆ' தொடக்கம் 'ஓ' வரையிலான நெட்டெழுத்துக்களுக்கு நிகரான குற்றெழுத்துக்கள் கொடுக்கப்பட்டுள்ளன: ஆனால் 'ஐ', 'ஔ' ஆகியனவற்றுக்கான குற்றெழுத்துக்கள் இல்லை என்பதை அவதானிக்கலாம். தமிழ் இலக்கணகாரர் உயிர் எழுத்துக்கள் உச்சரிக்கப்படும்போது தேவைப்படும் கால அளவினை மாத்திரை என்று குறிப்பிடுவர். உயிர் எழுத்துக்களில் குற்றெழுத்துக்களுக்கு ஒரு மாத்திரையளவும், நெட்டெழுத்துக்களுக்கு இரண்டு மாத்திரையளவும் குறிக்கப்பட்டுள்ளன. இம்மாத்திரை அளவினைக் கொண்டே 'ஐ', 'ஔ' என்பன நெட்டெழுத்துக்களாக வகுக்கப்பட்டன. ஏனெனில் 'ஐ' என்பது 'அ', 'இ' என்றும் இரு குறில்களின் கூட்டெழுத்தாகவும், 'ஔ' என்பது 'அ', 'உ' என்னும் இரு குறில்களின் கூட்டெழுத்தாகவும் தமிழ் இலக்கணகாரரால் கூறப்பட்டுள்ளன:

அகர இகரம் ஐகார மாகும்.[10]
அகர உகரம் ஔகார மாகும்.[11]

என்பன தொல்காப்பியச் சூத்திரங்களாகும். தொல்காப்பியரின் இவ்விரு சூத்திரங்களையும் தொகுத்து,

அம்மு னிகரம் யகர மென்றிவை
எய்தி னேயொத் திசைக்கு மவ்வோ
டுவ்வும் வவ்வு மேளவோ ரன்ன[12]

என்று நன்னூலார் சூத்திரஞ் செய்வர். நன்னூலாரின்படி 'ஐ'காரம் அ + இ எனவும் அ + ய் எனவும் அமையும் என்றும், 'ஔ'காரம் அ + உ எனவும் அ + வ் எனவும் அமையும் என்றும் அறிகிறோம். இலக்கணச் சுருக்ககாரர் 'அகரத்தோடு யகர மெய் சேர்ந்து ஐகாரம் போன்றும், அகரத்தோடு வகரமெய் சேர்ந்து ஔகாரம் போன்றும், ஒலிக்கும்.'[13] என்று கூறுவர். இலக்கணச் சுருக்ககாரரின்படி இவ்வாறமையும் ஐகாரமும் ஔகாரமும் போலி எழுத்துக்களாகும். ஆனால், நன்னூலாரோ இவற்றைப் போலி எழுத்துக்களாகக் கொள்ளவில்லை.

ஒவ்வொரு மாத்திரை அளவுகொண்ட இரு குற்றெழுத்துக்கள் சேர்ந்து கூட்டெழுத்தாக அமையும்போது, அது இரண்டு மாத்திரையுடையதாக அமைவதால் நெட்டெழுத்து என வகைப்படுத்துதல் பொருத்தமற்றதாகத் தென்படுகின்றது. தனியே மாத்திரை அளவை மாத்திரங் குறிக்க ஐகாரத்தையும் ஔகாரத்தையும் நெட்டெழுத்துக்கள் என வகைப்படுத்தினால், அவற்றின் கூட்டெழுத்துப் பண்பு மறைக்கப்பட்டுவிடும். அத்துடன் அவை இரண்டு மாத்திரை அளவு கொண்டன என்னும் விடயத்திலும் தமிழ் இலக்கணகாரரிடையே தெளிவான முடிபு இல்லை. நன்னூலார் (சூ. 125) அ + ய் சேர்ந்து ஐகாரமும்[14] அ + வ் சேர்ந்து ஔகாரமும் அமையும் என்று கூறியுள்ளார். தமிழ் இலக்கணகாரரின்படி மெய்யெழுத்துக்கு மாத்திரை அரையாகும். ஆகவே ஒரு மாத்திரை கொண்ட அகரமும் அரைமாத்திரை கொண்ட யகர மெய்யும் சேர்ந்து ஐகாரமென்னுங் கூட்டெழுத்தை உண்டாக்கின், அதன் மாத்திரை அளவு

RangaRakes tamilnavarasam.com

ஒன்றரையேயாகும். இதுபோலவே, ஔகாரமும் ஒன்றரை மாத்திரையுடையதாகின்றது. தனித்தனியே இரண்டு மாத்திரை கொண்ட நெட்டெழுத்துக்களுடன் ஐகாரத்தையும் ஔகாரத்தையும் சேர்த்துவகைப்படுத்துதல் பொருத்தமாகத் தெரியவில்லை. ஆகவே, தமிழிலுள்ள உயிர் எழுத்துக்களைப் பின்வருமாறு மூன்றுவகைகளாகப் பாகுபடுத்துதலே பொத்தமாகும்:

குற்றெழுத்து : அ, இ, உ, எ, ஒ
நெட்டெழுத்து : ஆ, ஈ, ஊ, ஏ, ஓ
கூட்டெழுத்து : ஐ, ஔ

உயிர் எழுத்துக்களை நாம் அவற்றை உச்சரிக்கும் முறை நோக்கியும் பாகுபாடு செய்யலாம். உயிர் எழுத்துகளின் உச்சரிப்புப் பற்றித் தொல்காப்பியர் நான்கு சூத்திரங்கள் வகுத்துள்ளார்.

அவ்வழி
பன்னீ ருயிருந் தந்நிலை திரியா
மிடற்றுப் பிறந்த வளியி னிசைக்கும்,

அவற்றுள்
ஆ ஆ ஆயிரண் டங்காந் தியலும்.

இஈ எஏ ஐயென விசைக்கு
மப்பா லைந்து மவற்றே ரன்ன
வவைதா
மண்பன் முதனு விழிம்புற லுடைய.

உஊ ஒஓ ஔவென விசைக்கு
மப்பா லைந்து மிதழ்குவிந் தியலும்.

நன்னூலாரும் தொல்காப்பியர் கூறியவற்றையே திரும்பக் கூறியுள்ளார். அங்காத்தல், அண்பல்-அடிநா அசைவு, இதழ் குவிதல் ஆகியனவே உயிர் எழுத்துக்களின் உச்சரிப்புக்களுக்கு அடிப்படைகளாக இச் சூத்திரங்கள் கூறுகின்றன. நாவினுடைய அசைவும் இதழ்குவிதலும் உயிரொலிகளின்

பிறப்புக்கு அடிப்படைகளாகின்றன. நா முன்னுக்குச் செல்லுதல், இடையில் நிற்றல், பின்னுக்குச் செல்லுதல், உயர நிற்றல், நடுவில் நிற்றல் அல்லது கீழே நிற்றல் ஆகிய முயற்சிகள் உயிரொலிகள் பிறக்க உதவுகின்றன. சில ஒலிகளுக்கு இதழ் குவிதலும் வேண்டப்படுகின்றன. இந்த அடிப்படையில் எமது உயிரெழுத்துக்களின் உச்சரிப்புக்களைப் பின்வருமாறு விவரணஞ் செய்யலாம் :

அ, ஆ: நா, கீழ் - மேல் அடிப்படையில் கீழேயும், முன் - பின் அடிப்படையில் நடுவிலும் நிற்க, இதழ் குவிவு இன்றிப் பிறக்கின்றன.

இ, ஈ: நா, கீழ் - மேல் அடிப்படையில் மேலேயும், முன் - பின் அடிப்படையில் முன்னுக்கும் நிற்க, இதழ் குவிவு இன்றிப் பிறக்கின்றன.

உ, ஊ: நா, கீழ் - மேல் அடிப்படையில் மேலேயும், முன் - பின் அடிப்படையில் பின்னுக்கும் நிற்க, இதழ் குவிவுடன் பிறக்கின்றன.

எ, ஏ: நா, கீழ் - மேல் அடிப்படையில் நடுவிலும், முன் - பின் அடிப்படையில் முன்னுக்கும் நிற்க, இதழ் குவிவு இன்றிப் பிறக்கின்றன.

ஒ, ஓ: நா, கீழ் - மேல் அடிப்படையில் நடுவிலும், முன் - பின் அடிப்படையில் பின்னுக்கும் நிற்க, இதழ் குவிவுடன் பிறக்கின்றன.

2·2. மெய் எழுத்துக்கள்

மெய்யெழுத்துக்களை உச்சரிக்கும்போது ஏற்படும் ஓசை நயத்தை நோக்கித் தமிழ் இலக்கணகாரர் அவ்வெழுத்துக்களை வல்லினம், மெல்லினம், இடையினம் எனப் பாகுபடுத்தியுள்ளனர். க், ச், ட், த், ப், ற் ஆகியனவற்றை உச்சரிக்கும் போது வன்மையான ஒலி உண்டாவதின் காரணமாக, அவை வல்லெழுத்துக்கள் எனப்பட்டன. ங், ஞ், ண், ந், ம், ன் என்பன மெல்லோசை உடைய காரணத்தால்

RangaRakes tamilnavarasam.com

மெல்லெழுத்துக்கள் எனப்பட்டன. இவை இரண்டுக்கும் இடைப்பட்டனவாக ய், ர், ல், வ், ழ், ள் என்பன அமைவதால், அவை இடையெழுத்துக்கள் எனப்பட்டன. இப்பாகுபாடு ஒரு மேலோட்டமான பாகுபாடு என்றே கூறவேண்டும். தொல்காப்பியர் மெய்யெழுத்துக்கள் பிறக்கும் வகைபற்றிக் கூறியுள்ளவற்றை அனுசரித்து, ஓரளவு நவீன ஒலியியலாரின் அடிப்படைகளைப் பின்பற்றி மெய்யெழுத்துக்களைப் பாகுபாடு செய்வதே பொருத்தமாகும். இந்த அடிப்படையில், மெய்யெழுத்துக்கள் பிரதிபலிக்கும் ஒலிகள் பிறக்கின்ற இடம் நோக்கியும், அவை பிறக்கின்ற தன்மை நோக்கியும் பாகுபாடு மேற்கொள்ள முடியும்.

எமது வாய் இதழ்கள் இரண்டும் இயைவதன் மூலம் 'ப்', 'ம்' எனும் ஒலிகள் பிறக்கின்றன. நா நுனி மேல்வாய்ப் பல்லில் ஒற்றுவதன் மூலம் 'த்', 'ந்' என்பன பிறக்கின்றன. கீழ்வாய் இதழ் மேல்வாய்ப் பல்லுடன் சேருமிடத்து 'வ்' பிறக்கும். மேல்வாய்ப் பற்களுக்கு அருகிலுள்ள முன்னண்ணத்துடன் நாவின் சேர்க்கையால் 'ல்', 'ர்', 'ன்', 'ற்' ஆகியன பிறக்கின்றன. இடையண்ணத்துடன் நா சேருமிடத்து 'ச்', 'ஞ்', 'ட்', 'ண்', 'ள்', 'ழ்' ஆகியன பிறக்கின்றன. கடையண்ணத்துடன் அடிநா சேருமிடத்து 'க்', 'ங்' பிறக்கின்றன. மேல்வாயிலுள்ள இரு தாடைகளிலுமுள்ள இடைவரிசைப் பற்களுடன் நாவின் இருபக்க முனைகளும் சேரும்போது 'ய்' பிறக்கின்றது. இவ்வாறு மெய்யொலிகள் பிறக்கின்ற இடத்தினைப் பின்வருமாறு வரிசைப்படுத்திக் காட்டலாம் :

இதழ்	:	ப், ம்
பல்	:	த், ந், வ்
முன்னண்ணம்	:	ல், ர், ன், ற்
இடையண்ணம்	:	ச், ஞ், ட், ண், ள், ழ்
கடையண்ணம்	:	க், ங்
இடைப்பல்	:	ய்

இனி, மெய்யொலிகள் பிறக்கின்ற தன்மையினை நோக்கலாம்.

(1) மெய்யெழுத்துக்களிற் சிலவற்றை உச்சரிக்கும் போது எமது குரல்வளையிலுள்ள ஒலித்தசைகள் (vocal cords) அதிர்வடைகின்றன. அவ்வாறு, ஒலித்தசைகள் அதிர்வடையாமல், சுவாசப்பையிலிருந்து வெளியேறும் காற்று சிறிதுநேரம் தொண்டையில் தடைப்பட்டு வெளிச்செல்லுமிடத்துச் சில ஒலிகள் பிறக்கின்றன. அவற்றை வெடிப்பொலிகள் (plosives) அல்லது தடையொலிகள் (stops) என்பர் ஒவியியலார். தமிழிலுள்ள 'க்', 'ச்', 'த்', 'ட்', 'ப்', 'ற்' ஆகியனவற்றை இவ்வொலிகளைப் பிரதிபலிக்கும் ஒலிகளாக வகைப்படுத்தலாம். தமிழிலுள்ள ஏனைய எழுத்துக்களின் ஒலிகள் ஒலித்தசைகள் அதிர்வுறப் பிறக்கின்றனவாகும்.

(2) மெய்யெழுத்துக்களுட் பெரும்பாலானவற்றை உச்சரிக்கும்பொழுது, சுவாசப்பையிலிருந்து வரும் காற்று வாயினூலேயே வெளிச்செல்லும். ஆனால், சில மெய்யெழுத்துக்களை உச்சரிக்கும் போது, அக்காற்று மூக்கின் வழியாக வெளியேறுகின்றது. இவ்வாறு பிறப்பனவற்றை மூக்கொலிகள் (nasals) என்பர். தமிழில் 'ங்', 'ஞ்', 'ண்', 'ந்', 'ம்', 'ன்' ஆகியன மூக்கொலிகளாகும்.

(3) சில எழுத்துக்களை உச்சரிக்கும்போது வாயினூலே வெளியேறும் காற்றுத் தடைப்பட்டு வெளியேறுகிறது. நாவின் நுனி மேலண்ணத்திலே தொட்டுத் தடையேற்படுத்த, காற்றுப் பிரிந்து நாக்கின் இரு பக்கங்களாலும் வெளியேறும். இவ்வாறு பிறக்கும் ஒலிகளை பிரிவளி அல்லது மருங்கொலிகள் (laterals) என்பர் தமிழில் 'ல்', 'ள்' 'ழ்' ஆகியன மருங்கொலிகளாகும்.

RangaRakes tamilnavarasam.com

(4) சில எழுத்துக்களை உச்சரிக்கும்போது, நா மேலே கிழம்பி, பின்னுக்கு மடிந்து அண்ணத்தைத் தொட்டு விழுகின்றது. இவ்வாறு பிறப்பன வற்றை நாமடி ஒலிகள் (retroflexes) என்பர். தமிழில் 'ட்', 'ண்', 'ள்' என்பன நாமடியொலிகளாகும்.

(5) நாநுனி மேல்வாய்ப் பல்லின் அடியில் (முன்வண் ணம்) ஒரு தடவை ஒற்றி கீழே விழும்படி உச் சரிக்கும்போது தட்டொலி (tap) பிறக்கின்றது. தமிழில், 'ர்' பிரதிபலிக்கும் ஒலி இத்தகையதே யாகும்.

(6) நாநுனி மேல்வாய்ப் பல்லின் அடியில் ஒரு தட வைக்கு மேலாக ஒற்றிக் கீழே விழும்படி உச்சரிக்கும் போது ஆடொலி (trill) பிறக்கின்றது. தமிழில் பற என்னுஞ் சொல்லிலே இடம்பெறும் 'ற'கரம் இவ்வாறுதான் உச்சரிக்கப்படுகின்றது.

(7) மேற்குறிப்பிட்ட நாமடி ஒலி பிறக்கும்போது சிறிது உரசலுடன் பிறப்பின் அது நாமடி உரசொலி (retroflex fricative) எனப்படும். தமிழிலுள்ள 'ழ்' இத்தகைய ஒலியாக விவரணஞ் செய்யலாம்.

(8) மெய்யொலிகளுக்கேற்படும் தடை உயிரொலிகளுக் கேற்படுவதில்லை. உயிரொலிகள் பிறக்கும்போது நிறையோசைத் தன்மை (sonorance) இருக்கும். மெய்யொலிகளிலே இத்தகைய நிறையோசைத் தன்மை ஓரளவு கொண்டமைவனவற்றை அரை யுயிர்கள் (semi-vowels) என்பர். தமிழில் 'ய்', 'வ்' ஆகியன அரையுயிர்களாகும்.

தமிழ் எழுத்துக்களை உச்சரிக்கும்போது மேற்காட்டிய பண்புகளில் எவை அமைந்து கிடக்கின்றன என்பதைப் பின்வரும் அட்டவணைமூலம் விளக்கலாம் :



RangaRakes tamilnavarasam.com

மேற்காட்டிய அட்டவணையில் இடமிருந்து வலமாக மெய்யெழுத்துக்கள் கொடுக்கப்பட்டுள்ளன மேலிருந்து கீழாக மெய்யெழுத்துக்களின் உச்சரிப்புகளுக்குரிய பண்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. இப்பண்புகள் ஒலிகள் பிறக்கும் இடம், தன்மை ஆகியனவற்றை உள்ளடக்கியுள்ளன. ஒவ்வொரு எழுத்தின் பிறப்புக்குரிய பண்புகளும் + எனும் அடையாளத்தினூற் குறிக்கப்பட்டுள்ளன. உதாரணமாக, 'ட்' எனும் மெய்யெழுத்தின் உச்சரிப்புப் பண்புகளாக இடையண்ணம், தடை, நாமடி என்பன குறிக்கப்பட்டுள்ளன. இவ்வெழுத்தின் ஒலிப் பிறப்பின் இடம் இடையண்ணமாகவும், அதன் பிறப்புத்தன்மைகள் தடையொலியுடைமையாகவும் நாமடியுடைமையாகவும் அமைகின்றன. இவ்வாறே ஏனையவற்றையும் நோக்கியுணரலாம்.

தமிழ் எழுத்துக்கள் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் மேற்காட்டிய உச்சரிப்புக்களையுடையனவாக அமையுமெனக் கூறமுடியாது. உதாரணமாகத் தடையொலிகள் அல்லது வெடிப்பொலிகள் எனக் கொள்ளப்படும் 'க்', 'ச்', 'ட்', 'த்', 'ப்' ஆகியன தத்தம் மூக்கொலிகளைத் தொடர்ந்து இடம்பெறுமிடத்து அவை ஒலித்தசை அதிர்வுடைய, அதாவது ஒலிப்புடை ஒலிகளாக (voiced stops) அமைந்து விடுகின்றன. சங்கு, பஞ்சு, துண்டு, பந்து, கம்பு என்னுஞ் சொற்களில் இறுதியிலே இடம்பெறும் வெடிப்பொலிகளே இவ்வாறு ஒலிப்புடை ஒலிகளாக அமைந்து வீடுகின்றன. இவ்வாறான பல நுண்ணிய உச்சரிப்புப் பண்புகளை நாம் தமிழ் எழுத்துக்களை உச்சரிக்கும்போது அவதானிக்க முடிகின்றது. ஆனால் அவற்றையெல்லாம் தமிழ் எழுத்துக்களினூலே எழுதிக்காட்ட முடியாது. உலக ஒலியியற் சங்கத்தின் குறியீட்டெழுத்துக்களாலேயே அவற்றை எழுதிக் காட்ட முடியும்.

2·3. முதலெழுத்தும் சார்பெழுத்தும்

தமிழ் எழுத்துக்களை முதல் எழுத்துக்கள், சார்பெழுத்துக்கள் என முதன்முதல் வகைப்படுத்தியவர் நன்னூலாரே யாவர். அவருடைய சூத்திரம் (58) :

மொழிமுதற் காரண மாமணுத் திரளொலி
எழுத்தது முதல்சார் பெனவிரு வகைத்தே

என அப்பாகுபாட்டினை எடுத்துக் கூறுகின்றது. தமிழ் எழுத்துக்கள் பற்றிய இப்பாகுபாட்டினைத் தொல்காப்பியரும் மேற்கொண்டுள்ளார் எனவே கருதப்பட்டு வந்துள்ளது. தொல்காப்பியருடைய முதற் சூத்திரம்,

எழுத்தெனப்படுவ
அகரமுத
னகர விறுவாய் முப்பஃ தென்ப
சார்ந்துவரன் மரபின் மூன்றலங் கடையே

என்றே அமைகின்றது. இச்சூத்திரத்தாலே தொல்காப்பியர் தமிழ் எழுத்துக்களின் தொகை கூறினாரேயன்றி, முதல்—சார்பு என்ற வகை கூறினாரல்லர். நச்சினார்க்கினியர் இச்சூத்திரத்துக்குக் கூறிய உரையில்,

'எழுத்து இனத்தென்றலைத் தொகை வகை விரியான் உணர்க. முப்பத்து மூன்றென்பது தொகை. உயிர் பன்னிரண்டும் உடம்பு பதினெட்டுஞ் சார்பிற்றோற்றம் மூன்றும் அதன் வகை. அளபெடை யேழும் உயிர்மெய் யிருநூற்றொருபத்தாறும் அவற்றோடுங் கூட்டி இருநூற்றைம்பத்தாறெனல் விரி.'

என்னும் பகுதியிலே இச்சூத்திரம் வகை கூறுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதிலேகூட தொல்காப்பியர் முதல்—சார்பு என்னும் வகை கூறினாரென நச்சினார்க்கினியர் குறிப்பிடவில்லை. அப்படியானால் தொல்காப்பியருடைய சார்புக் கோட்பாடு என்ன ?

தொல்காப்பியரின் சார்பு எழுத்துக்கள் நவீன மொழியியலார் குறிப்பிடும் ஒலியன் (phoneme) வகையைச் சார்ந்ததா ? அன்றேல், மாற்றொலி (allophone) வகையைச் சார்ந்ததா ? தொல்காப்பியர் குறிப்பிட்ட சார்பெழுத்துக்களாகிய குற்றியலுகரம், குற்றியலிகரம், ஆய்தம் என்னும் மூன்றும் ஒலியன்கள் அல்ல என அறுதியிட்டுக் கூறும்

RangaRakes tamilnavarasam.com

தெ. பொ. மீனுட்சிசுந்தரன் ''இவை முன்னரே விளக்கப் பெற்ற ஒலியன்களின் 'இடச்சார்பாக மாறும் மாற் றொலிகளே' (positional variants) ஆகும்..... இக்கால மொழியியற் கலைச்சொல்லை ஆளுவதாயின், இவற்றை 'மாற்றொலிகள்' (allophones) என்று குறிப்பிடவேண்டும்.'' எனக் கூறிச் செல்கின்றார்.[15] தொல்காப்பியரின் சார் பெழுத்துக்கள் உண்மையிலேயே மாற்றொலிகளா? ஒரு மொழியிலே காணப்படும் ஒலியன்கள் அம்மொழியின் சொற்பொருள் மாற்றங்களுக்குக் காரணங்களாகின்றன. ஒரு மொழியின் அடிப்படை உறுப்புக்களாக அமைபவை ஒலியன்களே. படம், பதம் என்னும் இரண்டு சொற்களை வேறுபடுத்துவன ட், த் என்னும் ஒலியன்களாகும். இந்த வகையில் தொல்காப்பியர் குறிப்பிட்ட அகரமுதல் ஔகார ஈறுகிய உயிரெழுத்துக்களும், ககரமுதல் னகர ஈறுகிய மெய்யெழுத்துக்களும் தமிழ்மொழியின் ஒலியன்களே என்பதில் எவருக்குங் கருத்து வேறுபாடில்லை. ஆனால், அவர் கூறிய குறுகிய இகர உகரங்களும் ஆய்தமும் ஒலியன்களாம் என்பதிலேதான் கருத்து வேறுபாடுண்டு. தெ. பொ. மீனுட்சிசுந்தரன் அவை மாற்றொலிகள் என்கிறார். மாற் றொலிகள் என்றால் என்ன? கண், மகன் என்னும் இரு சொற்களிலே ககர ஒலியைக் குறிக்கும் க் எழுத்து இடம் பெறுகின்றன. அவ்விரண்டினையும் நாம் ஒரே மாதிரியாக உச்சரிப்பதில்லையே. கண் என்பதிலுள்ள ககரவொலி ஒலிப் பில் வெடிப்பொலியாக (voiceless plosive) ஒலிக்க, மகன் என்பதிலுள்ள ககரவொலி 'ஹ' எனும் ஒலிப்பில் உர சொலியாக (voiceless fricative) ஒலிக்கின்றது. இவை யிரண்டும் ககரத்தின் மாற்றொலிகளாகக் கொள்ளப்படும். இந்த அடிப்படையில் உரை இகரங்களின் மாற்றொலிகளாக முறையே குற்றியலுகரமும் குற்றியலிகரமும், இரட்டித்த அல்லது நெடில் மெய்யொலியின் மாற்று வடிவமாக ஆய்தமும் தெ. பொ. மீனுட்சிசுந்தரனால் கொள்ளப்பட்டன. வேலுப்பிள்ளை இவ்விடயம் பற்றித் தன்னுள் முரண்பட்ட கருத்தினைத் தெரிவிக்கின்றார். அவர் மாற்றொலி, சார் பொலி, துணையொலி என்னும் மூன்று வகையான தொடர்களை உபயோகித்துள்ளார். முதலில் இவை மாற்றொலி அல்ல எனக் கூறிவிட்டுப் பின்னர் குற்றிய

லுகரம் பொருட்புலப்பாட்டுக்கு அடிப்படையானதல்லவென மறுத்து முரண்படுகின்றார். அவருடைய கருத்தினை அப் படியே இங்கு தருதல் பொருத்தமென எண்ணுகிறேன். குற்றியலுகரம் பற்றி அவர் கூறுமிடத்து,

> 'குற்றியலுகரத்துக்கு இதழ்குவி முயற்சியில்லை. முற்றியலுகரத்திற்கு அந்த முயற்சியுண்டு. இதுதான் நச்சினார்க்கினியர் இவற்றுக்கிடையில் சுட்டும் வேறு பாடு. குற்றியலுகரம் ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் மட்டும் வரும். இந்த இரண்டு காரணங்களால், இது மாற்றொலியெனலாம். ஆனால் தொல்காப்பியர் மாற் றொலி என்ற பொருளில் இதனைச் சார்பொலி எனக் கூறவில்லையென்பது ஏனைய இரண்டும் அவ்வாறின்மை யாற் புலப்படும். வன்றொடர், மென்றொடர், உயிர்த் தொடர், நெடிற்றொடர், ஆய்தத்தொடர், இடைத் தொடர் என்று கூறப்படுகின்ற பல தொடர்களில், இது வல்லெழுத்தையூர்ந்து துணையொலியாக வருகிறது. இது வருமொழியில் மெய் வரும்பொழுது நிலைபெறு கிறது; உயிர் வரும்பொழுது, மறைந்துவிடுகிறது. அதனால், இந்த உகரம் ஒலித்துணையாக வந்ததேயன்றிப் பொருட்புலப்பாட்டிற்கு அடிப்படை அன்று எனலாம்'[16]

என்று குறிப்பிட்டுச் செல்கின்றார். வேலுப்பிள்ளையின்படி தொல்காப்பியருடைய சார்பெழுத்துக்கள் ஒலியன்களுமல்ல; மாற்றொலிகளுமல்ல; அவை ஒலித்துணைகளாகும் ஒலித் துணைக்கும் மாற்றொலிக்குமிடையே அவர் என்ன வேறுபாடு காண்கிறார் என்பதுபற்றி எமக்குத் தெரியவில்லை; அவர் விளக்கவுமில்லை.

தமிழிற் சார்பெழுத்துக்களுடைய வரலாற்றினை ஆராய்ந்த C. R. சங்கரனும் R. M. சுந்தரமும் தொல்காப் பியர் கூறிய சார்பெழுத்துக்கள் மூன்றும் ஒலியன்களே எனக் கூறி. அவை பிறக்கின்ற இடங்கள் உயிரினையும் மெய் யினையும் சார்ந்திருப்பதால், அவை 'சார்ந்து வரல் மரபின்' எனத் தொல்காப்பியராலே கூறவேண்டியேற்பட்டது எனக் குறிப்பிடுவர்.[17] இவ்விருவரும் தம்முடைய கருத்தினைத் தக்க ஆதாரங்களுடன் வெளியிட்டுள்ளனர்.

RangaRakes tamilnavarasam.com

தொல்காப்பியரின்படி சார்பெழுத்துக்கள் மூன்றும் பிறக்கும் இடத்தினுல் மாத்திரம் சார்தல் தன்மையுடையனவேயன்றி, வடிவினுலும் ஒலித்தன்மையினுலும் தனித்துவமுடையனவாகும்.

சார்ந்துவரி னல்லது தமக்கியல் பிலவெனத்
தேர்ந்துவெளிப் படுத்த வேனை மூன்றுந்
தத்தஞ் சார்பிற் பிறப்பொடு சிவணி
யொத்த காட்சியிற் றம்மியல் பியலும்[18]

என்னுஞ் சூத்திரம் இதனை வலியுறுத்தும். அத்துடன் இம் மூன்று எழுத்துக்களுக்கும் தனித்துவமான வரிவடிவமும் தொல்காப்பியர் கூறியுள்ளார். அவருடைய,

அவைதாங்
குற்றிய லிகரங் குற்றிய லுகர
மாய்தமென்ற
முப்பாற் புள்ளியு மெழுத்தோ ரன்ன

என்னுஞ் சூத்திரம் குற்றியலிகரமும் குற்றியலுகரமும் தொல்காப்பியர்காலத்திலே புள்ளிபெற்று வழங்கின எனவும், ஆய்தம் புள்ளியாகவே அமைந்ததெனவும் கொள்ள இடமுண்டு. பேராசிரியர், சிவஞான முனிவர், சங்கயாப்புக்காரர் யாவரும் இம்மூன்றும் புள்ளியெழுத்துக்களென்றே கூறுவர். நச்சினார்க்கினியர் தொல்காப்பியச் சூத்திரத்தின் 'முப்பாற் புள்ளியு' மென்ற தொடர் ஆய்தத்தை மாத்திரமே குறிக்கின்றதெனக்கொண்டு 'ஆய்தமென்ற ஓசைதான் அடுப்புக் கூட்டுப்போல மூன்று புள்ளி வடிவிற்றென்பது உணர்த்தற்கு ஆய்தமென்ற முப்பாற் புள்ளியுமென்றூர்' என உரை வகுப்பது பொருத்தமற்றதாயுள்ளது. தொல்காப்பியர் அவ்வாறு கருதியிருந்தால் ''குற்றியலிகரமும் குற்றியலுகரமு மாய்த மென்ற முப்பாற் புள்ளியு மெழுத்தோரன்ன'' என்று கூறியிருப்பார். தொல்காப்பியர் 'முப்பாற் புள்ளி' என்பது மூன்று சார்பெழுத்துக்களுக்கும் சேரக்கூடிய வகையிலேயே சூத்திரஞ் செய்துள்ளார். அத்துடன் தொல்காப்பியர் எழுத்ததிகாரம் 104ஆஞ் சூத்திரத்தில் 'மெய்யீ றெல்லாம்

புள்ளியொடு நிலையல்' என்று கூறிவிட்டு, அடுத்த சூத்திரத்தில் 'குற்றிய லுகரமு மற்றென மொழிப' என்று கூறுவதினுல், குற்றியலுகரம் புள்ளி பெறும் நிலை தெளிவாக்கப்பட்டுள்ளது

இனி, ஆய்தத்தினுடைய வடிவம் என்ன என்பதை நோக்கவேண்டும். அது புள்ளி வடிவமாகவே இருந்தது என்பதற்குப் பல சான்றுகளைக் காட்டலாம். தொல்காப்பிய எழுத்ததிகார 38 ஆம் சூத்திரம்,

குறியதன் முன்ன ராய்தப் புள்ளி
யுயிரொடு புணர்ந்த வல்லாறன் மிசைத்தே

என்றமைகின்றது. 'ஆய்தப் புள்ளி' என்றே தொல்காப்பியர் கூறுவதை நோக்குக. மெய்யெழுத்துக்கள் புள்ளியெழுத்துக்கள் எனப்பட்டன. மெய்யெழுத்துக்களுள் ஒன்றெனக் கூறப்படாத ஆய்தம் தனியான ஒரு புள்ளியாலேயே வழங்கப் பட்டிருக்கவேண்டும். இவ்விடத்திற் புள்ளியிடும் வழக்கம் பற்றிய வரலாற்றினை நோக்குதல் அவசியம்.

இந்தியாவில் ஆரியபட்டருடைய காலத்திலே அளவையிற் குறையும் இடங்களிலே, அவ்வாறு குறையும் இலக்கத்தின் அல்லது வடிவத்தின்மேலே புள்ளியிடும் வழக்கம் இருந்து வந்தது. இவ்வழக்கம் பிற்காலத்திலே கல்வெட்டெழுதுவோராற் பின்பற்றப்பட்டது. கற்களிலே எழுத்துக்களைப் பொறிக்குமிடத்து, தேவையற்ற ஒன்று அல்லது பல எழுத்துக்களை நீக்கி வாசகர்கள் வாசிப்பதற்காக, அவ்வாறு நீக்கப்படவேண்டிய எழுத்துகளுக்கு மேலே புள்ளியிடுதல் வழக்கமாகும்.[19] எனவே ஒன்றை நீக்குதற்கு அல்லது அளவின் குறைவினைக் காட்டுதற்குப் புள்ளியிடும் வழக்கம் இருந்து வந்துள்ளதென்பதை இவற்றின் மூலம் உணருகின்றோம். தொல்காப்பியர் புள்ளி பற்றிக் கூறிய சூத்திரங்களையெல்லாம் நோக்குமிடத்து மாத்திரையிற் குறைவுற்ற நிலையினை எடுத்துக்காட்டவே புள்ளி பயன்பட்டிருப்பதைக் காணக்கூடியதாயுள்ளது. இவ்வாறமைந்த புள்ளிகளெல்லாம் சில வரிவடிவங்களுடனேயே அமைகின்றன. ஆனுல், ஆய்தம் மட்டும் எந்த வரிவடிவத்துடனும் தொடர்புறுது

RangaRakes tamilnavarasam.com

தனிப் புள்ளியாகவே அமைந்துள்ளது. இது பொருள் வேறுபடுத்தும் ஒலியன்போல, ஓர் எழுத்தை நீக்கிவிட்டு அவ்விடத்திலே நின்று இசைக்கும் புள்ளியாகவே இருந்திருக்கவேண்டும். ஆய்தம் இடம்பெறும் வரன் முறையை முதலில் நோக்குவோம். அது என்பதன் பண்டைய வடிவம் அஃது ஆகும். இது அவ் + து என்பதன் விளைவு எனக் கூறுவர். ஆனால் அவ் + து புணரின் அத்து எனவே வரவேண்டும். இது போலவே, அல் + நீண, அற்றீண எனவும், முள் + நீது முட்டீது எனவும் புணர வேண்டும். இவ்வாறு அவை அமையின் வேறு பொருளையும் அவை பயக்கலாம் என்பதற்காக அத்து, அற்றீண, முட்டீது என்னுஞ் சொற்களிலே முறையே த், ற், ட் ஆகிய ஒலிகள் நீக்கப்பட்டு, அவற்றின் நீக்கத்தைக் குறிக்கப் புள்ளிகள் இடப்பட்டிருக்கவேண்டும். அவ்வாறு அமையும் புள்ளி வெறும் பூஜ்ஜியமாகவன்றி பொருள் வேறுபடுத்தும் ஒலியனாக அமைந்துவிடுகின்றது. அவ்வாறு பொருள்வேறுபடுவதைப் பின்வரும்இணைகள் காட்டுகின்றன:

அத்து : அ0து

அற்றீண : அ0றீண

முட்டீது : மு0டீது

மேற்கூறிய கருத்துக்களைத் தொகுது நோக்கின்,

(1) தொல்காப்பியர் சார்பெழுத்துக்கள் மூன்றினையும் ஒலியன்களாகவே கொண்டார்

(2) அம்மூன்றும் தனித்தனி வரிவடிவங்கள் கொண்ட எழுத்துக்கள்

என்னும் முடிபுகளைப் பெறக்கூடியதாயுள்ளது. ஆகவே சார்பெழுத்துக்கள் தொல்காப்பியர் காலத்திலே மாற்றொலிகளாயிருந்தன எனக் கூறமுடியாது.

நன்னூலாருடைய சார்பெழுத்துக் கோட்பாடு தொல்காப்பியரினின்றும் வேறுபட்டதாக அமைந்தது. நன்னூலாரின்படி முதலெழுத்துக்களுள் யாதாயினும் ஒன்றன் மாத்திரை அளவில் அல்லது வடிவத்தில் மாற்றமேற்படின், அது சார்பெழுத்தாகும்.

உயிர்மெய் யாய்த முயிரள பொற்றள
மஃகிய இஉஒள மஃகான்
தனிநிலை பத்துஞ் சார்பெழுத் தாகும்

என நன்னூல் (சூ. 60) சார்பெழுத்துக்களின் வகையினைக் கூறுகின்றது. இவற்றுள் முதலெழுத்தினின்று மாத்திரை அளவிலும், வடிவிலும் வேறுபடத் தோன்றுவனவற்றைப் பின்வருமாறு பாகுபாடு செய்யலாம்:

1. மாத்திரையிற் குறைவுற்றன:

குற்றியலிகரம்
குற்றியலுகரம்
ஐகாரக்குறுக்கம்
ஔகாரக் குறுக்கம்
ஆய்தம்
ஆய்தக் குறுக்கம்

2. மாத்திரையிற் கூடியொலிப்பன:

உயிரளபெடை
ஒற்றளபெடை

3. வடிவ மாற்றம்:

உயிர்மெய்

நன்னூலார் இவற்றை ஒலியன்களாகக் கருதினரென்றே மாற்றொலிகளாகக் கருதினரென்றே கூறுதற்கில்லை இவை சார்பொலிகள் எனக் கருதினரெனின், உயிர்மெய் அதனுள் எவ்வகையிலும் அடங்கமுடியாது. சார்பெழுத்துக்கள் என்ன என்பது பற்றிய தெளிவான கோட்பாடு எதுவும் நன்னூலாருக்கு இருந்ததாயில்லை. அவர் கூறிய சார்பெழுத்துக்களை ஆதாரமாகக் கொண்டு, அவருடைய கோட்பாடு இவ்வாறாக இருக்கலாம் என ஊகித்தே கூறுகின்றோம்.

முதல் எழுத்தில் யாதேனும் மாற்றமேற்படின், அதுவே சார்பெழுத்து என்னுங் கருத்தினையே வீரசோழியம், நேமிநாதம், நன்னூல், இலக்கணவிளக்கம், பிரயோகவிவேகம்

RangaRakes tamilnavarasam.com

ஆகியவற்றின் ஆசிரியர்கள் கருதினர். இக்கருத்தினைச் சிவஞான முனிவர் தக்க முறையிலே தனது தொல்காப்பிய முதற்சூத்திர விருத்தியிலே மறுத்துரைத்துள்ளார். தொல்காப்பியருடைய சார்புக் கோட்பாடே பொருத்தமானதெனவும் நிறுவியுள்ளார். சார்பெழுத்துப் பற்றித் தமிழிலக்கணகாரரிடையே காணப்பட்ட தவறான கருத்துக்களைக் கண்டும், அத்தகைய பாகுபாடு இக்காலத் தமிழ் வழக்குக்குப் பொருந்தாமையினையும் உணர்ந்து ஆறுமுகநாவலர் முதலெழுத்து—சார்பெழுத்து என்னும் பாகுபாட்டினைத் தன்னுடைய இலக்கணச் சுருக்கத்திலே மேற்கொள்ளாது விட்டார்.

3. சில எழுத்துக்களின் விசேட செயற்பாடுகள்

தமிழ் மொழியிலே சில எழுத்துக்களைச் சுட்டெழுத்துக்களென்றும், சிலவற்றை வினாவெழுத்துக்களென்றும் தமிழ் இலக்கணகாரராலே பாகுபாடு செய்யப்பட்டுள்ளன. பின்வரும் உதாரணங்களை நோக்குக :-

அவன், இவன், உவன்
அது, இது, உது
அவ்வீடு, இவ்வீடு, உவ்வீடு

இவற்றிலே அ, இ, உ என்னும் மூன்று எழுத்துக்களும் மொழி முதலிலே இடம்பெற்றுள்ளன. உயர்திணை சார்ந்தனவற்றை அல்லது அஃறிணை சார்ந்தனவற்றைச் சுட்டிக் கூறுதற்கு இவை பயன்படுத்தப்பட்டுள்ளன. இதனால், இம்மூன்று எழுத்துக்களையும் சுட்டெழுத்துக்கள் என இலக்கணகாரர் பெயரிட்டு வகைப்படுத்தினர். சுட்டெழுத்துச் சொல்லுடன் பிரிக்க முடியாதபடி சேர்ந்து நிற்கும் நிலையினையும், சொல்லுடன் பிரிக்கக் கூடியதாகச் சேர்ந்து நிற்கும் நிலையினையும் கண்டு சிவஞானமுனிவர் அவற்றை முறையே அகச்சுட்டு என்றும் புறச்சுட்டு என்றும் நுண்ணிதான பாகுபாட்டினை மேற்கொண்டார். அவன், அது, இவள் போன்ற சொற்களிலே இடம்பெறுவன அகச்சுட்டுக்களாகும். அவ்வீடு, இம்மனிதன், உவ்வளவு என்பவற்றிலே இடம்பெறுவன புறச்சுட்டுக்களாகும்.

சுட்டெழுத்துக்களாலாகும் சுட்டுப்பெயர்கள் தமிழ் மொழியில் அமைந்திருப்பனபோல், உலகிலுள்ள வேறு சில மொழிகளிலும் காணப்படுகின்றன. உதாரணத்துக்குத் துருக்கி மொழியினையும் லத்தீன் மொழியினையும் குறிப்பிடலாம் :

துருக்கி :	bu	இ	su	உ	O	அ
லத்தீன் :	hic		iste		ille	

சுட்டுப்பெயர்களின் பயன் என்ன ? நாம் உரையாடும் போது, பேசுபவர் 'நான்' ஆகவும், கேட்பவர் 'நீ' ஆகவும் அமைவர். ஆகவே பேசுபவர் தன்மையிலும், கேட்பவர் முன்னிலையிலும் குறிப்பிடப்படுவர். பொதுவாக, பேசுபவரும் கேட்பவரும் உரையாடுமிடத்துக் காலமும் இடமும் ஒன்றுக அமையலாம் (சில விதிவிலக்கான அசாதாரண சந்தர்ப்பங்களும் உண்டு : தானே தனக்குள் பேசிக் கொள்ளுதல், தொலைபேசியிற் பேசுபொழுது கேட்பவரும் பேசுபவரும் ஒரேயிடத்தில் இல்லாதிருத்தல் போன்றன.) ஆனால், மூன்றுமவர், அதாவது படர்க்கையிலிருப்பவர் சில சந்தர்ப்பங்களிற் பேசுபவருக்கு அண்மையிலும், வேறு சில சந்தர்ப்பங்களிற் கேட்பவருக்கு அண்மையிலும். இன்னுஞ் சில சந்தர்ப்பங்களிற் பேசுபவர்—கேட்பவர் ஆகிய இருவருகுமே சேய்மையிலும் இருக்கலாம். ஆகவே படர்க்கையில் இம் மூவகை வேறுபாடுகளையும் நுண்ணிதாக உணர்த்தச் சுட்டுப் பெயர்கள் பெரிதும் பயன்படுகின்றன. இந்த ஆள் என்பது பேசுபவருக்கு அருகிலிருப்பவரையும், உந்த ஆள் என்பது கேட்பவருக்கு அருகிலிருப்பவரையும், அந்த ஆள் என்பது பேசுபவர் கேட்பவர் இருவருக்குந் தூரத்திலிருப்பவரையும் குறிக்கின்றன. பேசுபவர் சார்பாக நோக்குமிடத்து, உ, அ என்பன சேய்மையைக் குறிப்பனவாகவும், இ அண்மையைக் குறிப்பனவாகவும் கொள்ளலாம். இந்த வகையிலே அ, உ என்பன சேய்மைச் சுட்டுக்கள் என்றும், இ என்பது அண்மைச் சுட்டு என்றும் வகைப்படுத்தலாம்.

இ, உ, அ என்னும் மூன்று சுட்டெழுத்துக்களுடன் எ என்னும் எழுத்தினையும் சுட்டெழுத்தாகக் கூறுகின்றார் நச்சினார்க்கினியர். தொல்காப்பிய எழுத்ததிகார 31ஆம்

RangaRakes tamilnavarasam.com

சூத்திர உரையில், 'தன்னின முடித்தல் என்பதனுள் எகரம் வினுப்பொருள் உணர்த்தலுங் கொள்க' என்று நச்சினர்க் கினியர் கூறி எப்பொருள் என்னும் உதாரணத்தையுங் கொடுத்துள்ளார். சுட்டெழுத்துக்களுக்கு அடிப்படையாக அமையும் 'பேசுபவர்-கேட்பவர்' தொடர்பு, 'கால-இட'த் தொடர்பு ஆகியவற்றினுக்கு அப்பாற்பட்டதாகவும், வினுப் பொருளை உணர்த்துவதாகவும் எ என்னுஞ் சுட்டெழுத்து அமைகின்றது. 'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும்...' என்னுந் தொடரிலும், 'எவன் ஒருவன்...' என்னுந் தொடரிலும் இடம்பெறும் எகரச் சுட்டினை இங்கு உதா ரணமாகக் காட்டலாம்.

தொல்காப்பியரோ நன்னூலாரோ தமது சூத்திரங்களில் எகரத்தைச் சுட்டாகக் கூறவில்லை. நச்சினர்க்கினியரே அவ்வாறு கொண்டார். தமிழ் இலக்கணகாரர் எவருமே எகரத்தைச் சுட்டாகக் கொள்ளவில்லை. நச்சினர்க்கினி யரைப் பின்பற்றிச் சுவாமி ஞானப்பிரகாசர் எகரத்தையுஞ் சுட்டாகக் கொள்ளவேண்டுமென வற்புறுத்துவர் :

> 'இடம்பற்றியனவாய், தமிழ் மக்களின் ஆதிப் பேச்சுக்களாய், எந் தமிழ்மொழிப் பரப்பு முழுதினுக் கும் மூலவேர்களாய் நின்ற சொற்கள் இலக்கணவா ரியரால் சுட்டுக்கள் என அழைக்கப்படுமவைகளாம். இச்சுட்டுக்கள் அ, இ, உ எனும் மூன்றுமே என்பது அன்னேர் மதமாயினும், யாம் எகரம் எனும் நான் காவதோர் சுட்டையும் அவற்றோடு சேர்த்தல் வேண்டும்.'[20]

'பேசுபவர் - கேட்பவர்' தொடர்பின் அடிப்படையிலே சுட்டெழுத்துக்களுக்கு விளக்கங் கண்டோம். சுவாமி ஞானப்பிரகாசர் இன்னெரு பரிமாண அடிப்படையிலே இச்சுட்டுக்களுக்கு விளக்கங் கொடுக்கின்றார் :

> 'அகரம் முதற்கண் அண்மையையும், உகரம் சேய்மையையும், இகரம் கீழுறுந் தன்மையையும், எகரம் மேலுறுந் தன்மையையும் சுட்டுகின்றனவா மென்பது பெறப்படும்.'[21]

அவருடைய விளக்கம் 'கால-இட'த் தொடர்பின் அடிப் படையிலே அமைகின்றது.

சுட்டுதல்போன்று வினுவுதலும் மனிதப் பேச்சிலே முக்கியத்துவமுடையது. உலகமொழிகளிலே வினு பல்வேறு வகையிலே உணர்த்தப்படுகின்றது. அவற்றைப் பின்வரு மாறு வகைப்படுத்தலாம் :

1. கூற்றுக அமைபையும் ஒரு வாக்கியத்தினை வினுவுந் தொனியிலே கூறுதல். இப்பண்பு பொதுவாக எல்லா மொழிகளிலுங் காணப்படுகின்றது.

2. தனித்தனி வினுச் சொற்களை உபயோகித்தல். உதாரணமாக, ஆங்கில மொழியில் what, why, when, where, who போன்றன வினுச்சொற்களாக அமைந்துள்ளதைக் காட்டலாம்.

3. வினு எழுத்துக்களை அல்லது உருபன்களைச் சொற் களுக்கு முன் அல்லது பின்னுக ஒட்டுதல். தமிழ், சிங்கள மொழிகள் இதற்கு உதாரணங்களாகும்.

   mal diyanawā-ta?

   பூ இருக்கின்றதா ?

   இங்கு -ta, ஆ, என்னும் வினு உருபன்கள் முறையே சிங்கள வாக்கியத்திலும் தமிழ் வாக்கி யத்திலும் சேர்க்கப்பட்டுள்ளன.

தமிழ் மொழியிலே வினுவினை உணர்த்துவதற்கென எ, ஏ, ஆ, ஓ, யா என்னும் எழுத்துக்கள் இலக்கணகாரராலே குறிப்பிடப்பட்டுள்ளன. இக்கால எழுத்து வழக்கிலே உபயோகப்படுத்தப்படும் வினுச்சொற்கள் சிலவற்றை உதா ரணமாகக் காட்டி, இவ்வினுவெழுத்துக்களின் பயன் பாட்டினை உணர்த்தலாம் :

எ : எவன், எங்கே, எது

ஏ : ஏன், ஏது, அவனே

RangaRakes tamilnavarasam.com

ஆ : அவனை, ஓடாதா

ஓ : அவனே, வந்தவனே

யா : யார், யாது

மேற்காட்டிய உதாரணங்களின்படி ஏ, யா இரண்டும் மொழிக்கு முதலிலும், ஆ, ஓ இரண்டும் மொழிக்கு இறுதியிலும், ஏ மொழி முதலிலும் இறுதியிலும் இடம் பெறுகின்றன. இவ்வரன்முறையை நன்னூலார் 67ஆவது சூத்திரத்தில்,

எயா முதலும் ஆஓ வீற்றும்
ஏயிரு வழியும் விஞவா கும்மே

என்று கூறியுள்ளார். இக்கால வழக்கில் ஆ மொழி முதலிலே ஆர் (யார் என்பதன் திரிபாக) என்னும் வினைச் சொல்லிலே இடம்பெறுகின்றது.

மொழி இறுதியிலே இடம்பெறும் வினை எழுத்துக்கள் ஒரு வாக்கியத்தில் வரக்கூடிய பல்வேறு அலகுகளுடன் வரக்கூடியனவாயமைகின்றன. உதாரணமாக,

செல்வி வெள்ளிக்கிழமை காலையில்
பாடசாலைக்குப் போனாள்

என்னும் வாக்கியத்திலே ஆ, ஏ, ஓ என்னும் வினைவெழுத்துக்கள் இடம்பெறும் வரன்முறை பின்வருமாறு அமையும்:

ஆ : செல்வியா வெள்ளிக்கிழமை காலையில்
பாடசாலைக்குப் போனாள் ?

செல்வி வெள்ளிக்கிழமையா காலையில்
பாடசாலைக்குப் போனாள் ?

செல்வி வெள்ளிக்கிழமை காலையிலா
பாடசாலைக்குப் போனாள் ?

செல்வி வெள்ளிக்கிழமை காலையில்
பாடசாலைக்கா போனாள் ?

செல்வி வெள்ளிக்கிழமை காலையில்
பாடசாலைக்குப் போனாளா ?

ஏ : செல்வியே வெள்ளிக்கிழமை காலையில்
பாடசாலைக்குப் போனாள் ?

செல்வி வெள்ளிக்கிழமையே காலையில்
பாடசாலைக்குப் போனாள் ?

செல்வி வெள்ளிக்கிழமை காலையிலே
பாடசாலைக்குப் போனாள் ?

செல்வி வெள்ளிக்கிழமை காலையில்
பாடசாலைக்கே போனாள் ?

செல்வி வெள்ளிக்கிழமை காலையில்
பாடசாலைக்குப் போனாளே ?

ஓ : செல்வியோ வெள்ளிக்கிழமை காலையில்
பாடசாலைக்குப் போனாள் ?

செல்வி வெள்ளிக்கிழமையோ காலையில்
பாடசாலைக்குப் போனாள் ?

செல்வி வெள்ளிக்கிழமை காலையிலோ
பாடசாலைக்குப் போனாள் ?

செல்வி வெள்ளிக்கிழமை காலையில்
பாடசாலைக்கோ போனாள் ?

செல்வி வெள்ளிக்கிழமை காலையில்
பாடசாலைக்குப் போனாளோ ?

முன்னர்க்காட்டிய உதாரண வாக்கியத்தில் எப்பகுதிக்கு அழுத்தங் கொடுக்க விரும்புகின்றோமோ, அதனுடன் வினைவெழுத்தினைச் சேர்க்கலாம். அவ்வாறு சேர்ப்பதன் மூலம் பொருள் மாற்றமடைகின்றது. ஐந்து சொற்கள் கொண்ட உதாரண வாக்கியத்திலே எச்சொல்லுடனும் வினைவெழுத்தினைச் சேர்க்கக் கூடியதாயுள்ளது. ஆனால், அவ்வாறு சேர்ப்பதன்மூலம் ஐந்து வேறுபட்ட வாக்கியங்கள் அமைகின்றன என்பதை மேற்காட்டிய உதாரணங்கள் நன்கு உணர்த்துகின்றன. எனினும், இத்தகைய வினைவெழுத்துக்கள் வாக்கியங்களிற் சிற்சில இடங்களிலே இடம்பெறமாட்டா என்பதனையும் இங்கு குறிப்பிடுதல்

RangaRakes tamilnavarasam.com

வேண்டும். உதாரணமாக, இன், உடைய, அது என்னும் வேற்றுமை உருபுகளையேற்ற சொற்களின் பின்னே வினா வெழுத்துக்கள் இடம்பெறமாட்டா.

அது அவனுடைய புத்தகம்
அவன் மரத்தின் கிளையை வெட்டினான்
அவன் மகளினது சொல்லைக் கேட்டான்

இவ்வாக்கியங்களிலே, அவனுடைய, மரத்தின், மகளினது என்னுஞ் சொற்கள் வினாவெழுத்துக்களை ஏற்கமாட்டா. இது போன்று, குறிப்பாக ஆகார வினாவெழுத்து இடம் பெறுத பல இடங்களை இக்காலத்தமிழ் என்னும் நூலில் 'வினா' என்னும் அதிகாரத்தில் முத்துச் சண்முகன் குறிப் பிட்டு விளக்கியுள்ளார்.[22]

உலக மொழிகளின் வினாவாக்கியங்களை ஆராய்ந்த ஒட்டோ ஜெஸ்பர்சன், அவற்றை இரண்டு வகைகளாகப் பாகுபாடு செய்கின்றார். 'ஆம்' அல்லது 'இல்லை' என்னும் மறுமொழியினை எதிர்பார்க்கும் வினாக்களை (**nexus — questions**) ஒரு வகையிலும், விளக்கமான மறுமொழியினை எதிர்பார்க்கும் வினாக்களை (**x — questions**) வேறொரு வகையிலும் அவர் அடக்குவர்.[23] தமிழ்மொழியிலும் சில வினாவெழுத்துக்கள் முதல் வகை வினாக்களை அமைக்கவும், வேறு சில வினாவெழுத்துக்கள் இரண்டாவது வகை வினாக் களையும் அமைக்க உதவுகின்றன. உதாரணமாக **அவன் வந்தானா?** என்னும் வினாவுக்கு 'ஆம் — இல்லை' மறு மொழியே எதிர்பார்க்கப்படுகின்றது. **ஏன் வந்தான்** என்னும் வினாவுக்கு 'விளக்க' மறுமொழியே எதிர்பார்க்கப்படுகின்றது. தமிழ் இலக்கணகாரர் கூறியுள்ள வினாவெழுத்துக்களுள் மொழியிறுதியிலே இடம்பெறுவன 'ஆம் — இல்லை' மறு மொழிக்குரிய வினாவாக்கியங்களையும், மொழிக்கு முதலில் இடம்பெறுவன 'விளக்க' மறுமொழிக்குரிய வாக்கியங்களை யும் ஆக்கவல்லன எனப் பொதுவாகக் கூறலாம்.

4. எழுத்து நிலைகள்

எந்த மொழியிலும் சொற்கள் ஒலியன்களுடைய சேர்க் கையினாலேயே அமைக்கப்படுகின்றன. இவ்வொலியன் களுடைய சேர்க்கை முறைக்கான விதிகள் அந்தந்த

மொழிக்கு ஏற்ற வகையிலே அமைந்துள்ளன. எழுத்து வழக்கினைப் பொறுத்தவரையில், எவ்வெவ்வெழுத்துக்கள் சொல்லாக்கத்துக்குச் சேருகின்றன என்பதில் தமிழ் மொழி யிற் சில ஒழுங்குகள் உண்டு. தமிழ் இலக்கணகாரர் சொற்களின் முதனிலைகள், இடைநிலைகள், இறுதிநிலைகள் பற்றிக் கூறுவதன்மூலம் அவ்வொழுங்குகளைக் குறிப்பிட் டுள்ளனர்.

ஒரு சொல்லின் முதலிலே நிற்கும் எழுத்தினையே முதனிலை எனத் தமிழ் இலக்கணகாரர் பெயரிட்டனர். சொல்லுக்கு முதனிலையில் வரும் எழுத்துக்கள் பற்றித் தொல்காப்பியரும் அவர் பின் வந்த இலக்கணகாரரும் சூத்திரஞ் செய்துள்ளனர். தொல்காப்பியர் சொல்லில் முதல்வராத எழுத்துக்கள் எனக் குறிப்பிட்டவை பல நன் னூலாருடைய காலத்தில் வழக்கில் வந்துவிட்டன. தொல் காப்பியர் இவைபற்றிக் கூறும் முதற் சூத்திரம் :

பன்னீ ருயிரு மொழிமுத லாகும்[24]

என்பதாகும். இச்சூத்திரத்தின்படி அகரம் தொடக்கம் ஔகாரம் ஈறுகவுள்ள பன்னிரண்டு உயிரெழுத்துக்களும் சொற்களிலே முதனிலைகளாக வரும். தொல்காப்பியருக்கும் நன்னூலாருக்கும் இதிற் கருத்து வேறுபாடில்லை.

முதனிலை தொடர்பாகத் தொல்காப்பியர் அடுத்துக் கூறுகின்ற ஒரு சூத்திரம் தமிழ்மொழியின் ஒரு குறிப்பிட்ட இயல்பினை எடுத்துக்காட்டுகின்றது. அச்சூத்திரம்,

உயிர்மெய் யல்லன மொழிமுத லாகா[25]

என்பதாகும். முதற் சூத்திரத்திற் கூறிய உயிர் எழுத்துக் களைப் போல உயிர்மெய் எழுத்துக்களும் மொழிக்கு முதனிலைகளாக வரும். அவ்வுயிர் மெய் எழுத்துக்கள் தவிர்ந்த ஏனைய எழுத்துக்கள் எவையுமே தமிழ்ச் சொற் களுக்கு முதனிலைகளாகமாட்டா என இச்சூத்திரம் வரை யறை செய்கின்றது. இது வரிவடிவம் தொடர்பான ஒரு சூத்திரமென்றே கூறவேண்டும். ஆங்கிலம் போன்ற மொழி களிற் காணப்படாத உயிர்மெய் என்றொரு வரிவடிவம்

RangaRakes tamilnavarasam.com

தமிழிலே அமைந்துள்ளது. உயிர் ஒலிகளுக்கும், மெய் ஒலிகளுக்கும் தனித்தனி அமைக்கப்பட்ட வரிவடிவங்களினின்று வேறுபட்டனவாக, ஆனால், அவை இரண்டினையும் இணைப்பனவாக உயிர்மெய் எழுத்துக்கள் அமைக்கப்பட்டன. உயிர்மெய் என்னுந் தொடர் உயிர் ஒலியையும் மெய் யொலியையும் இணைத்துக்காட்டும் வரிவடிவத்தைக் குறிக்கின்றது.

தமிழ்ச் சொற்களிலே மெய் எழுத்துக்களின் வரன் முறையை உயிர்மெய் எழுத்துக்கள் கட்டுப்படுத்துகின்றன. மெய் எழுத்து வடிவங்கள் மொழியிறுதியில் அப்படியே வழங்கப்படுகின்றன. கண், பால், மான், நெய் முதலியன உதாரணங்களாகும். மொழியிடையில், இரண்டு உயிரொலிகளுக்கிடையிலே மெய் வடிவம் இடம்பெறுவதில்லை. உதாரணமாக, அட்டி என எழுதாமல், அடி எனவே எழுதப்படும். மொழியிடையில், இரண்டு அல்லது மூன்று மெய்கள் இடம்பெறின், அவற்றுள் முறையே ஒன்று அல்லது இரண்டே மெய்வரிவடிவிலமையும். ஏனைய மெய்கள் உயிரோடு சேர்ந்து உயிர்மெய் வடிவங்களைப் பெறும். உதாரணமாக, அச்சம், ஈர்ப்பு என்னுஞ் சொற்களை எடுத்துக்கொள்வோம். முறையே அச்சம, ஈர்ப்உ என எழுதப்படாமல், முதற்சொல்லில் இரண்டாவது 'ச்' அகரத்துடன் சேர்ந்து ச ஆகவும், இரண்டாவது சொல்லில் மூன்றுவது மெய் வடிவாகிய 'ப்', உகரத்துடன் சேர்ந்து பு ஆகவும் எழுதப்படும். இவ்வாறே மொழி முதலிலும் மெய் வடிவம் எழுதப்படுவதில்லை. க்அண் என்பதற்குப் பதிலாக, கண் என்றே எழுதப்படும்.

இவ்வாறு மெய் வரிவடிவங்கள் சொற்களின் சிற்சில நிலைகளிலே எழுதப்படாமல் உயிர்மெய் எழுத்துக்கள் எழுதப்பட்டதன் நோக்கம் என்ன? இது எழுதுகருவிகளுடன் தொடர்பான நிலைப்பாடு எனவே கூறவேண்டியுள்ளது. கல்லிலும் ஓலையிலும் பிறவற்றிலும் எளிதிலே எழுத முடியாத அக்காலத்திலும், எழுதுஞ் சிரமத்தைக் குறைப்பதற்கு இது ஓர் உத்தியாக அமைந்திருக்கலாம். அவ்வுத்தி உயிர்மெய் எழுத்து உபயோகமாகும். நற்எட்டுஞ்ச ழ்இய்அன் (Netunceliyan) என்று 12 வரிவடிவங்களிலே

எழுதப்படவேண்டியதை உயிர்மெய் எழுத்துக்களின் உபயோகத்தினால், நெடுஞ்செழியன் என்று 9 வரிவடிவங்களிலே எழுதிவிடலாம். இவ்வாறு மெய் ஒலியையும் உயிர் ஒலியையும் சேர்த்துக் குறிப்பதற்குத் தனி வரிவடிவம் அமைக்கும் வழக்கம் இந்திய மொழிகளிலே காணப்படும் பண்பாகும். ஆனால், அவற்றுட் சில மொழிகளிலே (ஹிந்தி, உருது போன்றன) சொல்லின் முதனிலையில் மெய்யெழுத்துக்கள் இடம்பெறுகின்றன. தமிழ் மொழியிலோ, மெய்யெழுத்துக்கள் மொழி முதலில் இடம்பெறும் வழக்குத் தொல்காப்பியர் இலக்கணம் அமைப்பதற்குக் காரணமாயிருந்த மொழியமைப்பிற் காணப்படவில்லை. அதன் பின்னரும் தமிழ் மொழிக்கே உரிய சொற்களின் முதனிலையில் மெய்யெழுத்துக்கள் இடம்பெறவில்லை. ஆனால், இக்கால எழுத்து வழக்கிலே, குறிப்பாக நவீன ஆக்க இலக்கியங்களில் மெய்யெழுத்துக்கள் முதனிலையில் வரச் சொற்கள் பல கையாளப்படுகின்றன. உதாரணம்:

> 'சுரீரென சருமத்தை ஸ்பரிசித்து ஊடுருவும் உஷ்ணத்தை.....'[26]
>
> 'தூக்கியெறியப்பட்டு, ஸ்மரணை இழந்தான்.'[27]
>
> 'வேற்றுநிலைக் கொள்கையே இவர்களுடைய ஆராய்ச்சிக்கு அடிப்படையாகையால், ட்ரபட்ஸ்காய், வேற்று நிலைகளில் காணப்படுகின்ற வேறுபாடுகளை எல்லாம் விரிவாக விளக்குகிறார்.'[38]

ஸ்பரிசித்து, ஸ்மரணை, ட்ரபட்ஸ்காய் என்னுஞ் சொற்கள் முதனிலை மெய் வடிவங்களுடன் நூல்களிலே கையாளப் பட்டுள்ளன. ஆனால், அவ்வாறு இடம்பெறுஞ் சொற்கள் யாவுமே பிறமொழிச் சொற்களாகவே அமைகின்றன. பிறமொழிச் சொற்களைத் தமிழ்ச் சொற்களினின்றும் பிரித்தறிய, ''உயிர்மெய் யல்லன மொழிமுத லாகா'' என்னும் விதி நன்கு உதவக்கூடியது.

மொழிக்கு முதலிலே இடம் பெறும் உயிர் மெய் எழுத்துக்களெனத் தொல்காப்பியர் குறிப்பிட்டவற்றை மறுபக்கத்திலுள்ள அட்டவணை காட்டுகிறது.

RangaRakes tamilnavarasam.com



தொல்காப்பியர் கூறிய உயிர்மெய் எழுத்துக்களைவிட வேறு சிலவும் நன்னூலார் காலத்திலே வழங்கப்பெற்றன. ச், ய், ஞ் ஆகிய மெய்கள், தொல்காப்பியர் கூறுத சில உயிர்களுடன் சேர்ந்து வருவதாக நன்னூலார் குறிப்பிடுவர். உதாரணம் :

சட்டி, சைனியம்
யந்திரம், யுத்தம், யூபம், யோகம், யௌவனம், ஞமலி

தொல்காப்பியர் கூறுத ச, சை, ய, யு, யூ, யோ, யௌ, ஞ ஆகிய உயிர்மெய் எழுத்துக்கள் நன்னூலார் காலத்திலே மொழிக்கு முதனிலைகளாக வழங்கப்பட்டன. நன்னூல் இலக்கணம் எழுத்து இன்று ஏறக்குறைய ஒன்பது நூற்றாண்டுகளாகிவிட்டன. இன்றைய மொழியமைப்பில் மேலும் பல உயிர்மெய்யெழுத்துக்கள் முதனிலைகளாகப் பயிலத் தொடங்கிவிட்டன, சில வழக்கிழந்து விட்டன. அவற்றின் வரன்முறையை அடுத்துவரும் பக்கத்திலுள்ள அட்டவணை காட்டுகின்றது.

தமிழ்ச் சொற்களின் இடைநிலை எழுத்துக்கள் பற்றிக் கூறுமிடத்து மெய்யெழுத்துக்களின் ஈரன்முறையே கூறப்பட்டுள்ளது. அவை உடனிலையாகவும் வேற்றுநிலையாகவும் சேர்ந்து வரும் என இலக்கணகாரர் விளக்கியுள்ளனர். எப்படியமையினும் ஒரு தமிழ்ச் சொல்லில் ஆகக் கூடிய நிலையில் மூன்று மெய்யெழுத்துக்கள் மாத்திரமே சேர்ந்து வரக்கூடியதாயுள்ளது. தொல்காப்பியர் கூறிய இடைநிலை மெய்யெழுத்துச் சேர்க்கையினைக் காட்டி, அது எவ்வாறு இக்கால வழக்கிலே அமைகின்றது என்பதைப் பின்வருமாறு நிரைப்படுத்தலாம் (தொல்காப்பியர் கூறுத இடைநிலை மெய் மயக்கமே இன்று என்னும் வரிசையிற் கொடுக்கப் பட்டுள்ளன. வழக்கிறந்தன என்று குறிப்பிடாவிடின் அவர் கூறியவை இன்றும் வழக்கிலுள்ளன என்பதாகும்.) :

க் : தொல். : க்க்: பக்கம்
இன்று : க்த்: பக்தி; க்ர்: விக்ரர்;
க்ள்: சுக்ளா; க்ன்: சிக்னல்

ங் : தொல் : ங்க்: தெங்கு; ங்ங்: யாங்ஙனம்

RangaRakes
tamilnavarasam.com

	அ	ஆ	இ	ஈ	உ	ஊ	எ	ஏ	ஐ	ஒ	ஓ	ஔ
க்	கப்பல்	காணி	கிளி	கிரை	குப்பை	கூடை	கெடுதி	கேள்வி	கைப்பு	கொப்பு	கோப்பை	—
ங்	ங	—	—	—	—	—	—	—	—	—	—	—
ச்	சம்தை	சாணி	சிப்பி	சீலை	சுளகு	சூடு	செப்பு	சேவல்	சைபர்	சொல்	சோறு	சௌந்தரம்
ஞ்	—	ஞாயிறு	—	—	—	—	—	—	—	—	—	—
ட்	டப்பி	டாக்டர்	டின்	டீச்சர்	டுபாய்	டூப்	டெண்டர்	டேவிட்	டைப்பர்	டொல்பின்	டோர்ச்	—
ண்	—	—	—	—	—	—	—	—	—	—	—	—
த்	தலை	தானி	திரை	தீமை	துணை	தூக்கு	தென்னை	தேவை	தையல்	தொடு	தோடு	—
ந்	நடு	நாக்கு	நிதி	நீலம்	நுரை	நூல்	நெருப்பு	நேரம்	நையப்	நொந்து	நோன்பு	—
ப்	பசி	பாகி	பிரி	பீலி	புதை	பூரம்	பெண்டு	பேனை	பையன்	பொத்து	போர்	—
ம்	மழை	மாரி	மிகை	மீசை	முகம்	மூக்கு	மெல்ல	மேசை	மைதிலி	மொட்டு	மோகம்	மௌனம்
ய்	யாழ்	யார்	யிப்யார்	யீச்சர்	யுத்தம்	யூகம்	யெல்ப்	யேசு	யைப்பு	யொகம்	யோசம்	யௌவனம்
ர்	ரசனை	ராகி	ரிங்கம்	ரீலை	ருசி	ரூம்	ரெஜி	ரேகை	ரை	ரொட்டி	ரோசம்	—
ல்	லலிதா	மாட்டு	வினை	வீணை	லுங்கி	லூசு	லெவின்	லேவல்	லைற்	லொல்லு	லோட்டா	லௌகால
வ்	வழி	வாசம்	—	—	—	—	வெடி	வேலை	வைப்பு	வெளி	வோட்டு	—
ழ்	—	—	—	—	—	—	—	—	—	—	—	—
ள்	—	—	—	—	—	—	—	—	—	—	—	—
ற்	றப்பர்	றாக்கை	றிப்பன்	றீப்பை	றுபாய்	றூம்	றெடியோ	—	றைவர்	ரொட்டு	—	—
ன்	—	—	—	—	—	—	—	—	—	—	—	—

ச் : தொல் : ச்ச்: அச்சம்

ஞ் : தொல் : ஞ்ச்: காஞ்சி; ஞ்ஞ்: மஞ்ஞை

இன்று : ஞ்ஜ்: பஞ்ஜாப்

ட் : தொல் : ட்ங்: பூட்கை; ட்ச்: மாட்சி;
ட்ட்: நாட்டம்; ட்ப்: நட்பு

இன்று : ட்ம்: விட்மன்; ட்ல்: கட்லட்;
ட்ள்: பட்வாரி; ட்ன் : சட்னி

ண் : தொல் : ண்க்: எண்கு; ண்ச்: வெண்சாந்து;
ண்ஞ்: வெண்ஞாண்; ண்ட்: பண்டம்;
ண்ண்: அண்ணம்; ண்ப்: பண்பு;
ண்ம்: வெண்மை; ண்ய்: மண்யாறு;
ண்வ்: எண்வட்டு.

இன்று : ண்ஞ், ண்ய், ண்வ் ஆகியன
வழக்கிறந்தன
ண்த்: வெண்தாடி: ண்ட்ர்:
வெண்ட்ரியே

த் : தொல் : ந்த்: அத்தம்

இன்று : த்ப்: குத்புநாயகம்; த்ம்: பத்மா;
த்ய்: வித்யா; த்ர்: காயத்ரி;
த்ல்: பெத்லகேம்; த்ள்: மத்வாணி;

ந் : தொல் : ந்த்: காந்தள்; ந்ந்: செந்நாய்;
ந்ய: பொருந்யாது

இன்று : ந்ய் வழக்கிறந்தது.

ப் : தொல் : ப்ப்: உப்பு

இன்று : ப்ச்: பெப்சி; ப்ட்: காப்டன்;
ப்த்: ஜப்தி; ப்ம்: சாப்மன்;
ப்ர்: பெப்ருவரி; ப்ள்: குப்ளகான்

ம் : தொல் : ம்ப்: அம்பு; ம்ம்: அம்மை;
ம்ய்: காய்ம்புறம்

இன்று : ம்க்: சிம்கா; ம்ச்: இம்சை;
ம்ட்: எம்டன்; ம்ல்: கம்லத்;
ம்ள்: சிம்ளா; ம்ன்: சிம்னி

RangaRakes
tamilnavarasam.com

ய் : தொல் : **ய்க்:** ஆய்க; **ய்க்க்:** துய்க்க;
ய்ங்க்: காய்ங்கனி; **ய்ச்:** எய்சீலை;
ய்ஞ்: ஆய்ஞர்; **ய்ஞ்ச்:** தேய்ஞ்சது;
ய்த்: ஆய்தல்; **ய்த்த்:** பாய்த்தல்;
ய்ந்: ஆய்நர்; **ய்ந்த்:** காய்ந்தனம்;
ய்ப்: பாய்பு; **ய்ப்ப்:** வாய்ப்பு;
ய்ம்: வாய்மை; **ய்ம்ப்:** காய்ம்புறம்;
ய்ய்: செய்ய; **ய்வ்:** செய்வோர்

இன்று : **ய்ர்:** கய்ரோ

ர் : தொல் : **ர்க்:** ஆர்க; **ர்க்க்:** பீர்க்கு;
ர்ங்க்: நேர்ங்கல்; **ர்ச்:** வார்சீலை;
ர்ச்ச்: நேர்ச்சி; **ர்ஞ்:** சேர்ஞர்;
ர்ஞ்ச்: நேர்ஞ்சீலை; **ர்த்:** ஆர்தல்;
ர்த்த்: வார்த்தல்; **ர்ந்:** ஆர்நர்;
ர்ந்ந்: நேர்ந்திலை; **ர்ப்:** சார்பு;
ர்ப்ப்: ஆர்ப்பு; **ர்ம்:** நேர்மை;
ர்ம்ப்: நேர்ம்புறம்; **ர்ய்:** போர்யானை;
ர்வ்: பார்வை.

இன்று : **ர்ட்:** வார்டன்; **ர்ண்:** பூர்ணிமா;
ர்ல்: பிர்லா; **ர்ன்:** குர்ஞன்சிங்;
ர்ழ்: பர்ஜி

ல் : தொல் : **ல்க்:** செல்க; **ல்ச்:** வல்சி;
ல்ப்: சால்பு; **ல்ய்:** கொல்யானை;
ல்ல்: நல்லாள்; **ல்வ்:** செல்வம்

இன்று : **ல்ட்:** பல்டி; **ல்த்:** கல்தா;
ல்ம்: வில்மட்; **ல்ர்:** மில்ரோய்

வ் : தொல் : **வ்ய்:** தெவ்யாது; **வ்வ்:** தெவ்வர்

இன்று : **வ்ட்:** ப்ராவ்டா; **வ்ரி:** காவ்ரி

ழ் : தொல் : **ழ்க்:** ஆழ்க; **ழ்க்க்:** வாழ்க்கை;
ழ்ங்க்: தாழ்ங்குலை; **ழ்ச்:** வாழ்சேரி;
ழ்ச்ச்: தாழ்ச்சி; **ழ்ஞ்:** ஆழ்ஞர்;
ழ்ஞ்ச்: தாழ்ஞ்சினை; **ழ்த்:** தாழ்தல்;
ழ்த்த்: தாழ்த்தல்; **ழ்ந்:** ஆழ்நர்;
ழ்ந்த்: வாழ்ந்தனம்; **ழ்ப்:** வீழ்பு;
ழ்ப்ப்: தாழ்ப்பு; **ழ்ம்:** கீழ்மை.
ழ்ம்ப்: வீழ்ம்படை; **ழ்ய்:** வீழ்யானை;
ழ்வ்: வாழ்வார்

இன்று : ழ்ங்க், ழ்ஞ், ழ்ஞ்ச், ழ்ந், ழ்ம்ப் என்பன வழக்கற்றுவிட்டன.

ள் : தொல் : **ள்க்:** கொள்கை; **ள்ச்:** நீள்சினை;
ள்ப்: கொள்ப; **ள்ய்:** வெள்யாறு;
ள்வ்: கள்வன்; **ள்ள்:** வெள்ளம்

இன்று : **ள்ய்** வழக்கற்றுவிட்டது.

ற் : தொல் : **ற்க்:** கற்க; **ற்ச்:** முயற்சி;
ற்ப்: கற்பு; **ற்ற்:** குற்றம்.

இன்று : **ற்ன்:** விற்னே

ன் : தொல் : **ன்க்:** புன்கு; **ன்ச்:** புன்செய்;
ன்ஞ்: பெண்ஞாண்; **ன்ப்:** அன்பு;
ன்ம்: வன்மை; **ன்ய்:** இன்யாழ்;
ன்வ்: புன்வரகு; **ன்ற்:** குன்று;
ன்ன்; நன்னர்.

இன்று : **ன்ர்:** சென்ரல்

ஜ் : இன்று : **ஜ்ஜ்:** பஜ்ஜி

ஸ் : இன்று : **ஸ்க்:** பிஸ்கட்; **ஸ்ட்:** பிரிஸ்டல்;
ஸ்ட்ர்: கஸ்ட்ரோ; **ஸ்த்:** பிரஸ்தாபம்;
ஸ்தம்: ஆஸ்த்மா; **ஸ்ப்:** பஸ்பம்;
ஸ்ம: பஸ்மாசுரன், **ஸ்ர்:** மிஸ்ரா;
ஸ்லி: வெஸ்லியன்; **ஸ்வ்:** ஈஸ்வரன்;
ஸ்ற்: ஓஸ்றிக்; **ஸ்ன்:** பிரஸ்னேவ்

RangaRakes tamilnavarasam.com

ஷ் : இன்று ; ஷ்க்: தாஷ்கன்ற்; ஷ்ட்: கோஷ்டி;
ஷ்ண்: உஷ்ணம்; ஷ்ப்: புஷ்பம்;
ஷ்ம்: காஷ்மீர்; ஷ்ய்: ஹேஷ்யம்,
ஷ்வ்: விஷ்வ

மொழியிறுதி நிலைகளாக உயிரெழுத்துக்களில் ஔ தவிர்ந்த ஏனையவை வருமெனத் தொல்காப்பியர் கூறுவர். உயிர்மெய் எழுத்துக்களாக, எகர ஒகரம் இணைந்த உயிர் மெய்யெழுத்துக்களைத் தவிர ஏனையவை இடம்பெறுமெனக் கூறுவர். மெய்யீறுகளுள், ஞ், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள் ஆகியன மொழியிறுதிகளாக வருமெனக் கூறப்பட்டுள்ளது. இவற்றுள் ஞ், ந் ஆகியன இக்கால வழக்கிலே மொழியிறுதிகளாக வருவதில்லை. ஆனால், தொல்காப்பியர் கூறுத பல மெய்யெழுத்துக்கள் இறுதி நிலையிலே இடம் பெறுகின்றன :

க் : கேக்; ட் : கரட்; த் : பாீத்;

ப் : ஜேக்கப்; ற் : ரெக்கற்; ஸ் : பஸ்

தமிழ் இலக்கணகாரர் மொழியிறுதியில் வருமெனக் கூறிய மெய்யெழுத்துக்களின் வரன்முறையில் ஒரு குறிப்பிட்ட ஒழுங்கு காணப்படுகின்றது.

(அ) எல்லா இறுதி நிலைகளுமே வினைச்சொற்களில் வருவதில்லை. ண், ம் ஆகிய எழுத்துக்கள் அப்படிப்பட்டனவாகும். இவ்விரு எழுத்துக் களும் பெயர்ச்சொற்களில் மட்டுமே இடம் பெறும்.

(ஆ) தனிக்குற்றெழுத்துக்குப் பின் சில மெய் யெழுத்துக்கள் இறுதிநிலைகளாக வருவதில்லை. உதாரணம் : ர், ழ்

(இ) இரண்டுக்கு மேற்பட்ட எழுத்துக்கள் கொண்ட சொற்களில் 'ய்' இறுதி நிலையாக வருமிடத்து அதன் முன்னர் வரும் உயிர் நெட்டெழுத் தாகவே அமையும். உதாரணம் : வந்தாய்.

5. தமிழ் வரிவடிவமும் தமிழ் இலக்கண மரபும்

தமிழ் வரிவடிவம் பற்றித் தமிழ் இலக்கணகாரர் கூறிய வற்றை நாம் இன்று மீளாய்வு செய்யவேண்டியுள்ளது. தமிழ் வரிவடிவங்களைத் திருத்தியமைக்கவேண்டுமென்ற கருத்து இன்று வலுப்பெற்று வருவதனால், அவ்வரிவடிவங்களின் பழைய நிலைமைபற்றிய ஆய்வுகள் அவசியமானவையாகின் றன. தமிழ் இலக்கணக்காரர் தமிழ் வரிவடிவங்கள் பற்றிக் கொண்டிருந்த கருத்துக்களையும் கோட்பாடுகளையும் நோக்கி, அவற்றின் வளர்ச்சி நிலைகளைக் கவனிக்கும்போது தமிழ் எழுத்துக்களின் வரிவடிவங்கள் பெற்றுவந்த மாற்றத்தையும் நாம் கணிக்கமுடியும். 'வரிவடிவம்' என்ற சொல் தமிழ் இலக்கணங்களிலே காணப்படவில்லை. அதற்குப் பதிலாக 'எழுத்து' என்னுஞ் சொற்பிரயோகமே இடம் பெற் றுள்ளது. தொல்காப்பியர் தொடக்கம் பின்வந்த இலக்கண காரர் அனைவரும் 'எழுத்து' என்னும் சொல்லை உபயோ கிக்கும் இடங்களை நோக்கும்போது இதனைக் கண்டுகொள்ள முடிகின்றது.

'எழுத்து' என்னுஞ் சொல் குறிப்பிட்ட ஒலிகளை மட்டுமன்றி வரிவடிவத்தையும் குறித்து நின்றதென்பதற்குப் பல இலக்கண ஆசிரியர்களின் சூத்திரங்கள் சான்று பகர் கின்றன இன்று எமக்குக் கிடைக்கும் தொல் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தின் பாயிரச் செய்யுள் எழுத்துப் பற்றிய சில குறிப்புக்களைக் கொண்டுள்ளது.

தமிழ்கூறு நல்லுலகத்து
வழக்குஞ் செய்யுளு மாயிரு முதலி
னெழுத்துஞ் சொல்லும் பொருளு நாடி.....

என்னுஞ் சிறப்புப் பாயிர அடிகள் எழுத்துப் பற்றிய சிந்தனையைத் தூண்டுகின்றன. இவ்வடிகளுக்கு உரை யெழுதிய உரையாசிரியர், நச்சினார்க்கினியர் ஆகியோர் 'எழுத்து' என்பதனை வரையறை செய்து விளக்க முற்பட் டுள்ளனர்.

RangaRakes tamilnavarasam.com

'எழுத்தென்றது யாதனையெனில், கட்புலனுகாவுருவுங் கட்புலனுகிய வடிவுமுடைத்தாக வேறுவேறு வகுத்துக் கொண்டுதன்னையே உணர்த்தியுஞ் சொற்கு இயைந்தும் நிற்கும் ஓசையையாம் கடலொலி சங்கொலி முதலிய ஓசைகள் பொருளுணர்த்தாமையாலும் முற்கு வீளை இலதை முதலியன பொருளுணர்த்தினவேனும் எழுத்தாகமையானும் அவை ஈண்டுக்கொள்ளாராயினர்.'[29]

எழுத்துப் பற்றிய நச்சினர்க்கினியரது இவ்விளக்கம் தொல்காப்பிய எழுத்ததிகார முதற்சூத்திரப் பொருளுடன் ஒப்பு நோக்க வேண்டியதொன்றுகும்.

எழுத்தெனப் படுப
அகரமுத
னகர விறுவாய் முப்பஃ தென்ப
சார்ந்துவரன் மரபின் மூன்றலங் கடையே

என்பது தொல்காப்பிய எழுத்ததிகார முதற்சூத்திரமாகும். எழுத்து என்றல் ஓசையையும் அதற்கென ஒரு வரிவடிவையும் விளக்குமோர் அலகாகத் தொல்காப்பியர் இச்சூத்திரத்திலே கருதியுள்ளாரென நச்சினர்க்கினியரின் இச்சூத்திர உரை விளக்குகின்றது தொல்காப்பியர் ஏனைய சூத்திரங்களாலும் இக்கருத்தினையே மனங்கொண்டுள்ளார் என ஆ. வேலுப்பிள்ளை தமது நூலிலே குறிப்பிட்டுள்ளார்.

'எழுத்து என்பது ஒலிகளை மாத்திரமன்றி வரிவடிவையுங் குறித்ததென்பதற்குப் பல தொல்காப்பியச் சூத்திரங்கள் சான்று பகருகின்றன. 'மெய்யீறெல்லாம் புள்ளியொடு நிலையல்', 'எகர ஒகரத் தியற்கையு மற்றே'. 'குற்றிய லுகரமு மற்றென மொழிப', 'உட்பெறு புள்ளி யுருவா கும்மே' என்னுஞ் சூத்திரங்களெல்லாம் வரிவடிவங்களைச் சுட்டும் சூத்திரங்களே.'[30]

தமிழ் இலக்கணகாரர் தொல்காப்பியரது இக்கருத்தினையே அடிப்படையாகக் கொண்டனர் என்பது பின்வந்த இலக்கணகாரரது எழுத்துப் பற்றிய விளக்கங்களிலிருந்து பெறப்படுகின்றது. தொல்காப்பியரது எழுத்ததிகாரச் சூத்

திரங்களில் எழுத்து என்ற சொற்பிரயோகம் நூற்றுக்கு மேற்பட்ட சூத்திரங்களிலே அமைந்துள்ளது. ஓசைக்கும் எழுத்துக்குமுள்ள தொடர்பினைப் பல சூத்திரங்களிலே தொல்காப்பியர் சுட்டிக்காட்டியுள்ளார். குற்றெழுத்து, நெட்டெழுத்து, வல்லெழுத்து, மெய்யெழுத்து, இடையெழுத்துப் போன்றவற்றை நாம் உதாரணங்களாகக் காட்டலாம். அதே போன்று எழுத்துக்களின் அமைப்பு முறையை விளக்கும் பிரயோகங்களுமுண்டு ஓரெழுத்தொருமொழி, ஈரெழுத்தொருமொழி, ஔகார இறுவாய், னகர இறுவாய் போன்றவற்றை உதாரணங்களாகக் காட்டலாம்.

வரிவடிவங்களை அமைப்பதில் கடைப்பிடிக்கப்பட்ட ஒழுங்கு முறையினையும் தொல்காப்பியரது எழுத்ததிகாரச் சூத்திரங்கள் உணர்த்துகின்றன.

1. **அவற்றுள் அஇஉ**
   எஒ என்னு மப்பா லைந்து
   மோரள பிச்சைக்குங் குற்றெழுத் தென்ப.

2. **ஆஈஊஏஐ**
   ஓஔ என்னு மப்பா லேழு
   மீரள பிசைக்கு நெட்டெழுத் தென்ப

3. **ஔகார விறுவாய்ப்**
   பன்னீ ரெழுத்து முயிரென மொழிப

4. **னகர விறுவாய்ப்**
   பதினெண் ணெழுத்து மெய்யென மொழிப.

இச்சூத்திரங்கள் எழுத்துக்களது பெயரையும், முறையையும் தொகையையும் கூறுவதால் அவற்றின் வரிவடிவத்தை உணர்த்துகின்றன. இதனை நச்சினர்க்கினியர் தமது உரைவாயிலாகவும் விளக்குகின்றார்.

'இவை வல்லெழுத்தென்ப (எழு. 19.) மெல்லெழுத்தென்ப (எழு. 20.) இடையெழுத்தென்ப (எழு. 21.) ஔகார விறுவாய் (எழு. 4.) னகார விறுவாய் (எழு. 9.)

RangaRakes tamilnavarasam.com

என்பவற்றுற் பெற்றும். இவற்றுனே எழுத்துக்கள் உருவாதலும் பெற்றும். இவ்வுருவாகிய ஓசைக்கு ஆசிரியர் வடிவுகூறுமை உணர்க. இனி வரிவடிவு கூறுங்கால் மெய்க்கே பெரும்பான்மையும் வடிவு கூறுமாறு உணர்க.'[31]

இச்சந்தர்ப்பத்தில் தொல்காப்பியர் சில எழுத்துக்களுக்கு மட்டுமே வரிவடிவு கூறியதை நச்சினார்க்கினியர் சுட்டிக் காட்டிச் செல்கின்றார். அவ்வாறு சிலவற்றுக்கு மட்டுமே தொல்காப்பியர் வரிவடிவு கூறிச் சென்றமை சிந்தனைக் குரியதொன்றாக அமைகின்றது.

1. உட்பெறு புள்ளி யுருவா கும்மே
(எழு. சூ. 14.)

2. மெய்யி னியற்கை புள்ளியொடு நிலையல்
(எழு. சூ. 15.)

3. எகர ஒகரத் தியற்கையு மற்றே
(எழு. சூ. 16)

4. புள்ளி யில்லா வெல்லா மெய்யு
முருவுரு வாகி யகரமோ டுயிர்த்தலு
மேனை யுயிரோ டுருவுதிரிந் துயிர்த்தலு
மாயி ரியல வுயிர்த்த லாறே
(எழு. சூ. 17.)

மேற்குறிப்பிட்ட சூத்திரங்கள் தமிழ் எழுத்துக்களின் வரி வடிவத்தைப்பற்றித் தொல்காப்பியரின் கருத்துக்களை உணர்த்துவனவாகவுள்ளன. சூத். 14 பகரத்தோடு மகரத் தின் வரிவடிவு வேற்றுமையடைவதைக் குறிப்பிடுகின்றது. சூத். 15 தனிமெய்க்கும் உயிர் மெய்க்குமுள்ள வேற்றுமையைச் சுட்டுகின்றது. சூத். 16 எகர ஒகரங்களின் வரிவடிவும் அத்தகையதென்றும், சூத். 17 மெய்யும் உயிரும் கூடிப் புணருமாறும் ஆண்டு அவை திரியாதும் திரிந்தும் நிற்கு மாறுங் கூறுகிறதென்றும் நச்சினார்க்கினியர் பொருள் கூறுகின்றனர். இச்சூத்திரங்கள் யாவும் வரிவடிவத்தைப் பற்றிய தகவல்களைத் தருபவையென்றே அவர் கொள்ளு கின்றார். இதனைத் தனது உரையிலே உறுதியும் செய் துள்ளார்:

'எனவே உயிர்மெய்கட்குப் புள்ளியின் முயிற்று. க். ங்... ற். ன். எனவரும். இவற்றைப் புள்ளியிட்டுக் காட்டவே புள்ளி பெறுவதற்கு முன்னர் அகரம் உடன்னின்றதோர் மெய்வடிவே பெற்று நின்றன வற்றைப் பின்னர் அப்புள்ளியிட்டுத் தனிமெய்யாக்கினு ரென்பதூ உம் பெறுதும்.'[32]

வரிவடிவத்திலே தொல்காப்பியர் சில மாற்றங்களைச் செய்த தாக நச்சினார்க்கினியர் கூறுவதும் சிந்தனைக்குரியதாகும். எழுத்து என்று தொல்காப்பியர் கருதியது வெறும் ஒலி வடிவத்தை மட்டுமல்ல என்ற கருத்தினை நச்சினார்க்கினியர் பல்வேறு சூத்திரங்களில் வலியுறுத்துவதையும் நாம் உணர முடிகின்றது. இதனால் உரையாசிரியர்கள் தமது காலத்து நிலைமைகளுக்கு ஏற்பச் சூத்திரங்களுக்குப் பொருள் எழுது வதையும் நாம் அவதானிக்க முடிகின்றது.

நச்சினார்க்கினியர், வரிவடிவம் பற்றித் தொல்காப்பியர் முழுமையாகச் சூத்திரங்கள் செய்யாமைக்கும் காரணம் கூறியுள்ளார்.

'இவ்வெழுத்துக்களின் உருவிற்கு வடிவுகூறுராயினர்; அது முப்பத்திரண்டு வடிவிலுள்ள இன்ன எழுத்திற்கு இன்ன வடிவெனப்பிறர்க்கு உணர்த்துதற்கு அரிதென் பது கருதி அவ்வடிவு ஆராயுமிடத்துப் பெற்ற பெற்ற வடிவே தமக்கு வடிவாம். குழலகத்திற் கூறின் குழல் வடிவுங் குடத்தகத்திற் கூறின் குடவடிவும் வெள்ளிடை யிற் கூறின் எல்லாத்திசையும் நீர்த்தரங்கமும்போல. 'எல்லா மெய்யு முருவுரு வாகி' (எழு. 17) எனவும். 'உட்பெறு புள்ளி உருவா கும்மே' (எழு. 14) எனவும், 'மெய்யி னியற்கை புள்ளியொடு நிலையல்', (எழு. 15) எனவுஞ் சிறுபான்மை வடிவுங் கூறுவர். அது வட்டம் சதுரம் முதலிய முப்பத்திரண்டினுள் ஒன்றை உணர்த் தும். மனத்தான் உணரும் நுண்ணுணர்வு இல்லோரும் உணர்தற்கு எழுத்துக்கட்கு வேறுவேறு வடிவுங்காட்டி எழுதப்பட்டு நடத்தலிற் கட்புலனுகிய வரி வடிவும் உடையவாயின. பெரும்பான்மை மெய்க்கே வடிவு

RangaRakes tamilnavarasam.com

> கூறினுன் உயிர்க்கு வடிவின்மையின். 'எகர வொகரத் தியற்கையுமற்றே' (எழு. 16) எனச் சிறுபான்மை உயிர்க்கும் வடிவு கூறினார்.' [33]

மேற்காட்டிய உரைப்பகுதி இதனை உணர்த்துகின்றது.

தொல்காப்பியருக்குப் பின்னர் நன்னூலார் எழுத்து இன்னதென்பதைப் பின்வரும் சூத்திரத்தில் குறிப்பிடுகிறார்.

> மொழிமுதற் காரண மாமணுத் திரளொலி
> எழுத்தது முதல்சார் பென விரு வகைத்தே

மொழிக்கு முதற்காரணமும் அணுத்திரளின் காரியமுமாகிய எழுத்து என்று அவர் குறிப்பிடும்போது தொல்காப்பியரது கருத்தினையே அடிப்படையாகக் கொண்டிருப்பதை உணர முடிகின்றது. எழுத்தின் தொகை பெயர் என்பவற்றிலும் தொல்காப்பியரையே பின்பற்றியுள்ளார். அவர் எழுத்துக்களைப் பற்றிக் குறிப்பிடும் சிறப்புச் சூத்திரமும் நன்கு அமைந்துள்ளது.

> தொல்லை வடிவின வெல்லா வெழுத்துமாண்
> டெய்து மெகர வொகர மெய்புள்ளி

'எல்லா எழுத்துக்களும் பல்வேறு வகைப்பட்ட எழுதி வழங்கும் பழைய வடிவினை உடையனவாம். இவ் வடிவை யுடையனவாய் வழங்குமிடத்து எகரமும் ஒகர மும் மெய்களும் புள்ளிபெறும்.' [34]

இங்கு எழுத்துக்களுக்கு வரிவடிவம் பழமைக்காலம் தொட்டே இருந்தது என்பதையும் காலத்தின் தேவைக்கேற்ப அவற்றில் மாற்றங்கள் ஏற்பட்டன என்பதனையும் நன்னூலார் உணர்த்த முற்பட்டதை அறிய முடிகின்றது.

தொல்காப்பிய உரையாசிரியர்களது கருத்துக்களை மனங் கொண்டு நன்னூலார் தமிழ் எழுத்துக்களுக்குப் பழமை யான வரிவடிவம் இருந்ததென்பதை ஏற்றுக்கொள்கிறார். எழுத்து என்பது எழுதப்படுவது. அதனால் அதற்கென ஒரு வரிவடிவம் இருந்தேயாக வேண்டும். அதன் அமைப்பு

வித்தியாசப்படலாம். அதனால் எழுதப்படுவதற்கான ஒரு வடிவத்தை வரப்பெற்றிருந்ததென்பதை எவரும் ஏற்றுக் கொள்வர். தமிழ் எழுத்துக்கள் பற்றிய டாக்டர் வை. சண்முகத்தின் கூற்று இதற்கணி செய்வதாகவுள்ளது.

> இன்றுவரை தமிழ் மொழிக்குக் கிடைத்துள்ள எழுத்துச் சான்றுகளில் பழைமையானது பிராமி-தமிழ் கல்வெட்டுகள் என்று அழைக்கப்படும் குகைக்கல் வெட்டுக்களே. அவை, பாண்டிநாட்டில் மிகுதியாகவும் சோழ, கொங்கு, தொண்டை நாடுகளிற் குறைவாகவும், கி மு. மூன்றும் நூற்றாண்டிலிருந்து கி. பி. 5-6 நூற் றாண்டுவரை எழுத்திலும் மொழியிலும் சில வளர்ச்சிப் படிகளை உடையதாகவும் உள்ளன (Mahadevan 1970 : 12). அவைகளை அசோகன் பிராமியில் இருந்து உண்டாக்கியிருக்க வேண்டுமென்பதையும் அறிஞர்கள் விளக்கியுள்ளார்கள். (T. P. Meenakshisundaram 1956: Mahadevan, 1970 : 2) ஆயினும் தமிழ் மொழி அமைப் பிற்கேற்ப பல திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளமையை யும் அறிஞர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர். அவைகளுள் முக்கியமானவை 1. தமிழ் மொழிக்கு வேண்டாத எழுத்துக்களை விலக்கியது. 2. வேண்டிய புதிய எழுத் துக்களுக்கு அவற்றோடு தொடர்புடைய எழுத்துக்களி லிருந்து இரண்டு முறையில், (அ) குறியீடுகள் சேர்த்தது (உயிர்மெய்க்கும் தனிமெய்க்கும் உள்ள வேறுபாடு எகர, ஒகரங்களில் குறில் நெடில் வேறுபாடு-இந்த இரண்டிலும் புள்ளி சேர்த்து வித்தியாசப்படுத்தியது.) (ஆ) ஒலித்தொடர்புடைய வடிவங்களிலிருந்து சிறிது திருத்திப் புதிய ஒலியைக் குறிக்கச் செய்தது. (நகரத் திற்குரிய வடிவத்தோடு மேலே சிறிய வளைவு சேர்ந்ததன் மூலம் னகரவொலியைக் குறிக்கச் செய்தது.) ஆகியவை குறிப்பிடத்தக்கவை. பிராமித் தமிழ்க் கல்வெட்டுகளில் ஒலிகளும் தனியெழுத்தைப் பெறவில்லை (Mahadevan 1970 : 4) தொல்காப்பியர் காலத்தில்தான் ஔகாரம் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். அப்படியே ஆயிதமும் அவற்றுக்குப் பின்னரே நெடுங்கணக்கில் இடம் பெற்

RangaRakes tamilnavarasam.com

றிருக்க வேண்டும். இப்படி எழுத்து எண்ணிக்கையிலும் வடிவத்திலும் காலந்தோறும் மாற்றம் ஏற்பட்டே வந்திருப்பதைப் பலரும் எடுத்துக் காட்டியுள்ளனர்.[35]

ஆனால் தமிழ் இலக்கண ஆசிரியர்கள் ஒலிக்கப்படுகின்ற ஒலிக்கு முக்கியத்துவம் கொடாது எழுதப்படுகின்ற எழுத்துக்கே முக்கியத்துவம் கொடுத்தாலும் தமிழ் எழுத்துக்களின் வரிவடிவம் காலத்தின் தேவைக்கேற்ப மாறுபடும் என்ற சிந்தனையற்றவராகவே இருந்தனர் என்பது புலப்படுகின்றது.

பிற்காலத்தில் இலக்கண நூல்களில் பிரயோக விவேகம், இலக்கணவிளக்கம் என்னும் இருநூல்களும் எழுத்துப் பற்றிய சில குறிப்புக்களைத் தருகின்றன. இவ்விரு நூலாசிரியர்களும் கூறுகின்ற கருத்துக்கள் தமிழ் எழுத்துக்கள் பற்றிய அவர்களது சிந்தனைகளைத் தெளிவுபடுத்துகின்றன.

1. பிரயோக விவேகம்

ஆவியெழுத்தச் சொடுசர மாருமவற்றின் பின்னே
மேவிய மெய்கள் விளம்புமல் லோடுவியஞ்சனமாற்
தாவியெதிர்த்து மதர்த்தரி பாய்ந்திரு தாழ்
குழைத்தோப்.

இச்செய்யுளின் உரைக்குறிப்பு வருமாறு,

'இது முதலெழுத்துக் குறியீடு கூறுகின்றது. 'குறியே சமிக்கை கூறுங்காலே': இஃதுஉரைச் சூத்திரம். உயிரெழுத்தெல்லாம் அச்சு எனவும் சுரம் எனவும் வியஞ்சனம் எனவும் பெயர்பெறும்' [36]

2. நேமிநாதம்

ஆதியுயிர் வவ்வியையின் ஔவாம் அஃதன்றி
நீதியினுல் யவ்வியையின் ஐயாகும் — ஏதமிலா
எஒமெய் புள்ளிபெறும் என்ப சஞயமுன்
அஐயாம் ஆதி யிடை.

சில எழுத்துப் போலியும் சில எழுத்து வடிவ வேற்றுமையும் ஆகுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

அகரமும் வகர வொற்றும் கூடி ஔகாரத்தின் பயத்த ஆகலும் அகரமும் யகர வொற்றும் கூடி ஐகாரத்தின் பயத்த ஆகலும் எகர ஒகரங்கள் மெய்கள் புள்ளிபெற்று நிற்றலும் சகர, ஞகர, யகரங்களின் முன்னுய் மொழிக்கு முதலாய் நின்ற அகரமும் இடை நின்ற அகரமும் ஐகாரம் ஆகலும் [37]

3. இலக்கணவிளக்கம்

தொல்லை வடிவின் வெல்லா வெழுத்து
மாண்டெய்து மெகரவொகர மெய் புள்ளி

இது நிறுத்த முறையானே வடிவுகூறுகிறது. இவ் வெழுத்து இவ்வடிவிற்றென யாம் எழுத்துக்களுக்கு வடிவு கூறுமிடத்து எல்லா எழுத்துக்களும் நெடுங்கணக்கினுள் எழுதப்பட்டு வருகின்ற பழைய வடிவே வடிவாக உடையனவாம். ஆயினும் அங்ஙனம் வருமிடத்து எகரமும் ஒகரமும் மெய்களும் மேற்புள்ளி பெற்று நிற்கும். புள்ளியும் தொல்லை வடிவேயாயினும் எகர ஏகாரங்கட்கும் ஒகர ஓகாரங்கட்கும் தனிமெய் உயிர்மெய்கட்கும் வடிவொப்புமை கண்டு அவ்வொப்புமைமேல் வேற்றுமை செய்யும் பொருட்டு அவற்றிற்கு முன்னோர் பின்னர் புள்ளியிட்டு எழுதுகவென்றூர் என்பார் 'ஆண்டெய்தும்' என்றூர்.[38]

4. தொன்னூல் விளக்கம்

மதப்பணி புரிவதற்காக தமிழ் நாடு வந்த வீரமாமுனிவர் தமிழ்ப்பணி செய்யவும் முற்பட்டார். சிறப்பாக இலக்கணத்தை ஆராய முற்பட்ட அவர் தமிழ் எழுத்துக்கள் பற்றியும் சிந்தித்தது வியப்பன்று. எழுத்திலக்கணத்தை தொல்காப்பியம் இயல்பாகக் கூற நேமிநாதம் ஏழாக வகுக்க, தொல்காப்பிய உரையாசிரியர்கள் எட்டிறந்த பல்வகையென விரிக்க, நன்னூலார் பன்னிரண்டாக விரிக்க தொன்னூல் விளக்கம் மொழியியல் அடிப்படையில் தோற்றம் (Origin of words), வகுப்பு (Classification of sounds), தோன்றும் விகாரம் (Morpho-Phonemics) எனத் தெளிவாகவும் சுருக்கமாகவும் மூன்று நிலைகளில் உள்ளடக்கியுள்ளது.

RangaRakes tamilnavarasam.com

தோற்றமும் வகுப்பும் தோன்றுப் விகாரமும்
சான்றுளித் தோன்றும் தான்எழுத்து இயல்பே

என்னும் தொன்னூல் விளக்க முதற் சூத்திரமே இதனை விளக்கிநிற்கின்றது.

தமிழ் எழுத்துக்களின் வரிவடிவத்தில் வீரமாமுனிவர் மாற்றத்தைச் செய்துள்ளார். 'மெய்யின் இயற்கை புள்ளி யொடு நிலையல்', 'எகர ஒகரத்தியற்கையும் அற்றே' என்ற நிலையில் ஏற்பட்ட மாற்றத்தை மேலும் வேறுபடுத்தினர்.

நீட்டல் அழித்தல்
மெய்க்கிரு புள்ளி

என்ற நிலைக்கு மாற்றினர். இவரது காலத்திலேயே எழுத்துக்களின் வரிவடிவம் தேவைக்கேற்ப மாற்றப்பட்டதை நாம் காணமுடிகிறது.

எமது பழைய தமிழ் இலக்கணகாரர் எழுத்துக்களின் பௌதிக வடிவம் பற்றி அவ்வளவு கவனஞ் செலுத்திய தாகத் தெரியவில்லை. சாசன வழக்குகளுக்கு முக்கிய இடம் வழங்கிய வீரசோழிய இலக்கணகாரரே சாசனங்களில் நூற் முண்டுகள் தோறும் மாற்றமடைந்து வந்த தமிழ் வரிவடி வங்கள் பற்றிக் குறிப்பிட்டாரில்லை. தமிழ் இலக்கணகாரர் வரிவடிவம் பற்றி விளக்கம் கொடுக்காததற்கு ஒரு காரண முண்டு. அதாவது, அந்நாட்களிலே வாசிப்பவர்கள் குறைவாகவே இருந்தனர். 'கூறுதல்', 'மொழிதல்' என்பனவே எமது மரபாக இருந்ததென்பதற்கு எம் பண்டைய இலக்கியங்கள் சான்று பகர்கின்றன. ஆனால், வீரமாமுனிவருடைய காலத்திலோ அச்சுயந்திரம் தமிழ் நாட்டிலே செல்வாக்குப் பெற்ற காரணத்தினால், வாசிப்ப வர்களுடைய தொகை தமிழ் நாட்டிலே அதிகரிக்கத் தொடங்கியது இதன் காரணத்தினால், எழுத்துக்களில் வரிவடிவம் பற்றிய சிந்தனை அவசியமாயிற்று. வீரமாமுனிவர் இக்காலகட்டத்திலேயே தமிழ் எழுத்துக்களின் வரிவடிவ மாற்றம் பற்றிச் சிந்தித்துச் செயலாற்றினர்.

தமிழ் எழுத்துக்களுக்கும் சமயத்துக்குமுள்ள தொடர் பினையும் இங்கு குறிப்பிடுதல் பொருத்தம் என எண்ணு கிறோம். சிவஞான போதத்திற்குச் சிற்றுரையும் விளக்கமும் எழுதிய மாதவச் சிவஞானமுனிவரர் எழுத்துப் பற்றி விளக்குமிடத்துப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

'சொல் எழுத்தான் அன்றி இல்லை
எழுத்து ஓசையால் அன்றி இல்லை
அதனாலே ஓசை உலகை ஆட்டும்

என்னும் மாசில் பழமொழியும் வழங்குவதாயிற்று.

மேலும் சிலம்பொலிக்கத் தி நக் கூத்தியற்றும் வெ பெருமானை 'ஓசையொலியெல்லாம் ஆனாய் நீயே' என்று ஆளுடைய அரசரும் அருளிச் செய்வராயினர்.

போற்றல் நினைத்தல் பொருளைத்தல் போக்கல் பிற
தோற்றெழுத்தால் அன்றியின்றும் சொல்

ஆவிக்கு வழுவில் காட்சியாகிய சவிகற்ப உணர்வு தோன்றுவதற்கு அகப்புறக் கலன்களைச் செலுத்தும் எழுத்துக்களே மூதற்றாமை என்பர். அவ்வெழுத்துக்கள் 'அ, உ, ம், ஒலிமுதல், முதல் ஒலி' என்ப. இவற்றுள் ஒலி முதல் என்பது நம் செவிக்குக் கேட்கும் இசை யோசையோடு கூடிய எழுத்தோசைகட்கு எல்லாம் முதற்காரணமாய் உள்ளது. இதனை விந்து எனவும் கூறுவர்.[40]

விந்து, நாதம் என்னும் பிரயோகங்கள் சைவசித்தாந்தத்திலே முக்கியமான சொற்களாகும். அவை அருபமானவை. எழுத்துக்களுடன் இவற்றைத் தொடர்புறுத்தும் சிவஞான முனிவர் அவற்றின் அருபப் பண்பாகிய ஒலியினையே அழுத்தமாகக் கூறினாரே தவிர அவற்றின் அருபப் பண்பு பற்றி எதுவும் கூறவில்லை. வைதிக சமயங்கள் இறைமைக் கும் ஒலிக்குமிடையே தொடர்பு காணுவன. இச்சமயக் கருத்துக்களாலே பாதிப்புற்ற தமிழ் இலக்கணகாரர் எழுத்துக்களின் ஒலிப்பண்பிலேயே முக்கிய கவனத்தைச் செலுத்தினர். அவற்றின் வரிவடிவம் பற்றி அவர்கள் அழுத்தமாக ஆராய வேண்டிய தேவையிருக்கவில்லை.

RangaRakes tamilnavarasam.com

அடிக்குறிப்புகள்

1. Sanssaure, Ferdinand de., **Course in General Linguistics**, p. 25
2. ஆறுமுகநாவலர், இலக்கணச் சுருக்கம், ப. 1.
3. மேற்படி, ப. 5
4. மேற்படி, ப. 5-6
5. நன்னூல் சூ. 93, 94
6. தொல்காப்பியர் இவற்றுக்கு வரிவடிவு கூறியுள்ளா ரெனப் பேராசிரியர் தம்முடைய உரையிலே குறிப்பிட் டுள்ளார்.
7. 'ஆடொலி' என்பதற்குரிய விளக்கத்தினை இவ்வியலில் 2·2 பகுதியிற் பார்க்கவும்.
8. Abercrombie, David., **Ibid,** pp. 17-18
9. Ferguson, Charles A., "Diglossia", In Dell Hym 1964, pp. 429-39
10. தொல்காப்பியம், எழுத்ததிகாரம், சூ. 54
11. மேற்படி, சூ. 55
12. நன்னூல், சூ. 125
13. இலக்கணச் சுருக்கம், ப. 11
14. அகரமும் யகர மெய்யும் சேர்ந்து வருதல்பற்றித் தொல் காப்பியம், எழுத்ததிகாரம், சூ. 56

    அகரத் திம்பர் யகரப் புள்ளியு
    மைய னெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்

    எனக் கூறுகின்றது.
15. மீனாட்சிசுந்தரன், தெ. பொ., தமிழ்மொழி வரலாறு, ப. 100
16. வேலுப்பிள்ளை, ஆ., தமிழ் வரலாற்றிலக்கணம், ப. 56-57
17. Sankaran, C. R. and Sundaram, R. M., "A Historical Study of Caarpezhuththu in Tamil Grammars and their Commentaries", In Asher, 1970, pp. 335-39.
18. தொல்காப்பியம், எழுத்ததிகாரம், சூ. 101

19. Meenakshisundaram, T. P., **Foreign Models in Tamil Grammar,** pp. 19-21.
20. சுவாமி ஞானப்பிரகாசர், **How Tamil was Built,** ப. 11
21. மேற்படி, ப. 12
22. முத்துச் சண்முகன்., இக்காலத் தமிழ், ப. 85-91
23. Jesperson, Otto, **Ibid,** p. 303.
24. தொல்காப்பியம், எழுத்ததிகாரம், சூ. 59
25. மேற்படி, சூ. 60
26. கதிர்காமநாதன், செ., கொட்டும் பனி, ப. 110
27. ஜீவா, டொமினிக்., தண்ணீர் நம் கண்ணீரும், ப. 54
28. முத்துச் சண்முகன், இக்கால மொழியியல், ப. 30
29. தொல்காப்பியம், எழுத்ததிகாரம், நச்சினார்க்கினியருரை, ப. 9
30. வேலுப்பிள்ளை, ஆ., மு. சு. நூ., ப. 49
31. தொல்காப்பியம், எழுத்ததிகாரம், நச்சினார்க்கினியருரை ப. 27
32. மேற்படி, ப. 51
33. மேற்படி, ப. 32-33
34. நன்னூல், சூ. 98
35. சண்முகம், வை. செ., எழுத்துச் சீர்திருத்தம், ப. 11-12 (சீர்திருத்தப்பட்ட எழுத்துக்களாலான பந்தியினை இலங்கையிலுள்ள நடைமுறை எழுத்துக் களிலே வழங்கியுள்ளோம்.)
36. பிரயோக விவேகம், ப. 7
37. நேமிநாதம்
38. இலக்கண விளக்கம்
39. வீரமாமுனிவர்., தொன்னூல் விளக்கம், ப. 26
40. சிவஞானபோதச் சிற்றுரையும் விளக்கமும், ப. 220

RangaRakes tamilnavarasam.com

5

புணர்ச்சி விதிகளின் அடிப்படைகள்

1. புணர்ச்சி விதிகளின் பயன்கள்

இந்திய மொழிகள் பற்றிய இலக்கணநூல்கள் யாவுமே புணர்ச்சி பற்றி விரிவான முறையிலே சூத்திரங்கள் வகுத்துள்ளன. பாணினி போன்றோருடைய இலக்கண நூல்களிலே கையாளப்பட்ட சொல்லாகிய சந்தி (sandhi) என்பது உலகப் பொதுச் சொல்லாக மொழியாராய்ச்சியாளர்களாலே உபயோகிக்கப்படுகின்றது. சந்தி அல்லது புணர்ச்சி பற்றி இந்திய இலக்கணங்கள் ஏன் விரிவான முறையிலே கூறவேண்டும்? தமிழ் வரலாற்றிலக்கண (பக். 89–90) ஆசிரியர் ஆ. வேலுப்பிள்ளை,

> 'புலமையையும் வித்துவத் தன்மையையும் காட்டுவதே முக்கியம் என்ற கருத்து நிலவிய காலத்தில் தோன்றிய உரைநடையிலும் செய்யுளிலும் கடின சந்தி விகாரங்கள் யாவற்றையும் அமைத்துக் கடின நடையில், தமிழறிஞர் எழுதிவந்தனர். கருத்துத் தெளிவே முக்கியம், கருத்தைப் புலப்படுத்த மொழி ஒரு கருவியே என்ற கருத்து இன்று நிலவுவதால், இன்றைய தமிழ் நடையில், சந்தி விகாரங்கள் பெரும்பாலும் அவசியமான இடங்களிலேயே இடம்பெறுகின்றன.'

என்று கூறுகின்றார். இன்றைய நிலையில் விரிவான அளவிலே புணர்ச்சி முறைகள் நமது மொழிக்கு வேண்டியதில்லை என்னுங் கருத்தினை அவர் வலியுறுத்துகிறார். ஆனால் பல

நூற்றாண்டுகளுக்கு முன்னர் விரிவான முறையிலே புணர்ச்சி விதிகள் பற்றித் தமிழ் இலக்கணகாரர் கூறவேண்டிய தேவையிருந்தது. அத்தகைய தேவைகள் என்ன என்பதை ஆராய்தல் வேண்டும்.

சொற்களுக்கிடையே இடைவெளியிட்டு எழுதும் வழக்கம் அச்சுயந்திர வரவாலும் ஆங்கிலமொழிச் செல்வாக்காலுமே ஏற்பட்டது. அதற்கு முன்னர், எழுது கருவிகள் காரணமாக, எவ்வளவு தூரம் எல்லாச் சொற்களையும் தொடுத்து எழுத முடியுமோ, அவ்வளவுக்கு எழுது இடமும் எழுது முயற்சியும் சிக்கனப்படுத்தப்பட்டன. எழுதுகருவி எழுத்தாணி; எழுதுகின்ற இடம் ஓலை. எழுது கருவி உளி; எழுதுகின்ற இடம் கல். இந்நிலையில் எவ்வளவு சிக்கனமாக எழுதமுடியுமோ, அது பெரிதும் வரவேற்கக் கூடிய தொன்றாயிருந்தது. இத்தகைய சிக்கன முயற்சிக்குப் புணர்ச்சி விதிகள் பெருமளவு உதவின எனலாம். அருகருகே வரும் இரண்டு சொற்களின் எல்லைகளில் நடைபெறும் புணர்ச்சி காரணமாக அவற்றைத் தொடுத்து எழுதிச் செல்வது இலகுவாயிருந்தது.

மேற்கூறிய காரணத்தைவிட மிக முக்கியமான காரணமாக அமைந்தது செய்யுள் வடிவமேயாகும். பெரும்பாலான தமிழ்ப் புணர்ச்சிகள் செய்யுள் இலக்கணம் நோக்கியே அமைக்கப்பட்டனவெனலாம். இக்கருத்தினைச் சொல்லிலக்கணத்தில் யாப்பின் செல்வாக்குப் பற்றி எழுதிய பண்டிதர் க. வீரகத்தியின் கருத்துக்கள் அரண்செய்கின்றன. அவருடைய நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ள பின்வரும் மேற்கோள் நீண்டதாயமையினும் பயனுடையதாகுமென எண்ணுகிறோம்:

> 'வெவ்வேறு ஓசையின் ஒழுங்கான வரையறைகளே யாப்பிலக்கணமாகி, இலக்கணத்துறைகளில் ஒன்றாய், விரிவும் தெளிவும் பெற்றுள்ளது. நேர்சீராயில்லாத சீரமைப்பும், தளைப்பிணிப்பும் பாவின் நீரோசையைச் சிதைத்து அதனை உரைநடைக்குள் தள்ளிவைக்கும்.

RangaRakes tamilnavarasam.com

'எழுத்திற்கு மாத்திரை கோடலும், அசைத்தலும் சீர்செய்தலும், தளையறுத்தலும் ஓசைபற்றி அல்லது எழுத்துப் பற்றியன்று.'

இவ்வாறு கூறும் சிவஞான முனிவரின் விளக்கம் ஓசைக் குள்ள செல்வாக்கைத் தெளிவாகத் தெரிய வைக்கின்றது. ஓசை மாசுபடாதிருப்பதற்காக எழுத்தும், சொல்லும், சொற்றொடரும் வேண்டிய இடங்களில் யாப்புக் கட்டுக்கோப்புக் கருதித் தம் இயல்பான அமைதிநிலையிழந்து, அஃதாவது இலக்கணத்திலிருந்து உறழ்ந்தோ பிறழ்ந்தோ அல்லது திரிந்தோ வழிவிலகி, ஓசை ஓட்டத்திற்குப் பாதை திறந்துவிடுதல் வேண்டும். அன்றி, ஓசை இவற்றிற்கு விலகிக் கொடுக்காது. விலகின், யாப்புப் பொருத்துக்கள் விலகி, யாப்பு யாப்பற்றதாய் விடும். எனவே ஓசை வரையறைகளுக்கு அமைதி கூறும் யாப்பிலக்கணம் பேராற்றல் வாய்ந்ததாதல் வேண்டும். அன்றேல் இலக்கண உறழ்ச்சிகளும் விரிவும் ஏற்பட நியாயமில்லை.

ஏறத்தாழத் தமிழ் இலக்கியப் பரவை முழுவதும் செய்யுள் மயமே. அதனால் செய்யுள் வடிவங்களின் வன்மையும் தன்மையும் எழுத்து, சொல் இலக்கணங்களைத் தம் செல்வாக்கிற்கு உட்படுத்தி இருப்பதில் வியப்பும் புதுமையும் இல்லை. யாப்பின் செல்வாக்கு இன்றேல் எழுத்திலக்கணம் இத்தனை விரிவடைய இடமில்லை. இலக்கண நூலோர்களும் உரையாளர்களும் ஆண்டாண்டுக் கூறிய விளக்கங்கள் இதனை அடித்துக் கூறுகின்றன. சார்பெழுத்துக்களின் விரிவு பல்வகைப் பட்ட விகாரங்கள் எல்லாம் யாப்பின் தாக்கமே.' [1]

பண்டிதர் க. வீரகத்தியின் மேற்போந்த கருத்துக்கள் சொல்லிலக்கண மாற்றங்களுடன், புணர்ச்சி விகாரங்களின் பெருக்கத்துக்கும் யாப்பின் செல்வாக்கே காரணமெனத் தெளிவுறுத்துகின்றன. அவருடைய நூல் முழுவதையும் படித்துப் பார்ப்பின், தமிழ் இலக்கணங்களிலே ஏன் பெருந்தொகையான புணர்ச்சி விதிகள் அமைக்கப்பட்டன

என்பதற்குரிய காரணத்தினை ஓரளவு ஊகித்துணரக்கூடியதாயுள்ளது. செறுத்த செய்யுள் இயற்ற வேண்டுமென்றால், தொகைகளின் பிரயோகமும் சொற்களை விரித்துக் கூறுது புணர்த்திக் கூறும் நிலையும் வேண்டப்படுவன. கபிலன் + பரணன் என இரு பெயர்களையும் தனித்தனியே கூறுது ஒரே தொடராகச் செய்யுளிலே கையாளவேண்டுமெனில், கபிலபரணர் எனப் புணர்த்திக் கூறலாம். இரா, நிலா என்னுஞ் சொற்களைப் போன்றதான் இரு, புரு என்னுஞ் சொற்களும். ஆனாற் சங்கப் புலவர்கள் அவற்றை இறவு, புறவு எனத் தம்முடைய செய்யுட்களிலே கையாண்டுள்ளனர். இதற்காக விசேடமான புணர்ச்சி விதியொன்றினை வகுக்கின்றார் தொல்காப்பியர்.

குறியதன் னிறுதிச் சினைகெட வுகர
மறிய வருதல் செய்யுளு ளுரித்தே

என்னும் அச்சூத்திரத்துக்கு உரை வகுக்கும் நச்சினார்க்கினியர்,

இறவுப்புறத் தன்ன பிணர்ப்படு தடவுமுதற்
கறவுக்கோட் டன்ன முள்ளிலைத் தாழை

என்னும் நற்றினை 19-ம் பாடலடிகளையும்,

புறவுப்புறத் தன்ன புன்காயுகாய்

என்னும் குறுந்தொகை 274-ம் பாடலடியையும் உதாரணங்களாகக் காட்டுவர்.

தமிழ் இலக்கணகாரர் கூறிய புணர்ச்சி விதிகளுட் சில உச்சரிப்பினை இலகுவாக்குகின்றன என்னும் ஒரு காரணத்தினையும் இங்கு குறிப்பிடலாம். உதாரணமாக அவ் + ஞானம் என்னுந் தொடரினை எடுத்துக் கொள்ளலாம். அதனை அப்படியே அவ்ஞானம் என அமைப்பின் உச்சரிப்பது எவ்வளவு கஷ்டமாயிருக்கும் என்பதை இங்கு விளக்க வேண்டியதில்லை. இக்கஷ்டத்தினை நீக்குமுகமாகத் தமிழ் இலக்கணகாரர் அத்தொடரினை அஞ்ஞானம் என இலகுவாக உச்சரிக்கக் கூடிய வகையிலே புணர்த்தும்படி சூத்திரஞ் செய்துள்ளனர்.

RangaRakes tamilnavarasam.com

கட்டு வகரமூ வினமுற முறையே
ஆய்தமு மென்மையு மியல்பு மாகும்.[2]

என்பது இவ்விதிபற்றிக் கூறும் நன்னூற் சூத்திரமாகும்.

உச்சரிப்பினை இலகுவாக்குகின்ற அதே வேளையில். எழுத்துக்களினுடைய சொந்தமான ஒலிப்பண்பினைப் பேணுவதற்கும் சில புணர்ச்சி விதிகள் அவசியமாயின. உதாரணமாக, முள்+குறை என்னுந் தொடரை அப்படியே முள்குறை என அமைப்பின் அச்சொல்லிலுள்ள ககர மெய்யின் ஒலிப்பண்பிலே மாற்றமேற்பட்டுவிடும். நாமடிப் பிரிவளி ஒலியாகிய ளகரத்தை உச்சரித்துவிட்டு, கடையண்ண ஒலிப்பில் தடையொலியான ககரத்தை உச்சரிப்பது இலகுவானதல்ல. அப்படி உச்சரிக்க முயன்றால், ககரம் ஒலிப்புடைக் கடையண்ண உரசொலியாகவே மாறவேண்டியேற்படும். இம்மாற்றத்தினைத் தடுப்பதற்கு நாமடிப் பிரிவளி ஒலியாகிய ளகரத்தை, நாமடி ஒலிப்பில் தடையொலியாக மாற்றியமைக்கலாம். அதாவது ளகரத்தை டகரமாக மாற்றுதல். எனவே, முள்+குறை என்பது முட்குறை என அமைகின்றது. லகர ளகரப் புணர்ச்சி விதிகள் இந்த உண்மையினையே எமக்குப் புலப்படுத்துகின்றன.

வழமையான முறையிலே இரண்டு சொற்கள் புணர்ந்து தொடராயின், அத்தொடர் வேறு பொருள் குறிப்பதாக அமைந்துவிடக் கூடும். இப்பொருள் மாற்றத்தினைத் தடுப்பதற்காகச் சில சந்தர்ப்பங்களிலே சிறப்பான புணர்ச்சி விதிகள் தேவைப்படுகின்றன. உதாரணமாக, மா+காய் என்னுந் தொடர் இயல்பான முறையிலே மாகாய் என்றோ, பொதுவான புணர்ச்சி விதியை அனுசரித்து மாக்காய் என்றோ புணரின், அது 'பெரிய காய்' என்ற பொருளிலே அமைந்துவிடும். 'மாவின் காய்' என்னும் பொருள் தருவதாக அத்தொடர் அமைய வேண்டியதால், வல்லெழுத்துக்குப் பதிலாக மெல்லெழுத்து வந்து மாங்காய் என அமையலாயிற்று. தமிழ் இலக்கணகாரர் இச் சிறப்பு விதியினைத் தம் இலக்கண நூல்களிலே கூறியுள்ளனர்.

சில புணர்ச்சி விதிகள் மூலம் தமிழ்ச் சொற்கள் சிலவற்றின் பழைய வடிவம் என்னவென்பதை இலக்கணகாரர் காட்ட முற்பட்டிருக்கின்றனர் எனலாம். உதாரணமாக, தமிழ்+பிள்ளை என்னுந் தொடர் தொல்காப்பியிரின் எழுத்ததிகார 385 ஆம் சூத்திரமாகிய தமிழென் கிளவியு மதனோரற்றே என்பதனால், தமிழப்பிள்ளை எனவே புணரும். தமிழ்ப் பிள்ளை எனப் புணரவேண்டிய தொடரினை ஒரு சிறப்பு விதியாலே தமிழப்பிள்ளை எனப் புணர வைத்ததின் நோக்கம் என்ன? தமிழ் என்னுஞ் சொல்லின் பழைய வடிவம் தமிழ என்பதாகும். பிற நாட்டவர்களுடைய வராற்றுக் குறிப்புக்களிலெல்லாம் அகர ஈறுடையதாக தமிழ என்ற சொல்லே குறிப்பிடப்பட்டுள்ளது என்பது இங்கு மனங்கொள்ளத் தக்கதாகும். இதே போன்று ஒலிநயத்துக்காக வல்லொற்றுக்களைக் கொண்ட பல பழைய சொற்கள் மெல்லொற்றுடன் வழங்கி வருகின்றன. அவற்றினுடைய பழைய வடிவங்களைப் புணர்ச்சி நிலைகளிலேயே காணக்கூடியனவாயுள்ளன. உதாரணமாக நன்னூலாருடைய,

மென்றொடர் மொழியுட் சிலவேற் றுமையிற்
றம்மின வன்றொட ராகா மன்னே.[3]

என்னுஞ் சூத்திரத்தினையும் அதற்குரிய உரையினையுங் காட்டலாம். மென்றொடர்க் குற்றியலுகரங்களான மருந்து, கரும்பு, சிலம்பு, குரங்கு போன்ற சொற்கள் தம்மின வன்றொடர்களாக ஆவதே வழக்கமாகும். அதனால், மருந்து+பை, கரும்பு+வில், சிலம்பு+அதிகாரம், குரங்கு+மனம், என்னுந் தொடர்கள் முறைய மருத்துப்பை, கருப்புவில், சிலப்பதிகாரம், குரக்குமனம் என அமைந்து விடுகின்றன. இவற்றிலிருந்து வேறுபடும் சிலவற்றைக் குறிக்கவே மேற்படி சூத்திரம் அமைக்கப்பட்டுள்ளது. மருத்து, கருப்பு, சிலப்பு, குரக்கு என்பனவே தமிழ்மூலச் சொற்களாகும். அவை திராவிட மொழிகள் எல்லாவற்றிலுமே காணப்படும் மென்மை புகுத்தும் பண்பு காரணமாக முறையே மருந்து, கரும்பு, சிலம்பு, குரங்கு என்றமைந்தன. புணர்ச்சி நிலையிலேயே இவற்றின் பண்டைய வடிவங்கள் தென்படுகின்றன.

RangaRakes tamilnavarasam.com

2. தொல்காப்பியர் கூறிய புணர்ச்சி

தொல்காப்பியர் எழுத்ததிகாரத்தில் ஆறு இயல்களிலே புணர்ச்சிபற்றிக் கூறுகிறார். புணர்ச்சி பற்றிய பெரும்பான்மையான கருத்துக்களையெல்லாம் 'புணரியல்' என்னும் இயலிலே வகைப்படுத்துகிறார். முதலில் புணர்ச்சி நடை பெறக்கூடிய இடமும் அதனுடன் தொடர்புடைய எழுத்துக்களும் கூறப்படுகின்றன. தான் மொழிக்கு ஈறாக வருமென்று முன்னர்க் கூறிய எழுத்துக்கள் ஈற்று நிலையிலும், மொழிக்கு முதலாக வருமென்று கூறிய எழுத்துக்கள் முதனிலையிலும் அமையவே புணர்ச்சி நடைபெறுமென்பர். ஈற்றிலே இடம் பெறும் மெய்யெழுத்துக்களும் குற்றியலுகரமும் புள்ளியுடன் அமையுமெனக் கூறும் தொல்காப்பியர் உயிர் மெய்களாக எவையேனும் ஈற்றிலே இடம்பெறின், அவற்றை உயிர் ஈறுகளாகவே புணர்ச்சிக்குக் கருதவேண்டுமென்பர். புணர்ச்சிக்குரிய இரு மொழிகளின் இயல்பு அடுத்துக் கூறப்படுகின்றது. இரண்டு சொற்களின் எல்லைகளிலே புணர்ச்சி நடைபெறும். அவ்வாறான சொற்களில் புணர்ச்சிக்குரிய ஈற்றினை நிறுத்தசொல் (நன்னூலார் நிலைமொழி என்பர்) என்றும், முதனிலையுடையதைக் குறித்தசொல் (நன்னூலார் வருமொழி என்பர்) என்றும் கூறப்படும். அவ்விரு சொற்களின் ஈறும் முதனிலையும் வருமாற்றினைப் பின்வருமாறு தொல்காப்பியர் வகைப்படுத்துகிறார்:

நிறுத்த சொல்	குறித்தசொல்
உயிர்	உயிர்
உயிர்	மெய்
மெய்	உயிர்
மெய்	மெய்

இவ்வாறு நிறுத்த சொல்லின் ஈற்றெழுத்தோடு குறித்துவரு சொல்லின் முதலெழுத்துப் புணருமிடத்து, அவ்விருவகைப் பட்ட சொற்களும் எத்தகைய இலக்கண வகைமையைச் சார்ந்தனவென்பதைத் தொல்காப்பியர் பின்வருமாறு வகைப்படுத்துவர்:

பெயர்+பெயர்
பெயர்+தொழில்
தொழில்+பெயர்
தொழில்+தொழில்

புணர்ச்சி காரணமாக ஏற்படும் மாற்றங்கள் மூன்று வகை எனக் குறிப்பிடுகிறார் தொல்காப்பியர். அவை: மெய் வேறுபடுதல், மிகுதல், குன்றல் என்பனவாகும். வேறுபடுகின்ற பண்பு மெய்யெழுத்துக்கே உரியதாகும். மிகுதலும் குன்றுதலும் உயிருக்கும் மெய்க்கும் பொதுவானவையாகும். இவ்வாறு நடைபெறும் புணர்ச்சியினைத் தொல்காப்பியர் வேற்றுமை குறித்த புணர்ச்சி என்றும், வேற்றுமையல்வழிப் புணர்ச்சி என்றும் இருவகையாகப் பாகுபாடு செய்வர். உருபுகள், சாரியைகள் புணர்ச்சியிலே எவ்வாறு இடம்பெறுகின்றன என்றெல்லாம் கூறி, புணர்ச்சி காரணமாகப் பொருள் வேறுபடுதலையுங் கூறி அவ்வியலை முடிக்கின்றார். ஏனைய இயல்கள் இப்பொதுப் பண்புகளை அடிப்படையாகக் கொண்டு புணர்ச்சியில் ஏற்படக்கூடிய சிறப்பு நிலைகளைக் கூறுகின்றன.

தொல்காப்பியருடைய காலத்தில் குற்றியலுகரம் ஓர் ஒலியனாக அமைந்தது மட்டுமன்றி, அது செய்யுள் எழுத்தாகவும் (Metrical letter) கருதப்பட்டது. அதனாலே, தொல்காப்பியர் குற்றியலுகரம் புணரும் வகைகளைக் கூற ஓர் இயலையே தனியாக அமைக்கவேண்டியேற்பட்டது. ஆனால், பிற்காலத்திற் குற்றியலுகரம் ஒலியனாகக் கணிக்கப்படாததுமாத்திரமன்றி, செய்யுள் எழுத்தாகவும் கொள்ளப்படவில்லை. இதனால், தொல்காப்பியர் கூறிய விரிவான குற்றியலுகரப் புணர்ச்சி சுருக்கமாகக் கூறப்பட்டது

தொல்காப்பியர் கூறியுள்ள புணர்ச்சி விதிகளை ஊன்றிக் கவனிக்குமிடத்து ஒரு விடயம் தெற்றெனப் புலனாகின்றது அதாவது, அவர் கூறிய புணர்ச்சிகளெல்லாம் சொற்களின் எல்லைகளிலேயே நடைபெறுகின்றன என்பதாகும். குறிப்பாக நிறுத்தசொல் முழுச் சொல்லாகவே அமைந்திருக்கும். அப்படியானால் ஒரு சொல்லினுள்ளே

RangaRakes tamilnavarasam.com

நடைபெறும் புணர்ச்சி பற்றி அவர் கூறவில்லையா? இது ஆராயப்படவேண்டிய விடயமாகும்.

எஞ்சிய மூன்று மேல்வந்து முடிக்கு
மெஞ்சுபொருட் கிளவி யிலவென மொழிப[4]

என்னும் சூத்திரத்திலே தொல்காப்பியர் வந்து என்னுஞ் சொல்லினைக் கையாண்டுள்ளார். இச்சொல் எவ்வாறு ஆயிற்று? அதனுள்ளே நடந்த புணர்ச்சிகள் என்ன? தொல்காப்பியச் சூத்திரங்களிலே இவற்றுக்குத் தெளிவான விடையில்லை. வந்து என்னும் சொல் இக்கால வழக்கிலே இறந்தகாலத் தெரிநிலை வினையெச்சமாகவும் வா+த்+த்+உ என்பன புணர்ந்து வந்த வடிவமாகவும் கொள்ளப்படும். தொல்காப்பியர் காலத்திலும் இப்படித்தான் இந்த வடிவம் அமைந்ததோ என்னவோ தெரியவில்லை. வினைச்சொல் காலங்காட்டுமெனக் கூறும் தொல்காப்பியர் காலங்காட்டும் இடைநிலைகள் எவையெனக் கூறவில்லை வினைசெயன் மருங்கிற் காலமொடு வருநவும் என இடையியலிலே தொல்காப்பியர் கூறியிருக்கிறாரேயொழிய 'காலமொடு வருந' எவை என எங்கும் கூறவில்லை இதனால், வந்து என அமையும் சொற்களுக்கிடையே நடைபெறும் புணர்ச்சி பற்றிக் கூறமுடியாது போயிற்று.

ஒரு சொல்லின் உட்பகுப்புக்களைச் சிற்றின அடிப்படையிற் பகுத்து ஆய்வு செய்யும் முறை மேலைத்தேய இலக்கண காரரிடம் தோன்றுதற்கு முன்னரேயே இந்திய இலக்கண காரரிடம் காணப்பட்டதென மேலைத்தேய அறிஞர்களே ஏற்றுக்கொள்கின்றனர்[5] மேலைத்தேயத்தில் விஞ்ஞான வளர்ச்சி துரிதமடைந்த காலத்திலேயே உயிரியல் விஞ்ஞானத்தில் உடற்கூறுகளைப் பகுப்பாய்வு செய்யும் பகுதியினை Morphology என்று அழைத்தனர். உடற்கூறுகளைத் தனித் தனியாகவும் கூட்டாகவும் நோக்குதற்கு இப்பகுப்பாய்வு முயற்சி பெரிதும் உதவியது இத்தகைய முயற்சி சொற் கூறுகளைப் பகுப்பாய்வு செய்வதற்கும் இட்டுச் சென்றது. உயிரியல் விஞ்ஞானத்திலே உபயோகிக்கப்பட்ட Morphology என்னுஞ் சொல்லே இம்முயற்சியைக் குறிக்கவும் கையாளப்

பட்டது. பாணினியினுடைய இலக்கண நூல் பல்லாயிரக் கணக்கான இலக்கண விதிகளை உள்ளடக்கியது. சொல் லாக்கத்துக்குக் குறிப்பிட்ட விதிகளை ஓர் ஒழுங்கு முறையிலே பிரயோகிக்குமிடத்து, குறிப்பிட்ட சொல் பிறப்பிக்கப்படு கின்றது. சொல்லின் உட்பகுப்புக்களைக் கூறுவது மாத்திர மன்றி, அவற்றை வரிசைக்கிரமமாக, ஒழுங்கான விதிப் பிரயோகம் மூலம் சேர்த்துச் சொல்லாக்கும் வழியும் கூறப் பட்டுள்ளது. இது இக்கால மாற்றமைப்புப் பிறப்பாக்க இலக்கணக்காரரின் (Transformational Generative Grammarians) விளக்க நெறியாக அமைந்துள்ளது.[6]

எமது பண்டைய இலக்கண நூலாகிய தொல்காப்பியத் திலோ சொல்லின் உட்பகுப்புக்கள் கூறப்பட்டுள்ளன. ஆனால் அவற்றின் சேர்க்கை எவ்வாறு சொல்லினை ஆக்குகின்றது என்பதற்கு விதிகள் அந்நூலிலே கூறப்படவில்லை. அவ்வாறு விதிகள் இல்லாமைக்கு காரணங்கள் கூறலாம். சொல்லின் உட்பகுப்புக்களைப் பெயரிட்டுக் கூறிவிட்டு அவற்றுட் சில வற்றின் கூறுகளைக் கூறாது விடுத்தமை ஒரு காரணமாகும். உதாரணமாக,

இறப்பி னிகழ்வி னெதிர்வி னென்றச்
சிறப்புடை மரபி னம்முக் காலமுந்
தன்மை முன்னிலை படர்க்கை யென்னு
மம்மூ விடத்தான் வினையினுங் குறிப்பினு
மெய்மை யானு மிவ்விரண் டாகு
மவ்வா றென்ப முற்றியல் மொழியே[7]

என்று எச்சவியலிலே வினைமுற்றுக்கு இலக்கணம் கூறுமிடத்து அதன் உட்பகுப்புக்களாகிய காலங்காட்டும் அலகும், மூவிடங் காட்டும் அலகும் (அதுவே திணை, பால் ஆகியவற்றையுங் காட்டும்) காட்டப்பட்டுள்ளன. அவற்றுள் திணை, பால், இடம் ஆகியன காட்டும் அலகின் கூறுகளின் விபரங்கள் கிளவியாக்கத்திலும் வினையியலிலும் கூறியுள்ளார். ஆனால், காலங்காட்டும் அலகினுடைய கூறுகள் பற்றிய விபரங்கள் எங்கும் கூறப்படவில்லை. ஆனால், தொல்காப்பியரே, உரைத்தனர் (பொருள்: செய்யுளியல், சூ. 313), சொல்

RangaRakes tamilnavarasam.com

லினர் (பொருள்: மரபியல், சூ 641), உணர்ந்தோர் (பொருள்: அகத்திணையியல், சூ 4) என்னும் வினைமுற்றுச் சொற்களை உபயோகிக்கின்றார். அவற்றுள் வினையடிகள் தவிர, பல்லோர் மருங்கிற் படர்க்கைச் சொல்[8] என்றும்,

ரஃகா னெற்றும் பகர விறுதியு
மாரைக் கிளவி யுளப்பட மூன்று
நேரத் தோன்றும் பலரறி சொல்லே[9]

என்றும் இறுதி அலகாகிய 'அர்/ஓர்' பற்றித் தொல்காப்பியர் கூறியுள்ளார். இடையிலே இருப்பனபற்றி எவ்விதிகளும் வகுத்தாரில்லை. அன்று வாழ்ந்தாருக்கு அவையெல்லாந் தெரிந்திருக்குமெனச் சமாதானங் கூறின், 'ரஃகா னெற்றுப் பலரறி சொல்லே' என்பதும் தெரிந்திருக்க வேண்டுமே.

> 'வினையின் காலக்குறிகளைக் குறித்து ஒன்றேனும் தொல்காப்பியர் கூறவில்லையெனினும் வினைச்சொல் முக்காலமும் காட்டுமென்று அவரே கூறியிருப்பதால்.....'[10]

என்னும் சிவராஜபிள்ளையின் கூற்று அமைவதை இச் சந்தர்ப்பத்திற் சுட்டுதல் பொருத்தமாகும்.

இனிச் சொல்லின் உட்பிரிவுகள் கூறிய தொல்காப்பியர் அவற்றின் கூறுகள் புணருமாற்றைக் கூறாது விடுத்தது இரண்டாவது காரணமாகும். உதாரணமாக சொல் என்னும் வினையடியும் அர் என்னும் பல்லோர் படர்க்கையும் சேர்ந்து எவ்வாறு சொல்லினர் என்னும் வினைமுற்றுயிற்று என்பதற்கு விதிகள் புணரியலிலே வகுக்கப்படவில்லை. தனிச் சொல்லுக்குள் நடைபெறும் புணர்ச்சி பற்றித் தொல்காப்பியர் கூறாது விட்டதன் காரணம் என்னவென்று தற்போது தெளிவாகவில்லை. முன்னிலை முன்ன ரீயு மேயு[11] என்னுஞ் சூத்திரத்துக்கு சேனாவரையர்,

> 'இவ்வெழுத்துப் பேறு புணர்ச்சி விகாரமாதலின் ஈண்டுக் கூறற்பாற்றன்றெனின், அன்றன்று. 'இயற்பெயர் முன்ன ராரைக் கிளவி' அப்பெயரோடு ஒற்றுமைப்பட்டு நின்றூற் போல முன்னிலை முன்ன ரீயுமேயும் முன்னிலைச் சொல்லொடு ஒற்றுமைப்பட்டு நிற்றலான், நிலைமொழி வருமொழி செய்து புணர்க்கப்படாமையான், அம் மெய் புணர்ச்சி விகாரமெனப்படாவென்க.'[12]

என்று உரைவகுக்கின்றார். 'நிலைமொழி வருமொழி செய்து புணர்க்கப்படாமையான் அம்மெய் புணர்ச்சி விகாரமெனப் படா' என்ற பகுதி தொல்காப்பியரின் நிலையையும் ஓரளவு எடுத்துக் காட்டுகின்றது. தொல்காப்பியர் இரு தனிச் சொற்கள் அல்லது பெயர்ச்சொல்லும் வேற்றுமையுருபும் முறையே நிலைமொழியாகவும் வருமொழியாகவும் நின்று புணரும் வகைக்கே விதிகள் கூறியுள்ளார். இன்னுஞ் சேனாவரையர் 'வினைச்சொலிறுதி நிற்குமிடைச்சொற்றுமென வேறு உரைப்படாது அச்சொற்குறுப்பாய் நிற்குமன்றே, இவை யவ்வாறு பெயர்க்குறுப்பாகாது தாமென வேறுணரப்பட்டிறுதி நிற்குமென்பார் 'நிலைதிரியாது' என்றார்.'[13] என்று கூறிச் சென்றுள்ளதை இங்கு சுட்டிக் காட்டலாம்.

தொல்காப்பியரைப் பல்வேறு வகையிலே பின்பற்றும் நன்னூலார் பதவியல் என்றொரு புதிய இயலினைத் தன் இலக்கண நூலிலே அமைத்துப் பகுதிகள் பற்றியும். விகுதிகள் பற்றியும் கூறுமிடத்து அவருக்கு எவ்வித பிரச்சனையும் இருக்கவில்லை. தொல்காப்பியரும் இத்தகைய இலக்கணக் கூறுகள் பற்றிக் கூறியிருக்கிறார். ஆனால், அவர் இடைநிலைகள் பற்றி எதுவும் எங்கும் கூறினாரில்லை. இதனால், இடைநிலைகள் பற்றிப் பதவியலிலே கூறமுற்பட்ட நன்னூலார்,

இலக்கியங் கண்டதற் கிலக்கண மியம்பலிற்
பகுதி விகுதி பகுத்திடை நின்றதை
வினைப்பெய ரல்பெயர்க் கிடைநிலை யெனவே[14]

என்று கூறவேண்டியேற்பட்டது. தொல்காப்பியர் இடைநிலைகள் பற்றிக் கூறாத காரணத்தால், தான் எப்படி அதனைக் கூறமுடியும் என்ற தயக்கம் நன்னூலாருக்கு ஏற்பட்டதோ என்னவோ தெரியவில்லை. பகுதி, விகுதி பற்றிக் கூறுமிடத்து 'இலக்கியங் கண்டதற்கிலக்கணம்

RangaRakes tamilnavarasam.com

இயம்பும்' மரபு பற்றிக் கூறுத நன்னூலார் இடைநிலைகள் பற்றிக் கூறும் சந்தர்ப்பத்தில் மாத்திரம் அவ்வாறு கூறுவது சிந்திக்க வேண்டியேற்பட்டுள்ளது.[15]

சொல்லின் உட்பகுப்புக்களைத் தெளிவுறக் கூறுவதற்கும், அவற்றின் பண்புகளை விளக்கமாக எடுத்தியம்பவும் நன்னூலாருக்குப் பதவியல் என்னும் பகுதி நன்முக உதவியுள்ளது. நாவலர் பதிப்பித்து வெளியிட்ட காண்டிகையுரையில், பதவியலின் தொடக்கத்தே பின்வரும் அடிக்குறிப்பொன்று காணப்படுகின்றது.

> 'இவ்வியல் வடமொழி இலக்கணத்தையுந் தழுவிச் செல்கின்றமையால், பதம் என்னும் வடமொழியை முற்கூட்டிப் பதவியல் எனப்பெயரிட்டனர் போலும்'[16]

நன்னூலார் வடமொழியைப் பின்பற்றி இவ்வியலை அமைத்தாரோ என்னவோ, பதவியல் என்னும் இப்பகுதி தமிழ் மொழியிற் சொல் என்னும் இலக்கணப் பகுதியின் உட்பிரிவுகள், அவற்றின் பண்புகள் ஆகியவற்றைச் செவ்வனே எமக்கு அறிவுறுத்துகின்றன என்பதில் எவ்வித ஐயமுமில்லை. அத்துடன் அத்தகைய உட்பிரிவுகள் ஒன்று சேர்ந்து சொல் ஆகுவதற்கு நன்னூலார் தன்னுடைய இலக்கண நூலிலே விதிகளும் வகுத்துள்ளார். உதாரணமாக, சிறியன் என்னுஞ் சொல் எவ்வாறு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதை நோக்குவோம்:

சிறுமை	நன். பதவியல்:	135
சிறுமை+அன்	நன். ,, :	140, 276
சிறி+அன்	நன். ,, :	136
சிறி+ய்+அன்	நன். புணரியல்:	162
சிறியன்	நன். ,, :	204

நன்னூலார்கூட பெயர்ச்சொற்களின் ஆக்கத்துக்குச் சொல்லுட் புணர்ச்சி விதிகள் கூறியிருக்கின்றாரேயன்றி, வினைச்சொற்கள் சிலவற்றைப் பிறப்பிப்பதற்கு விதிகள் கூறவில்லையென்றே கொள்ள வேண்டியுள்ளது. பெயர்ச் சொற்களுங் கூட, அவர் சொல் எல்லைகளிலே புணர்ச்சி

நடைபெறுதற்குக் கூறிய பொது விதிகளாலேயே பிறப்பிக்கப்படுகின்றன. வினைச்சொற்களுக்குரிய காலங்காட்டும் இடைநிலைகளை நன்னூலார் குறிப்பிட்டுள்ளபோதும், அவை வினையடிகளுடன் சேருமிடத்து நடைபெறும் புணர்ச்சி பற்றி விதிகள் வகுக்கவில்லையென்றே கூறலாம். உதாரணமாக, நடந்தான் என்னும் வினைவடிவத்தில், நன்னூலார் கூறிய,

> தடறவொற் றின்னே யெம்பான் மூவிடத்
> திறந்த காலந் தருந்தொழி லிடைநிலை[17]

என்னுஞ் சூத்திரத்தின்படி தகரவொற்று காலங்காட்டும் இடைநிலையாக வந்துள்ளது என்று கொள்ளலாம். அப்படியாயின், அவ்வினைவடிவத்தின் உட்கூற்றுப் பகுப்பு நட+த்+த்+ஆன் என்று அமைய வேண்டும். இதில், தகரவொற்று எவ்வாறு நகரவொற்றுகத் திரிந்தது என்பதற்குப் புணரியலிலே விதி அமைக்கப்படவில்லை. தொல்காப்பியரிலும் இதே நிலையே காணப்படுகின்றது.

3. புணர்ச்சி விகாரங்களின் அடிப்படை

3:1 தோன்றல்

புணர்ச்சி நடைபெறுமிடத்து மூன்று வகையான மாற்றங்கள் நிகழுமெனத் தமிழ் இலக்கணகாரர் கூறியுள்ளனர். அம்மாற்றங்களாவன: தோன்றல், திரிதல், கெடுதல் ஆகிய மூன்றுமாகும். இவற்றின் அடிப்படை என்ன என்பதுபற்றி ஆராயவேண்டியது அவசியமாகும். முகலிலே தோன்றல் விகாரத்தினை எடுத்துக்கொள்வோம். புணர்ச்சி காரணமாக சில இடங்களிலே எழுத்துக்களோ சாரியைகளோ தோன்றுவது பற்றித் தமிழ் இலக்கணகாரர் விதிவகுத்துள்ளனர். உதாரணமாக இரண்டு உயிரெழுத்துக்கள் புணர்ச்சி எல்லைகளிலே வருமிடத்து, அவற்றை ஒன்று சேர்ப்பதற்கு உடம்படுமெய் தோன்றுதல் பற்றித் தொல்காப்பியர் தொடக்கமான தமிழ் இலக்கணகாரர் விதிவகுத்துள்ளனர். 'பொதுவாகத் திராவிட மொழிகள் எல்லாவற்றிலும், இரண்டு உயிர்களுக்கிடையேயுண்டாகும் இடைவெளி 'வ'கரம் அல்லது 'ய'கர வுடம்படுமெய்

RangaRakes tamilnavarasam.com

நுழைவால் தடுக்கப்பெறும்'' என்று கால்டுவெல் கூறுவர்.[18] தமிழ் மொழியின் ஒட்டுநிலைத் தன்மையினை நிலைநிறுத்துவதற்காக அருகருகே வரும் உயிர்கள் தனித்துவமுடையனவாக, மாற்றமெதுவுமின்றி, உச்சரிப்பதற்கேதுவாக உடம்படுமெய் தோன்றுகின்றதெனலாம்.

இரண்டு சொற்கள் சேருமிடத்து அவையிரண்டும் ஒரு சொன்னடையவாய் அமையவும் தோன்றல் விகாரம் நடைபெறுகின்றது. உதாரணமாக, அது குருவி கூடு என்று அறிந்தேன் என்னும் வாக்கியத்திலே இடம்பெறும் தொடராகிய குருவி கூடு என்பது, ககரமெய் தோன்றி, குருவிக் கூடு என ஒரு சொன்னடையவாக அமையாவிடின் மேற்படி வாக்கியம் 'அது குருவி என்றும் கூடு என்றும் அறிந்தேன்' என்னும் பொருளையே தரும். இதனால் சொற்கள் இரண்டினைப் பிணித்து ஒரு சொற்றொடராக ஆக்குதற்குப் புணர்ச்சியிலே தோன்றல் விகாரம் உதவுவதை உணரக் கூடியதாயுள்ளது.

மெய்யும் உயிரும் புணர்ச்சி எல்லைகளிலே வரின், உடன்மே லுயிர்வந் தொன்றுவ தியல்பே[19] என்னுஞ் சூத்திரத்தின்படி மெய்யும் உயிரும் ஒன்றுபட்டு இணங்கி நிற்கும். ஆனால், கண்+அழகு என்னுந் தொடரிலே இதே விதி பிரயோகிக்கப்படில் கணழகு என்றே புணர்ந்து முடியும். அச்சொற்றொடரை உச்சரிப்பதிலேயுள்ள கஷ்டத்தினை எவரும் உணர்வர். அதனை நீக்குதற்காக நிலைமொழியின் ஈற்றிலுள்ள எழுத்தின் இன்னொன்றினை தோற்றுவித்தல் பொருத்தமாகும். அதன்படி கண்+அழகு என்பது கண்ண்+அழகு என அமைந்து, கண்ணழகு எனப் புணர்ந்து முடியும். இது போன்று, உச்சரிப்பினை இலகுவாக்குவதற்காக மொழியின் பல இடங்களிலே தோன்றல் விகாரம் நடைபெறுகின்றது. தமிழ் இலக்கணகாரர் இத்தகைய இடங்களை அவதானித்து அவற்றுக்கேற்றபடி விதிகளை வகுத்துள்ளனர்.

பொருள் நிலைபேறுக்காவும் தோன்றல் விகாரம் நடைபெறுவதுண்டு. அதாவது வழமையான முறையிலே இரண்டு சொற்கள் புணரின், அவற்றின் பொருள் மாற்றமடைய

லாம். அம்மாற்றத்தினைத் தடுப்பதற்காக அச்சொற்கள் புணருமிடத்துச் சாரியை ஒன்று தோன்றுவதுண்டு. உதாரணமாக புளி+பழம் என்னுந் தொடர் வழமையான முறையிலே புணரின், புளிப்பழம் என அமையும். இத்தொடர் 'புளியான ஏதோவொரு பழம்' என்னும் பொருளையுங் கொடுக்குமாகையால் அச்சொற்களுக்கிடையே 'அம்'முச் சாரியை தோன்றி, புளியம்பழம் என அத்தொடர் அமைவது பற்றித் தமிழிலக்கணகாரர் கூறியுள்ளனர். புளிமரக் கிளவிக் கம்மே சாரியை[20] எனத் தொல்காப்பியர் உயிர் மயங்கியலிலே இவ்விதியினை வகுத்துள்ளனர்.

ஒலிநயங்கருதிப் புணர்ச்சியிலே எழுத்தோ சாரியையோ தோன்றுவதுண்டு. புளி+கறி என்னுந்தொடர் பொதுவான புணர்ச்சி விதிகளின்படி ககரவொற்று மிகுந்து புளிக்கறி என அமையும். ஆனால், ஒலிநயத்துக்காக இடையிலே இன மெல்லெழுத்துத் தோன்றி, புளிங்கறி எனவும் அமைவதுண்டு. தொல்காப்பியருடைய,

ஏனைப் புளிப்பெயர் மெல்லெழுத்து மிகுமே[21]

வல்லெழுத்து மிகினு மான மில்லை
யொல்வழி யறிதல் வழக்கத் தான[22]

என்னுஞ் சூத்திரங்கள் அவ்வியல்பினை எடுத்துக்கூறுவனவாயுள்ளன.

3 2. திரிதல்

தமிழ் இலக்கணகாரர் கூறியுள்ள புணர்ச்சி விதிகளுள், திரிதல் விகாரம் பற்றியனவற்றை நோக்குமிடத்து அவற்றுட் பெரும்பாலன ஓரினமாகும் (assimilation) பண்பினையே தெளிவுறுத்துகின்றன. முயற்சிச் சிக்கனமே மொழியில் ஓரினமாகும் இயல்பினைத் தோற்றுவித்ததென ஒட்டோ ஜெஸ்பர்சன் விளக்குவர்.[23] உச்சரிப்பதற்குக் கஷ்டமான முறையிலே தொடர்கள் அமையுமிடத்து அக்கஷ்டத்தினை நீக்குதற்கும் திரிதல் விகாரம் உதவுகின்றது. உதாரணமாக, பழம்+சீலை என்னும் இரு சொற்களும், ஒன்று அடையாகவும், மற்றையது பெயராகவும் அமைந்து ஒரு சொன்

RangaRakes tamilnavarasam.com

னடையவாக அமையும்போது நாம் பழஞ்சீலை என்றுதான் உச்சரிக்கிறோம். இங்கு பழம் என்னுஞ் சொல்லின் ஈற்றி லுள்ள மகரம், வருமொழியாகிய சீலையில் உள்ள சகர முதனிலைக்கேற்ற இனமெல்லெழுத்தாகத் திரிகின்றது. அதன் மூலமாக உச்சரிப்பு இலகுவாக்கப்படுவதுடன், முயற்சிச் சிக்கனமும் பேணப்படுகின்றது.

கல்+குவியல் என்னுந் தொடரிலே நிலைமொழி ஈற்றில் லகரமும் வருமொழி முதலில் ககரமும் வந்துள்ளன. தமிழிலக்கணகாரரின் பாகுபாட்டின்படி ஒன்று இடை யினத்தினையும் மற்றையது வல்லினத்தினையும் சார்ந்தன. ஒலியியலின்படி லகரம் முன்னண்ணப் பிரிவளி ஒலியாகும். ககரம் பின்னண்ண ஒலிப்பில் தடையொலியாகும். இவை யிரண்டையும் அடுத்தடுத்து இடையீடின்றி உச்சரிக்க முடியாது. செய்யுளிலே இடையீடு சீர்களுக்கிடையே ஏற்படுவதில்லை. அத்தகைய சந்தர்ப்பங்களில் இவ்வாறான இரு ஒலிகளை அருகருகே அமர்த்த முடியாது. இதனால், இவ்விடத்திலே உச்சரிப்பு இலகுவாக்கப்படுதற்கு ஏதாவது மாற்றம் நிகழ்ந்தாக வேண்டும். இன்றையப் பேச்சு வழக்கிலும் எழுத்து வழக்கிலும் தோன்றல் விகாரமூலம் நிலைமையைச் சீர்செய்து விடுகிறோம். அதாவது கல்+குவியல் என்பதைக் கல்லுக்குவியல் என்று அமைத்து விடுகிறோம். ஆனால், செய்யுள் வழக்கினை மிக முக்கியமாகப் போற்றிய எம் மூடைய தமிழ் இலக்கணகாரர் திரிதல் விகாரமே உகந்தது என்று கண்டனர். அதன் படிக்கு. இடையின லகரத்தை அவ்வெழுத்துப் பிறக்கும் இடத்திலேயே பிறக்கக்கூடிய வல்லின ஒற்றாகிய றகரத்துக்கு மாற்றிவிடுகின்றனர். இதனால், கல்+குவியல் என்பது கற்குவியல் என அமை கின்றது. ஒலியியலின்படி, முன்னண்ணப் பிரிவளி ஒலி யாகிய லகரம், தடையொலியாகிய கடையண்ணக் ககரத்தை நோக்கி, இடையண்ணத் தடையொலியாகத் (ற் ஆகத்) திரிகின்றது எனக் கூறலாம்.

3·3. கெடுதல்

இரண்டு ஒரே தன்மையான எழுத்துக்கள் அருகருகே இடம்பெறுமிடத்து, அவற்றுள் ஒன்று கெட்டுப்போதற்கு

நியாயமுண்டு. இரண்டு உயிர் எழுத்துக்கள் அருகருகே இடம்பெறுமிடத்து, அந்நிலையினைத் தவிர்ப்பதற்கு மூன்று வழிகள் பொருத்தமான இடங்களிலே பின்பற்றக் கூடியன வாகத் தமிழ் இலக்கணகாரராலே கூறப்பட்டுள்ளன :

(அ) உடம்படுமெய் புணர்த்துதல்

(ஆ) ஈற்றுயிர் அல்லது முதனிலையுயிர் கெடுதல்

(இ) ஒரே இனமான உயிர்களெனில் இரண்டுஞ் சேர்ந்து நீளுதல்.

ஈற்றுயிர் அல்லது முதனிலையுயிர் கெடுதல் பற்றியே இங்கு நாம் நோக்கவேண்டும். அகரத்தின் முன்னர் வரும் அகரம், இகரத்தின் முன் வரும் இகரம், ஐகாரத்தின் முன் வரும் இகரம் ஆகியன கெடும் எனத் தொல்காப்பியர் பின் வருஞ் சூத்திரங்களினூலே கூறுவர் :

அத்தி னகர மகரமுனை யில்லை.[24]

இக்கி னிகர மிகரமுனை யற்றே.[25]

ஐயின் முன்னரு மவ்வீய னிலையும்.[26]

இவற்றுக்கு உதாரணங்களாகப் பின்வருவனவற்றை நச்சி னார்க்கினியர் காட்டுவர் :

மக+(அ)த்து = மகத்து
ஆடி+(இ)க்கு = ஆடிக்கு
சித்திரை+(இ)க்கு = சித்திரைக்கு

முதனிலை உயிர் கெடுவதுபோல இறுதிநிலை உயிரும் கெடுவதுண்டு. இதற்குக் குற்றியலுகரப் புணர்ச்சி நல்ல எடுத்துக்காட்டாகும். உயிர்வரி னுக்குறண மெய்விட் டோடும்[27] என்னும் நன்னூற் சூத்திர அடி இதனை உணர்த்தும்.

ஒருசொன்னீர்மையைப் பேணுதற்கும் பொருள் மாற் றம் அடையாமற் காப்பதற்கும் சில விடங்களிலே புணர்ச் சியிற் கெடுதல் விகாரம் ஏற்படுவதுண்டு. உதாரணமாக, 'மரத்தினுடைய வேர்' என்னும் பொருள் புலப்படக்

RangaRakes tamilnavarasam.com

கூடியதாக மரம்+வேர் என்னும் இரு சொற்கள் இறுதி மகரம் கெட்டு மரவேர் எனப் புணர்கின்றது. அவ்வாறு மகரங் கெடாமல் மரம்வேர் எனப் புணரின் அது ஒரு சொன்னீர்மையாக அமைந்துவிடாது.

ஒலிநயத்துக்காகவும் கெடுதல் விகாரம் ஏற்படுவதுண்டு. உதாரணமாக தேன்+மொழி, தேன்மொழி என்றும் னகர வீறு கெட்டு தேமொழி என்றும் புணருபென நன்னூலார் கூறுவர். இங்கு னகரவீறு கெட்டது செய்யுளிலே ஒலிநயங் கருதியென்றே கூறவேண்டும்.

மூன்று வகைப்பட்ட விகாரங்கள் பற்றித் தனித்தனியே கூறினும், புணர்ச்சியிலே இவற்றுள் ஒன்றே அதற்கு மேற் பட்ட விகாரங்களோ ஒரு சந்தர்ப்பத்திலே இடம்பெறலாம். நன்னூலார் இதனை ஒருபுணர்க் கிரண்டு மூன்று முறப் பெறும்[28] என்னுஞ் சூத்திரத்தாற் குறிப்பிட்டுள்ளார். அச்சூத்திரவுரையில், யானைக்கோடு, நிலப்பனை, பனங்காய் ஆகிய மூன்றும் உதாரணங்களாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

யானை+கோடு = யானைக்கோடு

என்பதிலே ககரவொற்றுத் தோன்றியுள்ளது.

நிலம்+பனை = நிலப்பனை

என்பதிலே மகரவீறு கெட்டு, பகரமெய்தோன்றியுள்ளது. இவ்வுதாரணத்திற் கெடுதல், தோன்றல் ஆகிய இரு விகாரங்களும் இடம்பெற்றுள்ளன.

பனை+காய்
பன்+காய்
பன்+அம்+காய்
பன்+அங்+காய்
பனங்காய்

என்பதிலே கெடுதல், தோன்றல், திரிதல் ஆகிய மூன்று விகாரங்களும் இடம் பெற்றுள்ளன.

4. புணர்ச்சி விதிகளும் இன்றைய நிலையும்

தமிழ் இலக்கணகாரர் கூறிய பெரும்பாலான புணர்ச்சி விதிகள் செய்யுள் வழக்கிலிருந்த காலத்துக்கு ஏற்றனவாக அமைந்தன. செய்யுளிலே சீருந் தளையும் ஓசையும் குறை யாமல் அமைவதற்குச் சொற்களிடையே பல்வகைப் புணர்ச்சிகளைப் புலவர்கள் மேற்கொண்டனர். இலக்கியங் கண்டதற்கிலக்கணம இயம்பியவர்கள் அவற்றுக்கு விதி களையும் வகுத்தனர். ஆனால் இன்றோ, செய்யுட்காலம் போய் வசனநடைக் காலமாக மாறிவிட்டது. செய்யுளையே வசனத்தில் எழுதவேண்டுமென்ற போக்குக்கேற்ப 'வசன கவிதைகள்' எழுதப்படுங் காலம் இது. எனவே இக் காலத்தில் தமிழ் இலக்கணகாரர் கூறிய பெருந்தொகையான புணர்ச்சி விதிகள் வழக்கற்றுப் போயின. இன்றைய உரை நடையிலே பல புணர்ச்சி விதிகள் பின்பற்றப்படுவதில்லை. உதாரணமாக, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் இலக்கிய வழி நூலில்,

> 'பொன்னம்பலப்பிள்ளை ஒரு தேன் குடம். அதை இரசிகர்களாகிய எறும்புக் கூட்டங்கள் சதா சூழ்ந்து கொண்டேயிருக்கும்'[39]

என்று ஓரிடத்திலே எழுதிச் செல்கிறார். தமிழ் இலக்கண காரர் கூறிய புணர்ச்சி விதிகள் யாவற்றையும் அப்படியே பின்பற்றி எழுதுவதெனின் இப்பகுதி,

> பொன்னம்பலப்பிள்ளை யொரு தேக்குடம். அதை யிரசிகர்களாகிய வெறும்புக்கூட்டங்கள் சதா சூழ்ந்து கொண்டே யிருக்கும்.

எனவே அமையும். பண்டிதமணிக்கு இப்புணர்ச்சி விதிகள் தெரியாமலில்லை. ஆறுதலாகப் பார்த்து வாசிக்கக்கூடிய வசதியினை வழங்கும் அச்சுயந்திர காலத்திலே தேன் குடம் என்னுந் தொடரினை அப்படியே ஆறுதலாகத் தேன் குடம் என வாசிக்க முடியும். இங்கு சீரோ, தளையோ, ஓசையோ பிழைக்கப்போவதில்லை. ஆகவே செய்யுளுக்காக அமைக்கப் பட்ட தேக்குடப் புணர்ச்சி இன்று தேவையற்றதாகிவிடு

RangaRakes tamilnavarasam.com

கின்றது. உடம்படுமெய் புகுத்துதலும் அச்சில் வரும் எழுத்துக்களுக்கு வேண்டப்படாததாகி விடுகின்றது. எனினும் மொழியின் அடிப்படைப் பண்புகளைப் பேணும் புணர்ச்சிகள் சில எக்காலமும் எம்மொழியிலும் நின்று நிலவுவனவாகும். உயிரீற்றின்முன் வல்லினம் இரட்டுதல், ஈற்று மகரம், வரும் வல்லெழுத்தின் இன மெல்லெழுத்தாக மாறுதல் போன்ற புணர்ச்சி விதிகள் பேச்சு வழக்கிலும் எழுத்து வழக்கிலும் என்றுமே நின்று நிலவக்கூடிய அடிப்படைப் புணர்ச்சி விதிகளாயுள்ளன.

அடிக்குறிப்புக்கள்

1. வீரகத்தி, க., சொல்லிலக்கணத்தில் யாப்பின் செல்வாக்கு, ப. 9-10.
2. நன்னூல், சூ. 235
3. மேற்படி, சூ. 184
4. தொல்காப்பியம், சொல்லதிகாரம், சூ. 434
5. Lyons, J., **Introduction to Theoretical Linguistics**, pp. 19-20
   Robins, R. H., **A Short Histoty of Linguistics**, pp. 137-48
6. மாற்றமைப்புப் பிறப்பாக்க இலக்கணம் பற்றிய விவரங்களுக்குப் பார்க்க: அரங்கன், கி., மாற்றிலக்கண மொழியியல்.
7. தொல்காப்பியம், சொல்லதிகாரம், சூ. 427
8. மேற்படி, சூ. 205
9. மேற்படி, சூ. 7
10. சிவராஜபிள்ளை, கே. என்., 'உந்து' என்னும் இடைச் சொற் பிரயோகம் அல்லது புறநானூற்றின் பழைமை, ப. 47.
11. தொல்காப்பியம், சொல்லதிகாரம், சூ. 451.

12. மேற்படி, சேனவரையருரை
13. மேற்படி
14. நன்னூல், சூ. 141
15. மேற்குறித்த கருத்தினையொட்டிச் சிந்திப்பதற்கு என்னைத் தூண்டியவர் பண்டிதர் க. வீரகத்தி ஆவர். இச்சிந்தனையோட்டத்திற் குறையிருப்பின், அது என்னுடையது. நிறையிருப்பின், அது அவரையுஞ் சாரும்.
16. நன்னூல், காண்டிகையுரை, ப. 92
17. மேற்படி, சூ. 142
18. கால்டுவெல், திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம், (தமிழாக்கம்: கா. கோவிந்தன்), ப. 193
19. நன்னூல், சூ. 204
20. தொல்காப்பியம், எழுத்ததிகாரம், சூ. 244
21. மேற்படி, சூ 245
22. மேற்படி, சூ. 246
23. Jesperson, Otto., **Language**, pp. 264-65
24. தொல்காப்பியம், எழுத்ததிகாரம், சூ. 125
25. மேற்படி, சூ. 126
26. மேற்படி, சூ. 127
27. நன்னூல், சூ. 164
28. மேற்படி, சூ. 157
29. கணபதிப்பிள்ளை, பண்டிதமணி சி., இலக்கிய வழி, ப. 91

RangaRakes tamilnavarasam.com

6

சொல்லும் சொற்பாகுபாடும்

1. சொல்லும் நவீன மொழியியற் கோட்பாடும்

சொல் என்றால் என்ன என்பது பற்றித் தமிழ் இலக்கணகாரர் எத்தகைய கருத்துக்களைக் கொண்டிருந்தனர் என்று இதுவரை காலமும் மொழியியல் நூலெழுதியவர்கள் தெளிவாகக் கூறினரில்லை. வரதராசன்,[1] சீனிவாசன்[2] போன்றோர் தம்முடைய நூல்களிலே சொல் என்றவுடன் தொல்காப்பியர் முதலியோர் கூறிய சொற்பாகுபாட்டையே விளக்க முற்படுகின்றனர். வேலுப்பிள்ளை[3] சொல் என்பது பற்றி இலக்கணகாரர் என்ன கூறினரென ஓரளவு ஆய்வு செய்ய முயன்றுள்ளார். ஆனால், அது கூடப் பூரணமான தெளிவான ஆய்வு என்று கூறமுடியாதுள்ளது.

சொல்பற்றித் தொல்காப்பியர் கூறியன நவீன மொழியியலாரின் கோட்பாடுகளுக்கேற்ப அமைந்துள்ளன நவீன மொழியியலின் தந்தை என அழைக்கப்படும் Ferdinand Saussaure பின்வருமாறு கூறுவர் :

> 'The bond between the signifier and the signified is arbitary. Since I mean by sign the whole that results from the association of the signifier with the the signified, I can simply say : the linguistic sign is arbitary.'[4]

அவருடைய கூற்றின்படி மொழிக்குறியீடாகிய சொல் இடுகுறியெனவே கொள்ள வேண்டும். தொல்காப்பியர் எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே[5] என்னுஞ் சூத்திரத்தின் மூலமாக இக்கோட்பாட்டினையே வெளிப் படுத்துகிறார் என்று தெய்வச்சிலையாருடைய உரைமூலம் அறியக்கூடியதாயுள்ளது.

> 'இன்னும், 'எல்லாச் சொல்லும் பொருள் குறித் தனவே' என்பதற்குப் பொருள் எல்லாச் சொல்லும் எல்லாப் பொருளையும் குறித்து நிற்கும் என்று. எனவே, இச் சொல் இப் பொருள் உணர்த்தும் என்னும் உரிமை இல என்றவாறும். என்னை உரிமை இல்லாகியவாறு எனின், உலகத்துப் பொருள் எல்லாவற்றையும் பாடை தோறும் தாம் அறிகுறியிட்டு ஆண்ட தூணையல்லது, இவ்வெழுத்தினுள் இயன்ற சொல் இப்பொருண்மை உணர்த்தும் என எல்லாப் பாடைக்கும் ஒப்ப முடிந்த தோர் இலக்கணம் இன்மையான் என்க.'[6]

சொல் வடிவத்துக்கும் அது குறிக்கும் பொருளுக்குமிடையே எவ்விதத் தொடர்புமில்லை என்பதே நவீன மொழியியலாரின் வாதமாகும். தமிழ் இலக்கணகாரர் இதனை இடுகுறியென்பர்.

2. சொல் இடுகுறியா காரணமா?

சொல் இடுகுறியா, காரணமா என்பது பற்றித் தமிழிலக்கணகாரரிடையே கருத்து வேறுபாடுகள் இருந்தன; தொல்காப்பியரின் மொழிப் பொருட் காரணம் விழிப்பத் தோன்று[7] என்னுஞ் சூத்திரத்துக்குச் சேனாவரையர் உரை கூறுமிடத்து,

> 'பொருளோடு சொற்கியைபு இயற்கை யாகலான் அவ்வியற்கையாகிய இயைபாற் சொற்பொருளுணர்த்து மென்ப ஒருசாரார், ஒருசாரார் பிற காரணத்தா லுணர்த்துமென்ப.'[8]

RangaRakes tamilnavarasam.com

என்று கூறுவதிலிருந்து இக்கருத்து வேறுபாடு பற்றி அறிய முடிகின்றது. சொற்கள் இடுகுறி என்று தெய்வச்சிலையார் தவிர ஏனையோர் கொண்ட மரபுக்கு அடிப்படையான ஒரு காரணம் இருந்தது. சேனவரையர் 'பொருளொடு சொற் கியைபு இயற்கை யாகலான்' என்பதும் சிவஞானமுனிவர் 'சொல்லும் பொருளும் பேதா பேதமாம்'[9] என்பதும் அவர் தம் சமயச் செல்வாக்குக்குட்பட்ட இலக்கண மரபினையே சுட்டுகின்றன எனலாம். சேனவரையரின் சொற்கியைபு இயற்கை' என்பதற்குக் கணேசையரின் விளக்கம் இதனைத் தெளிவுறுத்துகின்றது. 'இயற்கையாகிய இயைபு என்றது ஆற்றலை. இச்சொல் இப்பொருளுணர்த்துக என்னும் இறைவனுடைய சங்கேதமே ஆற்றலாதலின் இயற்கையாகிய இயைபு என்றார்'[10] என்பது கணேசையரின் விளக்கமாகும். இறைவன் தமிழ் மொழியைப் படைத்த காரணத்தினால், சொல்லுக்குப் பொருள் ஏற்பட்டது அதற்கு மனிதன் காரணம் கூறமுடியாதென்னும் கருத்தின் அடிப்படையே சேனவரையர், சிவஞான முனிவர் போன்றோர் சொல் இடுகுறி என்று கொண்ட மரபாகும். இம்மரபினைச் சபாபதி நாவலர் தன்னுடைய திராவிடப் பிரகாசிகையிலே, சாத்திர மரபோடொட்டி விளக்கந் தருவர்:

> 'சத்தப் பிரவஞ்சம், அர்த்தப் பிரவஞ்சமெனக் காரியம் இருவகைப் படும். இவை இரண்டும் தம்முள் வேறுபாடுடையனவாயினும், சுத்தம் என்னுஞ் சாதியான் வேறுபாடின்மையானும், சத்தப் பிரவஞ்சம் அர்த்தப் பிரவஞ்சத்தைப் பற்றியன்றி நில்லாமையாலும், சுத்தமாயை ஒன்றுதானே சத்த ரூபமும் அர்த்தரூபமுமாகிய இரண்டு தன்மையுமுடைத்தாய் அவ்விரண்டிற்கும் முதற்காரணமாமெனக் கொள்ளப் படும்.'[11]

இம்மரபுக்கு மாறுன கருத்துடையவராக நச்சினார்க்கினியர் அமைகின்றார். அவர் 'சொல் எழுத்தினான் ஆக்கப்பட்டுத் திணையறிவுறுக்கு மோசை' யென்றும் 'ஒருவன் பொருட் டன்மையை யறிதற்குச் சொற் கருவியாய் நிற்கும்' என்றும் சொல்லதிகார முதற்சூத்திரவுரையிலே கூறிச் செல்கிறார்.

சொல் காரணம் பற்றிய தென்கின்ற மரபு பிற்காலத்திலே நன்கு வேரூன்றியதெனலாம். மாகறல் கார்த்திகேய முதலியார்,

> 'பலவாண்டுகளாகத் தமிழ் முதலிய மொழியாராய்ச்சி செய்தலையே மேற் கொண்டு முயன்ற திறத்தினானே சொல்லெல்லாம் காரணச் சொல் என்பது திண்ணமாயிற்று'[12]

என்று கூறுவதினாலும், சுவாமி ஞானப்பிரகாசர்,

> 'எந் தமிழ் மொழியின் சொற்பரப்பை இனிது ஆராயுமிடத்து, ஒலிக்குறிப்புக்களாயுள்ள சரசர, கறகற, என்றற்றொடக்கமாக ஒரு கைம்மண்ணளவு சொற்களே ஒழித்து, ஒழிந்த உலகவானவையெலாம் காரணப் பெயரீடாயுள்ளவைகளே என்பது தேற்றமாகும். மானுடன் தனது ஆச்சரியமான சிற்சக்தியின் வலிமையினால், அவ்வப் பொருட்களிலும், செய்திகளிலும் புறப்படத் தோன்றும் சிறப்பில்புகளைக் கொண்டு அவ்வவற்றிற்கு வெகு சாதுரியமாய் நாமகரணஞ் செய்திட்டான்.'[13]

என்று கூறுவதனாலும் அவர்களிருவரும் காரணச் சொல் மரபினையே பேணுபவர் என அறிகிறோம். இறைவன் படைத்த சொல் இயற்கையாக இடுகுறியாக அமையுமென்ற மரபுக்கெதிராக, மானுடன் தன் சிற்சக்தி வலிமையினால் சொற்களுக்குக் காரணங்கள் கற்பிக்கின்றான் என்று சுவாமி ஞானப்பிரகாசர் வாதிடுகிறார். இத்தகைய வாத மரபு மேலைத் தேயத்திலும் நடைபெற்றதொன்று. லயன்ஸ் அதனைப் பின்வருமாறு எடுத்துக் கூறுகிறார்.

> 'The Greek, philosophers debated, whether language was governed by 'nature' or 'convention'. This oppisition of 'nature' and 'convention' was a common place of Greek philosophical speculation. To say that a particular institution was 'natural' was to imply that it had its origin in eternal and

RangaRakes tamilnavarasam.com

immutable principles outside man himself (and was therefore inviolable); to say that it was 'conventional' implied that it was merely the result of custom and tradition (that is, of some tacit agreement, or 'social contract', among the members of the community - a 'contract' which, since it was made by men, could be broken by men).'[14]

3. சொல்லின் இரட்டைப் பரிமாணம்

நவீன மொழியியலாளர் மொழிக்கென ஓதிய 'இரட்டைப் பரிமாண' (double articulation) நிலையினைத் தமிழ் இலக்கணகாரர், சொல் மூலமாகவே விளக்க முற்படுவதை அவதானிக்கக் கூடியதாயுள்ளது. ஒருவர் ஒரு சொல்லினைக் கூறும் போது அதனுடைய ஒலிப்பண்பான வடிவம் மாத்திரமன்றி அதனோடு தொடர்புடைய எண்ணக் கோட்பாடும் நம் மனக்கண்ணிலே தோன்றுகின்றன அவ் வாறான எண்ணக் கோட்பாடு எழுவதற்கு ஒலிப் பண்பு கருவியாக அமைகின்றது. இத்தகைய இரட்டைப் பரிமாண நிலையையே தொல்காப்பியர்,

> பொருண்மை தெரிதலுஞ் சொன்மை தெரிதலுஞ்
> சொல்லி னகு மென்மனார் புலவர்[15]

என்று கூறினர். இச்சூத்திரத்துக்கு உரை கூறிய பலர் இவ்வுண்மையினை உய்த்துணரவைக்கவில்லையென்றே கூறலாம். 'சாத்தன், வந்தான், பண்டுகாடுமன், உறுகால் என்பவற்றுல் பொருளுணரப்பட்டவாறும், நீயென்கிளவி, செய்தெனெச்சம், தஞ்சக்கிளவி, கடியென்கிளவி என்பவற் றுற் பொருளுணரப்படாது அச்சொற்றுமே யுணரப்பட்ட வாறும் கண்டுகொள்க'[16] என்று சேனவரையர் கூறுமிடத்துப் 'பொருளுடைய சொல்', 'பொருளில் இலக்கணச் சொல்' என்ற வேறுபாட்டினையே வெளிக்கொணருகிறார். ஒரு சொல்லே பொருளுடையதாகவும் இலக்கண வடிவுடையதாகவும் அமையுமென்பதையே தொல்காப்பியர் தன் சூத்திரத்திலே கருதியுள்ளார். இக்கருத்தினை அச்

சூத்திரத்துக்கு உரையெழுதிய தெய்வச்சிலையார் நன்முக வெளிப்படுத்தியுள்ளார் எனலாம். ''நிலம் என்பது பொருளின் தன்மை ஆராய்வார்க்கு மண்ணினுன் இயன்ற தோர் பூதம் என்றுயிற்று. சொல்லின் தன்மை ஆராய் வார்க்குப் பெயர்ச் சொல்லாயிற்று. அதனுல் இரு பகுதிய சொல் நிலைமை என்றவாறு''[17] என்னும் உரைப் பகுதியினை நோக்குவார்க்கு அது தெற்றெனப் புலப்படும் நன்னூலாரும் 'பொருளையுந் தன்னையும்'[18] என்று இக்கருத்தினைப் பின் பற்றியே கூறியுள்ளார். காண்டிகையுரைகாரர் ''பொருளை யுந் தன்னை யு' மென்றதனுல், உயிர்க்கு அறிவானது கருவியாய நின்று தன்னையும் பொருளையும் உணர்த்துமாறு போல, ஒருவருக்குச் சொல்லானது கருவியாய் நின்று தன்னையும் இருதிணை ஐம்பாற் பொருளையும் உணர்த்தும் என்பது பெற்றும்''[19] என்று நன்னூலாரின் கருத்தினை விளக்கி உரைப்பர். விருத்தியுரைகாரர்[20] ''இருதிணை ஐம்பாற் பொருள், உள்பொருள், இல்பொருள், மெய்ப்பொருள், பொய்ப்பொருள், சித்துப்பொருள், சடப்பொருள், நித்தியப் பொருள், அநித்தியப்பொருள், உருவப்பொருள், அருவப் பொருள், காட்சிப்பொருள், கருத்துப்பொருள், இயற்கைப் பொருள், செயற்கைப்பொருள், முதற்பொருள், சினைப் பொருள், இயங்கியற்பொருள், நிலையியற்பொருள்'' எனப் பலவாறு பாகுபடுத்திக்கூறியிருப்பது பயனுடையதாயுள்ளது. சொல்லின் ஒலி வடிவத்தையும் பொருள் வடிவத்தையுமே ''சத்தப் பிரபஞ்சம், அர்த்தப் பிரபஞ்சம்''[21] என்று சபா சபாபதி நாவலரும் குறிப்பிட்டுள்ளார். ஆறுமுகநாவலர், ''சொல்லாவது, ஒருவர் தங்கருத்தின் நிகழ்பொருளைப் பிறர்க்கு அறிவித்தற்கும் பிறர் கருத்தின் நிகழ்பொருளைத் தாம் அறிதற்குங் கருவியாகிய ஒலியாம்'' என்று பொருத்த மாக வரைவிலக்கணஞ் செய்துள்ளார்.

ஒரு சொல்லுக்கு நாம் பொருள் காணுமிடத்து, அது இரண்டு வகைப்படும். ஒன்று இலக்கணப் பொருள், மற்றையது பதப்பொருள். 'மரம்' என்னுஞ் சொற் கேட்டவுடன் இலை, கிளை முதலியனவற்றையுடைய பொருளை எம் மனக் கண்ணில் தோற்றவைப்பதே அதன் பதப்

RangaRakes tamilnavarasam.com

பொருளாகும். வசனத்திலே அச்சொல் இடம் பெறும் நிலைநோக்கி எழுவாய், அஃறிணை, ஒருமை என்னும் விபரங்களைத் தருமிடத்திலே அது இலக்கணப் பொருளாகும்.

4. பல பொருள் ஒரு சொல்

ஒரு சொல் பல பொருள் குறித்து நிற்குமிடத்து அது எழுத்தொப்புமையால் ஒரே வடிவமாகக் கொண்ட போதிலும், ஒவ்வொரு பொருள் குறிக்குமிடத்தும் அது வேறு சொல்லாகவே கருதப்படும் என்னும் மரபும் தமிழ் இலக்கண காரரிடையே காணப்பட்டது. இம்மரபு தொல்காப்பியச் சூத்திரங்களிலோ நன்னூல் முதலிய இலக்கண நூற் சூத்திரங்களிலோ குறிக்கப்படவில்லை. தொல்காப்பியச் சொல்லதிகாரக் கிளவியாக்கத்தில் 'காலமுலகமுயிரே ' (சூ. 57) என்னும் சூத்திரத்துக்குச் சேனாவரையர் உரை கூறுமிடத்து 'உலகம்' என்னும் சொல் இடத்தையும் ஆகுபெயரான் இடத்து நிகழ் பொருளாகிய மக்கட் தொகுதியையுமுணர்த்துமிடத்து அது ஒரு சொல்லாகக் கருதப்படாது இரண்டு சொற்களாகக் கருதப்படுமென்றார். அச் சொல் ''இரு பொருட் கண்ணுஞ் சென்றதெனப்படாது இரு பொருட்கு முரிமையான் இரண்டு சொல் எனவே படுமென்பது'' என்றும், ''வேறு பொருளுணர்த்தலின் வேறு சொல்லாதலே துணிவாயினும், பல பொருளொரு சொல்லென்புழி எழுத்தொப்புமை பற்றி ஒரு சொல்லென்றார்'' என்றும் சேனாவரையர் உரைவகுத்துள்ளார்.[22] இக் கருத்தினைச் சபாபதி நாவலர் பின்வருமாறு விளக்குகின்றார்

> 'ஆ' ஆண்டு என்றாற் போல்வன வெவ்வேறு பொருளுணர்த்துதலின், ஒரு சொல்லெனப் படா. வெவ்வேறு சொற்களேயாமென்க. இனி வெவ்வேறு சொற்களாயினும் எழுத்தொப்புமையானே பல பொருளொரு சொல்லென்று அங்ஙனம் வழங்கப்பட்டனவென்பது. இன்னும், ஆ வென்பது பெற்றத்தினையும் மரவிசேடத்தினையும் உணர்த்தும் வழிப் பெயர்ச் சொல்லெனவும் இரக்கக் குறிப்பினை உணர்த்தும் வழி

> இடைச் சொல்லெனவும், ஆதற் புடை பெயர்ச்சியை உணர்த்தும் வழி உரிச்சொல் எனவுங் கொள்ளப்படுதலின், எழுத்தொப்புமை பற்றியே உபசாரத்தான் அவ்வாறு வழங்கப்பட்டன என்பது தெற்றென வுணர்க.'[23]

இவ்வாறு பல பொருட்கு ஒரு வடிவாகும் பதங்களை எழுத்து வடிவிலே வேறுபடுத்திக் காட்டமுடியாது. ஆனால் அச் சொல்லை உச்சரிக்கும் வகையிலே, அது ஒவ்வொரு பொருளையுங் குறிக்குஞ் சந்தர்ப்பத்தில் ஒவ்வொரு வடிவுடைய சொல்லாக ஆக்க முடியும். இலக்கணக்கொத்து ஆசிரியர் 'பலபொருட் கொருவடிவாகும் பதங்களை யோசையோடு கூறுவ ருணர்ந்தோர்'[24] எனக் கூறிவிட்டு,

> எடுத்தல் படுத்த லிரண்டே யோசை
> நலிதல் விலக்கலொடு நான்கென் பார்சிலர்
> மூன்றெனத் துணிந்தே மொழிகுவர் பலரே

என்று அவ்வோசை விகற்பங்களை எடுத்துக் கூறுவர். இவ்வாறு ஒரு சொல் பலபொருள் குறித்து வருமிடத்து வேறு வேறு சொல் எனக் கருதுபவர்கள், ஒரு பெயர்ச் சொல் வேற்றுமையுருபேற்று நிற்கும் போது, அது அச் சொல்லின் திரிபுபெற்ற வடிவம் என்றும், வினைச்சொல் விகுதி, இடைநிலை முதலியவற்றை ஏற்றுநிற்குமிடத்து, அது சொல்லின் திரிபுபெற்ற வடிவம் என்றும் கொண்டனர். நன்னூலார், 'எழுவா யுருபு திரிபில் பெயரே'[26] என்று முதலாம் வேற்றுமைக்குக் கூறிய இலக்கணம் இங்கு மனங் கொள்ளத் தக்கது. முதலாம் வேற்றுமைச் சொல் 'திரிபில்' பெயர் என்று கண்டால், ஏனைய வேற்றுமைச் சொற்கள் திரிபுற்ற பெயர்கள் எனக் கொள்ளப்படும். இக்கருத்துக்களை நோக்குமிடத்து தமிழ் இலக்கணக்காரரின் 'சொல்' பற்றிய மரபின் அடிப்படை நன்கு புலப்படுகின்றது. அவர்கள் 'சொல்' என்பதனைக் கருத்து வடிவமாகவே கருதியுள்ளனர். உதாரணமாக ஆ என்னுஞ் சொல் கருத்து ரூபமாயுள்ளது. அது பசு' என்னும் பொருள் குறித்து நிற்குமிடத்து காட்சி ரூபமாக இலக்கணக்குறியீடு பெறுகின்றது. அது போலவே சாத்தன் என்னுஞ் சொல் கருத்து ரூபமாய்

RangaRakes tamilnavarasam.com

நிற்க, முதல் வேற்றுமையிற் சாத்தன், இரண்டாம் வேற்றுமையிற் சாத்தனை என்றமையும்போது காட்சி வடிவம் பெறுகின்றது. இவ்வாறு சொல்லினைக் கருத்து ரூபமாகக் கொள்ளும் மரபு மேலைத் தேய் இலக்கணக் காரரிடையேயும் காணப்பட்டது [27] சொல்லின் இத்தகைய இருநிலைத்தன்மை சைவசித்தாந்திகளின் விளக்கங்களுடன் நன்கு ஒற்றுமைப் படலையும் நாம் இங்கு மனங்கொள்ளுதல் நலம். சிவஞான மாபாடியத்துப் பிரமாண இயலில் இரண்டாஞ் சூத்திரத்து நான்காம் அதிகார விளக்கவுரையிலே,

> 'தன்னை விளக்குவதூஉம் விடயங்களை விளக்குவதூஉம் தானேயாகிய ஞாயிறு ஒன்று தானே விடயங்களை விளக்குழிக் கதிரெனவும் தன்னை விளக்குழிக் கதிரோ னெனவும் தாதான்மியத்தால் இருதிறப்பட்டியைந்து நிற்றல்போல, புறப் பொருளை நோக்காது அறிவு மாத்திரையாய்த் தன் இயல்பினிற்பதூஉம் புறப் பொருளை நோக்கி நின்றுணர்த்துவதூஉமாகிய இரு தன்மையையுடைய பேரறிவாய சைதன்னியம் ஒன்றே அங்ஙனம் புறப்பொருளை நோக்கி நிற்கும் நிலையிற் சத்தியெனவும் புறப்பொருளை நோக்காது அறிவு மாத்திரையாய் நிற்கும் நிலையிற் சிவமெனவுந் தாதான் மியத்தால் இரு திறப்பட்டியைந்து நிற்கும் எனவுணர்க'.

என்று சிவஞான முனிவர் கூறிச் சென்றுள்ளதை நோக்குக.

5. சொற்களஞ்சிய அடிப்படையிற் சொற்பாகுபாடு

தமிழ் இலக்கணகாரர் சொற்களை இலக்கண அடிப் படையிலும் சொற்களஞ்சிய அடிப்படையிலும் பாகுபாடு செய்துள்ளனர். சொற்களஞ்சிய அடிப்படையிலே தமிழ் இலக்கணகாரர் மேற்கொண்டுள்ள பாகுபாடு எமது மொழிக்கே தனித்துவமான பண்பினைக் காட்டுவதாகும். தொல்காப்பியர்,

> இயற்சொற் றிரிசொற் றிசைச்சொல் வடசொல்லென்
> றாங்கத்தே செய்யு ளீட்டச் சொல்லே

என்று கூறுமிடத்துத் தொல்காப்பியர் காலத்திலும் அதற்கு முற்பட்ட காலத்திலும் செய்யுளிலக்கியத்திலே கையாளப் பட்ட சொற்களின் வடிவு நோக்கி அவற்றை நான்காகப் பகுக்கக்கூடியதாயிருந்தது. இயற்சொல், திரிசொல், திசைச் சொல், வடசொல் என்பனவே அந்நான்கு வகையாகும். பல நூற்றாண்டுகளுக்குப் பின்னர், நன்னூல், நேமிநாதம் ஆகியவற்றின் ஆசிரியர்கள் அதே சொற் பாகுபாட்டை பெயர், வினை, இடை, உரி ஆகியவற்றுடன் உறழக் கூறுகின்றனர். [29]

இயற் சொல் முதலிய நான்கு சொற் பாகுபாட்டினைத் தமிழ் இலக்கணகாரர் அமைத்ததின் அடிப்படை நோக்கம் என்ன? முதலில் உரையாசிரியர்கள் கூறியுள்ள கருத் துக்களை நோக்குவோம் சேனாவரையர்,

> 'இயற்சொல்லானுஞ் செய்யுட்சொல்லாகிய திரி சொல்லானுமேயன்றித் திசைச்சொல்லும் வடசொல்லும் இடைவிராய்ச் சான்றோர் செய்யுள் செய்யுமாறு கண்டு ஏனைப் பாடைச் சொல்லுஞ் செய்யுட்குரியனவோ வென்றையுற்றூர்க்கு, இந்நான்கு சொல்லுமே செய்யுட் குரியன பிற பாடைச்சொல் உரியவல்ல வென்று வரையறுத்தவாறு.' [30]

என்று கூற, தெய்வச்சிலையாரோ, 'செய்யுட்குரிய சொற் களின் பாகுபாடுணர்த்துதல் நுதலிற்று' [31] எனக் கூறுவர். தமிழ் இலக்கணகாரரின் இப்பாகுபாடு தமிழ்ச்சொற் களஞ்சியத்தினை அடிப்படையாகக் கொண்டு அமைந்த தாகும். தமிழ்ச் சொல் ஒன்று தனியாக நிற்கும் போது எப்பொருள் பயக்கின்றதோ, அதே பொருளைச் சொற் றொடரிலும் பயக்கும் பொழுது அதனை ஒரு வகையாகப் பாகுபாடு செய்யலாம். சில சொற்கள் சொற்றொடர்களிலே எவ்வாறு உபயோகப்படுத்தப்பட்டுள்ளன என்பதை நோக் கியே அவற்றின் பொருளை உணர்ந்து கொள்ள முடியும். உதாரணமாக அடி என்னுஞ் சொல், 'அடி மேல் அடி விழுந்தால் அம்மியும் நகரும்' என்ற கூற்றிலும், 'நின் செங்கமல இரண்டடியான் மூவுலகும் இருள்திர நடந்தனையே' என்ற கூற்றிலும் வெவ்வேறு பொருள் பயப்பதைக் காண

RangaRakes tamilnavarasam.com

லாம். இவ்வாறான சொற்கள் இன்னொரு வகைப் பாகு பாட்டினுள் அடங்கும். முதல் வகையை 'இயற்சொல்' என்றும் இரண்டாவது வகையைத் 'திரிசொல்' என்றும் தமிழிலக்கணக்காரர் பாகுபடுத்தியிருக்க வேண்டுமென யாம் எண்ணுகிறோம். வரதராசன் இவ்விரு வகைச் சொற்கும் வேறு விளக்கம் கொடுக்கின்றார். அவர்,

> 'இயற்சொல் மக்களின் பேச்சுவழக்கிலுள்ள தமிழ்ச் சொற்கள என்றும், திரி சொல் பேச்சு வழக்கிறந்த செய்யுளளவில் நின்ற தமிழ்ச்சொற்கள் என்றும்....'[32]

எனக் கூறிச் செல்கிறார். சேனாவரையர் தன்னுடைய உரையிலே இயற் சொல்லானுஞ் செய்யுட் சொல்லாகிய திரி சொல்லானும் என்று கூறுமிடத்துத் திரிசொல்லையே செய்யுட் சொல்லாகக் கொள்வர். இதுவே வரதராசனின் கருத்து உருவாகக் காரணமாயிருக்க வேண்டும். தொல்காப்பியர் அனைத்தே செய்யுளீட்டச் சொல்லே என்று கூறியுள்ளாராகையால், திரிசொல்லை மாத்திரம் 'செய்யுளீட்டச் சொல்' என்று கூறுதல் எவ்வாறு பொருந்தும்? திரிசொல் என்பதே வினைத்தொகை. அது திரிந்த, திரிகின்ற, திரியும் என்று விரியுமாகையால், அதனை வெறுமனே பழமை குறிப்பதாகக் கொள்ள முடியாது.[33] ஆகவே சொல் தனியாகவும் தொடரிலும் திரியாது பொருள் வழங்கும் போது அதனை 'இயற்சொல்' என்றும், தனியாகவும் தொடரிலும் திரிந்து பொருள் வழங்கும் போது அதனைத் 'திரிசொல்' என்றும் தமிழ் இலக்கணகாரர் வேறுபாடு கண்டுள்ளனர் என்று கூறுதலே பொருத்தமாகும்.

5·1 திசைச்சொல் பிற திராவிட மொழிச் சொற்கள்

தமிழ்ச் சொற் கோவையிலே தமிழ்மொழிக்கேயுரிய சொற்களை இயற்சொல், திரிசொல் என்று பாகுபடுத்திய இலக்கணகாரர் தமிழ்மொழியல்லாத சொற்களைத் 'திசைச் சொல்' என்றும் 'வடசொல்' என்றும் வேறுபடுத்தியுள்ளனர். பிற சொற்களை ஒரு கூறுகப் பாகுபாடு செய்யாமல், திசைச்சொல், வடசொல் என்று பாகுபாடு செய்தது தமிழ் இலக்கணகாரரின் மொழி பற்றிய நுண்

ணுணர்வை எடுத்துச் காட்டுகின்றது. தமது பிரதேசத்தின் எல்லைகளிலே சில மொழிகள் பேசப்படுவதையும் அம் மொழிகள் ஓரளவு தமிழ்ச்சாயல் கொண்டிருப்பதையும் தொல்காப்பியர் உணர்ந்திருக்க வேண்டும். இவை தமிழோடு நெருங்கிய தொடர்புடைய கன்னடம், தெலுங்கு போன்ற திராவிட மொழிகளாயிருக்க வேண்டும். தமிழின் சகோதர மொழிச் சொற்கள் வழக்கிலுஞ் செய்யுளிலும் கையாளப்படுவதைக் கண்ணுற்ற தொல்காப்பியர் அவற்றை முற்றுகப் புறப் புறத் தன்மையுடைய வேற்று மொழிச் சொற்களாக எண்ணுது, தனியொரு பாகுபாட்டுக்குள் அடக்கினர் என்று கூறுதல் பொருத்தமாயுள்ளது, 'தொல் காப்பியம், சங்க இலக்கியம் போன்ற நூல்கள் தோன்றும் காலத்திலே கன்னடம் தமிழொழி நிலத்துப் பேச்சு மொழியாக இருந்தது'[34] என்று கமில் ஸ்வெலபில் கூறுவதும் இங்கு மனங்கொள்ளத் தக்கதாகும். இவ்வாறு தமிழொழி நிலத்திலிருந்து வந்த திராவிட மொழிச் சொற்களைத் 'திசைச் சொல்' என்றும் பிறமொழியாகிய ஆரிய மொழியிலிருந்து வந்த சொற்களை 'வடசொல்' என்றும் தொல்காப்பியர் பாகுபாடு செய்தார்.

5·2 தமிழ் பிறமொழி வினைகளை ஏற்காது

திசைச் சொல்லும் வடசொல்லும் தமிழிலே வந்து வழங்குவது பற்றித் தொல்காப்பிய உரைகாரர் உரை கூறுமிடத்து ஒரு மொழியியற் பண்பொன்றினை எடுத்துக் கூறியுள்ளமை இங்கு குறிப்பிடப்பட வேண்டும். 'திசைச் சொல்லுள் ஏனைச் சொல்லும் உளவேனும், செய்யுட் குரித்தாய் வருவது பெயர்ச் சொல்லே. வடசொல்லுள்ளும் பெயரல்லன செய்யுட்குரியனவாய் வாரா'[35] என்று சேனாவரையரும், 'திசைச்சொல்லும் வடசொல்லும் பெரும் பான்மைப் பெயர்ப் பெயராயும் சிறுபான்மை தொழிற் பெயராயும் வரும்'[36] என்று நச்சினார்க்கினியரும் 'திசைச் சொல்லும் பெரும்பான்மை பெயரும் சிறுபான்மை வினையுமாகி வரும். வடசொல் பெயராயல்லது வராது'[37] என்று தெய்வச்சிலையாரும் குறிப்பிட்டுள்ளனர். பிறமொழிகளில் இருந்து ஒரு மொழி சொற்களைக் கடன் வாங்குமிடத்துப்

RangaRakes tamilnavarasam.com

பெரும்பாலும் பெயர்ச் சொற்களைப் மெற்றுக்கொள்வதே வழக்கமாகும். இம்மொழியியலுண்மையினையே சேனவரையரும் தெய்வச்சிலையாரும் வடசொல் பெயராயல்லது வராது என்று கூறுமிடத்துப் புலப்படுத்தியுள்ளார். தமிழ் மொழியில் வந்து சேர்ந்துள்ள பிறமொழிச் சொற்களை நோக்குமிடத்து, அவற்றின் பெயர்ச் சொற்களே பெரும் பான்மையாகவுள்ளன. அவதானி, ஆலோசி போன்ற சில வடமொழி வினை வடிவங்களைத் தவிர பிற மொழி வினைச் சொல் வடிவங்கள் தமிழிலே வந்து சேரவில்லை [38]

சொற்களஞ்சிய அடிப்படையியலமையும் இப்பாகுபாடு இக் காலத்துக்கு அவசியமில்லையென்று கருதிப் போலும் ஆறுமுகநாவலர் அப்பாகுபாட்டினைத் தன் இலக்கண சுருக்கத்திற் குறிப்பிடாது விட்டார்.

5·3 இலக்கண முறைப்படி சொற்பாகுபாடு

இனி, இலக்கண முறைப்படி தமிழ் இலக்கணகாரர் சொற்களை பெயர், வினை என்று பாகுபாடு செய்துள்ளனர். இடைச்சொல்லும் உரிச் சொல்லும் அவற்றைச் சார்ந்து வருமெனக் கொண்டனர். இலக்கண அடிப்படையில் பெயர், வினை, இடை, உரி என நான்கு வகைப் பாகுபாடு அமைந்தபோதிலும், பெயரும் வினையுமே சிறப்புடைச்சொல் எனக் கருதப்பட்டன.

> சொல்லெனப் படுவ பெயரே வினையென்
> றிருபாற் றென்ப வறிந்திசி னோரே [39]

என்று கூறிய பின்னர்தான் தொல்காப்பியர்,

> இடைச்சொற் கிளவியு முரிச்சொற் கிளவியு
> மவற்றுவழி மருங்கிற் றோன்று மென்ப

என்று கூறுவதை நோக்கலாம். தமிழ்ச் சொற்களை முதற் கண்ணேயே நான்காக வகுக்காது, சிறப்புடைச் சொல் பெயர், வினை என்று முதற்கண் வகுத்துப் பின்னர் அவற்றைச் சார்ந்து வருவனவாக இடையையும் உரியையும்

வகுத்ததற்குத் தமிழ் இலக்கணகாரர் எவரும் பொருத்தமான காரணம் எங்கேனும் கூறினரில்லை. பெயரும் வினையும் தமக்கெனச் சில இலக்கணக் கூறுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளன. பெயர், வேற்றுமை என்னும் இலக்கணக் கூறினை அடிப்படையாகக் கொண்டமைய, வினை, காலங் காட்டுதலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இரண்டுமே திணை, பால், எண், இடம் என்பனவற்றை உணர்த்த வல்லன. பெயர், எழுவாய் என்னும் சொற்றொடர்க் கூறுகவும் வினை, பயனிலை என்னுஞ் சொற்றொடர்க் கூறுகவும் அமைவன. இத்தகைய பண்புகள் இடைச் சொல்லுக்கோ உரிச்சொல்லுக்கோ இல்லாத காரணத்தினாலேயே, அவை சிறப்பில் சொற்களாகக் கருதப்பட்டிருக்க வேண்டும். ஆனால், சொற்றொடர் அடிப்படையிலே நோக்குமிடத்து பெயரும் வினையுமே இரு இலக்கணச் சொற்களாகத் தமிழ் இலக்கணகாரர் கருதியுள்ளனர்.

> வினையிற் றோன்றும் பாலறி கிளவியும்
> பெயரிற் றோன்றும் பாலறி கிளவியும்
> மயங்கல் கூடா தம்மர பினவே [40]

என்னுந் தொல்காப்பியச் சூத்திரமும்,

> பொதுவியல் பாறையுந் தோற்றிப் பொருட்பெயர்
> முதலறு பெயரல தேற்பில முற்றே [41]

என்னும் நன்னூற் சூத்திரமும் பெயருக்கும் வினைக்குமுள்ள சொற்றொடரியைபினையும், சொற்றொடரிலே அவற்றுக்குள்ள இலக்கண நிலையினையும் எடுத்துக் காட்டுகின்றன. 'தமிழ் மொழி சொற்றொடர்க் கூறுகளாக இரண்டு இலக்கணக் கூறுகளையே கொண்டமைத்துள்ளது.' என தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் கூறுவர் [42] அவர் மேலும், 'பெயரும் வினையும் முழுச் சொற்கள் எனவும், சொல்லுட்பகுப்பாய்வு அடிப்படையிலே நோக்குமிடத்து உரிச்சொற்கள் வேர்ச் சொற்கள் எனவும், இடைச்சொற்கள் வேர்ச்சொல் அல்லாதன எனவும் தொல்காப்பியர் பாகுபாடு செய்துள்ளார்' என்றும் கூறியுள்ளார் [43] இடைச் சொற்களின் பயன் பாட்டினையும், உரிச்சொற்களின் பயன்பாட்டினையும்

RangaRakes tamilnavarasam.com

நோக்குமிடத்துப் பெயர், வினைச் சொற்கள் முழுச் சொற்களாக இயங்குவதற்கு அச்சொற்களின் உட்பகுப் பினுள் அங்கங்களாக இடைச்சொற்கள் அமைய, பெயரும் வினையும் சொற்றொடரிலே தோன்றி இயங்கப் புறத்தே நின்று அவற்றுக்கு அனுசரணையாக நிற்பன உரிச்சொல் என்று கூறுதலும் ஒரு வகையில் பொருத்தமாக அமைய லாம். அதாவது இடைச்சொற்கள் பெயர், வினையின் அகக் கூறுகளாயமைய, உரிச்சொற்கள் புறக்கூறுகளா யமைகின்றன.

5·4. பெயர், வினை—வரைவிலக்கணம்.

பெயர், வினை ஆகிய இரு இலக்கணக் கூறுகளுக்கும் வரைவிலக்கணம் கூறுமிடத்து எதிர்மறை வழியைக் கடைப் பிடிக்கும் பண்பினையே மேற்கு நாட்டு இலக்கணகாரரிடமும் இந்திய இலக்கணகாரரிடமுங் காணக்கூடியதாய் உள்ளது. அரிஸ்டோட்டில் onoma, rhema, syndesmoi, arthra என்னும் நான்கு இலக்கணக் கூறுகளைக் கூறியபோதிலும், Onoma, rhema ஆகிய இரண்டையுமே முதன்மையாகக் கூறினர் என அறிகிறோம்.[44] onoma என்பது பெயர் rhema என்பது வினை. இவற்றை வரையறை செய்யு மிடத்து முதலிலே onoma என்பதற்கே வரைவிலக்கணம் கூறுகிறார். அவ்வாறு கூறுமிடத்து, அது வினைக்குரிய காலமுணர்த்தும் பண்பு இன்றி வரும் என எதிர்மறை யாகக் கூறுவர். தொல்காப்பியரிலும் இப்பண்பினைக் காணக் கூடியதாயுள்ளது.

பெயர்நிலைக் கிளவி காலந் தோன்று
தொழினிலை யொட்டு மொன்றலங் கடையே[45]

என்று வேற்றுமை இயலில் பெயர்ச்சொல்லினை 'காலந் தோன்று' என்று வினையின் பண்பின்மையைக் கூறி எதிர் மறை முகத்தால் வரையறை செய்து விட்டு, வினையியலிலே

வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங் காலைக் காலமொடு தோன்றும்[46]

என வினைக்கு வரைவிலக்கணங் கூறுகிறார். பெயருக்குரிய பண்பாகிய வேற்றுமை ஏற்றல் இல்லை என எதிர்முகத் தாலும், வினைக்குரிய பண்பாகிய காலமொடு தோன்றல் உண்டு என விதிமுகத்தாலும் இங்கு வரையறை செய் கின்றார்.

5·5 இடைச்சொல்

வேற்றுமை உருபுகள், திணை, பால் முதலியனவற்றை உணர்த்தும் ஈறுகள் ஆகியனவற்றைத் தொல்காப்பியரும் பின் வந்த இலக்கணகாரரும் சொற்களாகவே பாகுபாடு செய்துள்ளனர். தொல்காப்பியர் 'இடைச்சொல்' என் றொரு பாகுபாட்டினை மேற்கொண்டதினாலே, பின் வந்தோ ரும் அப்படியே பின்பற்றியிருக்க வேண்டுமெனத் தோன்று கிறது. எனினும் தொல்காப்பியர் 'உருபன்கள்' என இக் கால மொழியியலார் கருதும் அலகுகளை 'சொற்கள்' எனக் கூறியமைக்கு என்ன காரணம்? தொல்காப்பியர் தன்னுடைய காலத்து எழுத்து வடிவ வழக்கின் செல்வாக் கினாலே அத்தகைய கருத்தினைக் கொண்டாரோ என ஐயுறு தற்கு இடமுண்டு. கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலப் பிராமிச் சாசனங்களிலே உருபுகளையும் ஈறுகளையும் புணர்த்தாமல் 'சொல்' வடிவம் போன்று எழுதுகின்ற வழக்கம் காணப் பட்டது. உதாரணமாக, பின்வரும் பிராமிச் சாசனத்தின் ஒரு வாக்கியம் இக்கால வரிவடிவிலே கொடுக்கப்பட்டுள்ளது:

நல்பி ஊர்அ படன் குறும் மகள்

'நல்பி ஊரையுடைய படன் என்பவரின் இளைய மகள்' என்று இச்சாசன அடிக்குப் பொருள் கொள்ளப்படும். இதிலே ஊர்அ என்னும் பகுதியிலே ஆறும் வேற்றுமை உருபாகிய அ தனியாக ஊர் என்னும் பெயர்ச்சொல்லுக்கு அருகிலே எழுதப்பட்டுள்ளது. இது போலவே பல பிராமிச் சாசனங்களில் உருபுகளும் ஈறுகளும் தனியாக எழுதப்படும் வழக்கு[47] தொல்காப்பியர் காலத்திலே இருந்திருக்க வேண் டும். இதன் காரணமாகத் தொல்காப்பியர் இவ்வுருபன் களுக்குச் 'சொல்' அந்தஸ்துக் கொடுத்திருக்கலாம். உருபு

RangaRakes tamilnavarasam.com

கீளையும் ஈறுகளையும் தனியாக வரிவடிவிலே வடிக்கும் பண்பு வட இந்தியப் பிராமிச் சாசனங்களிலே காணப்படவில்லை. இப்பண்பு தென்னிந்தியப் பிராமிச் சாசனங்களில் மட்டுமே காணப்படுகின்றது [48] இந்நிலை தொல்காப்பியரின் 'இடைச் சொல்' பாகுபாட்டினை மேலும் வலியுறுத்துகின்றது. வரி வடிவ வழக்கின் செல்வாக்கினைப் பாதிப்புற்ற போதிலும் மெய்யினுடன் உயிர் சேருதல், இரண்டு உயிர்களுக்கிடையே உயிர்மெய் நுழைத்தல் ஆகிய புணர்ச்சிப் பண்புகளைத் தொல்காப்பியர் கூறுவதனால், இத்தகைய வரிவடிவ வழக்கம் அவருக்குப் பல காலங்களுக்கு முன்னரேயே நடைமுறையி லிருந்திருக்க வேண்டுமெனக் கூறவேண்டியுள்ளது.

அடிக்குறிப்புகள்

1. வரதராசன், மு., மொழிநூல், ப. 107-124
2. சீனிவாசன், ரா., மொழியியல், ப. 104-111
3. வேலுப்பிள்ளை, ஆ., தமிழ் வரலாற்றிலக்கணம் ப. 109-120
4. Saussaure, Ferdinand de, **Course in General Linguistics,** p. 67
5. தொல்காப்பியம், சொல்லதிகாரம், சூ 155
6. மேற்படி, தெய்வச்சிலையாருரை, ப. 107
7. மேற்படி, சூ. 394
8. மேற்படி சூத்திரத்துக்குச் சேனவரையருரை
9. சிவஞானமுனிவர், தொல்காப்பிய முதற் சூத்திர விருத்தி, ப. 21
10. தொல்காப்பியம், சொல்லதிகாரம், சூ. 394, ப. 353, கணேசையரின் அடிக்குறிப்பு.
11. சபாபதி நாவலர். திராவிடப் பிரகாசிகை, ப. 6-7
12. கார்த்திகேய முதலியார், மாகறல், மொழிநூல், ப. 1
13. சுவாமி ஞானப்பிரகாசர், தமிழ் அமைப்புற்ற வரலாறு, ப. 7

14. Lyons, J., **Introduction to Theoretical Linguistics,** p. 4
15. தொல்காப்பியம், சொல்லதிகாரம், சூ. 156
16. மேற்படி சூத்திரத்துக்குச் சேனவரையருரை, ப. 197
17. மேற்படி சூத்திரத்துக்குத் தெய்வச்சிலையாருரை, ப. 108
18. நன்னூல், சூ 259
19. மேற்படி சூத்திரத்தின் காண்டிகையுரை, ப. 249
20. மேற்படி சூத்திரத்தின் விருத்தியுரை, ப. 161
21. சபாபதிநாவலர், மு. கு. நூ., ப. 6
22. தொல்காப்பியம், சொல்லதிகாரம், சூ. 57, சேனவரை யருரை, ப. 97
23. சபாபதிநாவலர், மு. கு. நூ., ப. 8
24. இலக்கணக்கொத்து, சூ. 126
25. மேற்படி, சூ. 127
26. நன்னூல், சூ. 295
27. இம்மரபு பற்றிய விளக்கத்துக்குப் பார்க்க : Lyons. J., **Ibid,** p. 197
28. தொல்காப்பியம், சொல்லதிகாரம், சூ. 397
29. நேமிநாதம், சூ. 54

    பெயர்ச்சொல் வினைச்சொல் இடைச்சொல் உரிச்சொல்
    இயற்சொல் முதலனைத்தும் எய்தும் — பெயர்ச்சொல்
    உயர்திணைப்பேர் அஃறிணைப் பேர்ஒண் விரவுற்
    றியலும் எனவுரைப்பர் ஈங்கு.

    நன்னூல், சூ. 270 :

    அதுவே,
    இயற்சொற் றிரிசொ லியல்பிற் பெயர்வினை
    எனவிரண் டாகு மிடையுரி யடுத்து
    நான்குமா நந்திசைவட சொலணு காவழி.

30. தொல்காப்பியம், சொல்லதிகாரம், சூ. 397, சேனவரையருரை, ப. 357

RangaRakes tamilnavarasam.com

31. மேற்படி சூத்திரத்தின் தெய்வச்சிலையாருரை, ப. 216
32. வரதராசன், மு., மு. கு. நூ., ப. 107
33. இதுபற்றிய விளக்கத்துக்குப் பார்க்க :
வீரகத்தி, க., இலக்கண விளக்கம், பிற்சேர்க்கை ப. 2
34. Zvelebil, K., "From Proto-South Dravidian to Old Tamil", In Asher, 1970. p. 72
35. தொல்காப்பியம், சொல்லதிகாரம், சூ. 397, சேனவரையருரை
36. மேற்படி சூத்திரத்துக்கு நச்சினார்க்கினியருரை.
37. மேற்படி சூத்திரத்துக்குத் தெய்வச்சிலையாருரை.
38. பிறமொழி வினைச்சொல் வடிவங்கள் இக்காலப் பேச்சு வழக்கில் எவ்வாறு கையாளப்படுகின்றன என்னும் விவரத்துக்குப் பார்க்க :
Kailasapathy, K., and Sanmugadas, A., **Tamil,** p. 27.
39. தொல்காப்பியம், சொல்லதிகாரம், சூ. 158
40. மேற்படி, சூ. 11
41. நன்னூல், சூ. 323
42. Meenakshisundaran, T. P., **Foreign Models in Tamil Grammar,** p. 320
43. **Ibid,** p. 323
44. Sandys, J. E., **A Short History of Classical Scholarship**
45. தொல்காப்பியம், சொல்லதிகாரம், சூ. 70
46. மேற்படி, சூ. 198
47. இத்தகைய பல சாசனங்களின் விவரங்களுக்குப் பார்க்க:
Mahadevan, Iravatam, "Corpus of the Tamil-Brahmi Inscriptions, கல்வெட்டுக் கருத்தரங்கு, (Ed. Nagaswamy, R.), pp. 57-73.

48. இத்தகவலை யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வரலாற்றுத் துறையைச் சேர்ந்த தொல்பொருளியல் ஆய்வாளரும் நண்பருமாகிய திரு பொ. இரகுபதி எனக்குக் கூறினார். அவருக்கு என் நன்றி.

7 1·1

தமிழ் இலக்கண வகைமைகள் : பண்பும் பணியும்

பெயர், வினை என்ற இலக்கண அடிப்படையிலான சொற்பாகுபாடு பற்றிச் சென்ற இயலிலே விளக்கப்பட்டது. அவ்விலக்கணப் பகுப்புக்கள் பற்றிய மேலும் விவரங்களையும், அவற்றுடன் தொடர்பான இலக்கண வகைமைகள் பற்றியும் இவ்வியலிலே நோக்குவோம். குறிப்பிட்ட ஒரு சொல்லினை எப் பகுப்பினுள் அடக்குவது என்பது பற்றி முதலிலே நோக்கவேண்டும். ஒரு சொல்லைத் தனியாக எடுத்து நோக்குமிடத்து, அது பெயரா அல்லது வினையா என்று கூறுவது கஷ்டமான காரியமாகும். **அடி, படி, கல், பார், வளை** போன்ற சொற்கள் தொடர்பாகவே இக் கஷ்டம் ஏற்படுகின்றது. சொற்றொடரிலே அவை இடம் பெறும்போதுதான் இவற்றுள் ஒரு சொல், வினையா அல்லது பெயரா என்று கூறமுடியும். இக்கஷ்டத்தினை நீக்குதற்குத்தான் தமிழ் இலக்கணகாரர் ஒரு சொல், பெயர்ப் பகுப்பினைச் சார்ந்ததா அல்லது வினைப் பகுப்பினைச் சார்ந்ததா என்று அறிதற்குத் தம்முடைய வரைவிலக்கணங்கள் மூலம் வழிகாட்டியுள்ளனர். ஒரு சொல் வேற்றுமை ஏற்கக் கூடிய நிலையிலும் காலம் காட்டாத நிலையிலும் சொற்றொடரிலே அமையின் அது பெயராகவும் வேற்றுமை ஏற்க முடியாத நிலையிலும் காலங்காட்டும் நிலையிலும் அமையின் அது வினையாகவும் கொள்ளப்படும் எனத் தமிழ் இலக்கணகாரர் கூறியுள்ளதைச் சென்ற இயலிலே விளக்கியுள்ளோம். இவ்

RangaRakes tamilnavarasam.com

விரு சொற் பகுப்புக்களும் உருபனியல் அடிப்படையிலும் சொற்றொடரியல் அடிப்படையிலும் எத்தகைய பண்புகளையும் பணிகளையும் கொண்டுள்ளன என்பது பற்றி இன்னுஞ் சிறிது விளக்கமாக நோக்கலாம்

1. பெயர்

1:1 பெயர் என்னும் பகுப்பின் முக்கியத்துவம்

மொழியின் ஒரு பகுப்புச் சொற்களைப் பெயர் என அழைப்பதற்கும் அப்பகுப்பினையே முதற்கண் வைத்து நோக்குவதற்குமுரிய அடிப்படைக் காரணமென்ன? எந்த மொழி பேசுபவனும், முதலிலே அறிந்து கொள்ளுஞ் சொற்கள் பெயர்ச் சொற்களே. குழந்தைகள் பேசத் தொடங்கும் நிலையினை அவதானித்தால் இவ்வுண்மை விளங்கும். ஒன்றன் பெயரைக் குறிப்பிடும் சொல்லினையே குழந்தைகள் முதலிலே அறிந்துகொள்ளுகின்றனர் என இத்துறையிலே ஆய்வு செய்த மொழியியலாளரும் உளவியலாளரும் கருத்துத் தெரிவித்துள்ளனர். மனிதனுடைய சிந்தனை தொடர்ந்து செல்வதற்கு வெறுமை அல்லது கருத்து நிலை ஒருபொழுதும் உதவமாட்டாது. அவனுடைய சிந்தனைக்குப் பொருண்மையும் பெயரும் அவசியமாகின்றன. இதன் காரணமாகவே, எல்லா மொழிகளிலும் பெயர் என்னும் சொற் பகுப்பே முதற்கண் வைத்துக் கூறப்படுகின்றது. தமிழ் மொழியிலும் எல்லா இலக்கணகாரரும் பெயரையே முன்வைத்துக் கூறியுள்ளனர். தொல்காப்பிய சொல்லதிகாரப் பதினேராவது சூத்திர உரைக்கு விளக்க உரை கூறும் சி. கணேசையர்,

> 'பெயரென்றது ஈண்டுப் பொருளையென்றது, பெயர் என்ற சொல் பெயர்களையுங் குறிக்கும்; பொருள்களையுங் குறிக்கும்.... பெயர் பொருள் என்பன ஒருபொருட் கிளவிகள் என்று சிவஞானமுனிவர் சூத்திர விருத்தியுட் கூறுவர்.'[1]

என்று கூறியுள்ளமை மேற்படி கருத்தினை அரண் செய்வதாக அமைகின்றது.

இன்னும், பெயர் என்னும் இலக்கணப் பகுப்பின் முக்கியத்துவத்தினை, அது வாக்கியவியலிலே பெறும் நிலையினைக்கொண்டும் உணரக்கூடியதாயுள்ளது. ஒரு வாக்கியத்தின் எழுவாயாகவும் பயனிலையாகவும் பெயர் இடம்பெறக் கூடியதாயுள்ளது

> அவற்றுள்,
> எழுவாய் வேற்றுமை பெயர்தோன்று நிலையே

என வேற்றுமையியலிலே கூறும் தொல்காப்பியர், அடுத்த சூத்திரத்தில்,

> பொருண்மை சுட்டல் வியங்கொள வருதல்
> வினைநிலை யுரைத்தல் வினவிற் கேற்றல்
> பண்புகொள வருதல் பெயர்கொள வருதலென்
> றன்றி யனைத்தும் பெயர்ப்பய னிலையே

என்றும் கூறுகின்றார். இவ்விரு சூத்திரங்களிலும் பெயர்ச் சொல் எழுவாயாக வருவது மட்டுமன்றிப் பயனிலையாகவும் வருமெனக் கூறப்பட்டுள்ளது. எழுவாயுருபு திரிபில் பெயரே என நன்னூலார் கூறுவர். இது தமிழ் வாக்கியங்களின் ஆழமைப்பு மேலமைப்பு வடிவங்களை அடிப்படையாகக் கொண்ட ஓர் இலக்கணமாகும். சொல்லொழுங்கு அவ்வளவு இறுக்கமில்லாத எமது மொழியிலே எழுவாய், வாக்கியத்தில் முதனிலையிலேதான் வரவேண்டுமென்பது அவசியமில்லை. இதனால் எது எழுவாய் என்று ஐயந்திரிபின்றிக் கூறுதற்கு நன்னூலாருடைய எழுவாயுருபு திரிபில் பெயரே என்னும் இலக்கணம் உதவுகின்றது. உதாரணமாக,

> கப்பல் பிடித்து இராமேஸ்வரம் சென்ற அவன் விடுதி தேடிப் போனான்.

என்னும் வாக்கியத்திலே கப்பல், இராமேஸ்வரம், அவன், விடுதி என்னும் நான்கு 'திரிபில்' பெயர்கள் இடம்பெறுகின்றன. இவற்றுள் எழுவாயாக அமையும் பெயர்ச்சொல் என்ன? மேலே குறிப்பிடப்பட்டுள்ள வாக்கியம் அதன் மேலமைப்பு வடிவத்திலேயே அமைந்துள்ளது. அதனுடைய

RangaRakes tamilnavarasam.com

ஆழமைப்பு வடிவத்தினை நோக்கின், அவ் வாக்கியத்தின் எழுவாய் 'திரிபில்' பெயராக அமைவதைக் காணலாம். அதனுடைய ஆழமைப்பு வடிவம்,

> கப்பலைப் பிடித்து இராமேஸ்வரத்துக்குச் சென்ற அவன் விடுதியைத் தேடிப்போனான்.

என அமையும். கப்பலை, இராமேஸ்வரத்துக்கு, அவன், விடுதிஐ என்னும் நான்கு பெயர்ச் சொற்களுள் அவன் என்பது 'திரிபில்' பெயராக அமைவதை நாம் காண்கிறோம்.

உலகிலுள்ள எல்லா மொழிகளிலுமே எழுவாயாகப் பெயர்ச்சொல்லே அமைகின்றது. பேச்சு என்பது தொடர்ந்து அமையும் பல எடுப்புக்களை (propositions) உள்ளடக்கியதாக அமைகின்றது. ஓர் எடுப்புக்கு அடிப்படையாக அமைவன எழுவாயும் பயனிலையுமென்பதை அளவையியல் மாணவர்கள் நன்குணர்வர். நாம் பேசுவதற்கு ஏதாவது ஒன்று இருக்கவேண்டும். அது என்னவென்று தெரிந்தெடுத்த பின்னர், அதைப்பற்றி ஏதாவது நாம் கூறவேண்டும். பேசுதற்கு எடுத்துக்கொண்டது எழுவாயாகவும், அது பற்றிக் கூறுதல் பயனிலையாகவும் அமைகின்றன. இவை யிரண்டும் ஓர் எடுப்பின் இருகூறுகளாக அமைகின்றன. பேசுதற்கு எடுக்கப்படும் விடயம் பெயராகவே எல்லா மொழிகளிலும் அமைகின்றது. இது பற்றி எட்வர்ட் சபிர் என்னும் மானிடவியல் மொழியியலாளர் பின்வருமாறு கூறுகிறார் :

> 'It is well to remember that speech contains a series of propositions. There must be something to talk about and something must be said about this subject of discourse once it is selected. This distinction is of such fundamental importance that the vast majority of languages have emphasized it by creating some sort of barrier between the two terms of propositions. The subject of discourse is a noun. As the most common subject of discourse is either a person or a thing, the noun clusters about concrete concepts of that order.'[2]

1·2. பெயர் வகைகள்

சொல் வகைமைகளுள் ஒன்றாகிய பெயர்ச்சொல்லினைத் தமிழிலக்கணகாரர் மேலும் பல வகைகளாகப் பாகுபாடு செய்துள்ளனர். தொல்காப்பியர்

> அவற்றுள்
> பெயரெனப் படுபவை தெரியுங் காலை
> யுயர்திணைக் குரிமை மஃறிணைக் குரிமையு
> மாயிரு திணைக்குமோ ரன்ன வுரிமையு
> மப்பா லுருபின தோன்ற லானே[3]

எனப் பொதுவான பாகுபாட்டினைக் கூறிவிட்டு, தொடர்ந்து வரும் பல சூத்திரங்களிலே அப்பொதுப் பாகுபாட்டினுள் அடங்கும் பெயர் வகைகளைக் குறிப்பிடுகின்றார். அவர் குறிப்பிட்ட பெயர் வகைகளைப் பின்வருமாறு வரிசைப் படுத்திக் கூறலாம் :

சுட்டுப் பெயர்	:	அவன், இவள்
தன்மைப் பெயர்	:	யான், யாம், நாம்
வினாப் பெயர்	:	யாவன், யாவள்
நிலப் பெயர்	:	செம்பாட்டான், சோழியன்
குடிப் பெயர்	:	மலையமான், சேரமான்
குழுப் பெயர்	:	அவையத்தார், பணிக்கர்
வினைப் பெயர்	:	தச்சன், கொல்லன்
உடைமைப் பெயர்	:	அம்பர்கிழான், பேரூர்கிழான்
பண்புப் பெயர்	:	கரியன், செய்யன்
முறைநிலைப் பெயர்	:	தந்தை, தாய்
திணைநிலைப் பெயர்	:	பெருங்காலன், முடவன்
திணைநிலைப் பெயர்	:	வேட்டுவர், வணிகர்
இயற்பெயர்	:	சாத்தன், செந்தூரன்
முன்னிலைப் பெயர்	:	நீயிர், நீ

RangaRakes tamilnavarasam.com

இத்தகைய பாகுபாட்டுக்கு விதிவிலக்காக அமையும் பெயர்கள் பற்றியும், இப்பாகுபாட்டினை அடிப்படையாகக் கொண்ட நுண்ணிய வேறுபாடுகளை உணர்த்தும் பெயர்கள் பற்றியும் தொல்காப்பியர் தன்னுடைய சூத்திரங்களிலே குறிப்பிட்டுள்ளார்.

பெயர்ச் சொற் பாகுபாடு என்பது பாற் பாகுபாடு என்றே தொல்காப்பியர் கருதியுள்ளார் தமிழ் வரலாற்றிலக்கணம் எழுதிய ஆ. வேலுப்பிள்ளையும் பெயர்ச் சொற் பாகுபாடு என்ற பகுதியிலே தமிழ்ப் பெயர்ச் சொற்கள் பாலுணர்த்துவது பற்றியே விரிவாகக் கூறுகின்றார் [4] நன்னூலாரும் தொல்காப்பியருடைய மரபினையே பெயரியலிற் பின்பற்றியபோதும், பதவியலிலே பெயர்ச் சொற்களின் பொதுவானதொரு பாகுபாடு கூறியுள்ளார். அது,

> பொருளிடங் காலஞ் சினைகுணந் தொழிலின்
> வருபெயர் பொழுதுகொள் வினைபகு பதமே[5]

என்னுஞ் சூத்திரத்தாற் குறிக்கப்படுகின்றது. பெயர்ச் சொற் பாகுபாட்டினைப் பொறுத்தவரையில் நன்னூலாருடைய பாகுபாடு மிகப் பொருத்தமான, பொதுத் தன்மை வாய்ந்த, சுருக்கமான பாகுபாடாக அமைகின்றது. அப் பாகுபாட்டினிடையே காணப்படும் ஒரு நுண்ணிதான தொடர்பு அமைப்பினை நாம் உற்று நோக்க முடிகின்றது. பொருள் என்பது பொருண்மையினைக் குறிப்பதாகும். அதாவது ஒரு பொருள் உண்டோ இல்லையோ என்ற ஐயமேற்படாவண்ணம் ஒரு பொருளினை உணர்ந்து அதற்கு இடப்படும் பெயரே பொருட் பெயராகும். 'பொய்ப் பொருளின் மெய்ப்பொருட்கு வேற்றுமையுண்மையாகலின், அவ்வுண்மையைப் பொருண்மை யென்றார்' [6] எனச் சேனாவரையர் கூறியுள்ளதை இங்கு நாம் மனங்கொள்ளவேண்டும். இவ்வாறு உண்மை நிலைப்பாட்டினை உணர்ந்த நாம், அந்நிலைப்பாட்டின் இடத்தினையும் காலத்தினையும் உணர்தல் வேண்டும். இதன் விளைவே இடப்பெயரும் காலப்பெயருமாகும் ஒரு பொருளுக்குப் பல கூறுகள் உண்டு. அக்கூறுகளுள் ஒன்றினைக் குறிப்பிடச் சினைப்பெயர் உதவுகின்றது. பொருளுக்குரிய பல குணங்களிலே ஒரு குணத்தினைக் குறிக்கக்

குணப்பெயர் உதவுகின்றது பொருளின் அசைவு நிலையுடன் தொடர்புற்றதாகத் தொழிற் பெயர் அமைகின்றது. ஆகவே எமது மொழியிலுள்ள எல்லாப் பெயர்ச் சொற்களையுமே பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்ற இயற்கையான, தர்க்க ரீதியான தொடர்புமுறையிலே பாகுபாடு செய்வது பொருத்தமாக அமைகின்றது. இத்தகைய பாகுபாட்டினை விடுத்து, திணை, பால் அடிப்படையிலே பெயர்ச் சொற்களைப் பாகுபடுத்துதல் பொருத்தமற்றதாகும். ஏனெனில், தமிழ் மொழியில் திணை, பால் என்னும் இலக்கணக் கூறுகள் பெயர்ச் சொற்களுடன் மாத்திரமன்றி வினைச் சொற்களுடனும் தொடர்புற்றிருப்பதேயாகும்.

2. பெயரும் வேற்றுமையும்

வேற்றுமை என்னும் இலக்கணக் கூறுடன் தொடர்புடைய சொல் வகைமை பெயராகவே எல்லா மொழிகளிலும் காணப்படுகின்றது. தொல்காப்பியரும்,

> வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது
> நினையுங் காலை காலமொடு தோன்றும்

எனக் கூறிச் செல்கின்றார். இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்த மொழிகள் பலவற்றிற் பெயர்ச் சொல்லுடன் தொடர்புடைய சொல்லுருமாற்ற இலக்கணக் கூறுகளாக எண், வேற்றுமை ஆகிய இரண்டுங் கொள்ளப்படும்.

> 'In effect, tradional definitions of the category of case for Latin and Greek (and other Indo-European languages) say little more than the following: of the two inflexional categories of the noun, one is number (definable in semantic terms and relatable to the Aristotelian category of quantity), the other is case'[7]

என மொழியியல் அறிஞர் ஜோண் லயன்ஸ் கூறியுள்ளார். ஆனால், தமிழ் மொழியைப் பொறுத்தமட்டில் எண் பெயருக்கு மாத்திரம் உரிய சொல்லுருமாற்ற இலக்கணக்கூறு

RangaRakes tamilnavarasam.com

அல்ல. அது வினைக்கும் உரியதாக அமைகின்றது. எனவே தமிழ் மொழியிற் பெயருக்கு மாத்திரம் உரிய சொல்லுரு மாற்ற இலக்கணக்கூறு வேற்றுமையேயாகும்.

வேற்றுமை என்றால் என்ன? தொல்காப்பியர் தன்னுடைய இலக்கண நூலிலே வேற்றுமை என்பதற்கு வரைவிலக்கணம் கூறவில்லை. மேலைத்தேய இலக்கணகாரர் வேற்றுமையினை ஒரு சொல்லுரு மாற்ற வகைமையாகவே கொண்டனர். பெயர்ச்சொல் ஒன்றனது உண்மையான வடிவத்துக்கும், அதனின்று வேறுபட்டுவரும் வடிவங்களுக்குமிடையே காணப்படும் வேற்றுமையினை உணர்த்துதற்கு **Case** என்னும் பதத்தினை உபயோகித்தனர். 'எழுவாய்' ஆக நிற்கும் சாதாரண பதத்தினின்று வரும் உரு மாற்றங்களை லத்தீன் இலக்கணகாரர் **Casus** என்றனர். இதுபற்றி லயன்ஸ் பின்வருமாறு கூறுவர்:

> 'The Latin word **casus** (and the Greek word which it translates) means 'falling' or 'deviation'. Whatever might be the precise metaphorical origin of the technical sense of the term in grammatical theory (and there is some dispute about this), it is clear that variation in the forms of a lexeme according to the syntax of the language was regarded as deviation from its normal upright form.'[8]

தொல்காப்பியர் முதலாவது வேற்றுமையை 'எழுவாய்' என்று கூறுவதன் மூலம் பண்டைய கிரேக்க-லத்தீன் இலக்கணகாரர் வேற்றுமை பற்றிக் கூறிய வரைவிலக்கணத்தினைப் போன்றதோர் அடிப்படையையே தமிழ்மொழி வேற்றுமைக்கும் கொண்டுள்ளார் என ஊகித்துணர முடிகின்றது எனினும், தமிழ் மொழியைப் பொறுத்தமட்டில் ஒரு விசேட நிலை காணப்படுகின்றது. லத்தீன் போன்ற மொழிகளில் வேற்றுமை தொடர்பாக சொல்லுருமாற்றத்துக்கு அதீத முக்கியத்துவம் கொடுக்க வேண்டியிருந்தது. ஆனால், தமிழ் மொழியிலோ அவ்வாறு முக்கியத்துவங் கொடுக்க வேண்டிய அவசியமில்லை. தமிழ் ஒட்டுமொழி

என்ற காரணத்தினாலே பெயர்ச்சொல்லின் உருவம் திரிபடையாமல் வேற்றுமை உருபுகள் அதனுடன் ஒட்டப்படுகின்றன. இதனால், பெயர்ச் சொல் வேற்றுமை உருபு ஏற்குமிடத்து அதனுடைய உருவ மாற்றத்தினைவிடப் பொருள் மாற்றத்துக்கே தமிழ் இலக்கணகாரர் முக்கியத்துவங் கொடுத்துள்ளனர். 'நான்', 'நீ' போன்ற தன்மை முன்னிலைச் சொற்களே வேற்றுமை உருபு ஏற்பதற்கு முன் 'என்', 'உன்' என மாற்றமடைகின்றன. இவற்றைத் தவிரத் தமிழ் மொழியிலே பெயர்ச் சொற்கள் வேற்றுமை உருபுகள் ஏற்குமிடத்து உருவமாற்றம் அடைவதில்லை. இதனாலேயே நன்னூலார் வேற்றுமை பற்றிக் கூறுமிடத்து,

> ஏற்கு மெவ்வகைப் பெயர்க்கு மீருய்ப்பொருள்
> வேற்றுமை செய்வன வெட்டே வேற்றுமை

என்று 231-ம் சூத்திரத்திலே 'பொருள் வேற்றுமை செய்வன' என்று பொருள் மாற்றத்துக்கு முக்கியத்துவங் கொடுக்கின்றார். தமிழ் மொழியைப் பொறுத்தவரையில் வேற்றுமை பெயர்ச் சொல்லின் பொருள் மாற்றத்துடனேயே சிறப்பாகத் தொடர்புறுத்தப்படுகின்றது. ஐ, ஆல், கு, இன், அது, கண் என்றெல்லாம் வேற்றுமை உருபுகள் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் ஒவ்வொரு வேற்றுமையும் ஒவ்வொரு விசேடித்த பொருளுடன் தொடர்புறுத்தப்பட்டுள்ளது. அப்படியிருந்தபோதும் வெறும் உருபுகள் பெயர்ச் சொற்களுடன் சேருவதைச் சிறப்பாகத் தமிழ் இலக்கணகாரர் கருதவில்லை. என்ன உருபைச் சேர்ந்தாலும் அது பயக்கும் பொருளே முக்கியமானது என்பது தமிழ் இலக்கணகாரர் கொள்கையாகும். இதனாலேயே,

> யாத னுருபிற் கூறிற் றுயிறையும்
> பொருள்சென் மருங்கின் வேற்றுமை சாரும்

என்று தொல்காப்பியரும்[9] நன்னூலாரும்[10] ஒருமித்துக் கூறியுள்ளனர். உருபுகள் அல்ல பொருளே முக்கியம் என்று கூறுவதை நோக்குமிடத்துத் தமிழ் வேற்றுமை அமைப்பு சொற்றொடரியல் அடிப்படையிலான சொல்லொழுங்கையும்,

RangaRakes tamilnavarasam.com

அச்சொற்களின் பொருளையும் அடிப்படையாகக் கொண்டே ஆரம்பத்தில் அமைந்திருக்கவேண்டும்போல் தென்படுகின்றது.

பெரும்பாலான மொழிகளிலே வேற்றுமையின் 'இலக்கண'ச் செயற்பாடுகளெனப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்:

1. பேசப்படுவதன் பெயர் (எழுவாய்)
2. அதனாற் செய்யப்படும் பொருள்
3. அது ஓரிடத்திலிருந்து நீங்குதல்
4. அது ஓரிடத்தை அடைதல்
5. அது ஓரிடத்திலே நிற்றல்
6. அது ஒன்றை வைத்திருத்தல்
7. அது ஒன்றுடன் செல்லுதல்
8. அதனுடைய கருவியாதல்
9. அது விளியாதல்

தமிழ் மொழியில் இவை யாவற்றையும் எட்டு வேற்றுமைகளாகத் கூறியுள்ளனர். 'அது ஒன்றுடன் செல்லுதல்', 'அதனுடைய கருவியாதல்' ஆகிய இரண்டும் தொல்காப்பியருடைய காலத்திலே ஒரே வகையான உருபுகளினுலே உணர்த்தப்பட்ட காரணத்தினுல், அவை இரண்டினையும் மூன்றும் வேற்றுமைக்குள் அடக்கிக் கூறினர். ஆனுல், பிற்காலத்திலே ஒடு, ஒடு, உடன் ஆகிய உருபுகள் உடனிகழ்ச்சிப் பொருளையும், ஆல், ஆன், கொண்டு ஆகிய உருபுகள் கருவிப் பொருளையும் உணர்த்தி நிற்கின்றன. இவ்வாறு இருவகைப்பட்ட பொருளை ஒரு வேற்றுமையினுள் அடக்கி நன்னூலார் போன்ற இலக்கணகாரர் கூறியமை பொருத்தமற்றதெனக் கால்டுவெல் கூறியுள்ளார். கால்டுவெலினுடைய குற்றச்சாட்டின் பொருத்தப்பாட்டினையும் வேற்றுமை பற்றிய நன்னூலாரும் அவருக்குப் பிற்பட்ட இலக்கணகாரரும் கொண்ட கருத்துக்களின் மதிப்பீட்டினையும் வேலுப்பிள்ளை நன்கு தெளிவுறுத்தியுள்ளார்.[10]

தமிழ் வேற்றுமை அமைப்பினை, வடமொழி வேற்றுமை அமைப்பினைப் பின்பற்றியே இலக்கணகாரர் அமைத்துள்ளனர் என்ற குற்றச் சாட்டுப் பலராலே முன்வைக்கப்

பட்டுள்ளது. இக் குற்றச்சாட்டுத் தொல்காப்பியரைப் பொறுத்த வரையிலே பொருத்தமற்றதாகும். அவர் எட்டு வேற்றுமையாகத் தமிழ் வேற்றுமைகளை அமைத்தது அன்றையத் தமிழ் மொழிக்குப் பொருத்தமானதாகவே அமைந்தது வடமொழியிலே எட்டு வேற்றுமை இருப்பது உண்மையே. தொல்காப்பியர் வடமொழியை நிச்சயமாகக் கற்றிருக்கவுங் கூடும். வடமொழி எட்டு அவருக்கு மாதிரியாவுங் கூட அமைந்திருக்கலாம். ஆனுல், தொல்காப்பியர் தமிழ்ப்பிள்ளைக்கு அளவில்லாத சட்டை தைக்கவில்லை. அவருடைய எட்டுவகை வேற்றுமை அவருடைய காலத் தமிழ்மொழிக்குப் பொருத்தமாயமைந்தது.

வீரசோழியம், பிரயோக விவேகம், இலக்கணக்கொத்து ஆகியவற்றின் ஆசிரியர்களே தமிழ் வேற்றுமை அமைப்பினை வடமொழி வேற்றுமை அமைப்புடன் தொடர்புறுத்தி இலக்கணஞ் செய்துள்ளனர். இவர்களுள் காலத்தால் முந்தியவர் வீரசோழியகாரராவர். வேற்றுமை உருபுகளை 'பிரத்யயம்' எனக் கூறும் வீரசோழியகாரர் தமிழ் முதலாம் வேற்றுமைக்கு கு, அர், ஆர், ஆர்கள், கள், மார் என்னும் உருபுகளும் ஓதியுள்ளார். தொல்காப்பியரும் நன்னூலாரும் 'திரிபில் பெயர்' முதலாம் வேற்றுமை எனக் கொண்டனர். இதனுல், முதலாம் வேற்றுமைக்கு அவர்கள் உருபு எதுவுமே கூறவில்லை. ஆனுல், வீரசோழியகாரரோ உருபுகள் கூறுகின்றார். இதன் காரணம் என்ன? வடமொழியிலே அஷ்டாத்யாயி எழுதிய பாணினியின்படி சமஸ்கிருத மொழியில் ஒவ்வொரு சொல்லும் திங் அல்லது சுப் என்னும் ஈறுடனேயே முடிவடைய வேண்டும். திங் வினையீறுகவும் சுப் எழுவாயீறுகவும் அமைகின்றன. இவை இல்லாமல் சொல் இல்லை. அவ்வாறு ஈறு பெற்று வருவது கொல்லடி அல்லது ப்ராதிபதிக எனப்படும். முதலாம் வேற்றுமையில் பெயர்ச்சொல்லுடன் சுப் என்னும் ஈறு சேர்ந்து, பின்னர் அது கெட்டுவிடும். அப்படியானுல், அவ்வீறு ஏன் சேர்க்கப்பட வேண்டும்? எழுவாய்ச் சொல்லுக்கும் வேற்றுமை உருபுகளை ஏற்கவிருக்கும் சொல்லுக்குமிடையே ஒரு வேறுபாட்டினைக் காட்டவே ஈறு சேர்க்கப்பட்டது. இவ் வடமொழி இயல்பினைப் பின்பற்றியே வீர

RangaRakes tamilnavarasam.com

சோழியகாரர் முதலாம் வேற்றுமைக்கு உருபுகள் ஒதி யுள்ளார். தொல்காப்பிய உரைகாரரும் நன்னூல் உரை காரரும் எழுவாய் வேற்றுமையின் உருபுபற்றிக் கருத்துத் தெரிவித்துள்ளனர். சொல்லதிகார வேற்றுமையியல் முதற் சூத்திரத்துக்குரிய சேனவரையர் உரைக்கு விளக்கக் குறிப்பு எழுதும் கணேசையர்,

> 'இச்சூத்திர உரைக்கண் இளம்பூரணர், சேனவ ரையர், நச்சினார்க்கினியர் என்னும மூவரும் பயனிலை கோடலையும் பெயர்க்கு இலக்கணமாகக் கூறல் எவ்வாறு பொருந்தும்? எழுவாயுருபேற்ற பெயர் ஏனை வேற்றுமை உருபுகளை ஏற்காது. ஆதலால் எழுவாயுருபேற்ற பெயரும் வேறு, ஏற்காத பெயரும் வேறு என்க. மயிலைநாதரும் நன்னூலுரையுள் (பெய - 39) பெயர் வேற்றுமையும் ஏனையுருபுகளை ஏற்குமால் அஃதொழித்த தென்னையோவெனின், பெயர் எழுவாயுருபாவது தன் பயனிலை தோன்ற நின்ற காலையன்றே, ஆண்டுப் பிற வுருபுகளை ஏலாது. ஏற்பின் தன் பொருண்மையும், ஏற்கும் உருபின் பொருண்மையும் ஒருங்குடைத்தாதல் வேண்டும். அதனாற் பயனிலை கொள்ளாது நின்ற பெயரே உருபுகளை ஏற்குமெனக் கொள்க எனக் கூறல் காண்க. சங்கர நமச்சிவாயரும் இவ்வாறே கூறுவர்.'

என விளக்கங் கூறுவதை நோக்கலாம். முதலாம் வேற் றுமையினை வட மொழி அடிப்படையிலே விளக்கும் போக்கினைப் பிரயோக விவேகத்தார் ஏற்றுக் கொள்ளவில்லை. தமிழ் முதலாம் வேற்றுமைக்குச் சமஸ்கிருத நெறியிலே விளக்கங் கொடுப்பதை அவர் கண்டித்துள்ளார்.

தமிழ் வேற்றுமைகள் உருபனியல் அடிப்படையிலே பாகுபாடு செய்யப்படத்தக்கன. வேற்றுமை உருபு பெயர்ச் சொல்லுடன் சேருமிடத்து ஏற்படும் சொல்லுரு மாற்றத்தினை அனுசரித்து பாகுபாடு செய்வதற்கு, தமிழ் மொழியிலுள்ள வேற்றுமை உருபுகளின் எண்ணிக்கை உதவும். உதாரணமாக இக்கால வழக்கிலே அவன் என்னுஞ் சொல் பெறக் கூடிய வேற்றுமை உருபுகளாவன :

அவன் + ஐ — அவனை
அவன் + ஆல் — அவனால்
அவன் + { ஓடு / உடன் } — அவனோடு / அவனுடன்
அவன் + கு — அவனுக்கு
அவன் + { இல் / இடம் } + இருந்து — அவனிலிருந்து / அவனிடமிருந்து
அவன் + { உடைய / அது } — அவனுடைய / அவனது
அவன் + { இல் / இடம் } — அவனில் / அவனிடம்

என்பனவாகும். இக்காலத் தமிழ் மொழியிலே ஒரு சொல் குறைந்தது 13 அல்லது 14 மாற்றுருவங்களை வேற்றுமை உருபுகளின் சேர்க்கையினால் அடையக்கூடியதாயுள்ளது. இத்தகைய உருபனியல் எண்ணிக்கை வெறும் பௌதிக வடிவினை அடிப்படையாகக் கொண்டமைந்ததாகும்.

தொடரியல் அடிப்படையிலும் தமிழ் வேற்றுமைகளைப் பாகுபாடு செய்யலாம். வினை மாத்திரம் கொண்டு முடிவன, பெயர் மாத்திரம் கொண்டு முடிவது, இரண்டுங் கொண்டு முடிவன என வேற்றுமை ஏற்ற பெயர்ச்சொற்களைப் பாகு பாடு செய்யலாம். இரண்டாம், மூன்றும், ஐந்தாம், ஏழாம் வேற்றுமை உருபுகளை ஏற்கும் சொற்கள் வினையைக் கொண்டு மாத்திரமே முடிவனவாகும்.

அவன் பாடத்தைப் படித்தான்.
அவன் பேனையால் எழுதினான்.
அவன் ஊரிலிருந்து வந்தான்.
அவன் தெருவில் நின்றான்.

இரண்டாவது வேற்றுமையின் செயப்படுபொருளை, மூன்று வது வேற்றுமையின் கருவி, உடனிகழ்ச்சிப் பொருளை, ஐந்தாம் வேற்றுமையின் நீங்கற் பொருளை, ஏழாம் வேற்றுமையின் இடப்பொருளை இவ் வினைச்சொற்களால்

RangaRakes tamilnavarasam.com

உணர்த்தப்படாவிடினும், சொற்றொடரொழுங்கில் அவை ஆழமைப்பு வடிவத்திலே வினைச் சொற்களைக் கொண்டே முடிவடையவேண்டியுள்ளன. எனவே இந்நான்கு வேற்றுமைகளும் வினைப்பயனிலை கொள்வனவாகும்.

ஆரும் வேற்றுமை பெயரால் மாத்திரமே முடிவடையக் கூடியதாகும். உடைமைப் பொருளை உணர்த்தும் இவ் வேற்றுமை உடைமைப் பண்பினையுடைய பெயரையும் உடைமைப் பொருளைக் குறிக்கும் பெயரையும் தொடரிலே அருகருகே வரப்பெற்றமைவன. கண்ணனுடைய புத்தகம் என்னுந் தொடரினை உதாரணமாகக் காட்டலாம். உடைய என்னும் ஆரும் வேற்றுமை உருபேற்ற கண்ணன் என்னும் பெயர்ச்சொல்லும், புத்தகம் என்னும் உடைமைப்பொருளைக் குறிக்கும் சொல்லும் அருகருகே இடம்பெற்றுள்ளன.

எழுவாய் வேற்றுமையாகிய முதலாம் வேற்றுமையும், நான்காம், ஏழாம் வேற்றுமைகளும் பெயர் முடிபினையும் வினை முடிபினையும் கொள்வனவாகும். எழுவாய் வேற்றுமை பெயர்ப்பயனிலை கொள்வது பற்றித் தமிழ் இலக்கணகாரர் தெளிவாகக் கூறியுள்ளனர்.

அது வீடு.
எனக்கு விருப்பம்.
அவனுக்கு வீட்டில் வீருந்து.

என்னும் மூன்று உதாரணங்களைத் தருகிறோம். முதல் வாக்கியத்தில் அது என்னும் எழுவாய் வேற்றுமை வீடு என்னும் பெயர்ப் பயனிலை கொள்ளுகின்றது. இரண்டாவது வாக்கியத்தில் நான்காம் வேற்றுமை உருபாகிய கு ஏற்ற எனக்கு என்னுஞ் சொல் விருப்பம் என்னும் பெயர் கொண்டு முடிகின்றது. மூன்றுவதில், ஏழாம் வேற்றுமை உருபாகிய 'இல்' ஏற்ற வீட்டில் என்னும் சொல் விருந்து என்னும் பெயர் முடிபு கொள்ளுகின்றது. இம் மூன்று வேற்றுமை களுமே வினைமுடிபுகளையுங் கொள்ளுகின்றன.

அது ஓடியது.
எனக்குப் பசிக்கின்றது.
அவன் வீட்டில் இருக்கிறான்.

என்னும் மூன்று வாக்கியங்களையும் உதாரணங்களாகக் காட்டலாம். ஓடியது, பசிக்கின்றது, இருக்கிறான் என்னும் வினை முடிபுகளை முறையே அது, எனக்கு, வீட்டில் என்னும் வேற்றுமைகள் கொள்கின்றன.

3. வினை

3·1 வினை என்றால் என்ன?

வினை என்றால் என்ன என்பது பற்றித் தொல்காப்பியர் வகுத்துள்ள வரைவிலக்கணம் பற்றி ஆரும் இயலிலே குறிப்பிட்டுள்ளோம். தொல்காப்பியர் சொற்களை இரு பெரும் பாகுபாட்டினுள் அடக்குகின்றார். அவற்றுள் வேற்றுமை ஏற்பன பெயர் என்றும்; வேற்றுமை கொள்ளாதன வினை என்றும் கூறுவர். காலங்காட்டுவது, (அதுவும் ஆராயுமிடத்துத்தான்) வினையின் சிறப்பான ஒரு பண்பாகும். இது பற்றியும் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். எனினும் தொல்காப்பியர் விதிமுகத்தாலே வினைக்கு வரைவிலக்கணம் கூறுமல் எதிர்முகத்தாலேயே கூறியுள்ளார். வீரசோழியகாரர் வினை என்றால் என்ன வென்று வரைவிலக்கணம் கூறவில்லை. சேனவரையர் பெயருக்கும் வினைக்குமுள்ள வேறுபாட்டைத் தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளார். சொல்லைப் பெயரென்றும் வினை யென்றும் வகுத்துந் தொல்காப்பியச் சொல்லதிகார 153 ஆம் சூத்திரத்துக்கு உரை வகுக்குமிடத்து,

> 'பிறசொல்லுமுளவாயினும், இவற்றது சிறப்பு நோக்கிப் 'பெயரே வினையென்றுயிரண்டென்ப' வென்றார். இவற்றுள்ளும் பொருளது புடை பெயர்ச்சி யாகிய தொழில் பற்றுது அப்பொருள் பற்றி வருஞ் சிறப்புடைமையாற் பெயரை முற் கூறினர்'

எனச் சேனவரையர் குறிப்பிடுவர். வினையென்பது பொருளது புடைபெயர்ச்சியாகிய தொழில் பற்றியது என அவர் கருதுகிறார். சேனவரையர் வினைக்குக் கூறும் வரை விலக்கணம் பல இடர்ப்பாடுகளை ஏற்படுத்துவதாயுள்ளது. பெயர்ச் சொற்களைப் போன்று வேற்றுமை உருபுகளை

RangaRakes tamilnavarasam.com

ஏற்காது. அதே வேளையில் ''பொருளது புடை பெயர்ச்சி யாகிய தொழிலையும்'' பற்றுது அமையும் பல சொற்கள் தமிழ் மொழியிலே உள. அவற்றை எதனுள் அடக்கலாம்? சேனவரையருடைய வரைவிலக்கணத்தை ஏற்குமிடத்து இவ்விடர்ப்பாடு ஏற்படுகின்றது. இதனாலேதான் தொல் காப்பியர் தொழிலை அடிப்படையாகக் கொண்டு வினைக்கு வரைவிலக்கணம் வகுக்காது விட்டிருக்க வேண்டும். தொழிலை அடிப்படையாகக் கொண்டு வினைக்கு வரைவிலக்கணங் கூறின், குறிப்பு வினை என்றொரு பாகுபாடு தமிழிலே அமையமுடியாது போய்விடும். உதாரணமாக, அவன் அறிந்தான் என்னும் வாக்கியத்தில் இடம்பெறும் அறிந்தான் என்னும் வினை எவ்வித செயலையும் அல்லது தொழிலையும் உணர்த்துவதாயில்லை. அவன் நல்லவன் என்பதிலுள்ள நல்லவன் ஆகிய குறிப்புவினை எவ்வித செயலையும் உணர்த்து வதாயில்லை. இவ்வினைவடிவத்துக்கும் மகன் என்னும் பெயர் வடிவத்துக்கும் எவ்வித வேறுபாடும் இல்லை. எனவே பெயர்ச் சொல்லிலிருந்து வினைச் சொல்லை வேறு படுத்துவது தொழில் அல்லது செயற்பண்பு என்று கூற முடியாதுள்ளது. காலங்காட்டும் பண்பினை அடிப்படையாகக் கொண்டு வினையைப் பெயரிலிருந்து வேறுபடுத்தலும் பொருத்தமாகத் தெரியவில்லை. தொல்காப்பியர் 'நிலையுங் காலக் காலமொடு தோன்றும்' என்றுதான் கூறியுள் ளார். இத்தகைய இடர்ப்பாடுகள் தொல்காப்பியர் வினைக்குக் கூறிய 'வேற்றுமை கொள்ளாது' என்னும் எதிர்முக வரைவிலக்கணத்தாலே தோன்ற மாட்டா.

சேனவரையரின் வரைவிலக்கணத்தை இலக்கணக் கொத்துரைகாரர் ஏற்றுக் கொண்டது மாத்திரமன்றி 'இனி ஒரு பொருளின் புடைபெயர்ச்சியே வினையென்பது எல்லார்க்கும் ஒப்ப முடிந்தது' என்றும் கூறியுள்ளார். நன்னூலார் இவர்களினின்று வேறுபட்ட மூறையிலே வினைக்கு இலக்கணங் கூறுகிறார்.

> செய்பவன் கருவி நிலஞ்செயல் காலஞ்
> செய்பொரு ளாறுந் தருவது வினையே[11]
>
> பொருண்முத லாறினுந் தோற்றிமுன் றறனுள்
> வினைமுதன் மாத்திரை விளக்கல் வினைக்குறிப்பே[12]

என்பன நன்னூலார் வினையின் வரைவிலக்கணங் கூறுஞ் சூத்திரங்களாகும். செயலுக்குக் கருவி, நிலம், காலம், செய்பொருள் ஆகியன அவசியம். இவ்வாறு செயலை அடிப் படையாகக் கொண்ட செயல் வினைகளை முதலாவது சூத் திரத்திலும், செயலில் வினைகளை இரண்டாவது சூத்திரத்தி லும் நன்னூலார் குறிப்பிடுகின்றார் எனலாம். பொதுவாக வினைச்சொற்களை மூன்று வகையாகப் பாகுபடுத்தலாமென வும், அவை செயல் வினை, புடை பெயர்ச்சி வினை, நிலைப் பாட்டு வினை எனவும் ஜெஸ்பெர்சன் குறிப்பிடுகின்றார்:

> 'As for their meaning, verbs are what Sweet Calls phenomenon words and may be broadly divided into those that denote action (he **eats, breathes, kills, speaks,** etc.), those that denote some process (he **becomes, grows, loses, dies,** etc.) and those that denote some state or condition (he **sleeps, remains, waits, lives, suffers,** etc.), though there are some verbs which it is difficult to include in any one of these classes (he **resists, scorns, pleases,** etc.).'[13]

தமிழ் வினைகளிலும் இத்தகைய வேறுபாடுகள் அமைந் துள்ளன. அவன் கட்டுகிறான், பாய்கிறான், வெட்டுகிறான் என்பவற்றையும்; அவன் வளர்கிறான், சாகிறான் என்பவற் றையும்; அவன் வாழ்கிறான், வருந்துகிறான், காத்திருக்கிறான் என்பவற்றையும் ஒப்பிட்டு நோக்குமிடத்து இம் மூன்று வகையான வினைகளுக்கிடையே வேறுபாடு தென்படுகின்றது.

குறிப்பிட்ட ஒரு சொல் வினையை உணர்த்துகின்றதா என்பதனை அச்சொல்லுடன் ஒரு பெயர்ச் சொல்லினைச் சேர்த்து நோக்குமிடத்து உணர்த்து கொள்ளலாம் (It is nearly always easy to see whether a given idea is verbal or no, and if we combine a verb with a pronoun.... or with a noun.) என ஜெஸ்பெர்சன் கூறுவர்.[14] பெரியன் என்னுஞ் சொல்லினை உதாரணமாக எடுத்துக் கொள்வோம். பெரியன் வந்தான் என்று அச் சொல் வினையொடு சேர்ந்து வருமிடத்து வினைப் பயனில்

RangaRakes tamilnavarasam.com

கொண்ட எழுவாய் வேற்றுமைப் பெயராக அது கொள்ளப் படும். பேரியன் அவன் என்று இன்னொரு பெயர்ச்சொல் லுடன் சேருமிடத்து, அவன் என்னும் எழுவாய்ப் பெய ருக்குப் பயனிலையாக அமைகின்றது. தமிழ் மொழியிலே பயனிலைகள் எல்லாம் வினைகளாகமாட்டா. பெயர்ப் பயனிலைகள் பற்றித் தமிழ் இலக்கணகாரர் கூறியுள்ளார். ஆகவே ஜெஸ்பர்சனுடைய இப்பரிசோதனை தமிழ் வினை எது என அறிவதற்கு உதவக்கூடியதாயில்லை. எனவே, மேற்காட்டிய இடர்ப்பாடுகள் காரணமாக, தொல்காப் பியர் கூறிய 'வினையெனப்படுவது வேற்றுமை கொள்ளாது' என்னும் வரைவிலக்கணமே தமிழ் வினைகளுக்கு ஓரளவு பொருத்தமாக அமைகின்றது எனக் கூறலாம். தெரிநிலை-குறிப்பு என்னும் பாகுபாடு பற்றிப் பின்னர் ஆராயுமிடத்து இவ்விடயம் மேலும் தெளிவுறுத்தப்படலாம்.

3·2 வினைப் பாகுபாடுகள்

தமிழிலக்கணகாரர் தமிழ் வினைகளை முற்றுவினை, எச்ச வினை என இரு பெரும் பிரிவுகளாகப் பாகுபாடு செய்வர். தொல்காப்பியர் இப்பாகுபாடு பற்றி வினையியலிலே கூறாது எச்சவியலிலேயே கூறுகின்றார். சொல்லதிகாரம் 427-ம் சூத்திரத்தில்,

> இறப்பி னிகழ்வி னெதிர்வி னென்றச்
> சிறப்புடை மரபி னம்முக் காலமுந்
> தன்மை முன்னிலை படர்க்கை யென்னு
> மப்பூ விடத்தான் வினையினுங் குறிப்பினு
> மெய்மை யானு மிவ்விரண் டாகு
> மவ்வா றென்ப முற்றியல் மொழியே

என்று முற்றுவினைக்கு இலக்கணங் கூறுகின்றார். ஆனால், எச்சம் என்னும் பாகுபாடு வினைக்கு மட்டும் உரியதாகத் தொல்காப்பியர் கருதவில்லை. அவருடைய சொல்லதிகார 432-ம் சூத்திரம்,

> பிரிநிலை வினையே பெயரே யொழியிசை
> யெதிர்மறை யும்மை யெனவே சொல்லே
> குறிப்பே யிசையே யாயீ ரைந்து
> நெறிப்படத் தோன்று மெஞ்சுபொருட் கிளவி

எனப் பல வகைப்பட்ட எச்சங்கள் பற்றிக் கூறுகிறார். பிரிநிலை உணர்த்தும் ஏகாரம், உம்மை போன்றன இடைச் சொற்கள். இவை வாக்கியத்திலே தனியாகத் 'தாமென வேறுணரப்பட' நிற்பன எனச் சேனாவரையர் கூறுவர். சொல்லதிகார வேற்றுமையியலில் 'கூறிய முறையின்....' என்னுஞ் சூத்திரத்துக்கு உரைவகுக்குமிடத்து,

> வினைச்சொ லிறுதிநிற்கு மிடைச்சொற் றுமென வேறுணரப்படாது அச்சொற்குறுப்பாய் நிற்குமன்றே. இவை (அதாவது வேற்றுமை உருபுகள். ஆ-ர்) யவ்வாறு பெயர்க்குறுப்பாகாது தாமென வேறுணரப் பட்டிறுதி நிற்குமென்பார் 'நிலை திரியாது' என்றார்.'[15]

எனக் கூறிச்செல்கிறார். இடைச்சொற்களான வேற்றுமை உருபுகள் தனியாக நிற்குந் தன்மையுடையன (இதனாலே தான் பிராமிக் குகைக் கல்வெட்டுக்களில் வேற்றுமை உருபுகள் தனியாக எழுதப்பட்டிருக்க வேண்டும். இது பற்றி, 6 ம் இயலின் இறுதிப் பகுதியிற் காணவும்.) எனக் கூறப்படுவதால், ஏகார உம்மை இடைச்சொற்களும் தனியாக நிற்குந் தன்மையன. அவ்வாறு அவை தனியாக நிற்பினும் எஞ்சு பொருட் கிளவிகளே. இவ்வாறு பல வகைப்பட்ட எச்சங்களை எச்சவியலிலே கூறுந் தொல்காப்பி யர் வினையெஞ்சு கிளவியினையும் பெயரெஞ்சு கிளவியினையும் பற்றி வினையியலிலே கூறிய காரணத்தால், இவை இரண்டுமே வினைச்சொல்லுடன் தொடர்புடைய எச்சங்க ளென நாம் கொள்ள முடிகின்றது. வினை, பெயர் எச்சங் களுடைய வாய்பாடுகள், முடிபுகள்பற்றி மட்டுமே தொல் காப்பியர் கூறினாரேயொழிய,[16] வினையெச்சம், பெயரெச்சம் என்றால் என்ன என்று கூறவில்லை.

முற்று, எச்சம் பற்றிய நன்னூலாருடைய சூத்திரங்கள் தெளிவுடையனவாயுள்ளன. முற்றுவினை என்றால் என்ன என்பதனை 323-ம் சூத்திரத்தில்,

> பொதுவியல் பாறையுந் தோற்றிப் பொருட்பெயர்
> முதலறு பெயரல தேற்பில முற்றே

என விளக்குகின்றார். 340-ம் சூத்திரத்தில்,

RangaRakes tamilnavarasam.com

செய்த செய்கின்ற செய்யுமென் பாட்டிற்
காலமுஞ் செயலுந் தோன்றிப் பாலொடு
செய்வ தாதி யறுபொருட் பெயரும்
எஞ்ச நிற்பது பெயரெச் சம்மே

என்று பெயரெச்சமென்றூல் என்ன என்பதற்கு வரை விலக்கணங் கூறுகின்றூர். இதே போன்று 342-ம் சூத்திரத்தில்,

தொழிலுங் காலமுந் தோன்றிப் பால்வினை
ஒழிய நிற்பது வினையெச் சம்மே

என்று வினையெச்சத்துக்கு வரைவிலக்கணங் கூறுகின்றூர். இவ்விலக்கணங்களையே இலக்கணச் சுருக்க ஆசிரியர்,

'முற்றுவினையாவது: பால் காட்டும் விகுதியோடு கூடி நிறைந்து நின்று பெயரைக் கொண்டு முடியும் வினையாம்.'[17]

'பெயரெச்சமாவது, பால் காட்டும் முற்று விகுதி பெறுத குறைச்சொல்லாய்ப் பெயரைக் கொண்டு முடியும் வினையாம்.'[18]

'வினையெச்சமாவது, பால் காட்டும் முற்று விகுதி பெறுத குறைச் சொல்லாய், வினைச்சொல்லைக் கொண்டு முடியும் வினையாம்.'[19]

என இலகுவான உரைநடைத் தமிழிலே கூறியுள்ளார்.

எச்ச வினை அவை கொள்ளும் முடிபுக்கு ஏற்றபடி பெயரெச்சம், வினையெச்சம் எனப் பாகுபடுத்தப்பட்டுள்ளது. இப்பாகுபாடு சொற்றொடரியல் அடிப்படையிலான பாகு பாடாகும். எச்ச வினை வடிவங்கள் அவற்றின் ஈறுகளையோ, வினையடிகளையோ கொண்டு உருபனியல் அடிப்படையிலே வேறுபடுத்தக்கூடியன அல்ல. அவை சொற்றொடரிலே இடம்பெறும்போது, அவற்றைத் தொடர்ந்து வரும் சொற் களாலேயே இனங்காணப்படுகின்றன.

முற்று வினைகளைத் தமிழிலக்கணகாரர் பல்வேறு வகை யிலே பாகுபாடு செய்துள்ளனர். அத்தகைய பாகுபாடுகள்

சில உருபனியல் அடிப்படையிலும், வேறு சில சொற்றொட ரியல் அடிப்படையிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. முற்று வினைகளிலே உள்ள ஈறுகள் அல்லது உருபன்கள் திணை, பால், எண், இடம் ஆகியனவற்றை உணர்த்தவல்லன. அவ்வீறுகளின் அடிப்படையிலே முற்றுவினைகள் பின்வரும் பாகுபாட்டினைப் பெறுகின்றன:

தன்மை ஒருமை	: நான்
தன்மைப் பன்மை	: நாங்கள்
முன்னிலை ஒருமை	: நீ
முன்னிலைப் பன்மை	: நீங்கள்
ஆண்பால் ஒருமைப் படர்க்கை	: அவன்
பெண்பால் ஒருமைப் படர்க்கை	: அவள்
பலர்பாற் படர்க்கை	; அவர்கள்
ஒன்றன்பாற் படர்க்கை	: அது
பலவின்பாற் படர்க்கை	: அவை

ஈறுகளினூலே வேறுபடுத்தியமைக்கப்படும் இப்பாகுபாடு உருபனியல் அடிப்படையிலானதாகும். இவ்வாறு உருப னியல் அடிப்படையிலேயே உடன்பாடு - எதிர்மறை, ஏவல் - வியங்கோள் ஆகிய வினைப்பாகுபாடுகளும் அமைந்துள்ளன.

தமிழ் முதலிய திராவிட மொழிகளில் எதிர்மறை, வினை வடிவத்தாலே உணர்த்தப்படுவதுபற்றி முதலாவது இயலிலே சுட்டப்பட்டது. தமிழிலே எதிர்மறைப் பொருளை, வினை பல்வேறு வடிவங்களிலே உணர்த்துகின்றது. இல்லை என்னும் எதிர்மறைச் சொல் தமிழிலே உண்டு. இது அவன் வீட்டில் இல்லை என்னும் வாக்கியத்திலே தனியாக இடம் பெறுகின்றது. ஏனைய இடங்களில் வினையெச்ச வடிவத் துடனும் வினைப் பெயருடனும் துணைவினையாகச் சேர்ந்து எதிர்மறைப் பொருளை உணர்த்துகின்றது. உதாரணம்: அவன் பாடசாலைக்கு போகவில்லை; இன்று பாடசாலையில் படிப்பிக்கவில்லை. வினைமுற்றுடன் இல்லை சேர்ந்து வருவதுமுண்டு. நீ விழுந்தாயில்லை அல்ல என்னும் வடிவமும் எதிர்மறை வினைமுற்றாக உபயோகப்படுகின்றது. தமிழ் இலக்கணகாரர்

RangaRakes tamilnavarasam.com

இல், அல், ஆ என்னும் எதிர்மறை இடைநிலைகளாலே தமிழ் வினை, எதிர்மறைப் பொருளை உணர்த்து மெனக் கூறியுள்ளனர். இவற்றுள், இல், அல் என்பன முறையே இல்லை, அல்ல என்னும் எதிர்மறைச் சொற் களின் திரிபு நிலைகளே. ஆனால், ஆ இடைநிலையின் தோற்றம் வளர்ச்சிபற்றி இவ்வாறு கூறமுடியாது. இன்று எம்முடைய பேச்சு மொழியிலே எதிர்மறை இடைநிலைகள் என்று எவற்றையும் கூற முடியாமலுள்ளது. அவ்வாறு கூறவேண்டிய தேவையுமில்லை எனலாம். தெரிநிலை வினை முற்றிலே காலங்காட்டும் இடைநிலைகள் வருவதும் வராம லிருப்பதும் ஆகிய நிலைகளைக் கொண்டு உடன்பாடு - எதிர் மறை வினைகளை வேறுபடுத்தக்கூடியதாயுள்ளது. உதாரண மாகக் கீழே கொடுக்கப்படும் இரண்டு உதாரணங்களையும் ஒப்பிட்டு நோக்குக :

படிப்பான் : படி + ப் + ஆன்
படியான் : படி + ஒ + ஆன்

இன்று எம்முடைய பேச்சு வழக்கிலும், பெருமளவு எழுத்து வழக்கிலுமுள்ள வினைச் சொற்களை நோக்குமிடத்து, தெரி நிலை வினைச் சொற்களிலே காலங்காட்டும் இடைநிலைகளின் இன்மை எதிர்மறையை உணர்த்தும் என வரைவிலக்கணங் கூறக்கூடியதாயுள்ளது. ஒன்றினை மறுக்கு மிடத்து ஒரு காலத்தில் மட்டும் மறுக்க முடியாது. மறுத்தல் மூன்று காலங்களையும் ஊடறுத்துச் செல்லுகின்ற காரணத் தாலேயே, காலங்காட்டும் இடைநிலைகளின் தோற்றம் உடன்பாடாகவும், அவற்றின் இன்மை எதிர்மறையாகவும் அமைகின்றன. உடன்பாடு - எதிர்மறை என்னும் பாகு பாடும், அவற்றின் உபயோகமும் சொற்றொடரியல் அடிப் படையில் அமைந்தனவல்ல. உடன்பாடாகவுள்ள ஒரு வாக்கியம் எதிர்மறையாக மாற்றப்படுமிடத்துச் சொற்றொட ரொழுங்கிலே எவ்வித மாற்றமும் ஏற்படுவதில்லை. உதாரணம் :

அவன் இன்று இங்கு வருவான்.
அவன் இன்று இங்கு வரான்.

வினை வடிவத்தில் மாத்திரம் மாற்றம் ஏற்படுகின்றதே தவிர சொல்லொழுங்கிலே எம் மாற்றமும் நிகழவில்லை.

ஏவல்-வியங்கோள் என அமையும் வினைகள் பொரு ளமைதியிலே வேறுபாடு கொண்டமையினும், சொல் லொழுங்கிலே அவை மாற்றம் எதனையும் ஏற்படுத்துவன வல்ல ஏவல் வினை முற்றுக்கள் கட்டளை பிறப்பிப்பனவாக அமைவன. முன்னிலை ஒருமையிலே ஒரேயொரு பெயர்ச் சொல் இருந்த காலத்திலே ஒரேயொரு வினைவடிவமே இருந்தது. அது பெரும்பாலும் வினையடியாகவே அமைந்தது. உதாரணம் : நீ ஓடு. பிற்காலத்தில், நீர், நீங்கள் என்னும் முன்னிலையொருமை வடிவங்கள் தோன்றிய காரணத்தினால், ஏவல் வினை வடிவங்களிலும் மாற்றம் ஏற்பட்டன: நீர் ஓடும், நீங்கள் ஓடுங்கள் என ஏவல் வினை முற்றுக்கள் அமையத் தொடங்கின. வாழ்த்துவதற்கும் வைவதற்குமாக க, இயர், இய, அ, அல் என்னும் விகுதிகள் கொண்ட வியங்கோள் வினைகளை முன்னோர் உபயோகித்தனர். வாழ்க, வாழிய, விழ்க, செல்க போன்ற பல வியங்கோள் வினைகள் இலக்கியங்களிலே கையாளப்பட்டுள்ளன. ஆனால், இன்று வியங்கோள் வினை என ஒரு தனிவடிவம் எமது எழுத்து வழக்கிலோ பேச்சு வழக்கிலோ இருப்பதாகத் தெரியவில்லை. அத்தகைய வடிவத்துக்குப் பதிலாக,

மணமக்கள் இன்புற்று வாழவேண்டுமென
வாழ்த்துகிறேன்.
இந்நூல் சிறப்புற்றமைய வாழ்த்துகிறேன்

என அமையும் தொடர்களே உபயோகப்படுகின்றன. முன்னிலை ஏவலிலேயே, நீங்கள் ஓடுங்கள், தாங்கள் அமருங்கள், நீங்கள் சாப்பிடுங்கள் என்னும் மரியாதைப் பண்பு வந்துவிட்ட காரணத்தினாலே, வியங்கோள் என்னும் தனியான வினையமைப்பின் தேவை இல்லாமற் போய் விட்டது.

வினைப்பாகுபாடுகளுள், சொல்லொழுங்கிலே பெரிதும் மாற்றங்களை ஏற்படுத்துவன செயப்படுபொருள் குன்றிய வினை—செயப்படுபொருள் குன்று வினை, தன்வினை—பிற

RangaRakes tamilnavarasam.com

வினை, செய்வினை—செயப்பாட்டுவினை என்னும் வினைப் பாகுபாடுகளாகும். இவற்றுள், செயப்படுபொருள் குன்றிய வினை—செயப்படுபொருள் குன்ரு வினை என்னும் பாகுபாட் டினை இனங்கண்டு தெளிவுற விளக்கியவர் ஆறுமுக நாவலரே யாகும். வினையடிகளைப் பார்த்த மாத்திரத்தே அது செயப்படுபொருள் குன்றிய வினையா அல்லது குன்ரு வினையா எனக் கூறிவிடலாம். ஓடு, நட, இரு போன்ற வினைவடிவங்கள் ஒருபோதும் செயப்படுபொருள் கொள்வன வல்ல. ஆனல், படி, அடி, உழு, வெட்டு போன்ற வினை வடிவங்கள் செயப்படுபொருள் கொள்வன.

அவன் ஓடினன்.
அவன் பாடம் படித்தான்.

என்னும் இரு வாக்கியங்களையும் உதாரணங்களாகக் காட்ட லாம். செயப்படுபொருள் குன்றிய வினையாகிய ஓடினன் எழுவாய்ப் பெயருடன் மாத்திரம் வருகின்றது. அது வேண்டுமெனில்,

அவன் வீட்டுக்கு ஓடினன்.
அவன் வீதியில் ஓடினன்.

என்றெல்லாம் இரண்டாம் வேற்றுமை தவிர்ந்த ஏனைய வேற்றுமைகளையேற்ற பெயர்ச் சொற்களையும் பெற்று அமையும். ஆனல், படித்தான் போன்ற வினைகள் ஏனைய வேற்றுமைகளேற்ற பெயர்களன்றி, இரண்டாம் வேற்றுமை யேற்ற பெயரினையும் கொண்டு முடியும். ஆகவே இவ் வினைப்பாகுபாடு எத்தகைய சொல்லொழுங்கு மாற்றத்தினை ஏற்படுத்துகின்றதென்பதை இதன் மூலம் உணரக் கூடியதா யுள்ளது

தன்வினை-பிறவினை என்னும் பாகுபாடு எவ்வாறு சொற்ருெடரியலை அடிப்படையாகக் கொண்டது என்ப தற்குப் பின்வரும் உதாரணங்களை விளக்குவதன் மூலம் விளக்கங் கொடுக்கலாம்:

கூட்டம் நடந்தது.
தலைவர் கூட்டத்தை நடத்தினர்.
தலைவர் செயலாளர் மூலம் கூட்டத்தை நடத்துவித்தார்.

இம்மூன்று வாக்கியங்களுள், முதலாவதிலே நடந்தது என்னும் செயப்படுபொருள் குன்றிய வினை இரண்டாவதிலே நடத்தினர் என்னும் செயப்படுபொருள் குன்ருவினையாகவும் பிற வினையாகவும் மாற்றமடைகின்றது. மூன்ருவதிலே நடத்துவித்தார் என்னும் இரட்டைப் பிறவினையாக அல்லது இயக்க வினையாக மாற்றமடைந்துள்ளது. மிகக் குறைந்த வாக்கியவடிவின் அடிப்படையிலே தன்வினையும் செயப்படு பொருள் குன்றிய வினையுமாகிய நடந்தது இன்னெரு பெயர்ச்சொல்லுடனேயே இணைந்து அமையும். பிறவினை யாகிய நடத்தினர் என்பதற்குக் குறைந்த அளவில் இரண்டு பெயர்ச் சொற்களாவது வேண்டியுள்ளது. நடத்துவித்தார் இரண்டுக்கு மேற்பட்ட பெயர்ச் சொற்களை அவாவியுள்ளது. பிற வினையாக்கம் தமிழ் மொழியிலே இரண்டு வகையிலே நடைபெறுகின்றது: (அ) நடந்தான், விழுந்தான், ஓடினன், போனன், பாய்ந்தது என்னும் செயப்படுபொருள் குன்றிய வினைகள் மென்மை வன்மையாதல், ஈறு இரட்டித்தல், பகுதி விகாரமடைதல் போன்ற மாற்றங்களால் முறையே நடத்தினன், விழுத்தினன், ஓட்டினன், போக்கினன், பாய்ச்சி யது என்னும் பிறவினைகளாக மாற்றமடைதல். (ஆ) படித் தான், செய்தான் என்னும் செயப்படுபொருள் குன்ரு வினைகள் வி, பி என்னும் விகுதிகளைப் பெற்று முறையே படிப்பித்தான், செய்வித்தான் என்னும் பிறவினைகளாக மாற்றமடைகின்றன. தன்வினைகள் இவ்விருவகையிலும் பிற வினைகளாக மாற்றமடையுமிடத்துச் சொற்ருெடர் அமைப்பிலேயும் மாற்றமேற்படுத்துகின்றன.

செய்வினை—செயப்பாட்டுவினை பொருளடிப்படையிலே எவ்வித வேறுபாட்டினையும் கொள்ளாது, சொற்ருெடர் வடிவிலே பாரிய மாற்றத்தினை ஏற்படுத்துகின்றது. உதா ரணமாக, நான் மாம்பழம் சாப்பிட்டேன் என்னும் செய் வினை வாக்கியம் செயப்பாட்டுவினை வாக்கியமாக மாற்ற மடையும்போது மாம்பழம் என்னல் சாப்பிடப்பட்டது என அமைகின்றது. சாப்பிட்டேன் என்னும் செய்வினை வடிவம் சாப்பிடப்பட்டது எனச் செயப்பாட்டுவினை வடிவமாக மாற்ற மடைகின்றது. செய்வினை செயப்பாட்டுவினையாக மாற்ற

RangaRakes tamilnavarasam.com

மடையும்போது செய்வினையின் எழுவாய் மூன்றும் வேற்றுமைக் கருவிப் பொருளுணர்த்தும் உருபேற்ற வடிவமாக மாற்றமடைய, செய்வினையின் செயப்படுபொருள் எழுவாயாக மாற்றமடைகின்றது. இந்த வகையிலே செய்வினை—செயப்பாட்டுவினை வேறுபாடு சொற்றொடர் அமைப்பிலே மாற்றத்தினை ஏற்படுத்துவதாயுள்ளது.

4. வினையும் காலமும்

பெரும்பாலான மொழிகளிலே வினைவடிவங்களாலேயே காலம் உணர்த்தப்படுகின்றது. இதனாலே பெரும்பாலான இலக்கணகாரர் வினையின் முக்கியமான பண்பாகக் கால முணர்த்துதலைக் கொண்டுள்ளனர். ஆனால், கால வேறு பாட்டினை உணர்த்தாத வினை வடிவங்களையுடைய மொழி களும் உலகிலே காணப்படுகின்றன என்பதை நாம் மனங் கொள்ள வேண்டும். தமிழ் இலக்கணகாரர் 'வினையும் காலமும்' என்னும் விடயம்பற்றி என்ன கருதினர்? தொல்காப்பியர் வினைச் சொற்கள் எல்லாம் வெளிப்படை யாகக் காலத்தினை உணர்த்தும் எனக் கூறவில்லை. நிலையுங் காலைக் காலமொடு தோன்றும் (வினையியல், சூ. 1) என்று தான் தொல்காப்பியர் கூறுகின்றார். இச் சூத்திரத்துக்கு நேர்ப்பொருள் கூறும் சேனாவரையர் 'வினையென்று சொல்லப்படுவது வேற்றுமையோடு பொருந்தாது, ஆராயுங் காற் காலத்தொடு புலப்படும் என்றவாறு' எனக் கூறுவர். ஆனால், 'நிலையுங் காலை' என்பதற்கு விளக்கவுரை கூறுமிடத்து, 'வினைச் சொல்லுள் வெளிப்படக் காலம் விளக்காதனவுமுள. அவையும் ஆராயுங்காற் காலமுடைய வென்றற்கு, 'நிலையுங்காலை' என்றார்.' எனக் கூறுகின்றார். 'நிலையுங்காலை' என்பது தொல்காப்பியரின்படி எல்லா வினைச்சொற்களுக்கும் பொருந்துவதாகவே அமைக்கப்பட்டிருக்கவேண்டும். சேனாவரையர் கூறும் விளக்கவுரை பிற்கால வினைக்கோட்பாட்டை அடிப்படையாகக்கொண்டமைகின்றதெனவே கூறலாம். தொல்காப்பியருடைய காலத்துக்கு முன்னர் வினைச்சொற்கள் காலம் உணர்த்தாமல் அமைந்திருக்கலாம். தொல்காப்பியருடைய காலத்திலேயே அவை காலமுணர்த்தும் பண்பினைப் பெற்றிருக்க வேண்டும்.

இதனாலேதான் 'நிலையுங்காலைக் காலமொடு தோன்றும்' என அவர் கூறவேண்டியேற்பட்டதெனலாம். இவ்வாறு வினைக்குப் பொதுவிலக்கணம் கூறிய தொல்காப்பியர் அடுத்துவரும் மூன்று சூத்திரங்களில்,

> காலந் தாமே மூன்றென மொழிப.
>
> இறப்பி னிகழ்வி னெதிர்வி னென்ற
> வம்முக் காலமுங் குறிப்பொடுங் கொள்ளு
> மெய்ந்நிலை யுடைய தோன்ற லாறே.
>
> குறிப்பினும் வினையினு நெறிப்படத் தோன்றிக்
> காலமொடு வருஉம் வினைச்சொ லெல்லாம்
> ....

என்று கூறிச்சென்றுள்ளார். இம்மூன்று சூத்திரங்கள் மூலமாக இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னும் மூன்று காலங்களையும் குறிப்பாகவே வினை உணர்த்துப் எனக் கொள்ள வேண்டியுள்ளது. எப்படியிருப்பினும் வினை காலமுணர்த்தும் என்பதனை மூன்றுவது சூத்திரத்திலே தொல்காப்பியர் அழுத்தமாகக் கூறியுள்ளார். ஆனால், காலத்தினை உணர்த்துதற்கு இடைநிலைகளையோ, விகுதிகளையோ தொல்காப்பியர் எங்கேனும் கூறினாரில்லை. வெளிப்படையாகக் காலத்தை உணர்த்துகின்ற குறியீடுகள் எவையுமே அவருடைய காலத்து வினைச்சொற்களிலே இல்லாமலிருந்திருக்க வேண்டும். அதனாலேதான், அம்முக்காலமும் குறிப்பொடு கொள்ளும் என அவர் கூறியுள்ளார். எனவே, குறிப்பு வினை தெரிநிலை வினை என்னும் பாகுபாட்டுக்குத் தொல்காப்பியர் காலத்தை அடிப்படையாகக் கொள்ளவில்லை என்றே கூறலாம்.

மூன்று காலமுங் குறிப்பொடுகொள்ளுமெனத் தொல்காப்பியர் கூறுவதால் தெரிநிலை வினை தெளிவாகக் காலங் காட்டும், குறிப்பு வினை குறிப்பாகக் காலங்காட்டுமெனப் பிற்கால இலக்கணகாரரின் கோட்பாட்டினைத் தொல்காப்பியர் கொண்டிருக்கவில்லை. வெளிப்படக் காலம் விளக்குவனவற்றைத் தெரிநிலை வினையெனவும், வெளிப்படக்

RangaRakes tamilnavarasam.com

காலம் விளக்காதனவற்றைக் குறிப்பு வினையெனவும் கொள்ளும் மரபு தொல்காப்பிய உரைகாரர் எல்லோரிடமுங் காணப்படுகின்றது. தொல்காப்பியர் குறிப்புக்கும் வினைக்கு முள்ள வேறுபாட்டினை ஏற்படுத்துவதற்குக் காலத்தைக் கொள்ளாது தொழில் நிகழ்ச்சியையே கொண்டுள்ளார். இக்கருத்தினையே நன்னூலாரும் பின்பற்றியுள்ளார். அவருடைய தெரிநிலை வினை பற்றிய சூத்திரமும் (320) குறிப்பு வினை பற்றிய சூத்திரமும் (321) இதனையே வலியுறுத்துகின்றன. அத்துடன், முற்றுவினை பற்றி இலக்கணங் கூறுமிடத்து,

> பொதுவியல் பாறையுந் தோற்றிப் பொருட்பெயர்
> முதலறு பெயரல தேற்பில முற்றே (சூ. 323)

என்றே கூறியுள்ளார். இங்கு அவர் தெரிநிலை குறிப்பு என்னும் பாகுபாட்டினை வலியுறுத்தவில்லை. அப்படி வலியுறுத்தாவிடில் தொல்காப்பியர் கூறியதுபோல இரண்டுமே காலங்காட்டுவன; ஆனால் அவற்றினுடைய வேறுபாடு தொழில் நிகழ்ச்சியே என உய்த்துணர வைக்கின்றார். பிற்கால இலக்கணகாரர் யாவருமே தெரிநிலை—குறிப்பு என்பன காலத்தைக் காட்டும் பண்பினாலேயே வேறுபடுகின்றதெனக் கூறுவர். இத்தகையோருடைய கோட்பாட்டினை நன்கு விளக்குவனவாக ஆறுமுகநாவலர் இலக்கணச் சுருக்கத்திற் கொடுத்துள்ள வரைவிலக்கணங்கள் அமைகின்றன (234, 235):

> 'தெரிநிலை வினையாவது, காலங்காட்டும் உறுப்புண்மையாலே, காலம் வெளிப்படத் தெரியும்படி நிற்கும் வினையாம்.'

> 'குறிப்பு வினையாவது காலங்காட்டும் உறுப்பின்மையினாலே, காலம் வெளிப்படத் தெரிதலின்றிச் சொல்லுவோனது குறிப்பினாலே தோன்றும்படி நிற்கும் வினையாம்.'

தெரிநிலை-குறிப்பு என்னும் வேறுபாடு தொல்காப்பியர் காலத்திலேயே தோன்றிவிட்டது. ஆனால், அது காலத்தை

அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை. அப்படியெனில் குறிப்புவினை என்றொரு பாகுபாடு எவ்வாறு தோன்றியிருக்கலாம்? பின்வரும் வாக்கியங்களை நோக்குக:

1. கண்ணன் கதிரையில் இருக்கிறான்
2. கண்ணன் வீட்டில் இருக்கிறான்

இவ்விரு வாக்கியங்களிலும் இரு என்னும் வினையடியாகப் பிறந்த நிகழ்கால வினைமுற்றுகிய இருக்கிறான் என்பது உபயோகிக்கப்பட்டுள்ளது. முதலாவது வாக்கியத்திலே 'இருத்தல்' என்னும் தொழில் நடைபெறுகின்றது. ஆனால், இரண்டாவது வாக்கியத்தில் 'இருத்தல்' என்னும் பொருண்மை சுட்டப்படுகின்றது. இரண்டுமே காலமுணர்த்தியபோதும், ஒன்றிலே 'வினைநிலை' உண்டு; மற்றையதிலே 'பொருண்மை சுட்டல்' உண்டு. 'வினைநிலை' உணர்த்துஞ் சொல்லைத் தெரிநிலை வினையாகவும், 'பொருண்மை சுட்டும்' சொல்லைக் குறிப்பு வினையாகவும் கொள்ளலாம். தொல்காப்பியர் எழுவாய்ப் பெயருக்குப் பயனிலையாக வருவன எனக் கூறும்: பொருண்மை சுட்டல், வியங்கொள வருதல், வினைநிலையுரைத்தல், வினைவிற் கேற்றல், பண்புகொள வருதல், பெயர்கொள வருதல் என்பனவெல்லாம் அவராலே வினைகளாகக் கொள்ளப்பட்டிருக்க வேண்டும். இதனால், வினைநிலையுரைக்குஞ் சொற்களை ஒரு பகுதியாகவும், ஏனையவற்றை வேறொரு பகுதியாகவுங் கொள்ளவேண்டி ஏற்பட்டிருக்கலாம்; வினைநிலையுரைக்குஞ் சொல் தவிர்ந்த ஏனையவை குறிப்பு வினைகளெனத் தொல்காப்பியராற் கருதப்பட்டிருக்க வேண்டும்.

அடிக்குறிப்புக்கள்

1. தொல்காப்பியம், சொல்லதிகாரம், சூ. 11, கணேசையர் விளக்கவுரை.
2. Sapir, Edward:, **Language**, p. 119
3. தொல்காப்பியம், சொல்லதிகாரம், சூ. 160

RangaRakes tamilnavarasam.com

4. வேலுப்பிள்ளை, ஆ., தமிழ் வரலாற்றிலக்கணம், ப. 128-141
5 நன்னூல், சூ. 132
6. தொல்காப்பியம், சூ. 66, சேனவரையருரை
7. Lyons, J., **Introduction to Theoretical Linguistics,** p. 289
8. **Ibid**
9. தொல்காப்பியம், சொல்லதிகாரம், சூ. 106
10. நன்னூல், சூ. 317
11. மேற்படி, சூ. 320
12. மேற்படி, சூ. 321
13. Jesperson, Otto., **The Philosophy of Grammar,** p. 86
14. **Ibid.**
15. தொல்காப்பியம், சொல்லதிகாரம், சூ. 69, சேனவரையருரை.
16. மேற்படி, சூ. 228-239
17. ஆறுமுகநாவலர், இலக்கணச் சுருக்கம், ப. 112
18. மேற்படி, ப. 125
19. மேற்படி, ப. 128

8

தமிழ் வாக்கிய அமைப்பு

1. தமிழ் இலக்கணகாரர் மரபு

தமிழ் வாக்கியம் பற்றி எமது தமிழ் இலக்கணகாரர் என்ன கருதினர்கள் என்பதுபற்றித் தெளிவான விளக்கமெதுவும் இதுவரை காலமும் வெளிவரவில்லையெனலாம். இன்று எழுதப்படும் தமிழ் வாக்கியங்களின் அமைப்புப் பற்றியும் எவரும் இன்னும் தெளிவாக விளக்கினரில்லை.

தமிழ் இலக்கணகாரர் தமிழ் வாக்கியம் இத்தகைய உறுப்புக்கள் கொண்டு எவ்வித ஒழுங்குகளிலே அமையுமென ஓர் அதிகாரத்திலே தொகுத்துக் கூறவில்லை. பல அதிகாரங்களிலே கூறப்பட்ட செய்திகளை அடிப்படையாகக் கொண்டு நாம் பல விடயங்களை உய்த்துணரவேண்டியுள்ளது. தமிழ் வாக்கியத்தின் அடிப்படை உறுப்புக்கள் பற்றிய விபரங்கள் பலவற்றை வேற்றுமைபற்றிக் கூறும் சந்தர்ப்பத்திலேயே தமிழ் இலக்கணகாரர் தெளிவுபடுத்தியுள்ளனர் எனக் கூறலாம்.

வேற்றுமைபற்றித் தமிழ் இலக்கணகாரர் கூறுமிடத்து, முதல் வேற்றுமையினை எழுவாய் வேற்றுமையென்றும், அவ்வெழுவாயாகப் பெயர்ச்சொல்லே அமையுமென்றும் கூறியுள்ளனர்.[1] நன்னூலார் அப்பெயர்ச்சொல் 'திரிபில் பெயரே' என்பர்.[2] இவ்வாறு பெயர்ச்சொல் எழுவாயாக அமைய, அதன் பயனிலையாக வினைச்சொல்லோ, பெயர்ச்

RangaRakes
tamilnavarasam.com

சொல்லோ, விஞச்சொல்லோ வந்தமையும் என எல்லாத் தமிழ் இலக்கணகாரரும் கூறியுள்ளனர். தமிழ் வாக்கிய மொன்றனுக்கு அடிப்படை உறுப்புக்களாக அமைவன எழுவாயும் பயனிலையுமே என்பது இவற்றிஞலே பெறப்படு கின்றது.

பெயர் + வினை : செந்தூரன் பாடினன்.
பெயர் + பெயர் : செல்வி அழகி.
பெயர் + விஞ : நங்கை எங்கே?

என்னும் வகையிலே தமிழ் வாக்கியங்கள் பெரும்பாலும் அமைகின்றன. ஏனைய உலக மொழிகளிலும் இவ்வாறே வாக்கியங்களின் அடிப்படைக் கூறுகள் அமைந்துவிடுகின்றன. எழுவாய் என்பது கருத்தாகவும் (Topic) பயனிலை என்பது கருத்து விளக்கமாகவும் (Comment) அமைவதாக மொழி யியலார் குறிப்பிட்டுள்ளனர்.[3] உதாரணமாக செந்தூரன் பாடினன் என்னும் வாக்கியத்திலே, செந்தூரன் கருத்தாக வும் பாடினன் கருத்துவிளக்கமாகவும் அமைகின்றது. எழு வாயும் பயனிலையுமே வாக்கியமொன்றனின் மூலக்கூறுகளாக அமையுமென மொழியியலார் கருதுகின்றனர். ஆஞல் மேலெழுந்தவாரியாகத் தமிழ் வாக்கியங்களே நோக்கு மிடத்துப் பயனிலை இன்றி வாக்கியங்கள் அமைவதையும், எழுவாயின்றி வாக்கியங்கள் அமைவதையும் நாம் கண்டுள் ளோம். விஞவொன்றுக்கு மறுமொழி கூறுமிடத்து இத் தகைய வாக்கியங்கள் தமிழிலே அமைவதுண்டு. செந் தூரன் என்ன செய்தான்? என்னும் விஞவுக்கு விடை கூறும் போது பாடினன் என்று ஒரு சொல் வாக்கியமாக விடை கூறுவதும், யார் பாடினன் என்னும் விஞவுக்குச் செந்தூரன் என்று ஒரு சொல் வாக்கியமாக விடை கூறுவதும் வழக்கம். ஆஞல் அவ்விரு மறுமொழிகளின் ஆழமைப்பிலே முறையே எழுவாயும், பயனிலையும் இருப்பது கண்கூடு

செல்வி அழகி என்னும் வாக்கியம் செல்வி அழகி ஆனாள் அல்லது செல்வி அழகி ஆவாள் என்றே அமையவேண்டு மென்னுங் கருத்துப் பொதுவாக இக்காலத்திலே நிலவி வருதலை நாம் அறிவோம். உதாரணங்கள் சிலவற்றை இங்கு தருதல் பொருத்தமென எண்ணுகிறேன்.

'மற்றவர்க்கு இன்பமும் துன்பமும் வாழ்வின் இரு நிலைகள்.'[4]

என்று வாக்கியமொன்றனை எழுதும் டாக்டர் மு. வரத ராசனே தான் எழுதிய அதே நூலில்,

'அவளே ஒருவனுடைய வாழ்க்கைத் துணைவி ஆனபிறகு அவனுடைய துன்பத்திற்காக விடும் கண்ணீர் துறவிகளின் நெஞ்சத்தையும் கலக்கும் சிறப்புடைய தாகும்'[5]

என்று எழுதிச் சென்றுள்ளார். அவர் எழுதிய முதல் வாக்கியத்தினைப் போன்று,

'அவளே ஒருவனுடைய வாழ்க்கைத் துணைவி ஆன பிறகு அவனுடைய துன்பத்திற்காக விடும் கண்ணீர் துறவிகளின் நெஞ்சத்தையும் கலக்கும் சிறப்பு உடை யது.'

என்று எழுதியிருக்கலாமே. ஆகும் என்னும் ஆக்கவினைச் சொல் அங்கு வரவேண்டிய தேவை என்ன என்பதுபற்றி நாம் ஆராய்வது பயனுடைத்தாகும். ஆ என்னும் தமிழ் வினையடியிலிருந்து பிறக்கும் ஆகும், ஆனது, ஆகியது, ஆவாள், ஆனன், ஆன, ஆகிய போன்ற வினைவடிவங்கள் இக்காலத் தமிழ் மொழியிலே பெருமளவு கையாளப் படுகின்றன. இத்தகைய வினைவடிவங்களுள் முற்று வடிவங் களைத் தமிழ் வாக்கியங்களின் இறுதியிலே இன்று கையாளப் படுவதற்கு இரண்டு காரணங்களைக் கூறலாம்.

முதலாவது காரணம் எம்முடைய தமிழ் இலக்கண காரருடைய மரபேயாகும். தமிழ் வாக்கியமொன்றினிலே அமையும் எழுவாய் எப்பொழுதும் வினையொன்றிஞலேயே முடிவடையும் எனத் தமிழ் இலக்கணகாரர் எங்கும் கூறிஞ நில்லை. அதற்குப் பதிலாக வினை, பெயர், விஞ ஆகிய மூன்றில் ஒன்று பயனிலையாக அமையுமெனவே அவர்கள் கூறியுள்ளனர். ஆஞல், தொல்காப்பியர் தொடக்கம் இலக்கணச் சுருக்கஞர் வரை ஆக்கச் சொல் பற்றிச் சில வரையறைகள் செய்துள்ளனர். தொல்காப்பியர் தன் னுடைய சொல்லதிகாரத்திலே,

RangaRakes tamilnavarasam.com

இயற்கைப் பொருளி யிற்றெனக் கிளத்தல் (சூ. 19)

என்று கூறியுள்ளார். இயற்கையாகத் தன்னுடைய இயல் பிலே திரியாத பொருளினைக் கூறுமிடத்து அதற்கு ஆக்கமுங் காரணமுங் கொடாது இத்தன்மைத்து என்னுந் தொனி பயப்பதாகக் கூறவேண்டுமென்பது தொல்காப்பியர் கருத் தாகும். நிலம் வலிது, நீர் தண்ணிது, தீ வெய்து என்னும் உதாரணங்களை இச்சூத்திரத்திற்கு உரையெழுதிய சேனவ ரையர் வழங்கியுள்ளார். காரணமில்லாது மாற்றமெதுவும் ஏற்படாத பொருளைக் குறிக்குமிடத்து ஆக்கச் சொல் தேவை யில்லை என்பது ஆதித் தமிழ் இலக்கணகாரராகிய தொல் காப்பியரின் கருத்து. இதனையே அவர் அடுத்த சூத்திரத்திலே நிறுவுகிறார்.

ஆக்கந் தானே காரண முதற்றே (சூ. 20)

என்பது தொல்காப்பியச் சூத்திரம். காரணம் பற்றி செயற்கைப் பொருட்களிலே மாற்றமேற்படுமிடத்து ஆக்கச் சொல் இடம்பெறவேண்டுமென்பது தொல்காப்பியர் கருத்து. டாக்டர் மு. வரதராசன்,

> 'இத்தகைய சிறப்பு இந்தக் கண்ணீருக்கு அமைந்த காரணம் தம் துயர் மறந்து பிறர் துயருக்காக உருகும் அளவிற்கு நெஞ்சம் வளர்ந்த வளர்ச்சியே ஆகும்.'[6]

என்று எழுதியுள்ள வாக்கியம் தொல்காப்பியரின் இலக் கணத்துக்கு நல்லதொரு இலக்கியமாகும். ஆனால், ஆதித் தமிழ் இலக்கணகாரராகிய தொல்காப்பியரே இக்கருத்தினை முடிந்த முடிபாகக் கொள்ளவில்லை என்பதை அவருடைய அடுத்த சூத்திரமாகிய,

ஆக்கக் களவி காரண மின்றியும்
போக்கின் றென்ப வழக்கி னுள்ளே

என்பதனாலே தெளிவுறுத்துகிறார். இவ்வாறு ஆக்கவினை பற்றித் தொல்காப்பியர் மூன்று சூத்திரங்களிலே கூறிச் செல்ல, அவர் பின் வந்த நன்னூலாரோ,

ஆக்க வினைக்குறிப் பாக்கமின் றியலா

என்று அறுதியிட்டுக் கூறினர். ஆனால் நன்னூல் உரை காரரோ,

சாத்தனல்ல னுயினுன்
சாத்த னல்லன்

என்று உதாரணங்கள் கொடுத்துள்ளார். நன்னூல் உரை காரருடைய உதாரணங்களின்படி எதற்கும் ஆக்கவினை கொடுக்கலாம் அல்லது விடலாம் என்னுங் கருத்தினை நல்கு கின்றது. தொல்காப்பியருடைய காரண காரிய ரீதியான மரபு இங்கு கடைப்பிடிக்கப் படவில்லை. இதனால், எங்கு ஆக்கவினை கொடுக்க வேண்டும் எங்கு கொடுக்க வேண்டிய தில்லை என்பதிலே மயக்கம் ஏற்பட்டது. இத்தகைய மயக்கமே இக்காலத் தமிழிலும் காணப்படுகின்றது. இம் மயக்கம் பற்றி நோக்குமிடத்திலேதான், ஆக்கவினை முற்று வடிவங்கள் இன்று தமிழ் வாக்கியங்களின் இறுதியிலே கையாளப்படுவதின் இரண்டாவது காரணம் பற்றி நாம் சிந்திக்க வேண்டியுள்ளது.

ஆங்கில மொழியுடன் ஏதோ வகையிலே தொடர்பு கொண்டுள்ளவர்களாக இன்றைய கல்வி கற்றோர் யாவரும் அமைகின்றனர். ஆங்கில மொழியிலே ஒரு வாக்கியம் வினை இன்றி அமையவேமாட்டாது. ஆங்கிலந் தெரிந்தவர்கள் தமிழ் படிப்பதற்காக நன்னூல் இலக்கணத்தை ஆங்கிலத் தில் எழுதிய போப்ஐயர் போன்றவர்கள் தமிழ் வாக்கியம் ஒவ்வொன்றும் வினை கொண்டு முடிவடையும் பண்பினை விதந்து கூறினர். நாளடைவில் அது வழக்கமாக வந்ததின் காரணத்தினால், இன்று, ஆகும், ஆனது, ஆயின, ஆனால், ஆனாள், ஆயினர், ஆயிற்று போன்ற வினைவடிவங்களை வாக்கியங்களின் இறுதியிலே உபயோகிக்கப் பழகிக் கொண் டோம்.

2. ஒட்டுமொழி வகையைச் சார்ந்தது தமிழ்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் உலக மொழிகளை அவற்றின் வடிவுடைமை நோக்கித் தனிமொழி, ஒட்டு மொழி, விகுதிமொழி எனப் பாகுபாடு செய்தனர் என்று

RangaRakes tamilnavarasam.com

முன்னர் குறிப்பிட்டோம். ஒட்டுமொழிக்குத் துருக்சி மொழியை மொழியியலார் ஒரு சிறந்த உதாரணமாகக் காட்டுவர். தமிழ் உட்பட திராவிட மொழிகளையும் ஒட்டு மொழிகளெனக் கொள்வர். ஒட்டு மொழிகளின் பண்பு களாவன:

I. வேர்ச்சொல்லுடன் இணைக்கப்படும் உருபன்கள் தம் முடைய ஒலியியல் தனித்துவத்தினைப் பேணுவனவாக அமைதல்;

II. ஒரு சொல்லின் வடிவத்தினை நோக்குமிடத்து அதன் உறுப்புக்களை உடனடியாக இனங் கண்டு கொள்ள முடிதல்;

III. சொல்லில் அடங்கியுள்ள ஒவ்வோர் உறுப்பும் ஒவ்வோர் உருபனுக அமைதல்.

தமிழ் மொழியில் மேற்படி பண்புகள் எவ்வாறமைந்துள்ளன என்பதை நோக்குவோம். முதலாவது பண்பாகிய ஒலியியல் தனித்துவம் தொடர்பாகத் தமிழ்மொழியிலிருந்து சில உதாரணங்களைக் காட்டலாம். தமிழிலே பன்மை உணர்த் தும் உருபன் { கள் } ஆகும். மூன்றும் வேற்றுமை கருவிப் பொருளை உணர்த்த { ஆல் }, உடனிகழ்ச்சிப் பொருளு ணர்த்த { உடன் } ஆகிய உருபன்கள் உபயோகப்படுகின் கின்றன. கத்தி என்னும் 'திரிபில் பெயர்' எனப்படும் எழுவாய் வேற்றுமைச் சொல். மூன்றும் வேற்றுமை, ஒருமை, கருவிப் பொருள் ஆகியனவற்றை உணர்த்து மிடத்து கத்தியால் என அமையும். கத்தி+ஆல் என்னு மிடத்தில் உடம்படு மெய்யாக 'ய்' இடம்பெறுவது தமிழ் மொழியின் புணர்ச்சி விதிகளின் விளைவாகும். மூன்றும் வேற்றுமை கருவிப் பொருளையும் பன்மையையும் உணர்த் தும் வகையிலே கத்திகளால் என்னுஞ் சொல் அமைய லாம். கத்தி+கள்+ஆல் என்னும் வகையிலே அச்சொல்லின் உறுப்புக்களை நாம் பிரித்து நோக்குமிடத்து ஒவ்வொரு உறுப்பினுடைய ஒலியியற் பண்பும் சொல்லிலே பேணப் பட்டிருப்பதைக் காணலாம்.

இரண்டாவதான ஒரு சொல்லின் உறுப்புக்களாக அமையும் உருபன்களை உடனடியாக இனங்கண்டு கொள்ளும் பண்பினைத் தமிழ் மொழியின் வினைச் சொல் ஒன்றினை உதாரணங் காட்டுவதன் மூலம் விளக்கலாம். இக்காலத்திலே வந்துகொண்டிருக்கின்றார்கள் என்பது ஒரு கூட்டுவினைச் சொல்லாகத் தமிழ் மொழியிலே பயன்படுத்தப்படுகின்றது. இத்தகைய ஒரு வினைச்சொல்லை, வந்து+கொண்டு+இரு+ கின்று+ஆர்+கள் எனப் பாகுபாடு செய்துகொள்வதற்கு அவற்றின் உறுப்புக்களை இனங்கண்டுகொள்ளக் கூடியதாக உள்ளது. இவற்றில் வா என்பது வேர்ச்சொல்லாகவும், அதன் அடியிலிருந்து பிறந்த வினையெச்சமாகிய வந்து என்பதுடன் கொள், இரு ஆகிய துணை வினைகளை ஒட்டி, கின்று என்னும் நிகழ்கால உருபனைச் சேர்த்து, ஆர், கள் ஆகிய பன்மை உருபன்களை ஈறணைத்துத் தற்கால வினைச் சொல் ஒன்று ஆக்கப்படுகின்றது.

மேற்காட்டிய உதாரணங்களில், அதாவது,

கத்தி+ஆல்
கத்தி+கள்+ஆல்
வந்து+கொள்+இரு+கின்று+ஆர்+கள்

என்பனவற்றில் ஒவ்வொரு உறுப்பும் ஒவ்வோர் உருபனுக அமைகின்ற தன்மை ஒட்டு மொழிகளின் மூன்றுவது பண்பு என்னும் வகையிலே தமிழ் மொழியிலும் அமைந்துள்ளது என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

தமிழ்மொழி ஒட்டுமொழி வகையைச் சார்ந்ததெனக் கூறினும், அம்மொழியிற் சில சந்தர்ப்பங்களிலே அவ் வொட்டுமொழிப் பண்பு காணப்படாமலுள்ளமையினையும் இங்கு சுட்டிக்காட்டுதல் வேண்டும். உதாரணமாக, நீ, நீங்கள், நான், நாங்கள் ஆகிய முன்னிலை, தன்மை இடப் பெயர்கள் வேற்றுமை உருபுகளை ஏற்று வருமிடத்து அவற் றில் ஒட்டு மொழிகளுக்கு முன்னர் கூறிய மூன்று பண்பு களையுமே காணமுடியாது. அப்பெயர்கள் வேற்றுமை உருபுகள் ஏற்பதன் முன்னர் முறையே உன், உங்கள், என்,

RangaRakes tamilnavarasam.com

எங்கள் என்னும் வடிவங்களைப் பெற்றுவிடுகின்றன. இத் தகைய சில சந்தர்ப்பங்களைத் தவிர ஏனைய இடங்களி லெல்லாம் தமிழ் ஓர் ஒட்டுமொழி எனக் கூறும்படி அமைந் துள்ளது.

3. எழுவாய்—பயனிலை இயைபு

பல மொழிகளிலே சொற்கள் தொடராக அமையு மிடத்து அவற்றிடையே 'இயைபு' என்னும் பண்பு அவசிய மாக அமைய வேண்யுள்ளது. ஆங்கில மொழியிலே எழு வாய்க்கும் வினைச்சொல்லுக்கு மிடையே 'எண்' அடிப் படையிலே இயைபு அவசியமாகின்றது. **He** எனும் ஒருமை எழுவாய் **runs** எனும் ஒருமை குறிக்கும் வினையையே கொள்ளும். ஆனால், **They** எனும் பன்மை எழுவாய் **run** எனும் பன்மை குறிக்கும் வினையையே கொள்ளும். ஆனால், ஆங்கிலமொழியிலே 'எண்' தொடர்பான இந்த இயைபு எழுவாய்ப் பெயருக்கும் நிகழ்கால வினைக்குமிடையே காணப்படுகின்றது. இறந்த கால வினை இடம் பெறு மிடத்து இவ்வியைபு காணப்படுவதில்லை.

He ran
They ran

என்னும் வாக்கியங்களை நோக்குக. எழுவாயில் ஒருமைச் சொல்லாக **He,** பன்மைச் சொல்லாக **They** அமைந்த போதிலும் இறந்தகால வினைச்சொல்லாக **ran** என்பதே இரண்டிற்கும் அமைகின்றது. இந்த வகையில் பிரான்சிய, ஜெர்மானிய மொழிகளிலும் சில சொற்றொடர்களிலே 'எண்', 'பால்' போன்ற இலக்கணப் பண்புகள் அடிப் படையிலே இயைபு காணப்படுகின்றது

தமிழ் மொழியிலே எழுவாயாக அமையும் பெயர்ச் சொல்லுக்கும், பயனிலையாக அமையும் வினைச்சொல்லுக்கும் 'திணை', 'பால்', 'எண்', 'இடம்' எனும் இலக்கணக் கூறுகளின் அடிப்படையிலே இயைபு காணப்படுவது அம் மொழியின் அடிப்படைப் பண்பாக அமைகின்றது. இரண்

டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தோன்றியதெனக் கருதப்படும் தொல்காப்பியம் எனும் தமிழ் இலக்கண நூல் இவ்வியைபினைக் குறித்துள்ளது. தொல்காப்பியர் தமது சொல்லதிகாரத்தில் முதல் நான்கு சூத்திரங்களிலும் 'திணை', 'பால்' எனும் பாகுபாடு தமிழ் மொழியிலே எவ்வாறு அமைகின்றதெனக் கூறிய பின், ஐந்தாவது சூத்திரந் தொடக்கம் 'திணை', 'பால்' என்னும் இலக்கணப் பாகு பாடுகளைக் குறிக்கும் உருபன்கள் பற்றிக் கூறியுள்ளார். பத்தாவது சூத்திரத்திலே அவ்விலக்கணப் பாகுபாடுகளைக் குறிக்கும் உருபன்கள் வினையுடன்தான் வருமென வரையறை செய்தபின், பதினேழாவது சூத்திரத்தில்,

வினையிற் றோன்றும் பாலறி கிளவியும்
பெயரிற் றோன்றும் பாலறி கிளவியு
மயங்கல் கூடா தம்மர பினவே

எனக் குறிப்பிடுவர். பயனிலையாக வரும் வினைச்சொல் எந்தப் பாலைக் குறிக்கின்றதோ, அதே பாலினைக் குறிப்ப தாகவே எழுவாயில் வரும் பெயர்ச்சொல்லும் அமையும் என்பது அச்சூத்திரத்தின் கருத்தாகும். விதிமுறையாக 'மயங்கல் கூடா தம்மர பினவே' என்று தொல்காப்பியர் கூறினும், அது அவருடைய காலத் தமிழின் சொற்றொட ரியல்பின் விவரணமாகவே அமைகின்றது, அப்பண்பு தமிழ் மொழியின் சொற்றொடரியல் அடிப்படையாக அமைகின்ற காரணத்தினாலே அது இன்றுவரையும் தமிழ் மொழியிலே நிலைத்து நிற்பதைக் காணலாம். இன்று, தமிழ்மொழி பேசுகின்ற நாம் அவன் வந்தான்* என்றே, அவள் வந்தான்* என்றே பேசுவதில்லை. இயற்கையாகவே, அப்பா வந்தான், அம்மா வந்தாள் எனப் பேசக்கூடிய குழந்தைகள் சில சந்தர்ப்பங்களில் திணையை மயக்கி, மாமா வந்துது, மாமி வந்துது எனப் பேசக்கூடும்; ஆனால் அக் குழந்தைகள் கூட,

அப்பா வந்தாள்*
அம்மா வந்தான்*

* நட்சத்திரக் குறியிட்டவை யாவும் தமிழ்மொழி இயல்பு இல்லா வாக்கியங்களாகும்.

RangaRakes tamilnavarasam.com

மாமா வந்தாள்*
மாமி வந்தான்*

என மயக்கமுறப் பேசுவதில்லை. இதனால், எழுவாயாக அமையும் பெயரிலே தோன்றும் பாற்பாகுபாடும், பயனிலையாக அமையும் வினையிலே தோன்றும் பாற்பாகுபாடும் இயைபுற்று அமையுமென்பது தமிழ்மொழியின் வாக்கிய வியல் அடிப்படைப் பண்பாக அமைகின்றது. இது தொல் காப்பியர் காலந் தொடக்கம் இன்றுவரை தமிழ் மொழி யிலே காணப்படுவது இதற்கு நல்ல சான்றாகும். ஆங்கிலம், சிங்களம் போன்ற மொழிகளிலே இப்பண்பு காணப்பட வில்லை. இதுபற்றி ஏற்கனவே யாம் ஒரு நூலிற் குறிப்பிட் டுள்ளனவற்றை இங்கு திரும்பத் தருகிறோம்.[7]

'சிங்கள மொழியுடனும் ஆங்கில மொழியுடனும் தமிழ் மொழியை ஒப்பிட்டு நோக்குமிடத்து, தமிழ் மொழியிலே எழுவாய்ச் சொல்லுக்கும் பயனிலைச் சொல்லுக்கும் திணை, பால், எண், இடம், காலம் என்னும் வகையிலே பெரிதும் இயைபு வேண்டுகின்ற இயல்பினை நாம் அவதானிக்க முடிகின்றது: சிங்கள மொழியில்,

ஒஹு காவா
எයා காவா
ඒක காவா

என்றமையும் மூன்று வாக்கியங்களையும் நோக்குக. காவா என்னும் வினைச்சொல் எந்தவித மாற்றமுமின்றி மூன்று வாக்கியங்களிலும் இடம்பெற்றுள்ளது, ஆனால், தமிழ்மொழியியல்போ இதனின்றும் வேறுபட்டுள்ளது. அம்மூன்று வாக்கியங்களையும் தமிழிலே மொழி பெயர்க்குமிடத்து, அவ்வேற்றுமையினைக் கண்டு கொள்ளலாம்:

அவன் சாப்பிட்டான்.
அவள் சாப்பிட்டாள்.
அது சாப்பிட்டது.

காவா என்னும் சிங்கள வினைச்சொல்லினை மூன்று விதமாகத் தமிழில் மொழிபெயர்க்கவேண்டிய தேவை யுளது. இதன் காரணம் எழுவாய்ப் பெயர்ச்சொற்க ளாகிய அவன், அவள், அது என்பன முறையே ஆண் பால் ஒருமை, பெண்பால் ஒருமை, ஒன்றன் பால் என அமைவதால், பயனிலை வினைச்சொற்களும் அவ்வாறே அமையவேண்டியுள்ளன.

திராவிட மொழிகளுள் ஒன்றான மலையாளத்திலுங்கூடத் தமிழ்மொழியிற் காணப்படுவதுபோன்ற எழுவாய்-பயனிலை இயைபு காணப்படுவதில்லை. தமிழ்மொழியிலமைந்துள்ள வினைமுற்று வடிவம்போல் மலையாள மொழியிற் காணப் படாமை அல்வியல்புக்கு ஒரு காரணமெனலாம். அம் மொழியிலே படர்க்கைப் பயனிலைகளாக வரக்கூடிய சொல்லினன், ஆக்கினன், களஞ்ஞான் என்னும் வினைச் சொற்கள் முன்னிலையிலும் இடம்பெறுகின்றன:

நீ சொல்வினன்.
நீ ஆக்கினன்.
நீ களஞ்ஞான்.

என அவை அமையும். ஆகவே இதுவரை கூறியவற்றால் தமிழ் மொழியின் வாக்கியவியற் பண்புகளில் ஒன்றாக, அம் மொழியின் சொற்றொடரிலே எழுவாயும் பயனிலையும் திணை, பால், எண், இடம் ஆகியன தொடர்பாக இயைபு பேணும் மரபு அமைகின்றதெனலாம்.

4. சொல்லொழுங்கு

எழுவாய்-பயனிலை இயைபுபற்றியும், 'திரிபில் பெயர்' ஆகிய எழுவாய், வினை, பெயர், வினைச் சொற்களைப் பயனிலையாகப் பெறுவதுபற்றியும் தமிழ் இலக்கணகாரர் கூறி யுள்ளனர். இன்று எழுதப்படும் நூல்களை நோக்கின் அங்கு பெரும்பாலும் வாக்கியங்களிலே எழுவாய் முதலிலும் பயனிலை இறுதியிலும் வரும் அமைப்பே காணப்படுகின்றது. இந்த அமைப்புப் பற்றித் தமிழ் இலக்கணகாரர் வெளிப் படையாக எதுவும் கூறினரில்லை. தனக்கு முன்னெழுந்த

RangaRakes tamilnavarasam.com

இலக்கணங்களில் இவ்விடயம் பற்றிக் கூறப்பட்ட கருத்துக் களையெல்லாம் திரட்டி ஆறுமுகநாவலர் தன்னுடைய இலக்கணச சுருக்கத்திலே பின்வருமாறு கூறுவர்:

> 'ஆறனுருபொழிந்த வேற்றுமையுருபுகளையும், வினை முற்றையும், வினையெச்சத்தையும் முடிக்க வருஞ் சொற்கள், அவைகளுக்குப் பின்னன்றி முன்வருதலு முண்டு.'[8]

மேற்காட்டிய கூற்றின் மூலமாகத் தமிழ் மொழியின் ஓர் இயல்பு புலப்படுத்தப்படுகின்றது. ஆங்கிலம் போன்ற சில மொழிகளிலே சொற்கள் குறிப்பிட்ட ஒழுங்கிலே அமைய வேண்டியது அவசியமாகும் உதாரணமாக,

He went home

என்னும் வாக்கியம் அதே ஒழுங்கில் அமையாமல்,

Went he home*

என்றோ,

Home went he*

என்றோ,

Home he went*

என்றோ அமையின் அது ஆங்கிலமொழி வாக்கியமாகாது. ஆனல், தமிழ் மொழியிலோ இத்தகைய ஒழுங்கு முற்றுகப் பேணப்பட வேண்டுமென்ற நியதி இல்லை.

அவன் வீட்டுக்குப் போனன்.

என்னும் வாக்கிய ஒழுங்கு,

வீட்டுக்கு அவன் போனன்.
வீட்டுக்குப் போனன் அவன்.
அவன் போனன் வீட்டுக்கு.
போனன் அவன் வீட்டுக்கு.
போனன் வீட்டுக்கு அவன்.

என்று அமையினும், அவையெல்லாம் தமிழ் வாக்கியங்கள் என்றே கொள்ளப்படும். இவ்வாருன சுயாதீனப்பட்ட சொல்லொழுங்கு முறை தமிழ் மொழியில் எல்லா வாக்கியங் களிலும் இடம்பெறும் எனக் கூறுதற்கில்லை. ஆரும் வேற்றுமை உருபேற்ற பெயர்த் தொடரும் பெயரெச்சத் தொடரும் வாக்கியங்களில் இடம்பெறுமிடத்துச் சொல் லொழுங்கிலே சில கட்டுப்பாடுகள் ஏற்படுகின்றன: உதாரணமாக,

அவன் மரத்தினது கிளையை வெட்டினன்.

என்னும் ஆரும் வேற்றுமைப் பெயர்த்தொடர் இடம் பெற்றுள்ள வாக்கியத்தினை,

அவன் வெட்டினன் மரத்தினது கிளையை
வெட்டினன் அவன் மரத்தினது கிளையை
மரத்தினது கிளையை அவன் வெட்டினன்
மரத்தினது கிளையை வெட்டினன் அவன்
வெட்டினன் மரத்தினது கிளையை அவன்

எனச் சொல்லொழுங்கு மாற்றப்பட்ட நிலையிலும் நாம் எழுதலாம். ஆனல் எங்கேனும் மரத்தினது கிளையை என்னுந் தொடரினை நாம் மாற்றியமைக்க முடியாது. அது போன்று,

கண்ணன் படித்த பெண்ணை விரும்பினன்

என்னும் பெயரெச்சத் தொடருள்ள வாக்கியத்தின் சொல் லொழுங்கினை மாற்றியமைக்குமிடத்தும் படித்த பெண்ணை என்னும் பெயரெச்சத் தொடரினைப் பிரித்தெழுத முடியாது.

படித்த விரும்பினன் கண்ணன் பெண்ணை*

என்ற ஒழுங்கிலே அவ்வாக்கியத்தை மாற்றியமைத்தால் அது தமிழ் வாக்கியமாகிவிடாது. எனினும் பெயரெச் சத்தை முடிக்க வரும் பெயர்ச் சொல்லுக்கு அடையாகச் சில சொற்கள் இடையே வருதல் பழந்தமிழ் இலக்கியங் களிலே காணப்படுகின்றது.

RangaRakes tamilnavarasam.com

காதல்கொள்ளாப் பல்லிருங் கூந்தல் மகளிர்[9]

என்னும் பாடலடியில், கொள்ளா மகளிர் என்னும் எதிர் மறைப் பெயரெச்சத் தொடரைப் பல்லிருங் கூந்தல் என்னுந் தொடர் பிரிக்கின்றதைக் காணலாம். இக்காலத் தமிழ் மொழி வழக்கிலும்

பார்த்த சண்டைப் படம்
வந்த சண்டியன் சின்னத்தம்பி

போன்ற தொடர்கள் இடம்பெறுகின்றன. பிரிக்கமுடியாத வாறு இடம்பெயரக்கூடிய சில தொடர்களையும், சொல் லொழுங்கிலே காணப்படும் வேறு சில வரையறைகளையும் பின்வருமாறு வகைப்படுத்திக் கூறலாம்:

(1) அடை சினைமுதல் என்னும் ஒழுங்கிலே அமையும் தொடர் பிரிக்கமுடியாதவாறு அமைகின்றது. உதா ரணமாக, வட்டமுகப் பெண்ணுள் என்னுந் தொடரிலே வட்டம் என்பது அடையாகவும், முகம் என்பது சினை யாகவும், பெண்ணுள் என்பது முதலாகவும் அமை கின்றன. இத்தொடரில் ஒரு சொல்லேனும் இடம் பெயர்த்தெழுத முடியாது. இல்லையெனில், முகவட்டப் பெண்ணுள்* வட்டபெண்ணுள் முகம்* என்றெல்லாம் பொருளில்லாத் தமிழ்த்தொடர்கள் அமைந்துவிடும். இச்சொல்லொழுங்கினைத் தொல்காப்பியர்,

அடைசினை முதலென முறைமூன்று மயங்காமை
நடைபெற் றியலும் வண்ணச் சினைச்சொல்

என்று கூறியுள்ளார். இச்சொற்றொடரியல்பு இன்றும் தமிழ் மொழிலே அமைந்து காணப்படுகின்றது.

(2) வேற்றுமை உருபேற்ற பெயர்ச்சொல்லும் வினையா லணையும் பெயரும் சேர்ந்து எழுவாய்த் தொடராக அமையுமிடத்து, அத்தொடரைப் பிரித்து மாற்றி யமைக்க முடியாது. உதாரணமாக, கண்டிக்குப் போனவன் நாளை வருவான் என்னும் வாக்கியத்தில், கண்டிக்குப் போனவன் என்னுந் தொடர் பிரிக்க முடி யாத ஒழுங்கிலே அமைவதாகும்.

என்னைப் படிப்பித்தவர்
என்னுடன் வந்தவர்
எனக்குத் தெரிந்தவர்
என்னிடமிருந்து பெற்றது
மலையில் ஏறியவன்

ஆகிய தொடர்கள் வாக்கியங்களிலே எழுவாயாக அமையுமிடத்து அத்தொடர்களைப் பிரித்தெழுத முடியாது.

(3) தொகைநிலைத் தொடர், வேற்றுமைத் தொகை, வினைத் தொகை, பண்புத் தொகை, உவமைத் தொகை, உம்மைத் தொகை. அன்மொழித் தொகை ஆகிய ஆறு தொகைநிலைத்தொடர்களும் வாக்கியங்களில் எழுவாயாக அமையுமிடத்து அவற்றையும் பிரித்து இடம் பெயர்த்து எழுதமுடியாது.

உ-ம்:

வேற்றுமைத் தொகை:
பாடம் படித்தவள்
தலை வணங்கினவன்
ஊர் சென்றவன்
ஊர் நீங்கினவன்
மரக் கிளை
மலைத் தீபம்

வினைத் தொகை:-
சுடு சோறு

பண்புத் தொகை:-
செந்தாமரை
வட்ட மேசை

உவமைத் தொகை:-
பவள வாய்
மலர்க் கண்

உம்மைத் தொகை:-
இராப் பகல்
அண்ணன் தம்பி

RangaRakes tamilnavarasam.com

அன்மொழித் தொகை:-

தேன் மொழி
கருங் குழல்

மேற்காட்டப்பட்ட தொகைகள் யாவும் எழுவாயாக வாக்கியங்களிலே அமையுமிடத்து, அவற்றைத் தொடர்ந்து வேறு பல சொற்கள் அவ்வாக்கியங்களிலே இடம் பெறலாம். அவ்வாறமையும் வாக்கியங்களின் சொல்லொழுங்கினை நாம் மாற்றியமைக்குமிடத்து, எழுவாயாக இடம்பெறும் மேற்படி தொகைகளுள் ஒன்றையேனும் பிரித்தெழுதமுடியாதவாறு, அவை ஒரு நீர்மைப்பட்ட தொடர்களாகவே அமையும்.

(4) நான்காம் வேற்றுமை உருபேற்ற சொல்லின் பின்னர் திசைச் சொல் வரின், அத் திசைச் சொல் நான்காம் வேற்றுமை உருபேற்ற சொல்லின் பின்னன்றி முன் வருதலில்லை. உதாரணமாக,

இலங்கைக்கு வடக்கு யாழ்ப்பாணம்

என்னும் வாக்கியத்தினை,

இலங்கைக்கு யாழ்ப்பாணம் வடக்கு
யாழ்ப்பாணம் இலங்கைக்கு வடக்கு

என மாற்றி அமைக்கலாமேயன்றி

வடக்கு யாழ்ப்பாணம் இலங்கைக்கு*

என்றோ

வடக்கு இலங்கைக்கு யாழ்ப்பாணம்*

என்றோ மாற்றியமைக்க முடியாது. சில இடங்களில் திசைச் சொல் அடையாக முன்வரும் இயல்பு காணப் பட்டுள்ளது. அத்தகைய இடங்களிலெல்லாம் அது மயக்கமுடையதாகவே அமைந்துள்ளது. இதற்கு நல்ல உதாரணமாக இலங்கைப் பண்டுவஸ்நுவரக் கல்வெட் டிலே 'தென்னிலங்கைக் கோன் பராச்ரமபாகு நிச் சங்கமல்லற்கு ...' என்ற தொடரிலே 'தென்னிலங்கை' என்னுஞ் சொற்றொடர் 'தெற்காகிய இலங்கை' என்றும் 'இலங்கையின் தெற்குப் பகுதி' என்றும் பொருள் கொள்ளச் சாசனவியலாளரை ஊக்குவித் துள்ளது.

(5) சிறப்புப் பெயரும் இயற்பெயரும் அடுக்கிவருந் தொட ரினையும் பிரித்தமைக்க முடியாது. உதாரணமாக, பேராசிரியர் நக்கீரன் வந்தார் என்னும் வாக்கியத்தில், பேராசிரியர் நக்கீரன் என்னுந் தொடரிலே பேராசிரியர் சிறப்புப் பெயராகவும், நக்கீரன் இயற்பெயராகவும் அமைந்துள்ளன. இத்தொடரினையும் பிரித்து இடம் பெயர்த்து எழுதமுடியாது.

இவ்வாறு இடம்பெயர்த்தெழுத முடியாத தொடர்கள் பல தமிழ் வாக்கியங்களிலே அமைகின்றன.

ஒன்றுக்கு மேற்பட்ட பெயர்ச்சொற்கள் தமிழ்ச் சொற் றொடரிலே இடம்பெறுமிடத்து, அவை தொக்கு நிற்கா விடில் ஒவ்வொரு சொல்லுடனும் 'உம்' என்னும் உருபன் சேர்ந்து வரும் பண்பு உண்டு. 'உம்' இடைச்சொல் பற்றிக் கூறுமிடத்துத் தொல்காப்பியர்,

எச்சம் சிறப்பே யைய மெதிர்மறை
முற்றே யெண்ணே தெரிநிலே யாக்கமென்
றப்பா லெட்டே யும்மைச் சொல்லே.

(சொல். சூ. 225)

என்று கூறுவர். 'உம்' இடைச்சொல் எட்டுப்பொருளிலே வருமென மேற்படி சூத்திரங் கூறும். அவற்றுள் எண் ணும்மை பற்றி 'நிலனு நீருந் தீயும் வளியுமாகா யமுமெனப் பூதமைந்து என்புழி எண்ணுதற்கண் வருதலின் எண் ணும்மை' எனச் சேனாவரையர் உரை கூறுவர். இன்றும் இவ்வெண்ணும்மை நமது பேச்சுத் தமிழிலும் எழுத்துத் தமிழிலும் பயன்படுத்தப்படுகின்றது

அம்மாவும் தம்பியும் அக்காவும் சென்றார்கள்

இத்தகைய வாக்கியங்களை இன்று நாம் எழுதுகிறோம். தமிழ்ச் சொல்லொழுங்கில் உபயோகமாகும் எண்ணும்மை தமிழ் மொழியிலே காணப்படும் தனிப் பண்பாகும்.

RangaRakes tamilnavarasam.com

5. தனி வாக்கியங்களை இணைக்க எச்சங்கள்

நாம் ஒவ்வொரு நாளும் பேசுகின்ற பேச்சிலும் எழுதுகின்ற சந்தர்ப்பங்களிலும் எத்தனையோ நீண்ட வாக்கியங்களை ஆக்கிப் பயன்படுத்துகிறோம். அந்நீண்ட தொடர் வாக்கியங்கள், தனி வாக்கியங்களை இணைப்பதன் மூலமாகவே உண்டாக்கப்படுகின்றன. உதாரணமாக,

கண்ணன் வந்தான்
கண்ணன் பாடம் படித்தான்

என்னும் இரு தனி வாக்கியங்களை,

கண்ணன் வந்து பாடம் படித்தான்

என்னும் தொடர் வாக்கியமாக மாற்றமைப்புப் பெறுகின்றன. இவ்வாறு தனி வாக்கியங்களை இணைப்பதற்குத் தமிழ் மொழியிலே எச்சங்கள் உபயோகப்படுகின்றன. தமிழிலே வினை, முற்று வினையாகவும் எச்ச வினை ஆகவும் அமையும். முற்று வினை தன்னளவிலே பூரணத்துவம் பெற்ற சொல். அது வாக்கியங்களிலே முடிக்குஞ் சொல்லாக அமைந்து விடும்.

அவன் ஓடினான்.

திராவிட மொழிகளுக்கும் ஆஸ்திரேலிய மொழிகளுக்கும் சில ஒற்றுமைகள் காணப்படுகின்றன.

தாயின் அழைப்பைக் கேட்டதும் கன்றுக்குட்டி பசுவின் பக்கமாக ஓடி வந்துவிடுகிறது.

என்னும் வாக்கியங்களிலே ஓடினான், காணப்படுகின்றன, வந்துவிடுகிறது ஆகியன வினைமுற்றுக்களாக அவ்வாக்கியங்களை முடிக்குஞ் சொற்களாகப் பயன்படுகின்றன. ஆனால், எச்ச வினையோ இதற்கு மாறுகக் குறைச்சொல்லாகவே நிற்கும். இன்னொரு சொல்லினை அவாவி நிற்கும் பண்பு இதற்குண்டு. வந்த, வந்து என்னும் எச்ச வினைகள் வந்த மனிதன் என்றும் வந்து படித்தான் என்றும் முடிவடையலாம். வந்த என்னும் எச்சவினை மனிதன் என்னும் பெயர்ச்

சொல்லைக் கொண்டு முடிவதால் பெயரெச்சம் எனவும், வந்து என்னும் எச்சவினை படித்தான் என்னும் வினையைக் கொண்டு முடிவதால் வினையெச்சம் எனவும் அழைக்கப்படுகின்றன. இவ்விரு எச்ச வினைகளும் எமது மொழியிலே தனி வாக்கியங்களை இணைப்பதற்காகவே அமைந்துள்ளன. ஆகவே தமிழ் மொழியில் ஒரு தொடர் வாக்கியத்திலே இடம்பெறும் எச்சங்களைக் கணக்கிட்டால், அத்தனை அளவு தனி வாக்கியங்கள் அத்தொடர் வாக்கியத்திலே உண்டு எனக் கூறலாம்.

ஆங்கில மொழியிலே ஒரு வாக்கியத்தில் முற்று வினைகள் பல இடம்பெறினும் அதனை ஒரு வாக்கியமாகக் கொள்ளும் பண்பு உண்டு. உதாரணமாக.

He came, he saw and he conquered.[10]

என ஆங்கில மொழியிலே அமையும். ஆனால் தமிழ் மொழியிலே இவ்வாறு அமையமுடியாது. மலையாள மொழியிலும் இவ்வாறு அமையமுடியாதென லீலாவதி குறிப்பிடுவர்[11] தமிழ் மொழியிலே அத்தகைய வாக்கியம் இரண்டு முறையிலே அமையலாம்:

1. அவன் வந்தான்.
   அவன் கண்டான்.
   அவன் கைப்பற்றினான்.

என மூன்று தனிவாக்கியங்களாக அமையலாம். இல்லையெனில்,

2. அவன் வந்து கண்டு கைப்பற்றினான்.

என வந்து, கண்டு ஆகிய வினையெச்சங்களை உபயோகித்து ஒரு தொடர்வாக்கியமாகவே அமைக்க முடியும். ஆகவே தமிழ் மொழியைப் பொறுத்தமட்டில் ஒரு தொடர் வாக்கியத்திலே எத்தனை எச்சங்கள் இருக்கின்றன என்று கணக்கிட்டால், அத்தனை தனிவாக்கியங்கள் அத்தொடர் வாக்கியத்திலே இணைந்துள்ளன எனக் கூறலாம். அந்த வகையிலே தமிழ், மலையாளம், கன்னடம் போன்ற திராவிட

RangaRakes tamilnavarasam.com

மொழிகளிலே எச்சம் என்னும் இலக்கண அலகினுடைய பயன் தனித்துவமானது மலையாளத்தில், முற்று, எச்சம் என்னும் வேறுபாடு வினையிலே பெரும்பாலும் இல்லை.

எங்ஙள்க்கு ஸங்கடம் வந்நு.

என்பது ஒரு மலையாள வாக்கியமாகும். இதனைத் தமிழிலே மொழிபெயர்த்தால்,

எங்களுக்குச் சங்கடம் வந்தது

என்று எழுதக்கூடும். மலையாளத்தில் வந்நு என்னும் வடிவமே வினைமுற்றுக அமைகின்றது. அது எம்மைப் பொறுத்த வரையில் ஓர் எச்சவடிவமாகவே அமைகின்றது. ஆனல் மலையாளத்திலேயே,

வந்நான்
அறிஞ்ஞான்
உண்டு

போன்ற வினைமுற்றுக்களுங் காணப்படுகின்றன. எனினும் எச்சவடிவங்களே பெரும்பாலும் வினைமுற்றுக்களாகப் பயன் படுகின்றன. இவ்வாறு எச்சங்கள் வினைமுற்றுக்களாகப் பயன்பட்டபோதிலும், தனிவாக்கியங்கள் சேர்ந்து தொடர் வாக்கியமாகுமிடத்து அவற்றை இணைக்கவும் அங்கு எச்சங் கள் பயன்படுத்தப்படுகின்றன. உதாரணமாக,

பூவுகள் பறிச்சு உடன் வேணியில் சூடி.

என்னும் வாக்கியத்திலே பறிச்சு, சூடி என்னும் இரு எச்சங்கள் காணப்படுகின்றன. இவை இரண்டும் இரு தனி வாக்கியங்களைக் குறித்து நிற்பன என்று கூறுதல் மலையாள மொழிக்கும் பொருந்துவதாகும்.

இவ்வாறு திராவிட மொழிகளிலே எச்சம் தனி வாக்கி யங்களை இணைக்கும் அலகாகப் பயன்பட்ட போதிலும், மலையாள மொழியுடன் ஒப்பிடுமிடத்துத் தமிழ் மொழியிலே வினைமுற்று என்னும் ஓர் அலகு இருப்பதன் காரணத்தி னலே, எச்சத்தினுடைய செயற்பாடு தமிழ்மொழிக்குத் தனித்துவமானது எனக் கூறுவது பொருத்தமாகும்.

அடிக்குறிப்புகள்

1. தொல்காப்பியம், சொல்லதிகாரம், சூ. 65
2. நன்னூல், சூ. 295
3. கருத்து—கருத்து விளக்கம் பற்றி மேலும் விபரங்களுக்கு:
   Hockett, C. F., **A Course in Modern Linguistics,** p. 201
   Lyons, J., **Introduction to Theoretical Linguistics,** pp. 334-37
   மீனாட்சிசுந்தரனர், தெ. பொ., தமிழ் மொழி வரலாறு, ப. 66
4. வரதராசன், டாக்டர் மு., புலவர் கண்ணீர், ப. 5
5. மேற்படி, ப. 7
6. மேற்படி, ப. 8
7. பார்க்க: சண்முகதாஸ், அ., நமது மொழியின் இயல்புகள், ப. 14
   Sanmugadas, A., (With Kailasapathy, K.), **Tamil,** pp. 9-10.
8. ஆறுமுகநாவலர், இலக்கணச் சுருக்கம், ப. 176
9. புறநானூற்று உதாரணமும் விளக்கமும் பின்வரும் நூலிலிருந்து பெறப்பட்டது:
   Kotandaraman, P., **Studies in Tamil Linguistics,** p. 30.
10. இவ்வுதாரணம் பின்வரும் கட்டுரையிலிருந்து பெறப் பட்டது:
    Leelawathy, M., "Syntactic Patterns in Malayalam"
11. மேற்படி கட்டுரை

RangaRakes tamilnavarasam.com

9

சொல்லும் பொருளும்

சொல்லே தொடரியலுக்கும் பொருளியலுக்கும் அடிப்படையாக அமையும் மொழியலகு என்று இலக்கணகாரர் யாவரும் குறிப்பிட்டுள்ளனர். ஒரு வாக்கியமோ தொடரோ பொருளுடையது அல்லது பொருளற்றது என நாம் பொதுவாகக் கூறுவதுண்டு. ஆனால், சொற்கள் பற்றி நாம் இவ்வாறு ஐயுறுவதில்லை. ஏனெனில், மொழியின் பொருளுடைய மிகக் குறைந்த அலகு சொல் எனவே எவரும் கூறுவர். தமிழ் மொழியைப் பொறுத்த வரையில், தமிழ் இலக்கணகாரரும் இக்கருத்தினையே கொண்டுள்ளனர். தொல்காப்பியருடைய எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே என்னும் சூத்திரம் இக்கருத்தினையே புலப்படுத்துகின்றது என்பதுபற்றி முன்னர் விளக்கியுள்ளோம். ஒரு சொல் பொருளுடையதாக அமைவது வேறு; அது குறிப்பிட்ட பொருளை உணர்த்துவது வேறு. இவ்விரு நிலைகளையும் வேறுபடுத்தியுணர்ந்தால், சொல்லுக்கும் பொருளுக்குமிடையேயுள்ள நுண்ணிய தொடர்பினை நாம் விளங்கிக்கொள்ள முடியும். தொல்காப்பியருடைய எல்லாச் சொல்லும்... என்னும் சூத்திரம் முதல் நிலையையே எமக்கு அறிவுறுத்துகின்றது. சொற்பொருளாய்வில் ஈடுபட்டுள்ள நவீன மொழியியலறிஞரான ஜோண் லயன்ஸ் மேலே நாம் குறிப்பிட்டுள்ள கருத்தினைப் பின்வருமாறு விளக்குகின்றார்:

> "..... although we commonly say that **sentences** or **phrases** are, or are not, 'meaningful', we do not normally say that **words** are not 'meaningful' (for the present we shall continue to adopt the traditional view, according to which words are the minimal 'meaningful' units of language: 'word' is here being used of course in the sense of lexeme.). This fact in itself suggests that the term 'meaningful' may be employed in two distinct senses. We will assume that this is so and, for convenience and clarity, introduce a terminological distinction between **having meaning** and **significance** (or **being significant**)".[1]

எல்லாச் சொற்களும் பொருளுடையன **(having meaning)** என்று தமிழிலக்கணகாரர் கூறியுள்ளனர். ஆனால் அவை எவ்வாறு குறிப்பிட்ட பொருளை உணர்த்துகின்றன என்பது பற்றிய அவர்களுடைய கோட்பாடு தெளிவற்றதாயுள்ளது. எனினும், உரிச்சொல் பற்றிப் பேசுமிடத்தும், திரிசொல் பற்றிப் பேசுமிடத்தும் சொற்பொருள் பற்றி அவர்கள் சில கருத்துக்கள் தெரிவித்துள்ளனர். சேனாவரையர் தொல்காப்பியச் சொல்லதிகார முதலாவது சூத்திரத்துக்கு உரையெழுதுமிடத்து சொல் எவ்வாறு பொருளுணர்த்துமெனக் கூறியுள்ளார்.[2] சமயவாற்றலானும், அவாய் நிலையானும், தகுதியானும், அண்மை நிலையானும் இயைந்தே சொல் பொருள் விளக்குந் தன்மையுடையதாக அமைகின்றதென்பதை அவருடைய விளக்கம் தெளிவுறுத்துகின்றது. சமயவாற்றல் என்பது ஒரு சொல் உபயோகப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தை உணர்ந்து பொருள் கொள்ளுதலாகும். உதாரணமாக, மாம்பழம் கொண்டு வாருங்கள் என்னும் வாக்கியத்திலே மா என்னுஞ் சொல் எப்பொருளை உணர்த்திற்று என்பது சந்தர்ப்பத்தைக்கொண்டே உணரக் கூடியதாயிருக்கும். மா என்னுஞ் சொல் உணவுப் பொருள் தயாரிக்கக்கூடிய மா, குதிரை, மாங்காய் அல்லது மாம் பழம் என்னும் பல பொருட்களை உணர்த்தும். இவற்றுள் எப்பொருளை மேற்கூறிய வாக்கியத்து மா உணர்த்துகின்றது என்பதனை அக் கூற்றினைக் கூறிவோனின் நிலை கொண்டே உணரலாம். கவசமெல்லாம் அணிந்து போருக்குச் செல்லவிருக்கும் வீரன் ஒருவன் அவ்வாறு கூறின், அச் சொல்

RangaRakes tamilnavarasam.com

குதிரையைக் குறிக்கும். அப்பம் அல்லது பிட்டு அவிப்ப தற்குத் தயாராயிருக்கும் அம்மா அவ்வாறு கூறின், அது இன்னுமாவைக் குறிக்கும். இவ்வாறு சமயவாற்றலுக் கேற்பவே சொல் பொருளை உணர்த்தும் என்னும் கோட் பாடு இந்திய இலக்கணகாரர் எல்லோருக்குமே பொதுவான தாகும். இந்திய மெய்யியலாளர்கள் சொற்பொருள் பற்றிப் பல்வேறு கோட்பாடுகளை முன்வைத்துள்ளனர். இவற்றினை ஓரளவு அறியும் வாய்ப்புடைய மேலைத்தேய மொழியிய லாளர்கள் சொற்பொருள் தொடர்பாக இத்தகைய கோட் பாட்டினை முன்வைத்தனர். உதாரணமாக, பிரித்தானிய மொழியியற் குழுவினரைச் சார்ந்த J. R. பேர்த் என்பவர்,

> 'The Central concept of the whole of Semantics considered in this way is the context of situation. In that context are the human participant or participants, what they say, and what is going on'[3]

என இக்கோட்பாட்டினை முன்வைப்பதைக் காணலாம். இனி, அவாய் நிலை, தகுதி, அண்மை ஆகியன எவ்வாறு சொற் பொருளுடன் தொடர்புறுகின்றன என நோக்கலாம். சமஸ்கிருத இலக்கணகாரர் இவை மூன்றினையும் முறையே ஆகாங்ஷா (ākaṅkṣā), யோக்யதா (yogyatā) சம்நிதி (samnidi) என அழைப்பர். அவர்களுடைய கருத்தின்படி ஒரு வாக்கியம் ஏற்றுக்கொள்ளத்தக்க வாக்கியமாக அமைவதற் கும் பொருளுடைய வாக்கியமாக அமைவதற்கும் இவை மூன்றும் அவசியமாகும். சேனுவரையர் அவற்றைத் தமிழாக்கஞ் செய்து தமிழ்மொழி இயல்புடன் தொடர் புறுத்துகிறார். பிற்கால இலக்கண நூலாரும் இக்கருத்தினைப் பின்பற்றியுள்ளனர். இலக்கணச் சுருக்க ஆசிரியர் ஆறுமுக நாவலர் வாக்கியப் பொருளுணர்வுக்குக் காரணமென்னும் பகுதியிலே 'அவாய் நிலை, தகுதி, அண்மை, கருத்துணர்ச்சி என்னு நான்குமாம்' என்று கூறி அவற்றைத் தனித்தனி யாக விளக்கியுள்ளார்[4] இவற்றுள், நான்காவதாக அவர் கூறிய 'கருத்துணர்ச்சி' என்பது யாம் முன்னர் குறிப்பிட்ட

சமயவாற்றலாகும். சொற் பொருள், வாக்கியப் பொருள் பற்றிப் பேசுமிடத்து இவை மூன்றினுடைய விளக்கம் மிகவும் அவசியமாகும்.

1. **அவாய் நிலை :** ஒரு சொல் தன்னொடு சேர்ந்து பொருள் முடிப்பதற்கு உரிய இன்னொரு சொல்லினை அவாவி நிற்றல். உதாரணமாக, அவன் அவன் என்னும் தொடர், வாக்கியமாகமாட்டாது. ஏனெனில் அவன் என்னும் ஒரு பெயர்ச்சொல் அதே சொல்லால் அன்றி, வேறொரு பெயரையோ, வினைவையோ, வினையையோ கொண்டு முடிந்தால்தான் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு வாக்கியமாகும். எனவே, அவன் வீரன், அவன் யார்?, அவன் ஓடினான் என அமைந்தால் மட்டுமே சரியான வாய்க்கியத்தைப் பெறுவது மாத்திரமன்றி, நாம் பொருளுள்ள வாக்கியத்தையும் பெறலாம்.

2. **தகுதி :** பொருள் விளங்குதற்கேற்றபடி சொற்கள் சேர்ந்து நிற்றலையே தகுதி என்னும் நிலை குறிக்கின்றது. வடமொழி இலக்கணகாரர் காட்டும் உதாரணத் தினையே தமிழ் இலக்கணகாரரும் எடுத்துக்காட்டி யுள்ளனர். அவ்வுதாரணம்: நெருப்பால் நனை. நனை என்னுஞ் சொல் கேட்டவுடன் அது நீருடன் தொடர் புடையதொன்று என்பதை உணர்வோம். அச் சொல் லுடன் இணைந்து நின்று பொருள் தரக்கூடிய யோக்கியதை அல்லது தகுதியுடைய சொல் நீர் என்பதேயாகும். ஆனால், மேற்படி வாக்கியத்தில் நெருப்பு என்னுஞ் சொல் உபயோகிக்கப்பட்டுள்ளது. எனவே, தகுதி நிலையால், இவ்வாக்கியம் பொரு ளற்றது என்பர். சொல்லொழுங்கினை அனுசரித்து வாக்கியத்திலே சொற்கள் இடம்பெற்ற போதிலும், அவை தகுதிநிலையுடையனவாயிருக்க வேண்டும். இந் நிலை அனுசரிக்கப்படாவிடில், பச்சை எண்ணங்கள் கதறின*, கதிரை நன்றாகப் பேசியது*, புத்தகம் நடந்து சென்றது* என்றெல்லாம் வாக்கியங்கள் அமைந்துவிடும்,

3. **அண்மைநிலை :** தொடராக நிற்குஞ் சொற்களை இடை யீடின்றி, அதாவது காலதாமதமின்றிச் சொல்லுதல்.

RangaRakes tamilnavarasam.com

அவ்வாறு சொல்லுதலாலேயே அத்தொடரின் பொருள் உடனடியாக விளங்கும். உதாரணமாக, செல்வி பாட்டுப் பாடினாள் என்னும் வாக்கியத்திலுள்ள சொற்களைக் காலதாமதமின்றிக் கூறினால்தான், அது பொருளுடைய கூற்றாக அமையும். அப்படியில்லாமல், செல்வி என்னுஞ் சொல்லினைக் கூறிவிட்டு பல மணித்தியாலங்களுக்குப் பின் பாட்டு என்னுஞ் சொல்லியும், அதன் பின்னர் பல மணித்தியாலங்களுக்குப் பின் பாடினாள் என்னுஞ் சொல்லைக் கூறுவதனால், அவை மூன்றுஞ் சேர்ந்து ஒரு வாக்கியம் என்னும் உணர்வினைக் கொடுக்கமாட்டாது. அதனால், வாக்கியப் பொருளுணர்வு பெறப்படமாட்டாது.

இம்மூன்றும் வாக்கியப் பொருளுடன் நெருங்கிய தொடர்புடையனவேனும், சொற்பொருள் பற்றிச் சிந்திக்குமிடத்தும் இவற்றை விளங்கிக்கொள்ளுதல் அவசியமாகும்.

2. சொற்பொருளும் பண்பாடும்

மொழிக்கும் பண்பாட்டுக்குமிடையே நெருங்கிய தொடர்பு உண்டு என்பதை எவரும் மறுப்பதற்கில்லை. ஒரு குறிப்பிட்ட மொழியின் சொற்பொருள் அம்மொழி பேசுவோரின் பண்பாட்டிலே பெருமளவு தங்கியுள்ளது. இதனாலேயே மொழிபெயர்ப்புத் துறை இன்னும் சிக்கல் வாய்ந்ததாக அமைந்து கிடக்கின்றது. பண்பாட்டுக்கும் சொற்பொருளுக்குமுள்ள நெருங்கிய தொடர்பினைக் காட்டுதற்கு நிறப்பெயர்கள், உறவுமுறைப் பெயர்கள் ஆகியனவற்றை மொழியியலார் உதாரணங்களாக எடுத்துக் காட்டுவர். பிலிப்பைன்ஸ் நாட்டிலே வழங்கும் நிறப் பெயர்ச் சொற்களை ஒரு மானிடவியல் – மொழியியலாளர் ஆராய்ந்தார்.[5] அவருடைய ஆய்வினாலே பெற்ற தகவல்கள் வருமாறு : பிலிப்பைன்ஸ் நாட்டு மக்கள் தாம் உட்கொள்ளும் உணவின் தன்மை, புறத்தோற்றப்பாடு ஆகியவற்றினை அடிப்படையாகக் கொண்ட தாவரங்களைத் தொடர்புறுத்தியே நிறச்சொற்களை வழங்குகின்றனர். தாவரங்களின் பசுமை, நீர்மை ஆகிய இரு பண்புகளை

அடிப்படையாகக் கொண்டு அவர்களுடைய நிறச்சொற்கள் நான்கு வகையான பாகுபாட்டினுள் அடங்குகின்றன. அவை :

+ பசுமை	+ நீர்மை
+ பசுமை	— நீர்மை
— பசுமை	+ நீர்மை
— பசுமை	— நீர்மை

என அமையும். தமிழ் மொழியிலும் கருமை, பச்சை, நீலம் என்பன பொதுப்பண்புடையனவாகக் கருதப்பட்டு உபயோகத்திலிருந்து வந்துள்ளன. கண்ணனைக் கருமை நிறமுடையவனெனவும், பச்சை மேனியன் எனவும், நீல வண்ணன் எனவும் இலக்கியங்களிலே குறிப்பிட்டுள்ளமை இங்கு மனங்கொள்ளத் தக்கதாகும். மஞ்சள் என்னும் நிறம் ஒரு தாவரத்தின் பெயராகும். அதுவே நிறப் பெயராகவும் தமிழிலே வழங்கப்படுகின்றது. தமிழ்மொழியில் சொற்பொருளுக்கும் பண்பாட்டுக்குமுள்ள நெருங்கிய தொடர்பினை அம்மொழியிலுள்ள உறவுமுறைப் பெயர்ச் சொற்கள் நன்கு உணர்த்துகின்றன. தமிழ்ச் சமூகத்திலே பின்வரும் உறவுமுறைச் சொற்கள் காணப்படுகின்றன :

அப்பா, அம்மா, அண்ணன், அக்கா, தம்பி, தங்கை, மாமா, மாமி, சித்தப்பா, சித்தி, பெரியப்பா, பெரியம்மா, மச்சான், மச்சாள், தாத்தா, அம்மம்மா, பரமகன், மருமகள், அண்ணி முதலியன.

தமிழ்ச் சமூகத்திற் காணப்படும் குடும்ப நிலையைப் பிரதிபலிப்பனவாகவே மேற்படி உறவு முறைச் சொற்கள் அமைகின்றன. இவற்றுட் சிலவற்றைத் தெரிந்தெடுத்து ஆங்கிலமொழி உறவு முறைச் சொற்களுடன் ஒப்பிட்டு நோக்குமிடத்து, உறவுமுறைச் சொற்பொருள் எவ்வாறு அவ்வச் சமூக நிலைக்கேற்ப அமைகின்றதென்பது புலப்படும். தமிழர் சமூகத்திலே மிக அண்மைக் காலம் வரை உறவினர்களிடையே திருமணம் நடப்பதுதான் வழக்கம். ஆனால், ஆங்கிலமொழி பேசும் சமூகத்திலே இவ்வழக்கம் வெகு குறைவாகவே காணப்பட்டது. இப்பண்பினை இவ்விரு

RangaRakes tamilnavarasam.com

மொழிகளிலும் காணப்படும் உறவுமுறைச் சொற்கள் நன்கு புலப்படுத்துகின்றன. ஆங்கில மொழியிலே அம்மாவின் தப்பி அல்லது அண்ணன், அப்பாவின் தம்பி அல்லது அண்ணன் ஆகியோர் **Uncle** என அழைக்கப்படுவர். ஆனால், மணப்பெண்ணின் தந்தையை மணமகன் **Father-in-law** என்பார். அப்பாவின் தங்கை அல்லது தமக்கை, அம்மாவின் தங்கை அல்லது தமககை ஆகியோர் ஆங்கில மொழியில் **Aunt** என அழைக்கப்படுவர். மணமகனின் தாய் **Mother-in-law** என அழைக்சப்படுவர் தமிழ் மொழியிலே **Uncle, Father-in-law** எனக் குறிப்பிடப்படுபவர்கள் மாமா என்னும் ஒரே சொல்லாலும், **Aunt, Mother-in-law** எனக் குறிப்பிடப்படுபவர்கள் மாமி என்னும் ஒரே சொல்லாலும் வழங்சப்படுவதை நோக்குமிடத்து சமூக வேறுபாடு எவ்வாறு மொழியிலே பிரதிபலிக்கின்றது என்பதை உணரக்கூடியதாக வுள்ளது.

3. சொற்பொருளமைப்பு

3·1. வகுப்பு, தொகுப்பு அனுமானங்கள்

பொருளுணர்ச்சி பற்றிப் பண்டைக்காலந் தொட்டே மெய்யியலாளர்கள் கருத்துத் தெரிவித்து வந்துள்ளனர். வகுப்புக் கூற்றுக்கள், தொகுப்புக் கூற்றுக்கள் என்னும் வேறுபாடு தொடர்பாகவே இவர்கள் பொருளுணர்ச்சி பற்றிச் சிந்தித்தனர். அவ்வேறுபாடு பின்வருமாறு அமைகின்றது :[6] வகுப்புக் கூற்று ஒன்றிலே பயனிலைப் பதமானது எழுவாயில் ஏற்கனவே சொல்லப்பட்டதையே கூறும். உதாரணமாக, முக்கோணங்கள் எல்லாம் மூன்று பக்கங்களை உடையன. என்னும் வாக்கியத்திலே, முக்கோணம், மூன்று பக்கம் என்பன பொருள்தொடர்புடையன. முக்கோணம் என்னும் எழுவாயின் விரிபொருளாகவே மூன்று பக்கம் என்னுந் தொடர் அமைந்து விடுகின்றது. இவ்வாறு தமிழ் மொழியில் எத்தனையோ வாக்கியங்களை உதாரணமாகக் காட்டலாம். தொகுப்புக் கூற்றிலே, பயனிலைப் பதம் எழுவாயில் ஏற்கனவே கூறுத புதிய கருத்தைச் சேர்த்துக் கூறும். உதாரணமாக, ரோசாக்கள் சிவப்பு நிறமானவை

என்பதில் ரோசாக்கள் என்னும் எழுவாய், பயனிலையிலே கூறப்பட்டதைத் தன்னுள் அடக்கியதாக இல்லை ஏனெனில், எல்லா ரோசாக்களும் சிவப்புநிறமானவையல்ல. அதனால் சிவப்பு நிறமானவை என்னும் பயனிலைத் தொடர் எழுவாயிலே கூறப்படாத, ஆனால் எழுவாயைப் பற்றிய கருத்தாகும். இவ்வாறு பொருளுணர்ச்சி தொடர்பாகத் தமிழிலே அமையும் வாக்கியங்களை வகுப்பு வாக்கியங்கள் எனவும், தொகுப்பு வாக்கியங்கள் எனவும் பாகுபாடு செய்யலாம்.

3·2 பல சொல் ஒரு பொருள்

தொல்காப்பியர் சொற்பொருள் பற்றி உரியியலிலே ஓரளவு எடுத்துக் கூறுகின்றார். உரிச்சொற்கள் பொருளுணர்த்தும் அமைப்புக்களுள் ஒன்றாக பல சொல் லொரு பொருட் குரிமை தோன்றினும்[7] என்று கூறியுள்ளார். பின்னர், எச்சவியலிலே சொற்களை இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என நான்காக வகுத்துவிட்டு, திரிசொல் பற்றிக் கூறுமிடத்து

> ஒருபொருள் குறித்த வேறுசொல் லாகியும்
> வேறுபொருள் குறித்த வொருசொல் லாகியு
> மிருபாற் றென்ப திரிசொற் கிளவி[8]

எனவும் குறிப்பிட்டுள்ளார். உரியியலிலே ஒரு பொருள் குறிக்கும் பல சொற்கள் பற்றித் தொல்காப்பியர் சூத்திரங்களிலே குறிப்பிடுகின்றார். உதாரணமாக,

> பையுளுஞ் சிறுமையு நோயின் பொருள[9]

என்பதனைக் காட்டலாம்.

உலகில் எந்த மொழியிலுமே ஒரு சொல்லுக்கு ஒரு பொருள் என்னும் 'இலட்சிய' நிலை இருப்பதாயில்லை. ஒரு பொருளைக் குறிப்பதற்குப் பல சொற்கள் இருக்கும் நிலையினையே இன்று எல்லா மொழிகளிலும் காண்கிறோம்.

RangaRakes tamilnavarasam.com

ஆனால், ஆரம்பத்தில் மொழிகளிலே ஒரு சொல்-ஒரு பொருள் என்ற அமைப்பே இருந்திருக்க வேண்டும். காலகதியிற் பொருட்பரப்பிலே நுணுக்கமான அர்த்தப்பாடுகளைப் புலப் படுத்தச் சொற்கள் தேவைப்பட்டிருக்கலாம். இவ்வகையிலே ஒரு பொருளையுணர்த்தப் பல சொற்கள் உண்டாயின. சாதாரண மக்களும் புலவர்களும் இத்தகைய வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்துள்ளனர். உலகம் எனக் கையாளப்பட்ட சாதாரண பெயர், உலகத்து மக்களைக் குறிக்கும் ஆகு பெயராகச் சாதாரண மக்களாலும் வழங்கப்பட்டது. ஆனால். புலவர்களோ கயல் போல விழி என்னும் சாதாரண உவமைத் தொடரை, கயல்விழி எனத் தொகையாக்கினர். பின்னர், கயல்விழி வந்தாள் என அன்மொழித்தொகை யாக்கினர். இவ்வாறு சொல்லுக்கும் பொருளுக்குமுள்ள தொடர்பிலே மாற்றங்களேற்பட்டுவரலாயின. இந்த வகை யிலே, ஒரு பொருளுக்கு ஒரு சொல் என்னும் இயல்பான நிலை திரிபடைந்த காரணத்தினாலே, ஒரு பொருள் குறிக்கும் பல சொல் திரிசொல்லாகத் தமிழ் இலக்கணகாரராலே கொள்ளப்படலாயிற்று. தமிழ் இலக்கணகாரர் அவற்றைத் திரிசொற்கள் எனக் குறிப்பிட்டமை பொருத்தமாக அமைகின்றது. உதாரணமாக, தாமரை என்னும் சொல் குறிக்கும் பொருள் பங்கஜம், முளரி, அம்புஜம் என்னும் சொற்களாலும் உணர்த்தப்படுகின்றது. ஆனால், இவை யாவுமே தாமரை என்னும் மலரைப் பொதுவாகக் குறித்த போதும், அம் மலருடன் தொடர்புற்ற வெவ்வேறு செய்தி களை அவை அடிப்படையாகக் கொண்டுள்ளன. பங்கஜம் என்னும் சொல் 'சேற்றிலே பிறந்தது' என்னும் பொரு ளுடையது. இதே போன்று அம்புஜம் என்பது 'நீரிலே பிறந்தது' எனவும், முளரி என்பது 'தண்டையுடையது' எனவும் பொருள்படுகின்றன. ஒரே சொல்லையே கவிதையிலே உபயோகிக்காது, ஒரே பொருளுடைய வெவ்வேறு சொற் களை உபயோகிக்க வேண்டுமென்ற கவிஞர்களின் முயற்சி யினாலே புதிய சொற்கள் ஆக்கப்பட்டிருக்க வேண்டும். இப் புதிய சொற்கள் ஒரே பொருளைக் குறிப்பினும், அப் பொருட்பரப்பினைச் சிறிது அகல்விப்பனவாகவும், அப் பொருளின் நுண்ணிய தனமைகளை உணர்த்துவனவாகவும் அமைகின்றன.

ஒரு பொருள் குறிக்கும் பல சொற்களாயின், வாக்கி யத்திலே, அவற்றுள் ஒரு சொல் இருக்குமிடத்திலே இன் னொரு சொல் வரக்கூடியதாகவும், உணர்ச்சிப் புலப்பாட் டில் அவ்விரு சொற்களுக்குமிடையே எவ்வித வேறுபாடு இல்லாமலும் அமைவன. உதாரணமாக ஒரு வாக்கியத் துக்கும், (வா$_1$) இன்னொரு வாக்கியத்துக்கும் (வா$_2$) இடையே எவ்விதி வேறுபாடுமில்லையெனக் காண்கிறோம். அந்நிலையினைத் தெளிவாகப் பின்வரும் சூத்திரம் காட்டும்: வா$_1$ ⊃ வா$_2$ எனில், வா$_2$ ⊃ வா$_1$ எனில், வா$_1$ ≡ வா$_2$ ஆகும். அதாவது இரு வாக்கியங்களும் நேரொப்புடையன என்பதாகும். இவ்வாறு நேரொப்புடைய இவ்விருவாக்கி யங்களும் ஒரே சொற்றொடரமைப்புடையனவெனினும், வேறுபாடு அவற்றிற் காணப்படும் சொற்களிலேயே உண்டு. ஒன்றில் x என்னும் சொல் இருக்கின்றது; மற்றையதில் அதற்குப் பதிலாக y என்னும் சொல் இருக்கின்றது. அப்படியெனில் x, y ஆகிய சொற்கள் ஒரு பொருளுடை யன எனலாம். மரபுவழி இலக்கணகாரர் ஒரு பொருள் தன்மையினைச் சொற்களுக்கிடையேயே கண்டுகொள்வர். மேற்குறித்த வரைவிலக்கணமும் இதனையே வலியுறுத்து கின்றது. ஆனால் இதே வரைவிலக்கணத்தைத் தனிச் சொல் ஒன்றுக்குப் பதிலாக ஒரே பொருள் குறிக்கும் சொற்றொடர் உபயோகத்துக்கும் பிரயோகிக்க முடியும் என ஜோண் லயன்ஸ் கருதுகிறார்.[10] உதாரணமாக, களிறு நடந்தது என்னும் வாக்கியத்தின் பொருளையே ஆண் யானை நடந்தது என்னும் வாக்கியமும் தருகின்றது. எனவே களிறு என்னும் சொல்லுக்குப் பதிலாக ஆண் யானை என்னுந் தொடரினை உபயோகிக்க முடிவதால், அவ்விருவடிவங்கள் ஒரு பொருள் தன்மை (Synonymy) வாய்ந்தனவாகின்றன. இவ்வாறு எம்முடைய பேச்சு வழக்கிலும் எழுத்து வழக்கிலுமிருந்து பெருந்தொகையான உதாரணங்கள் காட்ட முடியும்:

சில வேளைகளிலே சந்தர்ப்பம் நோக்கிச் சில சொற்கள் ஒரு பொருள் தன்மையுடையனவாகின்றன. மருத்துவ மனையிலே வைத்தியர் மருந்தினைத் தந்து இதனை மூன்று நேரம் எடுக்க வேண்டும் என்று கூறுகிறார். அது திரவ மருந்தாக இருந்தால், அச்சந்தர்ப்பத்திலே எடுக்க என்னும்

RangaRakes tamilnavarasam.com

வினையெச்சச் சொல் குடிக்க என்னும் வினையெச்சச் சொல்லின் பொருளைத் தருவதாகக் கொள்கிறோம். ஆகவே, இச்சந்தர்ப்பத்தில், எடு, குடி என்னும் இரு சொற்களும் ஒரு பொருள் பயப்பனவாக கொள்ளவேண்டியுள்ளது.

3·3 பல பொருள் ஒரு சொல்

பல பொருள் ஒரு சொல் பற்றித் தொல்காப்பியர் உரியியலிலும் எச்சவியலிலும் கூறியுள்ளார். ஒரு சொல் என்ன வகையிலே பல பொருள்களைப் பயக்கும் என்பதற்குத் தொல்காப்பியருடைய உரியியற் சூத்திரமொன்றினை உதாரணமாகக் காட்டலாம்:

கடியென் கிளவி
வரைவே கூர்மை காப்பே புதுமை
விரைவே விளக்க மிகுதி சிறப்பே
யச்ச முன்றேற் றுயீ ரைந்து
மெய்ப்படத் தோன்றும் பொருட்டா கும்மே.[11]

கடி என்னும் சொல் வரைவு தொடக்கமான பத்து வகைக் குறிப்புப் பொருளை உணர்த்துமென இச் சூத்திரம் கூறுகின்றது. இத்தகைய மரபே நிகண்டுகள், அகராதிகள் தயாரிப்பதற்குக் காரணமாயிற்று. ஒரு சொல் பல பொருளைக் குறிக்கும் பண்பு வரலாற்றடிப்படையிலேயே ஏற்பட்டதெனலாம். ஆரம்பத்தில் ஒரு பொருளையே குறித்து நின்ற சொல், புலவர்களுடைய உபயோகத்தினாலும், மக்கள் வழக்கினாலும் காலத்துக்குக் காலம் வெவ்வேறு பொருள்களைப் பெற்றுவந்திருக்கவேண்டும்.

ஒரு சொல்லுக்குக் காலத்துக்குக் காலம் ஏற்பட்டுவந்த புதிய பொருள் பற்றி நுணுக்கமாக ஆராயின் ஒருண்மை புலப்படும். அதாவது ஒரு காலகட்ட அரசியல், சமூக, பொருளியல், சமயச் சூழ்நிலைகளே சொற்களுக்கு உண்டாகும் புதிய பொருள்களை நிச்சயிக்கின்றன என்பதாகும். உதாரணமாக, கோயில் என்னுஞ் சொல்லினை எடுத்துக் கொள்வோம். இச் சொல்லுக்குப் பொருள் என 'அரசர் மனை, தேவாலயம், சிதம்பரம், ஸ்ரீரங்கம்' என்று சொற்

பொருள் விளக்கம் என்னும் தமிழகராதி கூறுகின்றது. எம் முடைய பண்டைய இலக்கியங்களிலே இச்சொல் 'அரண்மனை' என்ற பொருளிலேயே வழங்கப்பட்டது.

....
உயர்நிலை மாடத்துக் குறும்பறை யசைஇ
வாயில் விடாது கோயில் புக்கெம்
பெருக்கோக் கிள்ளி கேட்க.....[12]

என்னும் புறநானூற்றுப் பாடலிலே கோயில் என்னும் சொல் 'அரண்மனை' என்னும் பொருளிலேயே வழங்கப்பெற்றுள்ளது. இதே பொருளிலேயே,

நளிமலை சிலம்பின் சிலம்புக் கோயில்[13]

என்னும் நெடுநல்வாடைச் செய்யுளடியிலும் அச்சொல் பயின்று வந்துள்ளது. இச் சங்கப் பாடல்கள் எழுந்த காலத்துக்குப் பின் எத்தனையோ அரசியல், சமய, சமூக மாற்றங்கள் தமிழ் நாட்டிலே ஏற்பட்டன. மன்னன் சமூகத்திலே பெற்ற இடத்தினைத் தம் இஷ்ட தெய்வத்துக்குச் சமய அடியார்கள் வழங்கத் தொடங்கினர். மன்னனையும் மகேஸ்வரனையும் ஒன்றாக நோக்கும் போக்கு ஏற்பட்டது. 'திருவுடை மன்னரைக் காணின் திருமாலைக் காணலொக்கும்' என்று கூறப்பட்டது. இதன் காரணமாக, மன்னனிலே கண்டு பாடப்பட்ட கல்யாண குணங்களை இறைவன் மேலேற்றிப் பாடினர் அடியார்கள். மன்னனுடைய இருப்பிடமான கோயில் இறைவனுடைய இருப்பிடத்துக்குரிய பெயராகவும் ஆயிற்று. தேவாரங்களும் திவ்யப் பிரபந்தங்களும் எழுந்த காலத்திலே கோயில் இறைவனுடைய இருப்பிடமாகக் கொள்ளப்பட்டது.

நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்குமிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதி யென்றும்
ஆரூரா என்றென்றே அலரு நில்லே[14]

RangaRakes tamilnavarasam.com

என்னும் அப்பருடைய திருத்தாண்டகத்திலே கோயில் என்னும் சொல் சிவனுடைய திருத்தலத்தினைக் குறிக்கின்றது. நாளடைவில், கோயில்கள் பல தமிழ்நாடெங்கணும் இருப்பினும், அவற்றுள் சைவசமயத்தினர்க்குச் சிதம்பரமும், வைணவ சமயத்தினர்க்குச் ஸ்ரீரங்கமும் சிறப்புள்ளனவாயின. இதனால், பிற்காலத்தில் கோயில் என்னும் சொல் பொதுவாக இறைவன் இருப்பிடத்தைக் குறிப்பிடினும், சிறப்பாகத் தில்லையையும், ஸ்ரீரங்கத்தையும் குறிப்பிடலாயிற்று. எனவே, ஒரு சொல்லுக்குக் காலத்துக்குக் காலம் புதிய பொருள் ஏற்படுவதற்கு அரசியல், சமய, சமூக மாற்றங்கள் காரணங்களாக அமைகின்றன என்பதற்கு கோயில் என்னும் சொல்லுக்கு ஏற்பட்டு வந்த பொருள்கள் சான்று பகருகின்றன.

ஒரு சொல் பலபொருள் பயக்கும் போக்கின் விளைவே தமிழ் மொழியில் ஆகுபெயரின் தோற்றமாகும். நீலம் என்னும் நிறத்தைக் குறித்த சொல், நீல நிறத்தாலான பொருளையுங் குறிக்கத் தொடங்கியது.

திருமாலின் மேனி நிறம் நீலம்.

என்னும் வாக்கியத்திலே நீலம் என்னும் சொல் பண்புப் பெயராக அமைகின்றது. அதே சொல்,

அவன் கடையில் நீலம் வாங்கினன்.

என்னும் வாக்கியத்திலே 'நீல நிறப் பொடி' எனப் பொருள் பயந்து குண ஆகுபெயராகின்றது. நீலம் என்னும் ஒரே சொல் இரண்டு வகையான பொருளைத் தருகின்றது. ஆனால், அவ்விரு பொருள்களும் ஏதோ வகையில் தொடர்புற்றனவாக அமைகின்றன சில வேளைகளில் ஒரே சொல் தொடர்பற்ற பொருளையுந் தருகின்றது. உதாரணமாக,

அவன் காஞ்சிபுரத்துக்குச் சென்றான்.

என்னும் வாக்கியத்திலே 'காஞ்சிபுரம்' என்னும் இடப் பொருள் குறிக்கப்படுகின்றது.

அவள் காஞ்சிபுரம் உடுத்தாள்.

என்னும் வாக்கியத்திலே காஞ்சிபுரத்திலே செய்யப்பட்ட ஆடையை அது குறித்து இடவாகுபெயராகின்றது. இடமும் ஆடையும் வெவ்வேறானவை. காஞ்சிபுரம் என்னும் ஒரு சொல் தொடர்பற்ற இரு பொருள்களைத் தருகின்றது.

பல பொருள் பயக்கும் சொற்கள் சில பொதுப் பெயர்களாகி, சிறப்புப் பெயர்களிற் பலவற்றின் பொருள்களைத் தம்முள் அடக்குவனவாக அமைகின்றன. பூ என்னுஞ் சொல் ஒரு பொதுப் பெயராகும். மல்லிகை என்பது ஒரு சிறப்புப் பெயர். மல்லிகை என்னும் சொல்லின் 'பொருள்' பூ என்னும் சொல்லின் பொருளினுள் அடங்கி விடுகின்றது. உதாரணமாக, செல்வி மல்லிகை வாங்கினாள் என்னும் வாக்கியத்தின் பொருளை, செல்வி பூ வாங்கினாள் என்னும் வாக்கியப் பொருள் உள்ளடக்குகின்றது. காரணம் என்னவெனில், பூ என்னும் பொதுப்பெயர் மல்லிகை, முல்லை, தாமரை, ரோசா, அல்லி முதலிய பூக்களைக் குறிக்கும் சிறப்புப் பெயர்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இதனால்தான் சில வேளைகளில், மல்லிகைப் பூ, முல்லைப் பூ, தாமரைப் பூ, ரோசாப் பூ, அல்லிப் பூ என்று கூறுகின்றோம். இத்தகைய சிறப்புப் பெயர், பொதுப் பெயர் தொடர்பாக நாம் சில வரையறைகளை அவதானிக்கக் கூடியதாயுள்ளது:

1. பொதுச்சொல் ஒன்றின் பொருட்பரப்பு அகலமானதாக அமைய, சிறப்புச் சொல்லின் பொருட்பரப்பு கருத்துக் குறிப்பாக அமைகின்றது. பூ என்பதன் பொருட்பரப்பு அகலமானதாக அமைகின்றது. இதுபோலவே மரம், மிருகம், பறவை, பழம் போன்ற சொற்களின் பொருட்பரப்பு அகலமானதாக அமையும். ஆனால், மல்லிகை என்பதன் பொருட்பரப்பு கருத்துக்குறிப்பாக அமைகின்றது இதுபோலவே வேம்பு, யானை, கிளி, அன்னாசி என்பனவற்றின் பொருட்பரப்பும் கருத்துக் குறிப்பாக அமையும்.

2. கருத்துக் குறிப்புப் பொருளைக் காட்டும் சொல்லையுடைய வாக்கியப் பொருளை, அகலக் குறிப்புப் பொருளைக்

RangaRakes tamilnavarasam.com

காட்டும் சொல்லியுடைய வாக்கியப் பொருள் உணர்த்தும். வேம்பு விழுந்தது என்னும் வாக்கியத்துக்குப் பதிலாக மரம் விழுந்தது என நாம் கூறலாம். ஆனால், மரம் விழுந்தது என்னும் வாக்கியத்துக்குப் பதிலாக வேம்பு விழுந்தது என்னும் வாக்கியம் மாத்திரமன்றி புளி விழுந்தது. தென்னை விழுந்தது, தேக்கு விழுந்தது என்னும் வாக்கியங்களெல்லாம் கூறலாம். இவை எதனைக் குறிக்கின்றனவெனின் ஒரு கருத்துக் குறிப்புப் பொருள் ஓர் அகலக் குறிப்புப் பொருளை உணர்த்தலாம்; ஆனால், ஓர் அகலக் குறிப்புப் பொருள் பல கருத்துக் குறிப்புப் பொருள்களை உணர்த்தும் என்னும் இயல்பினைக் குறிக்கின்றன.

3·4. எதிர்ப்பொருட் சொற்கள்

சொற்பொருள் தொடர்பினை உணர்த்தும் இன்னொரு வகையான சொற்கள் எதிர்ப்பொருள் பயப்பனவாகும். ஆங்கிலம் போன்ற மேலைத்தேய மொழிகளிலே 'எதிர்ப் பொருள்' பற்றிய பதங்கள் முக்கியத்துவம் வாய்ந்தனவாகவும், சொற்பொருள் பற்றிய கருத்துக்களில் இடம் பெறுவனவாகவும் அமைகின்றன. எமது தமிழிலக்கணகாரர் எதிர்ப்பொருட் சொற்கள் பற்றி (ஆங்கிலம் போன்ற மொழிகளிலே கூறப்பப்பட்டிருப்பதுபோல்) விதந்து கூற வில்லை. அதற்குக் காரணம் தமிழ் மொழியிலே எதிர்மறை வினை என்னொரு வினைப்பாகுபாடு அமைந்துள்ளமையே யாகும். உடன்பாட்டு வினைகள் எவற்றையும் எதிர்மறை வினைகளாக மாற்றலாம்; அல்லது இல்லை என்னும் எதிர் மறை வினை வடிவத்தாலே எதனையும் மறுதலிக்கலாம். வினையிலே எதிர்மறைச் சொற்கள் அமைந்துள்ளன வெனினும், பெயரிலேயுள்ள எதிர்நிலைச் சொற்களைத் தமிழ் இலக்கணகாரர் ஏன் இனங்கண்டு தனியானதொரு பாகு பாட்டினைச் செய்யவில்லை என்பதற்குத் தகுந்த நியாயம் எதுவும் கூறமுடியாதுள்ளது. எனவே அத்தகைய சொற்கள் தமிழ் மொழியிலே எவ்வாறு எதிர்ப்பொருளை உணர்த்து கின்றன என்பதையும், அவற்றுடைய அமைப்பினையும் நாம் சிறிது விளக்கமாக நோக்குதல் பயனுடைத்தாகும்.

தமிழ் மரபு எழுதிய பொன். முத்துக்குமரன் 'சொல்மரபு' என்னும் பகுதியிலே 122 சோடி எதிர்ப்பொருட் சொற்களைத் தருகிறார். ஆனால், அவை எவ்வாறு எதிர்ப்பொருட் சொற்களாயின. இவை மாத்திரந்தான் எதிர்ப்பொருட் சொற்களா என்பன போன்ற விடயங்களுக்குத் தமிழ் மரபு ஆசிரியர் விளக்கங் கொடுக்கவில்லை. எனவே, தமிழ் மொழியிலுள்ள எதிர்ப்பொருட் சொற்களை நாமே பாகுபாடு செய்து விளக்கவேண்டியுள்ளது.

ஆண் : பெண், இளமை : முதுமை, இருள் : ஒளி போன்ற சோடிச் சொற்களுக்கிடையே காணப்படும் எதிர்ப்பொருள் தன்மையினை உணர்த்துவனவாகத் தமிழிலே ஒருவகை எதிர்ப்பொருட் சொற்கள் அமைகின்றன. இத்தகைய சோடிச் சொற்களுக்கிடையே காணப்படும் எதிர்ப்பொருள் தன்மையினைப் பின்வருமாறு கூறலாம்: அவை இரண்டனுள் ஒன்றை மறுதலிப்பின் மற்றையதை நிலைநாட்டுவ தாகும், ஒன்றை நிலைநாட்டின் மற்றையதை மறுதலிப்ப தாகும். உதாரணமாக, அங்கு தோன்றும் உரு ஆண் என்று கூறின், அங்கு தோன்றும் உரு பெண் அல்ல என்னும் வாக்கியப்பொருள் குறிப்பாக உணர்த்தப்படுகின்றது. அதேபோன்று அங்கு தோன்றும் உரு பெண் என்று கூறின், அங்கு தோன்றும் உரு ஆண் அல்ல என்னும் வாக்கியப் பொருள் குறிப்பாக உணர்த்தப்படுகின்றது. இத்தகைய சோடிப் பதங்களை மறுதலைப் பதங்கள் எனக் கூறலாம்.

குணத்துடன் அல்லது பண்புடன் தொடர்பான பல எதிர்ப்பொருட் சொற்கள் தமிழிலேயுண்டு. அவற்றை இன்னொரு வகையாகப் பாகுபடுத்தலாம். பெரியது : சிறியது, நல்லது : கெட்டது, உயரம் : கட்டை போன்ற சோடிச் சொற் களே அவ்வகையினுள் அடங்குவனவாகும். இவற்றி னிடையே காணப்படும் எதிர்ப்பொருள் தன்மையினைப் பின்வருமாறு கூறலாம் : அவை இரண்டினுள் ஒன்றை நிலைநாட்டின், மற்றையது மறுதலிக்கப்படும்: ஆனால் ஒன்றை மறுதலித்தால் மற்றையது நிலைநாட்டப்பட மாட்டாது. அந்த வீடு பெரியது என்னும் வாக்கியம் அந்த வீடு சிறியது என்பதை மறுதலிக்கின்றது. ஆனால், அந்த

RangaRakes tamilnavarasam.com

வீடு பெரியது என்பதை மறுதலிப்பதன் மூலம் அந்த வீடு சிறியது என்று கூறிவிட முடியாது இத்தகைய பொருள் தொடர்பு கொண்ட எதிர்ப்பொருட் சொற்களையே இரண்டாவது வகைப் பாகுபாட்டினுள் அடக்கலாம்.

மூன்றுவது வகை எதிர்ப்பொருட்சொற் பாகுபாட்டினுள் வாங்கு : வில், கொடு : பெறு போன்ற சோடிகள் அடங்கும். இங்கு ஒவ்வொரு சோடியிலும் இரு சொற்களும் ஒன்றுக்கொன்று மறுதலையாக உள்ளன. ஆனால், முதலாவது வகையிலே குறிப்பிட்ட ஆண் : பெண் போன்ற மறுதலைப் பதங்களுக்கும் இவற்றுக்குமிடையே ஒரு பெரிய வேறுபாடு காணப்படுகின்றது. அதாவது, முதலாவது வகையிலே சொற்றொடரியல் வேறுபாடு எதுவும் ஏற்படவேண்டியதில்லை ஆனால், இம்மூன்றுவது வகையிலே சொற்றொடரியல் மாற்றங்கள் ஏற்படவேண்டியுள்ளன. உதாரணமாக, நான் கடைக்காரனிடம் பழம் வாங்கினேன் என்னும் வாக்கியம் கடைக்காரன் எனக்குப் பழம் விற்றான் என்பதையும் உணர்த்துகின்றது. இங்கு இரண்டு வாக்கியங்களிலுமுள்ள சொல்லொழுங்கு வேறுபாட்டினை நாம் நோக்க முடிகின்றது.

ஒரு தனிச் சொல் பல வேறு சொற்பொருளை நிராகரிக்கும் தன்மையுடையதாயுமுளது. இத்தகைய எதிர்ப் பொருட் சொற்களை நான்காவது வகையினுள் அடக்கலாம். செல்வி பச்சைச் சீலை கட்டினாள் என்னும் வாக்கியம், சிவப்பு, நீலம், மஞ்சள் என்னும் சொற்களுள் ஏதாவது ஒன்றினை பச்சை என்பதற்குப் பதிலாகப் பெற்று வேறு பொருள் பயக்கலாம். வழக்கமாக, கறுப்பு என்னும் சொல்லுக்கு எதிர்ப் பொருட் சொல் என்ன என்று கேட்டால், வெள்ளை என்றே கூறுவர். பௌதிகவியலாளர் நிற எல்லையிலே கருமை ஓர் அந்தத்திலும் வெண்மை மற்றோர் அந்தத்திலும் இருப்பதற்குப் பல காரணங்கள் காட்டுவர். அவ்வாறு இருமுனைப்பட்ட எதிர்ப்பொருட் சொற்களாகவன்றி, ஒரு குணம் ஏனைய குணங்களுக்கெல்லாம் எதிரானது என்னும் அடிப்படையிலே அமையும் சொற்களையே நான்காவது வகையினுட் காணுகின்றோம்.

3·5 எதிரொலிச் சொற்கள்

தமிழ் இலக்கணகாரர் 'இரட்டைக் கிளவி' என்று கூறியதே இங்கு எதிரொலிச் சொல் என அழைக்கப் படுகின்றது. தொடர்ந்து நடைபெறும் நிகழ்வுகளை, ஒலிகளைக் குறிப்பதற்கு எதிரொலிச் சொற்கள் பண்டைக் காலந்தொட்டே தமிழில் உபயோகப்பட்டு வந்துள்ளன. உதாரணமாக, மின் என்னும் வினையடியிலிருந்து மின்னி என்னும் வினையெச்சம் ஆக்கப்படுகின்றது. இவ்வினையெச்ச வடிவம் ஒரு தடவை மின்னுதலைக் குறிக்கும். ஆனால், பல தடவை மின்னுவது போன்று ஒளியைக் காலும் பூச்சியினைக் குறிக்க மின்னி போதாதெனக் கண்டு மின் என்னும் வினையடி இரட்டித்து இகரப் பெயரீறு பெற்று மின்–மின்+இ = மின்மினி எனவாயிற்று. குறுந்தொகை 72-ம் செய்யுளிலே மின்னி என்னும் வினையெச்ச வடிவமும், மின்மினி என்னும் பெயர் வடிவமும் இடம்பெற்றுள்ளன. வீற்று வீற்று, மெல்ல மெல்ல, வைகல் வைகல் போன்ற எதிரொலிச் சொற்கள் சங்க இலக்கியங்களிலே கையாளப் பட்டுள்ளன. அவை மிகுதிப் பொருளை உணர்த்துஞ் சொற்களாகவே கொள்ள வேண்டும். தொல்காப்பியர் இரட்டைக் கிளவி யிரட்டிற் பிரிந்த திசையா என்று சூத்திரஞ் செய்துள்ளார்.[15] இச் சூத்திரம் ஒரு வகையில் எதிரொலிச் சொற்களின் அமைப்பினைக் கூறுகின்றது எனலாம்.

எதிரொலிச் சொற்களின் அமைப்புப் பல வகைப்படுகின்றது. படபட, சரசர, முணுமுணு போன்ற எதிரொலிச் சொற்கள் ஒருவகையான அமைப்பினையுடையனவாயுள்ளன. இத்தகைய சொற்களிலே முதற்சீர் அப்படியே இரட்டித்துள்ளமையைக் காணலாம். வினைப்பொருளினை, அவை இரட்டித்து வருமிடத்துத்தான் தெளிவாக உணர்த்துகின்றன. பட, சர, முணு என்னும் பதங்களைத் தனியாக நாம் எங்கும் பயன்படுத்துவதில்லை. அவை இரட்டித்து வருமிடத்துத் தான் பொருள் பயக்கக்கூடியனவாயுள்ளன. இங்கு இடம் பெறும் இரட்டிப்பு பூரண இரட்டிப்பாகும். மேற்சாட்டிய மூன்றும் அப்படியே இரட்டிக்கின்றன.

RangaRakes tamilnavarasam.com

பூரண இரட்டிப்பு இன்றி, குறிப்பிட்ட ஒரு பகுதியே இரட்டித்து அமையும் எதிரொலிச் சொற்களை இரண்டாவது வகையிலே அடக்கலாம். பின்வரும் உதாரணங்களை நோக்குக :

கத்திகித்தி	லாம்புகிம்பு
குப்பைகிப்பை	பாட்டுக்கீட்டு
பழம்கிழம்	யன்னல்கின்னல்

மேற்காட்டிய உதாரணங்கள் யாவும் பேச்சுத் தமிழிலேயே இடம்பெறுகின்றன. இங்கு நடைமுறையிலே உள்ள ஒரு சொல் தானுணர்த்தும் பொருட்பரப்பினைச் சிறிது அகல் விப்பதற்காகப் பேச்சுவழக்கிலே பல சந்தர்ப்பங்களிலே இரட்டிக்கின்றது. அவ்வாறு இரட்டிக்கும்போது, இரட்டித்த இரண்டாவது சொல்லிலுள்ள முதல் உயிர்மெய் குறுகியதென்றால் கி ஆகவும், நெடிலென்றால் கீ ஆகவும் மாற்றமடைகின்றது.

இன்றைய ஆக்க இலக்கியங்களில் பேச்சுத் தமிழ் பயின்று வருகின்ற காரணத்தினால், விரைவு, பன்மை போன்ற பொருளைக் குறிக்கவும், ஏற்கனவே குறித்த பொருளை அகல்விக்கவும் எதிரொலிச் சொற்கள் பல உபயோகிக்கப் படுகின்றன.

4. சொற்பொருள் மாற்றம்

ஒரு மொழியிலே காலத்துக்குக் காலம் சொற்பொருளிலே மாற்றம் ஏற்படுவது இயற்கையே. அவ்வாறு ஏற்படக் கூடிய சில மாற்றங்களை ஒரு சொல் பலபொருள், பல சொல் ஒரு பொருள் போன்ற பகுதிகளிலே விளக்கியுள்ளோம். இப்பகுதியில், ஒரு காலத்தில் வழக்கிலிருந்த சொற்கள் தாம் குறித்து வந்த பொருளைக் குறியாது வேறு பொருளைக் குறித்து வந்தமையினையும், இருவேறு பொருள்களைக் குறித்து வந்த இரு சொற்கள் காலகதியில் அவற்றுள் ஒரு பொருளையே உணர்த்தியமையும், பல பொருள்களைக் குறித்து வந்த ஒரு சொல் பிற்காலத்தில் அவற்றுள் ஒன்றை மாத்திரம் சிறப்பாகக் குறிப்பிடுவதையும் பற்றியே விளக்கவுள்ளோம்.

3·1. குறித்த பொருளை விடுத்து வேறு பொருள் குறித்தல்

உலக மொழிகள் யாவற்றிலும் பொருள் தொடர்பாக இப்போக்கிலமைந்த மாற்றம் நடைபெற்றுள்ளது. பெரும் பாலும், மணம் என்னும் சொல் இம்மாற்றத்துக்கு உதாரணமாக எடுத்துக் காட்டப்படுவது வழக்கம். முற்காலத்தில் நறுமணத்தையே குறித்த இச்சொல் பிற்காலத்தில் கெட்ட மணத்தையும் குறிக்கலாயிற்று. நாற்றம் என்னும் சொல்லும் இவ்வாறே அமைந்தது. இவற்றை விட சான்றோன், கடன் என்னும் சொற்களே இம்மாற்றத்தினை நன்கு விளக்கக் கூடியனவாகும். புறநானூறு 312-ம் பாடலில்

ஈன்றுபுறந் தருத லென்றலைக் கடனே
சான்றோ னாக்குத றந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே
ஒளிறுவாள் அருஞ்சம முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே

மேற்படி பாடலிலே சான்றோன் என்னுஞ் சொல்லும் கடன் என்னுஞ் சொல்லும் பயின்று வந்துள்ளன. சான்றோன் என்பதற்கு உரைகாரருடைய விளக்கம் 'தன் குலத்துக்குரிய படைக்கலப் பயிற்சியாகிய கல்வி அதற்குரிய அறிவு' என அமைகின்றது. வீரத்துக்குரிய பயிற்சியினையும் அறிவினையும் பெற்ற ஒருவனே 'சான்றோன்' எனப்பட்டான். ஆனால், சிறிது காலஞ் சென்றவுடன் இச்சொல் வேறு பொருளைக் குறிப்பதாயிற்று. வள்ளுவனுடைய திருக்குறளில்

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய்

என்னுங் குறளிலே இடம்பெறும் சான்றோன் என்னுஞ் சொல்லுக்கு 'கல்வி கேள்விகளா னிறைந்தான்' என்று பரிமேலழகர் உரை கூறுகின்றார். எனவே படைக்கலக் கல்வி பெற்றவனாகிய வீரனைக் குறித்த சான்றோன் என்னுஞ் சொல் கல்வி கேள்விகளில் நிரம்பியவனைக் குறிக்கலாயிற்று. இம்மாற்றத்துக்குரிய காரணம் சமயச் செல்வாக்கே எனலாம்.

RangaRakes tamilnavarasam.com

போரை மதித்து அதுபற்றிய பாடல்கள் இயற்றப்பட்ட வீரயுகக் காலத்திலே வீரர் சமூகத்திலே மதிப்புப் பெற்றனர். ஆனல், கொல்லாமை போன்ற அறங்களைப் போதித்த சமண பௌத்த மதங்கள் தமிழ் நாட்டிலே செல்வாக்குப் பெற்ற பொழுது போர் வீரருக்குப் பதிலாக ஞானவீரருக்கே சமூகத்தில் மதிப்பு உண்டாக வேண்டிய தேவை உண்டா யிற்று இதன் விளைவே இச்சொற்பொருள் மாற்றமாகும்.

மேற்படி பாடலிலுள்ள கடன் என்னுஞ் சொல்லுக்கு 'கடமை' என்று பொருள் கூறப்பட்டது. இதே பொரு ளிலேயே அப்பருடைய காலத்திலும் இச்சொல் வழங்கிற்று என்பதற்கு என்கடன் பணிசெய்து கிடப்பதே என்னுஞ் செய்யுளடி சான்று பகருகின்றது. ஆனல், கம்பனுடைய காலத்தில் இச்சொல் வேறு பொருள் குறிக்கத் தொடங்கி விட்டது. கடன்பட்டார் நெஞ்சம்போலக் கலங்கினன் இலங்கை வேந்தன் என்னும் பாடலடியில் கடன் என்னும் சொல் இன்று நாம் உபயோகிக்கும் தன்மையிலேயே கையாளப் பட்டுள்ளது. இன்று கடமை என்னுஞ் சொல்லினை ஒரு பொருளிலும். கடன் என்னுஞ் சொல்லினை வேறு பொரு ளிலும் நாம் கையாளுகிறோம். இதற்குக் காரணம் புதிய தலைமுறையினரின் புதுப் பொருள் மோகமே எனலாம். திருப்பித் தருவதாக ஒருவரிடம் பணம் வாங்குவதையே பிற்காலத்தில் கடன் என்னுஞ் சொல்லாற் குறித்தனர். திருப்பித் தருவதாகக் கூறி வாங்கியதைத் திருப்பிக் கொடுத்தல் கடமையென்ற காரணத்தினலே அச் சந்தர்ப் பத்தினை மாத்திரம் குறிக்க கடன் என்ற சொல்லினைப் பிற் காலத்தோர் உபயோகித்திருக்க வேண்டும்.

4·2 பல பொருளுள் ஒன்று

பண்டைக் காலத்தில் பல பொருள்களைக் குறித்து வந்த ஒரு சொல், பிற்காலத்தில் அவற்றுள் ஒன்றையே குறித்து நின்றது. உதாரணமாக, மான் என்னுஞ் சொல் சங்க இலக்கியங்களிலே பல பொருள்களிற் கையாளப்படுகின்றது. அது குதிரை, சிங்கம், யானை, அசுணமா போன்ற மிருகங் களையெல்லாங் குறிக்கும் பொதுச் சொல்லாகப் பயன்பட்டது.

துன்னருந் துப்பின் வயமான் றேன்றல்

என்னும் புறநானூற்று 44-ம் செய்யுளடியில் இடம்பெறும் மான் என்னுஞ் சொல் 'குதிரை' என்னும் பொருள் பயக் கின்றது. அகநானூறு 203-ம் பாடலில்,

மானதர் மயங்கிய மலைமுதற் சிறுநெறி

என்னும் அடி இடம்பெறுகின்றது. இதற்கு உரைகாரர் 'விலங்குகள் இயங்குதலால் உண்டான வழிகள் பலவும் பொருந்திய மலையின் அடிப்பகுதியில் அமைந்த சிறிய வழி' என்று கூறுகின்றார். மான் என்னுஞ் சொல் விலங்குகள் யாவற்றையுமே குறிக்கின்ற பொதுச் சொல்லாக இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு பல மிருகங்களைக் குறிக்க வழங்கிய மான் என்னும் பொதுச் சொல் பிற் காலத்தில் ஒரு குறிப்பிட்ட விலங்கினையே சிறப்பாகக் குறிக்கும் சொல்லாக வழங்கலாயிற்று. இது போலவே பொன் என்னுஞ் சொல்லும் இரும்பு, பொன் முதலாய உலோகங்களைக் குறிக்கும் பொதுச் சொல்லாகவிருந்து பிற் காலத்தில் அவ்வுலோகங்களுள் இன்று நாம் தங்கம் எனக் குறிக்கும் உலோகத்தை மாத்திரம் குறிக்கும் சொல்லாக வழங்கலாயிற்று. அரி என்னுஞ் சொல் சங்க இலக்கியங் களிலே 'அரிகை, கதிர் அறுக்கும் பருவம், அரிக்கை, இடை விடுகை, வண்டு பருக்கைக் கல், மென்மை, கண்வரி, பொன், நிறம், அழகு, ஒரு வகைப் பறை, கலம், நறவு, உள்ளிடு மணி பகை, சூரியன், தவளை, மாமிசம், அரிசி' என்னும் பல பொருள் குறித்த சொல்லாகப் பயன்பட்டது. இன்று இச்சொல் 'அரிதல்' என்னும் தொழில் நிகழ்ச்சியை மாத்திரங் குறிக்கும் சொல்லாகவே பயன்படுகின்றது. இவ்வாறு தமிழிலே பல சொற்கள் தாம் குறித்த பல பொருள்களுள், ஒரு பொருளை மாத்திரம் சிறப்பாகக் காலகதியிலே உணர்த்தி வருவதை நாம் காணலாம்.

4·3. பல சொல் ஒன்றுதல்

ஒரு தொழில் நிகழ்ச்சியை நுண்பொருள் காரணமாகப் பல சொற்களாலே உணர்த்தும் வழக்கம் மொழிகளிலே உண்டு. இன்று தா என நாம் வழங்கும் சொல் தொல்

RangaRakes tamilnavarasam.com

காப்பியருடைய காலத்தில் குறிப்பிட்ட ஒரு சந்தர்ப்பத்திலேயே வழங்கப்பட்டது. அவருடைய சொல்லதிகார 444, 445, 446. 447 ஆஞ் சூத்திரங்களை இங்கு நோக்குதல் அவசியம் :

ஈதா கொடுவெனக் கிளக்கு மூன்று
மிரவின் கிளவி யாகிட னுடைய.

அவற்றுள்
ஈயென் கிளவி யிழிந்தோன் கூற்றே.

தாவென் கிளவி யொப்போன் கூற்றே.

கொடுவென் கிளவி யுயர்ந்தோன் கூற்றே.

இச்சூத்திரங்கள் ஈ, தா, கொடு என்னும் மூன்று சொற்களும் ஒரு தொழில் நிகழ்ச்சியைக் குறித்தபோதும், அந்நிகழ்ச்சியிற் பங்குபற்றுபவனின் தரத்துக்கேற்றபடி ஒவ்வொரு நிலையிலும் ஒவ்வொரு சொல் பயன்படுத்தப்பட்டிருப்பதை வலியுறுத்துகின்றது. ஆனால், இன்று அச்சொற்களின் நுண்பொருள் வேறுபாடு மறைந்து விட்டது. உயர்வு தாழ்வு பற்றிச் சிந்திக்காத சமூகக் காரணத்தாலோ என்னவோ இவ்வேறுபாடு மறைந்து, தா என்னுஞ் சொல்லே அப்பொருளை உணர்த்துதற்கு எல்லாச் சந்தர்ப்பங்களிலும் வழங்கப்படுகின்றது. அத்துடன், தன்மையிடத்தான் முன்னிலையிடத்தானிடமிருந்து ஏதாவது பெற விரும்பின் தா என்று கேட்டலும், பெற விரும்பிய பொருளை அளித்தலைக் கொடு என்ற வினையடியால் உணர்த்துதலும் இக்கால வழக்குகளாக அமைந்துவிட்டன. அவன் எனக்குத் தந்தான், நான் அவனுக்குக் கொடுத்தேன் என்னும் வாக்கியங்களை ஒப்பிட்டு நோக்குக. ஆங்கிலத்திலே **give** என்னும் ஒரு சொல்லாலேயே உணர்த்தப்படும் நிகழ்ச்சி இங்கு இரண்டு சொற்களாலே உணர்த்தப்படுகின்றது.

இவ்வாறு சொற்பொருள் பல்வேறு வகையிலே மாற்றமுற்று வந்தபோதிலும், இன்றும் எம் மொழியில் எமது பண்பாட்டினடிப்படையான சொற்கள் நுட்பமான முறையிலே பொருளுணர்த்தும் பாங்கினைக் காணலாம். ஆங்கில

மொழியிலே 'காய்', 'பழம்' என்னும் வேறுபாட்டினைக் குறிக்குஞ் சொற்கள் இல்லை. **Fruit** என்னுஞ் சொல் கனிந்தவற்றையே குறித்தது. பெரும்பாலும் கனிந்த பழங்களை உண்ணும் முறையினை மாத்திரம் ஆங்கிலேயர் அறிந்திருந்த காரணத்தால் ஒரு சொல் அவர்களுக்குப் போதுமானதாக இருந்திருக்கலாம். ஆனால், தமிழ் நாட்டிலோ பழமாவதற்கு முன்னருள்ள காய்களைச் சமையலுக்கு பல்வேறு வகையிலே உபயோகிக்கும் வழக்கமுண்டு. மாங்காய்ச் சட்பல், மாங்காய்த் துவையல், மாங்காய் வற்றல் என்றெல்லாம் எங்கள் உணவுப் பழக்கத்துடன் தொடர்புடைய தொடர்கள் உண்டு. இதனால், காய், கனி என்னும் இரு சொற்கள் எம் மொழியிலே அமைவது இயல்பாயிற்று.

5. புதுப் பொருளுணர்த்தக் கடன் வாங்குகிறோம்

நாம் முன்னர் காணாத பொருளை, கேட்டறியாத கருத்துக்களை அறியும் வாய்ப்பு ஏற்படும்போது, அவற்றுக்கான சொற்களையும் நாம் கடனாகப் பெற்றுக்கொள்ளுதல் வழக்கமாகிவிட்டது. இந்தியாவுக்கு வந்த ஆங்கிலேயர்கள் தமிழ் நாட்டு மக்கள் தங்கள் உணவு வகைகளுள் ஒன்றாகத் தயாரிக்கும் மிளகுத் தண்ணி (இன்று ரசம் என வழங்கப்படுவது) பற்றி அறிந்தனர். அதனுடைய சிறந்த பயனைக் கருதிய ஆங்கிலேயர் சிலர் அதனை உட்கொள்ளவும் தொடங்கினர். நாளடைவில் தங்கள் மொழிச் சொற்களில் ஒன்றாகவும் கடன் வாங்கிக்கொண்டனர். இன்று ஆங்கிலமொழியிலுள்ள எந்த அகராதியிலும் **Mulligatawny** என்னும் சொல் இடம்பெறுகின்றது. **The Concise Oxford Dictionary of Current English** என்னும் அகராதி அச்சொல்லினைப் பின்வருமாறு நிரைப்படுத்தியுள்ளது ;

Mulligatawny, N. (Also ⌙ **soup**) E. - Ind. highly seasoned soup; ⌙ **paste,** Curry paste used for this. *[* f. Tamil **milagutannir** pepper-water *]*

இதுபோலவே தமிழ்மொழியும் காலத்துக்குக் காலம் பல தேவைகளுக்காக அம்மொழியுடன் நெருங்கித் தொடர்பு கொள்ளும் வாய்ப்புடைய மொழிகளிலிருந்து சொற்களைக்

RangaRakes tamilnavarasam.com

கடன் வாங்கியுள்ளது. அவ்வாறு கடன் வாங்கிய சொற்களை இரண்டு வகையிலே பாகுபாடு செய்து அவற்றை விளக்கலாம். எம்மொழிகளிலிருந்து சொற்கள் தமிழ்மொழியில் வந்து சேர்ந்தனவோ, அம்மொழி வாரியாக அச்சொற்களைப் பாகுபாடு செய்தல் ஒருவகையாகும். பிறமொழிச் சொற்கள் தமிழில் வந்து சேர்ந்த தேவைகளை அடிப்படையாகக் கொண்டு அவற்றைப் பாகுபாடு செய்தல் இரண்டாவது வகையாகும். இவ்விருவகைப் பாகுபாடுகளையும் கீழே விரிவாக நோக்குவோம்.

5·1 மொழிவாரியான பாகுபாடு

ஆரம்ப காலத்தில் வடமொழியிலிருந்தே தமிழ்மொழி பெருந் தொகையான சொற்களைக் கடன் வாங்கியது. ஒரு காலத்தில் இந்திய உபகண்டம் முழுவதிலுமே மிகச் செல்வாக்குப் பெற்ற மொழியாக சமஸ்கிருதம் அமைந்தது. அதனுடைய சமய, தத்துவ, அரசியல், இலக்கியச் செல்வாக்கு இந்திய உபகண்டம், இலங்கை, தென்கிழக்காசிய நாடுகள் ஆகியவற்றிலிருந்த எந்த மொழிகளையும் விட்டு வைக்கவில்லை. இதற்குத் தமிழ் மொழியும் விதிவிலக்காக அமையவில்லை. ஆரம்ப காலத்தில் சமஸ்கிருதச் சொற்கள் பாலி பிராகிருத மொழிகளினூடாகவே தமிழ் மொழியில் வந்து சேர்ந்தன. பௌத்தர்களுடைய பாலிமொழியும் சமணர்களுடைய பிராகிருத மொழியும் தமிழ் ஒலிவடிவுக் கேற்ப அமையக் கூடிய வகையிலே சமஸ்கிருதச் சொற்களை வழங்கக் கூடியனவாயமைந்தன. வேத சமயத்துக்கு எதிராக எழுந்த பௌத்த, சமண சமயங்கள் வேதசமய தேவபாஷையாகிய சமஸ்கிருதத்தை விடுத்து மக்கள் மொழிகளாகிய பாலியினையும் பிராகிருதத்தையும் தம்முடைய போதனை மொழிகளாகக் கொண்டனர். சமஸ்கிருத மொழிச் சொற்களிலேயுள்ள கூட்டொலிகளிற் பெரும்பாலன இம்மொழிச் சொற்களிலே விடப்பட்டன. உதாரணமாக, க்ருஷ்ண, வர்ஷ என அமைந்த இரு சமஸ்கிருதச் சொற்களும் முறையே பிராகித மொழியிலும் பாலி மொழியிலும் கண்ண, வஸ்ஸ என்று அமைந்தன. இவ்வடிவங்களையே தமிழ் மொழி கடன் வாங்கி முறையே கண்ணன், வசி என அமைத்துக்

கொண்டது. தொல்காப்பியர் சமஸ்கிருதம், பிராகிருதம், பாலி என்னும் மொழிகளையெல்லாம் உள்ளடக்கும் வகையிலே 'வடமொழி' என்னுந் தொடரினை உபயோகித்தார். பிராகிருதம், பாலி மொழிகளுடாக வடமொழிச் சொற்களைக் கடனுகப் பெற்று வந்த தமிழ்மொழி, பிற்காலத்தில், சமஸ்கிருத மொழியிலிருந்தே நேராகச் சொற்களைக் கடன் வாங்கத் தொடங்கியது. எனினும் அவ்வாறு பெறப்பட்ட சொற்கள் தமிழ் ஒலியமைதிக்கேற்ப அமைத்துக் கொள்ளப் பட்டன:

(அ) சமஸ்கிருத உயிர்ப்பு ஒலியும் ஒலிப்புடை ஒலியும் தமிழில் முறையே உயிர்ப்பில் ஒலியாகவும் ஒலிப்பில் ஒலியாகவும் அமைதல்:

khaṇḍa ⟶ kaṇṭam (கண்டம்)

bāṇa ⟶ pāṇam (பாணம்)

(ஆ) ல், ர் முதலிய எழுத்துக்களை முதனிலைகளாகக் கொண்ட சொற்களுக்கு முன்னர் ஒரு துணைமுதல் உயிரெழுத்தினைப் பெய்தல்:

லோக ⟶ உலகம்
லங்கா ⟶ இலங்கை
ரோம ⟶ உரோமம்

(இ) கூட்டெழுத்துக்களைப் பிரித்து எழுதுதல்:

பக்ஷ ⟶ பக்கம்
ஷஷ்டி ⟶ சட்டி
ரத்ன ⟶ இரத்தினம்

வீரசோழியம், நன்னூல் ஆகிய இலக்கண நூல்களிலே வடமொழிச் சொற்கள் தற்சமமாக அல்லது தற்பவமாகத் தமிழ்மொழியில் வந்து சேருமிடத்து ஏற்படக்கூடிய மாற்றங்கள் தெளிவாக வகுக்கப்பட்டுள்ளன இவ்வாறு வடசொற்களைத் தமிழிலே பயன்படுத்தும்போது அனுசரிக்க வேண்டிய இலக்கண விதிகள் இருந்தபோதிலும், சில

RangaRakes tamilnavarasam.com

பேச்சு வழக்குகளிலே (உதாரணமாக, தென்னிந்தியப் பிராமணத் தமிழ்) சமஸ்கிருதச் சொற்கள் எவ்வித மாற்றமுமின்றி அப்படியே கையாளப்படுகின்றன இன்றைய ஆக்க இலக்கியங்கள் சிலவற்றிலும் இந்நிலையினைக் காணக் கூடியதாயுள்ளது.

வடமொழி தவிர, தமிழ்மொழி கடனாகப் பெற்ற சொற்களின் மொழிகளைப் பின்வருமாறு நிரைப்படுத்தலாம்:

	மொழிகள்		கடனாகப் பெற்ற சொற்கள்
1.	தெலுங்கு	. .	கத்தரி
			பத்தர்
2.	மலையாளம்	. .	அலியல்
			சக்கை
			பறை
3.	மராட்டி	. .	குண்டான்
4.	இந்துஸ்தான்	. .	அபின்
			தபால்
			தொப்பி
5.	சிங்களம்	. .	முருங்கா
			பில்லி
6.	மலாய்	. .	கிட்டங்கி
			மங்குஸ்தான்
7.	சீனம்	. .	பீங்கான்
8.	அரபு	. .	ஏலம்
9.	கிரீக்	. .	சுருங்கை
			ஓரை
10.	போர்த்துக்கீஸ்	. .	அலவாங்கு
			கடதாசி
			கதிரை
11.	டச்சு	. .	உலாந்தா
			கந்தோர்
			சுக்கூசு
12.	ஆங்கிலம்	. .	றப்பர்
			வோட்டு
			கார் (Car)

5·2 தேவைகளினடிப்படையிலான பாகுபாடு

தமிழ்மொழி பல தேவைகளுக்காகவே பிற மொழிகளிலிருந்து சொற்களைக் கடன் வாங்கியது. சமயம், கலை, உணவு, உடை, வீடு, அலங்காரம் ஆகியனவற்றை உள்ளடக்கிய கலாசாரத் தேவைகளுடன், அரசியல், வணிகத் தேவைகளையும் இங்கு குறிப்பிடலாம். அவை பற்றிய விவரங்களைக் கீழே நோக்கலாம்.

5·2·1 கலாசாரத் தேவை

கலாசாரம் என்பது மனித வாழ்வுடன் தொடர்புடைய எல்லாவற்றையுமே உள்ளடக்குவதாகும். எனினும், சமயம், கலை, உணவு, உடை, வீடு, அலங்காரம் ஆகியன இது தொடர்பாகச் சிறப்பாகக் குறிப்பிடப்படுவனவாகும். தமிழ் நாட்டிலே ஆரம்ப காலத்தில் இருந்த சமயநிலை சமண, பௌத்த மதங்களின் வரவாலே மாற்றமுறத் தொடங்கியது. சமண, பௌத்த மதங்களின் போதனைகளடங்கிய மூல நூல்கள் யாவுமே வடமொழியிலிருந்தன. இச்சமயங்கள் தமிழ் நாட்டிலே செல்வாக்குற்றபோது பல சமயக் கருத்துக்களைக் குறிக்கும் வடசொற்கள் தமிழ்மொழியிலே சேரலாயின. உதாரணமாக மணிமேகலை என்னும் பௌத்த காவியத்திலே அளவைகள் பற்றிக் கூறுமிடத்திலே அச்சமயம் சார்ந்த பல வடமொழிச் சொற்களை இனங்காண முடிகின்றது:[16]

> .....இப் பெற்றிய அளவைகள்
> பாங்குறும் உலோகா யதமே, பௌத்தம்,
> சாங்கியம், நையாயிகம், வைசேடிகம்
> மீமாஞ்சகம், ஆம் சமயவா சிரியர்
> தாப்பிரு கற்பதி, சினனே, கபிலன்
> அக்க பாதன், கணதன், சைமினி,
> மெய்ப்பிரத் தியம், அனுமானஞ், சாத்தம்,
> உவமானம், அருத்தாபத்தி, அபாவம்
> இவையே யிப்போ தியன்றுள அளவைகள்.

வடநாட்டுச் சமய தத்துவக் கோட்பாடுகளை ஏற்றுக் கொண்ட தமிழகம், அக்கோட்பாடுகளை விளக்கும் சொற்களையும் பெற்றுக் கொண்டனர் என்பதற்கு மேற்காட்டிய மணிமேகலைப் பாடலடிகள் சான்றுபகருகின்றன. உலோகா

RangaRakes tamilnavarasam.com

யதம், பௌத்தம், சாங்கியம், நையாயிகம், வைசேடிகம், மீமாஞ்சகம், என்னுஞ் சமயப் பெயர்களையும், பிருகற்பதி, தினன், கபிலன், அக்கபாதன், கணதன், சைமினி, என்னுஞ் சமயவாசிரியர் பெயர்களையும், அவர்களால் உபயோகிக்கப் பட்ட மெய்ப்பிரத்தியம், அனுமானம், சாத்திரம், உவமானம், அருத்தாபத்தி, அபாவம் என்னும் அளவைகளின் பெயர் களையும் மணிமேகலை ஆசிரியர் தமிழ்மொழிக்கு அறிமுகஞ் செய்து வைத்துள்ளார். இவ்வாறு வேறு வேறு சமயங்கள் தமிழ் நாட்டிற்கு வந்த சந்தர்ப்பங்களில், அவற்றுடன் தொடர்பான பல சொற்களும் தமிழ் மொழியிலே சேர்ந் தன. உமறுப்புலவரின் சிருப்புராணம், வீரமாமுனிவரின் தேம்பாவணி ஆகியனவற்றிலே இத்தகைய சொற்களின் பிர யோகத்தினைக் காணலாம்.

கலைகள் தொடர்பாகவும் பல பிற மொழிச் சொற்கள் தமிழ்மொழிக்கு வந்து சேர்ந்துள்ளன. சிலப்பதிகார அரங் கேற்று காதையில் வடமொழி நாட்டிய, இசை நூல்களிற் கூறப்பட்ட கருத்துக்கள் எடுத்தாளப்பட்டுள்ளன. இலக்கியக் கலை தொடர்பாக மிக அண்மையில் தமிழ்மொழியில் வந்து சேர்த்த நாவல் என்னும் சொல் ஆங்கில **Novel** என்னுஞ் சொல்லின் திரிபுற்ற வடிவமாகும். இவ்வாறே சிற்பம், கட்டிடம் போன்ற கலைகளின் தொடர்பான சொற்களும் வந்து சேர்ந்தன. சித்திரக்கரணம், வர்த்தனை, தர்ச்சனி, கனிட்டன் என்னும் இசை, நடனந் தொடர்பான சொற்கள் வடமொழியிலிருந்து வந்து சேர்ந்தன. விருந்தை, போட்டிக்கோ, றீப்பை போன்ற கட்டிடக்கலை தொடர்பான சொற்கள் மேலைத்தேய மொழிகளிலிருந்து வந்து சேர்ந்தன.

பல்வேறு உணவுப் பழக்கமுள்ளவர்களின் தொடர்பு தமிழர்களுக்கு ஏற்பட்டது. அவர்களுடைய எல்லா உணவு வகைகளையும் பின்பற்றிவிடினும், சிலவற்றைக் கடன் வாங்கிக் கொண்டனர். அவை தொடர்பான சொற்களும் தமிழ்ச் சொற் களஞ்சியத்தில் சேர்ந்துவிட்டன. இன்று இலங்கைத் தமிழர் யாவருக்கும் நன்கு பரிச்சயமான **பாண்** என்னுஞ் சொல் போர்த்துக்கேய மொழியிலிருந்து பெறப் பட்டது போர்த்துக்கேயர் இலங்கையை ஆண்ட பொழுது இவ்வுணவுப் பழக்கத்தை அறிமுகஞ் செய்தனர். இன்று வரை எம்மவரிற் பலர் பாண் தின்னுபவர்களாயுள்ளோம்.

பூரி, லட்டு, சப்பாத்தி, அல்வா, பாதாம்கீர், பிரியாணி, கேக், பிஸ்கற் போன்ற உணவுச் சொற்கள் பிறமொழி பேசுவோரின் உணவுப் பழக்கத்தை நாம் பின்பற்றியபடியால் எம் மொழி யிலே வந்து சேர்ந்தனவாகும்.

உடை தொடர்பாகவும் பல பிறமொழிச் சொற்களை எமது மொழி பெற்றிருக்கின்றது. மேலைத்தேய உடை யலங்காரத்தில் ஈடுபட்டுவரும் எம்மவர் தவிர்க்க முடியாத படி அவர்கள் மொழிச் சொற்களைக் கடன் வாங்கவேண்டி யேற்பட்டது. சேர்ட், லோங்ஸ், பெல்ஸ் போன்ற சொற் கள் இன்று எம்மவராலே சர்வ சாதாரணமாக வழங்கப்படு கின்றன. அந்நிய நாகரிகத்தின் செல்வாக்கு இத்துறையிலே அதிகரித்து வருவதால், பிறமொழிச் சொற்களையே உப யோகிக்கும் தமிழ் மக்கள் அவற்றுட் சில குறிக்கும் உடையமைப்புக்குப் பண்டைக் காலந்தொட்டு வழங்கி வந்த தமிழ்ச் சொற்களை மறந்துவிடுகின்றனர். அதனால் அவை வழக்கிழந்து போய்விடுகின்றன. உதாரணமாக, இன்று இளம் பெண்களுக்குச் சிற்றுடை (பேச்சு வழக்கில் சித்தாடை) என்றால் என்னவென்று தெரியாது. இடையினைச் சுருக்கு வதற்காகத் தமிழ்ப் பெண்கள் அணிந்து வந்தனர். ஆனால், இன்று அதே நோக்கத்துக்காக அணியப்படும் ஆடையினை **Wrap-around** என்னும் ஆங்கிலச் சொல்லாலே வழங்கு கின்றனர். அவரவர் தத்தமக்கேற்றபடி இச்சொல்லினை உச்சரிக்கின்றனர். எவராவது இதனைச் சிற்றுடை என்று கூறுவதில்லை. உணவு, உடை தொடர்பான சொற்களைப் போன்றே வீடு, அலங்காரம் ஆகியன தொடர்பான கலாசாரச் சொற்கள் தமிழிலே வந்து சேர்ந்தன.

5·2·2 அரசியல், வணிகத் தேவைகள்

அரசியல், வணிகத் தொடர்புகள் காரணமாக, பிற நாட்டு அரசியற் கோட்பாடுகளையும், அங்கங்களையும், வணிகப் பொருட்களையும் குறிப்பதற்கு அப்பிறநாட்டாரின் மொழிச் சொற்களையே நாம் கடன் வாங்கிவிடுவதுண்டு. வட இந்திய அரசியல் தாக்கம் பண்டைக் காலந் தொட்டே தமிழ் நாட்டில் ஏற்பட்டுவந்துள்ளது. சாணக்கியனின் அர்த்தசாஸ்திரம் இந்தியா முழுவதுமே அறிந்த ஓர் அரசியல் நூலாயிருந்தது. வள்ளுவர் அந்நூலிலிருந்து பல கோட் பாடுகளைப் பெற்றபோதிலும் அவற்றைக் குறிக்கும் வட சொற்களுக்குப் பதிலாகத் தமிழ்ச் சொற்களையே முடிந்த அளவிற் பயன்படுத்தியுள்ளார். ஆனால், அமைச்சு, தூது போன்ற சொற்களை அவராலே முற்றுகத் தமிழ் மயப் படுத்த முடியவில்லை. மேலைத்தேய அரசியற் கோட்பாடு

RangaRakes tamilnavarasam.com

களைக் குறிக்கும் கொம்யூனிசம், சோஷலிசம் போன்ற சொற்களை இன்று பரவலாக உபயோகிக்கின்றோம். வணிகப் பொருட்களைக் குறிக்கும் கடதாசி, றப்பர் போன்ற சொற்கள் பிறமொழியாளருடன் ஏற்பட்ட வணிகத் தொடர்பின் விளைவேயாகும். டிஸ்பிரின், ரெற்ராசைக்கிளின், பெனிசிலின் போன்ற மருத்துவச் சொற்களும் ஒரு வகையில் வணிகத் தொடர்பின் விளைவாக நாம் இன்று உபயோகிப்பனவாக அமைந்துவிட்டன.

அடிக்குறிப்புக்கள்

1. Lyons, J., **Introduction to Theoretical Linguistics,** p. 412.
2. தொல்காப்பியம், சொல்லதிகாரம், சூ. 1. சேனாவரையருரை, ப. 2.
3. Firth, J. R., "The Technique of Semantics", 1957, p. 27.
4. ஆறுமுகநாவலர், இலக்கணச் சுருக்கம், ப. 177—78.
5. Conklin, Harold C., "Hanunoo Color Categories" In Dell Hymes, 1964, pp. 189—91.
6. இங்கு எடுத்தாளப்படும் உதாரணம் பின்வரும் நூலிலிருந்து பெறப்பட்டது:
   அளவையியலும் விஞ்ஞான முறையும், பகுதி 1, (தொகுப்பு: 'நவம்'), ப. 25.
7. தொல்காப்பியம், உரியியல், சூ. 297.
8. மேற்படி, எச்சவியல், சூ. 399.
9. மேற்படி, உரியியல், சூ. 341.
10. Lyons, J., **Ibid.,** p. 416.
11. தொல்காப்பியம், உரியியல், சூ. 383.
12. புறநானூறு, செய்யுள் 67.
13. நெடுநல்வாடை, செய்யுளடி: 100.
14. திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச் செய்த தேவாரப் பதிகங்கள், 2397.
15. தொல்காப்பியம், சொல்லதிகாரம், சூ. 48.
16. மணிமேகலை, சமயக்கணக்கர் தந்திறங் கேட்ட காதை, செய்யுளடி 78—85.

நூற் பட்டியல்

(உசாத் துணை நூல்கள்)

அரங்கன், கி., மாற்றிலக்கண மொழியியல், தமிழ் நூலகம், சென்னை, 1975.

ஆறுமுகநாவலர், இலக்கணச் சுருக்கம், வித்தியானுபாலன யந்திரசாலை, சென்னை, 1953 (22-ம் பதிப்பு).

இலக்கண விளக்கம், கழக வெளியீடு, 1957.

இளவரசு, சோம., இலக்கண வரலாறு, தொல்காப்பியர் நூலகம், சிதம்பரம், 1963.

இறையனார் அகப்பொருள், கழக வெளியீடு, சென்னை, 1953.

கணபதிப்பிள்ளை, பண்டிதமணி சி., இலக்கிய வழி (திருத்தப் பதிப்பு), திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலை பழைய மாணவர் சங்க வெளியீடு, யாழ்ப்பாணம், 1964.

கதிர்காமநாதன், செ., கொட்டும்பனி, கொழும்பு, 1968.

கார்த்திகேய முதலியார், மாகறல்., மொழி நூல், விவேகானந்த அச்சகம், சென்னை, 1913.

கால்டுவெல், திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் (தமிழாக்கம்: கா. கோவிந்தன்), வள்ளுவர் பண்ணை, சென்னை, 1959.

குறுந்தொகை, எஸ். ராஜம் பதிப்பு, சென்னை, 1957.

RangaRakes tamilnavarasam.com